स्नेहप्रस्कन्न-मनसा मयैतत् समुदीरितम् ॥७॥
लंकाया दुष्प्रवेशत्वाद्दुस्तरत्वान्महोदधेः ।
सामर्थ्या-दात्मनश्चैव मयैतत् समुदीरितम् ॥८॥
इच्छामि त्वां समानेतु-मद्यैव रघुबन्धुना ।
गुरु-स्नेहेन भक्त्या च नान्यथैत- दुदाहृतम् ॥९॥

காரணைர்-பஹுபிர்-தேவி ராமப்ரிய-சிகீர்ஷயா ।
ஸ்நேஹ-ப்ரஸ்கன்ன-மனஸா மயைதத் ஸமுதீரிதம் ॥ 7 ॥
லங்காயா துஷ்ப்ரவேசத்வாத்-துஸ்தரத்வான் மஹோததே: ।
ஸாமர்த்யா-தாத்மனச்சைவ மயைதத் ஸமுதீரிதம் ॥ 8 ॥
இச்சாமி த்வாம் ஸமானேது-மத்யைவ ரகுபந்துனா ।
குரு-ஸ்நேஹேன பக்த்யா ச நான்யதைத-துதாஹ்ருதம் ॥ 9 ॥

---

7. அம்மணி! பல காரணங்களைக் கொண்டு இராமருக்குப் பிரியத்தைச் செய்ய வேண்டுமென்ற ஆசையாலும் அன்பினால் கரைந்த மனத்தாலும் என்னால் இப்படி விண்ணப்பம் செய்யப்பட்டது.

8. இலங்கைக்குள் பிறர் புக முடியாததாலும் கடலைக் கடக்க முடியாததாலும் இவைகளைச் செய்ய எனக்கு ஆற்றலிருப்பதாலும் என்னால் அவ்வாறு சொல்லப்பட்டது.

9. உங்களை இப்பொழுதே ஸ்ரீராகவருடன் சேர்த்து வைக்க எண்ணினேன். நான் சொன்னது அன்பின் மிகுதியாலும் பக்திப் பெருக்காலுமேயன்றி வேறு காரணத்தாலன்று.

---

9. ரகுநந்தினா ।
6. சேஷ்டிதம் -ரோதனாதிக்ருதம் । உத்பந்தனாதிகம் ।
பாஷிதம்-ராவணம் த்ருணீக்ருத்ய பணிதம் । மம ப்ரத்யுத்தரத் வேன கதிதஞ்ச

यदि नोत्सहसे यातुं मया सार्ध-मनिन्दिते ।
अभिज्ञानं प्रयच्छ त्वं जानीयाद्राघवो हि तत् ॥१०॥
एवमुक्ता हनुमता सीता सुरसुतोपमा ।
उवाच वचनं मन्दं बाष्प-प्रग्रथिताक्षरम् ॥११॥
इदं श्रेष्ठमभिज्ञानं ब्रूयास्त्वन्तु मम प्रियम् ।
शैलस्य चित्रकूटस्य पादे पूर्वोत्तरे तथा ॥१२॥
तापसाश्रमवासिन्याः प्राज्यमूलफलोदके ।
तस्मिन् सिद्धाश्रमे देशे मन्दाकिन्याह्यदूरतः ॥१३॥

யதி நோத்ஸஹஸே யாதும் மயா ஸார்த்த-மநிந்திதே ।
அபிஜ்ஞானம் ப்ரயச்ச த்வம் ஜானீயாத்-ராகவோ ஹி தத் ॥ 10 ॥
ஏவமுக்தா ஹனுமதா ஸீதா ஸுரஸுதோபமா ।
உவாச வசனம் மந்தம் பாஷ்ப-ப்ரக்ரதிதாக்ஷரம் ॥ 11 ॥
இதம் ச்ரேஷ்டமபிஜ்ஞானம் ப்ரூயாஸ்த்வந்து மம ப்ரியம் ।
சைலஸ்ய சித்ரகூடஸ்ய பாதே பூர்வோத்தரே ததா ॥ 12 ॥
தாபஸாச்ரமவாஸின்யா: ப்ராஜ்யமூலபலோதகே ।
தஸ்மின் ஸித்தாச்ரமே தேசே மந்தாகின்யாஹ்யதூரத: ॥ 13 ॥

---

10. மாசற்ற புண்ணியவதியே! நீங்கள் என்னுடன் வர விரும்பவில்லை யாதலின் இராகவர் அறியத்தக்கதோர் அடையாளத்தைத் தந்தருளும்.

11. தெய்வமகள் போன்ற சீதை ஹனுமாா சொல்லியதைக் கேட்டுக் கண்ணீர்ப் பெருக்கால் தழுதழுத்த வார்த்தையை மெதுவாய்ப் பேசலானாள்.

12-13. 'இந்தச் சிறந்ததொரு நினைவின் அடையாளத்தை என் அன் பிற்குரியவர்க்கு நீர் கூறும். சித்திரகூட மலையின் வடகிழக்குப் பாகத்திலுள்ள தாழ்வரையில் மந்தாகினி நதியருகில் கிழங்குகளும் கனிகளும் தண்ணீரும் நிறைந்து சித்தர்கள் வாசம் செய்யுமிடத்தில்;

---

10. ஜானீயாத் ராகவோ ஹி யத் ।
12. பூர்வோத்தரே பதே । *13.* தஸ்மின் ஸித்தாச்ரிதே ।

तस्योपवनषण्डेषु नानापुष्पसुगन्धिषु ।
विहृत्य सलिले क्लिन्नो ममांके समुपाविशः ।।१४।।
ततो मांस-समायुक्तो वायसः पर्यतुण्डयत् ।
तमहं लोष्टमुद्यम्य वारयामि स्म वायसम् ।।१५।।
दारयन् स च मां काकस्तत्रैव परिलीयते ।
न चाप्युपारमन्मांसाद्भक्षार्थी बलिभोजनः ।।१६।।
उत्कर्षन्त्यां च रशनां क्रुद्धायां मयि पक्षिणि ।
स्रंसमाने च वसने ततो दृष्टा त्वया ह्यहम् ।।१७।।

தஸ்யோபவனஷண்டேஷு நானாபுஷ்பஸுகந்திஷு ।
விஹ்ருத்ய ஸலிலே க்லின்னோ மமாங்கே ஸமுபாவிச ॥ 14 ॥
ததோ மாம்ஸ-ஸமாயுக்தோ வாயஸ: பர்யதுண்டயத் ।
தமஹம் லோஷ்ட-முத்யம்ய வாரயாமி ஸ்ம வாயஸம் ॥ 15 ॥
தாரயன் ஸ ச மாம் காகஸ்-தத்ரைவ பரிலீயதே ।
ந சாப்யு'பாரமன் மாம்ஸாத்-பக்ஷார்த்தீ பலிபோஜன: ॥ 16 ॥
உத்கர்ஷந்த்யாஞ் ச ரசனாம் க்ருத்தாயாம் மயி பக்ஷிணி ।
ஸ்ரம்ஸமானே ச வஸனே ததோ த்ருஷ்டா த்வயா ஹ்யஹம் ॥ 17 ॥

---

14. 'அதன் நீரிலும் பலவகைப் பூக்களின் நறுமணம் கமழும் அடர்ந்த சோலைகளிலும் அலைந்து களைத்து தவசிகளின் ஆசிரமத்திலிருந்த என் மடியில் அவர் படுத்திருந்தார்.

15. 'அப்பொழுது ஊனில் விருப்பமுள்ள காகம் ஒன்று கூரான தன் மூக்கினால் என்னைக் குத்திற்று. நான் அதை மண்ணாங்கட்டியை எடுத்தெறிந்து ஓட்டினேன்.

16. 'பலியைப் புசிக்கும் அந்தக் காக்கை ஊனில் ஆசையை விடாமல் என்னைக் குத்திக் கொண்டு அங்கேயே சுற்றிவந்தது.

17. 'நான் அப்பறவையிடம் சினந்து ஒட்டியாணத்தைக் கழறறவே அதனால் ஆடை நழுவுகையில் உங்களால் நான் பார்க்கப்பட்டேன்.

---

14. ஸலிலக்லின்னா தவாங்கே ஸமுபாவிசம் ।
17. பக்ஷிணே । ஸ்ரம்ஸ்யமானே ।

त्वया विहसिता चाहं क्रुद्धा संलज्जिता तथा ।
भक्षगृध्नेन काकेन दारिता त्वामुपागता ।।१८।।

ततः श्रान्ताह-मुत्संग-मासीनस्य तवाविशम् ।
क्रुध्यन्ती च प्रहृष्टेन त्वयाऽहं परिसान्त्विता ।।१९।।

बाष्पपूर्णमुखी मन्दं चक्षुषी परिमार्जती ।
लक्षिताऽहं त्वया नाथ वायसेन प्रकोपिता ।।२०।।

த்வயா விஹஸிதா சாஹம் க்ருத்தா ஸம்லஜ்ஜிதா ததா ।
பக்ஷக்ருத்னேன காகேன தாரிதா த்வாமுபாகதா ॥ 18 ॥

தத: ச்ராந்தாஹ-முத்ஸங்க-மாஸீனஸ்ய தவாவிசம் ।
க்ருத்யந்தீச ப்ரஹ்ருஷ்டேன த்வயாऽஹம் பரிஸாந்த்விதா ॥ 19 ॥

பாஷ்பபூர்ணமுகீ மந்தம் சக்ஷுஷீ பரிமார்ஜதீ ।
லக்ஷிதாऽஹம் த்வயா நாத வாயஸேன ப்ரகோபிதா ॥ 20 ॥

18-19. 'நீங்கள் என்னைப் பரிகசிக்கவே நான் கோபமும் வெட்கமும் அடைந்தேன். தீனியில் ஆவல் கொண்ட காகத்தால் குத்தப்பட்டு களைத்திருந்த நான் பிறகு உட்கார்ந்திருந்த உங்களை நாடி உங்கள் மடியில் உட்கார்ந்தேன். மகிழ்ச்சியுடனிருந்த நீங்கள் கோபித்திருந்த என்னை ஆறுதல் செய்தீர்கள்.

20. 'நாதா! முகமெல்லாம் கண்ணீர் வடிய, மெல்லக் கண்ணைத்துடைத்துக் கொண்டிருந்த நான் காகத்தால் கோபமூட்டப்பட்டவள் என அறிந்தீர்கள்.

---

19. ஆஸீனஸ்ய ச தே ச்ராந்தா புனருத்ஸங்கம் ।

परिश्रमात् प्रसुप्ता च राघवांकेऽप्यहं चिरम् ।
पर्यायेण प्रसुप्तश्च ममांके भरताग्रजः ।।
स तत्र पुनरेवाथ वायसः समुपागमत् ।।२१।।
ततः सुप्तप्रबुद्धां मां रामस्यांकात् समुत्थिताम् ।
वायसः सहसाऽऽगम्य विददार स्तनान्तरे ।।२२।।
पुनः पुनरथोत्पत्य विददार स मां भृशम् ।
ततः समुक्षितो रामो मुक्तैः शोणितबिन्दुभिः ।।२३।।

பரிச்ரமாத் ப்ரஸுப்தா ச ராகவாங்கேஸ்மயஹம் சிரம் ।
பர்யாயேண ப்ரஸுப்தச்ச மமாங்கே பரதாக்ரஜ: ॥
ஸ தத்ர புனரேவாத வாயஸ: ஸமுபாகமத் ॥ 21 ॥
தத: ஸுப்தப்ரபுத்தாம் மாம் ராமஸ்யாங்காத் ஸமுத்திதாம் ।
வாயஸ: ஸஹஸாऽऽகம்ய விததார ஸ்தனாந்தரே ॥ 22 ॥
புன: புனரதோத்பத்ய விததார ஸமாம் ப்ருசம் ।
தத: ஸமுக்ஷிதோ ராமோ முக்தை: சோணித பிந்துபி: ॥ 23 ॥

---

21. 'நான் களைப்பால் ஸ்ரீராமருடைய மடியில் நெடு நேரம் உறங்கி விட்டேன். பின்பு ஸ்ரீராமரும் முறையாக என் மடியில் உறங்கினார். அந்தக் காக்கை மறுபடியும் அங்கே வந்தது.

22. 'இராமர் மடியிலிருந்து நித்திரை நீங்கி விழித்தெழுந்திருந்த என்னை விரைவில் வந்து மார்பில் காயப்படுத்திற்று.

23. 'இப்படி அது மீண்டும் மீண்டும் பாய்ந்து என்னை மிகவும் காயப்ப டுத்திற்று. அப்பொழுது வெளிவந்த இரத்தத்துளிகளால் ஸ்ரீராமர் நனைக்கப் பட்டார்.

---

21. பரிச்ரமாச்ச ஸுப்தாஹே ராகவாங்கேஸ் மயஹம் சிரம் ।
22. ராகவாங்காத் ।
விரராதஸ்தனாந்தரே ।

वायसेन ततस्तेन बलवत् क्लिश्यमानया ।
स मया बोधितः श्रीमान् सुखसुप्तः परन्तपः ॥२४॥

स मां दृष्ट्वा महाबाहु-र्वितुन्नां स्तनयोस्तदा ।
आशीविष इव क्रुद्धः श्वसन् वाक्यमभाषत ॥२५॥

केन ते नागनासोरु विक्षतं वै स्तनान्तरम् ।
कः क्रीडति सरोषेण पंचवक्त्रेण भोगिना ॥२६॥

வாயஸேன ததஸ்தேன பலவத் க்லிச்யமானயா ।
ஸ மயா **போதித**: ஶ்ரீமான் ஸு'கஸு'ப்த: பரந்தப: ॥ 24 ॥

ஸ மாம் த்ருஷ்ட்வா மஹாபாஹு'ர்-விதுன்னாம் ஸ்தனயோஸ்-ததா ।
ஆசீவிஷ இவ க்ருத்த: ச்வஸன் வாக்ய-மபாஷத ॥ 25 ॥

கேன தே நாகநாஸோரு விக்ஷதம் வை ஸ்தனாந்தரம் ।
க: க்ரீடதி ஸ ரோஷேண பஞ்சவக்த்ரேண **போகினா** ॥ 26 ॥

---

24. 'பகைவர்களைத் தவிக்கச் செய்பவரும் மேனியழகு விளங்கச் சுகமாயுறங்கிக் கொண்டிருந்தவரும் ஆகிய அவர் காக்கையால் துன்பமடைந்த என்னால் எழுப்பப்பட்டார்.

25. 'தோள் வலிமிக்க அவர் நான் நகில்களில் காயமுற்றிருப்பதைக் கண்டு சின மூண்டு பாம்பு போல் சீறிப் பின்வரும் வார்த்தையைச் சொன்னார்.

26. 'யானைத் துதிக்கையொத்த தொடை படைத்தவளே! உன் மார்பிற் புண்படுத்தியது யார்? கோபமூண்ட முத்தலை நாகத்துடன் விளையாடுபவன் யார்?

---

24. இது சில பாடங்களில் இல்லை. 24. ஶ்ரீமான்–ஸ்வாபகாலிக–ஶ்ரீருச்யதே

वीक्षमाणस्ततस्तं वै वायसं समुदैक्षत ।
नखैः सरुधिरै-स्तीक्ष्णै-र्मामेवाभिमुखं स्थितम् ॥२७॥
पुत्रः किल स शक्रस्य वायसः पततां वरः ।
धरान्तरगतः शीघ्रं पवनस्य गतौ समः ॥२८॥
ततस्तस्मिन् महाबाहुः कोपसंवर्तितेक्षणः ।
वायसे कृतवान् क्रूरां मतिं मतिमतां वरः ॥२९॥
स दर्भं संस्तराद्गृह्य ब्राह्मेणास्त्रेण योजयत् ।
स दीप्त इव कालाग्नि-र्जज्वालाभिमुखो द्विजम् ॥३०॥

வீக்ஷமாணஸ் ததஸ் தம் வை வாயஸம் ஸமுதைக்ஷத ।
நகை: ஸருதிரைஸ்-தீக்ஷ்ணைர்-மா மேவாபிமுகம் ஸ்திதம் ॥ 27 ॥
புத்ர: கில ஸ சக்ரஸ்ய வாயஸ: பததாம் வர: ।
தராந்தரகத: சீக்ரம் பவனஸ்ய கதௌ ஸம: ॥ 28 ॥
ததஸ்தஸ்மின் மஹாபாஹு: கோபஸம்வர்த்திதேக்ஷண: ।
வாயஸே க்ருதவான் க்ரூராம் மதிம் மதிமதாம் வர: ॥ 29 ॥
ஸ தர்ப்பம் ஸம்ஸ்தராத் க்ருஹ்ய ப்ராஹ்மேணாஸ்த்ரேண யோஜயத் ।
ஸ தீப்த இவ காலாக்னிர் -ஜஜ்வாலாபிமுகோ த்விஜம் ॥ 30 ॥

---

27. 'சுற்றிலும் நோக்கிய அவர் அங்கேயே என்னைப் பார்த்துக் கொண்டு இரத்தம் படிந்த கூரிய நகங்களுடன் எதிரிலிருந்த அந்தக் காகத்தைக் கண்டார்.

28. 'அந்தக் காகம் இந்திரனுடைய மைந்தன்; பறவைகளுள் சிறந்தது; செல்வதில் காற்றுக்கு நிகரானது; அதனால் சடக்கென மண்ணில் மறைந்து விட்டது.

29. 'தோள்வலிமிக்க வரும் அறிவாளிகளில் சிறந்தவருமான ஸ்ரீராமர் கோபத்தால் சுழலும் கண்களுடன் கடுமையான தீர்மானத்தைச் செய்தார்.

30. 'அவர் தர்ப்பாஸனத்திலிருந்து ஒரு புல்லை எடுத்து பிரம்மாஸ்திர மந்திரத்தை அதில் ஜபித்து விடுத்தார். காக்கையை நோக்கி அது தீயைக் கக்கிக் கொண்டு காலாக்னி போல் பிரகாசித்தது.

---

30. ப்ரஹ்மணோஸ்த்ரேண ।

स तं प्रदीप्तं चिक्षेप दर्भं तं वायसं प्रति ।
ततस्तं वायसं दर्भः सोऽम्बरेऽनुजगाम ह ॥३१॥
अनुसृप्त-स्तदा काको जगाम विविधां गतिम् ।
त्राणकाम इमं लोकं सर्वं वै विचचार ह ॥३२॥
स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः ।
त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः ॥३३॥

ஸ தம் ப்ரதீப்தம் சிக்ஷேப தர்ப்பம் தம் வாயஸம் ப்ரதி ।
ததஸ்தம் வாயஸம் தர்ப்ப: ஸோऽம்பரேऽனுஜகாம ஹ ॥ 31 ॥

அனுஸ்ருப்தஸ் ததா காகோ ஜகாம விவிதாம் கதிம் ।
த்ராண காம இமம் லோகம் ஸர்வம் வை விசசார ஹ ॥ 32 ॥

ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: ।
த்ரீன் லோகான் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத: ॥ 33 ॥

---

31. 'கொழுந்து விட்டெரியும் அந்த தர்ப்பைப்புல்லை அவர் காக்கையை நோக்கிவிடுத்தார். அது அக்காகத்தைத் துரத்திக்கொண்டு ஆகாயமார்க்கத்தில் சென்றது.

32. 'அப்படித் துரத்தப்பட்ட காக்கை தன்னைக் காப்பாற்றக் கூடியவரைக் கண்டுபிடிக்க விரும்பி உலகனைத்தும் ஓடியலைந்தது. பல இடங்களுக்குச் சென்றது.

33. 'அது மூவுலகங்களிலும் சுற்றியலைந்து மகரிஷிகளாலும் தேவர்களாலும் தன் தந்தையாலும் கைவிடப்பட்டு முடிவில் அவரையே சரணமாக அடைந்தது.

---

32. அனுஸ்ருஷ்டஸ்ததா।
லோககாம இமம் ।
33. ஸர்வைச்ச பரமர்ஷிபி: ।

स तं निपतितं भूमौ शरण्यः शरणागतम् ।
वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत् ॥३४॥
परिद्यूनं विवर्णं च स तमायान्त-मब्रवीत् ।
मोघं कर्तुं न शक्यं तु ब्राह्म-मस्त्रं तदुच्यताम् ॥३५॥
हिनस्तु दक्षिणाक्षि त्वच्छर इत्यथ सोऽब्रवीत् ।
ततस्तस्याक्षि काकस्य हिनस्ति स्म स दक्षिणम् ॥३६॥

ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்ய: சரணாகதம் ।
வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் ॥ 34 ॥
பரித்யூனம் விவர்ணஞ்ச ஸ தமாயாந்த-மப்ரவீத் ।
மோகம் கர்த்தும் ந சக்யம் து ப்ராஹ்ம-மஸ்த்ரம் ததுச்யதாம் ॥ 35 ॥
ஹினஸ்து தக்ஷிணாக்ஷி த்வச்சர இத்யத ஸோऽப்ரவீத் ।
ததஸ்தஸ்யாக்ஷி காகஸ்ய ஹினஸ்திஸ்ம ஸ தக்ஷிணம் ॥ 36 ॥

---

34. 'அடைக்கலம் புகுந்தோரை ஆதரிக்கும் இயல்புடைய காகுத்ஸ்தர் பூமியில் விழுந்து சரணாகதி செய்த அக்காக்கை கொல்வதற்குரியதாயிருந்த போதிலும் அதைக் கிருபையால் காத்தருளினார்.

35. 'திக்கற்றுத் திரும்பி வந்து உயிரிழந்தாற் போல் கிடந்த அதைப் பார்த்து, 'பிரம்மாஸ்திரம் வீண்போகமாட்டாது; அதற்கு ஒரு வழி சொல்' என்றார்.

36. 'அப்படியாயின் அது என் வலது கண்ணை அழிக்கட்டும்' என்று அது சொல்லிற்று. அதன்மேல் அவ்வஸ்திரம் அக்காகத்தின் வலது கண்ணைக் கவர்ந்து போயிற்று.

---

35. இதற்குமுன் 'ந சர்ம லப்த்வா லோகேஷு தமேவ சரணம் கத:'—அதிக பாடம். பரித்யூனம் விஷண்ணம் ।
மோகமஸ்த்ரம் ।
ப்ராஹ்மம் கர்த்தும் ।
35. பரித்யூனம்—பரிதப்தம் ।

दत्त्वा स दक्षिणं नेत्रं प्राणेभ्यः परिरक्षितः ।
तदाप्रभृति काकाना-मेकमक्षीति विश्रुतम् ।।३७।।

स रामाय नमस्कृत्वा राज्ञे दशरथाय च ।
विसृष्टस्तेन वीरेण प्रतिपेदे स्वमालयम् ।।३८।।

मत्कृते काकमात्रे तु ब्रह्मास्त्रं समुदीरितम् ।
कस्माद्यो माऽहरत्त्वत्तः क्षमसे तं महीपते ।।३९।।

தத்வா ஸ தக்ஷிணம் நேத்ரம் ப்ராணேப்ய: பரிரக்ஷித: ।
ததாப்ரப்ருதி காகானா-மேகமக்ஷீதி விச்ருதம் ॥ 37 ॥

ஸ ராமாய நமஸ்க்ருத்வா ராஜ்ஞே தசரதாய ச ।
விஸ்ருஷ்டஸ்-தேன வீரேண ப்ரதிபேதே ஸ்வமாலயம் ॥ 38 ॥

மத் க்ருதே காகமாத்ரே து ப்ரஹ்மாஸ்த்ரம் ஸமுதீரிதம் ।
கஸ்மாத்யோ மாऽஹரத் த்வத்த: க்ஷமஸே தம் மஹீபதே ॥ 39 ॥

---

37. 'வலது கண்ணைக் கொடுத்து அது உயிருடன் தப்பியது. அது முதல் காக்கைகளுக்கு ஒற்றைக் கண் என்பது கேள்வி.

38. 'அது ஸ்ரீராமருக்கும் தசரத சக்ரவர்த்திக்கும் நமஸ்கரித்து வீரராகிய இராமரால் விடப்பட்டுத் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தது.

39. 'உலக நாயகரே! எனக்காக ஒரு காகத்தின் மேல் பிரம்மாஸ்திரம் ஏவப்பட்டது. எவன் உம்மிடமிருந்து என்னைக் கவர்ந்தானோ அவனை தண்டியாது ஏன் பொறுத்திருக்கிறீர்?

---

38. தசரதாய—ஸ்வலோகஸ்த்ததயா பூர்வமேவ மித்ரபூதாய ।
39. புத்திஸ்த்தம் ராமமேவ ஸோபாலம்பம் ஸம்போத்ய ப்ரார்த்தயதே।

स कुरुष्व महोत्साहः कृपां मयि नरर्षभ ।
त्वया नाथवती नाथ ह्यनाथा इव दृश्यते ।।४०।।
आनृशंस्यं परोधर्मस्त्वत्त एव मया श्रुतः ।।४१।।
जानामि त्वां महावीर्यं महोत्साहं महाबलम् ।
अपारपार-मक्षोभ्यं गांभीर्यात् सागरोपमम् ।।
भर्तारं ससमुद्राया धरण्या वासवोपमम् ।।४२।।

ஸ குருஷ்வ மஹோத்ஸாஹ: க்ருபாம் மயி நரர்ஷப ।
த்வயா நாதவதீ நாத ஹ்யநாதா இவ த்ருச்யதே ।। 40 ।।
ஆந்ருசம்ஸ்யம் பரோதர்மஸ் த்வத்த ஏவ மயா ச்ருத: ।। 41 ।।
ஜானாமி த்வாம் மஹா வீர்யம் மஹோத்ஸாஹம் மஹாபலம் ।
அபாரபார-மக்ஷோப்யம் காம்பீர்யாத் ஸாகரோபமம் ।
பர்த்தாரம் ஸஸமுத்ராயா தரண்யா வாஸவோபமம் ।। 42 ।।

---

40. 'புருஷோத்தமா! உற்சாகம் மிகுந்து நீர் என்னிடம் கிருபை புரியும். நாதா! உம்மை நாதனாயடைந்த நான் அநாதை போல் காணப்படுகிறேனே.

41. 'பிறர் துயரையொழித்தல் சிறந்த தருமம் என்று உம்மிடமிருந்தே என்னால் கேட்கப்பட்டுளது.

42. 'எனது பர்த்தாவாகிய உம்மை நான் மஹாவீரியமும் மஹா உற்சாகமும் மஹாபலமும் அளவு கடந்த செயல் திறமையும் மனக்கலக்கமின்மையும் படைத்தவரென்றும் பெருந்தன்மையில் கடல் போன்றவரென்றும் கடல் சூழ்ந்த பூமிக்கு இந்திரனைப் போன்ற வேந்தனென்றும் அறிவேன்.

---

40. மஹோத்ஸாஹாம் ।
41. நாவாரோபணானந்தரம் வேதனாப்ப்யர்த்தனவத்ஸம்ச்லேஷதசாயாம் தவாத்யந்தாபிமதோ தர்ம: க இதி மயா ப்ருஷ்டே பரது:க்கஞ்சேத் ததஸஹிஷ்ணுத்வமேவ பரமோ தர்ம இதி மமாபிமதம் ததைவ மத்ஸ்வபாவ இதி த்வயாரஹஸ் யோத் போதனம் க்ருதம் ।। 41. மயா ச்ருதம் ।
42. அபாரவார-மக்ஷோப்யம் ।

एवमस्त्रविदां श्रेष्ठः सत्यवान् बलवानपि ।
किमर्थ-मस्त्रं रक्षस्सु न योजयति राघवः ।।४३।।
न नागा नापि गन्धर्वा नासुरा न मरुद्गणाः ।
रामस्य समरे वेगं शक्ताः प्रतिसमाधितुम् ।।४४।।
तस्य वीर्यवतः कश्चिद्यद्यस्ति मयि संभ्रमः ।
किमर्थं न शरैस्तीक्ष्णैः क्षयं नयति राक्षसान् ।।४५।।

ஏவமஸ்த்ர விதாம் ச்ரேஷ்ட: ஸத்யவான் பலவானபி ।
கிமர்த்த-மஸ்த்ரம் ரக்ஷஸ்ஸு ந யோஜயதி ராகவ: ॥ 43 ॥

ந நாகா நாபி கந்தர்வா நாஸுரா ந மருத்கணா: ।
ராமஸ்ய ஸமரே வேகம் சக்தா: ப்ரதிஸமாதிதும் ॥ 44 ॥

தஸ்ய வீர்யவத: கச்சித்யத்யஸ்தி மயி ஸம்ப்ரம: ।
கிமர்த்தம் ந சரைஸ்தீக்ஷ்ணை: க்ஷயம் நயதி ராக்ஷஸான் ॥ 45 ॥

---

43. 'இவ்வண்ணம் ஸ்ரீராமர் அஸ்திரவித்தைகளில் தலை சிறந்தவராயும் ஸத்தியவானாயும் பலவானாயுமிருந்தும் அரக்கர்களிடத்தில் எக்காரணத்தால் அஸ்திரப் பிரயோகம் செய்யாமலிருக்கிறார்?

44. 'போரில் ஸ்ரீராமருடைய வேகத்தை எதிர்த்து நிற்பதற்கு நாகர்களோ, கந்தர்வர்களோ, அசுரர்களோ மருத்கணங்களோ வல்லவர்களல்லர்.

45. 'வீரரான அவருக்கு என்னிடத்தில் மனத்துடிப்புச் சிறிதேனுமிருக்குமாயின் கூரிய சரங்களா அரக்கர்களை ஏன் அழிக்காமலிருக்கிறார்?

---

43. ச்ரேஷ்ட்டோ பலவான் ஸத்வவானபி ।
44. ந ஸுரா । ப்ரதிஸமீஹிதும் ॥
45. மம ஸம்ப்ரம: ।
45. 'மமஸம்ப்ரம:' இதி பாடே மம ப்ராப்தயே ஸம்ப்ரம இத்யர்த்த: ।
ஒ. 'ஸம்ப்ரமம் த்ரயமிச்சந்தி பயமுத்வேகமாதரம், இதி கோச: ।

भ्रातुरादेशमादाय लक्ष्मणो वा परन्तपः ।
कस्य हेतो-र्न मां वीरः परित्राति महाबलः ॥४६॥
यदि तौ पुरुषव्याघ्रौ वाय्वग्निसमतेजसौ ।
सुराणामपि दुर्धर्षौ किमर्थं मामुपेक्षतः ॥४७॥
ममैव दुष्कृतं किंचिन्महदस्ति न संशयः ।
समर्थावपि तौ यन्मां नावेक्षेते परन्तपौ ॥४८॥
वैदेह्या वचनं श्रुत्वा करुणं साश्रु-भाषितम् ।
अथाब्रवीन्महातेजा हनूमान् मारुतात्मजः ॥४९॥

ப்ராதுராதேசமாதாய லக்ஷ்மணோ வா பரந்தப: ।
கஸ்ய ஹேதோர்-ந மாம் வீர: பரித்ராதி மஹாபல: ॥ 46 ॥
யதி தௌ புருஷவ்யாக்ரௌ வாய்வக்னி ஸம தேஜஸௌ ।
ஸுராணாமபி துர்த்தர்ஷௌ கிமர்த்தம் மாமுபேக்ஷத: ॥ 47 ॥
மமைவ துஷ்க்ருதம் கிஞ்சின் மஹதஸ்தி ந ஸம்சய: ।
ஸமர்த்தாவபி தௌ யன்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ ॥ 48 ॥
வைதேஹ்யா வசனம் ச்ருத்வா கருணம் ஸாச்ரு-பாஷிதம் ।
அதாப்ரவீன் மஹா தேஜா ஹனு மான் மாருதாத்மஜ: ॥ 49 ॥

---

46. 'மகாபலசாலியும் சத்துருக்களை எரிப்பவரும் வீரருமான இலக்ஷ்மணரும் தமயனுடைய கட்டளையைப் பெற்று என்னை எக்காரணத்தால் மீட்காமலிருக்கிறார்?

47. 'காற்றும் நெருப்பும் கூடினாற் போன்ற வீரியமுடைய அவ்வாண் புலிகளிருவரும் தேவர்களுங்கண்டு நடுங்குபவர்களாயிருந்தும் ஏன் என்னை கவனியாமலிருக்கிறார்கள்?

48. 'பகைவர்களை வெல்லக் கூடிய திறனுடையவர்களாயிருந்தும் அவர்கள் என்னைப் புறக்கணிப்பதால் எனக்கே ஏதோ ஒரு பெரிய தீச்செயலிருக்க வேண்டும்; இதில் சந்தேகமில்லை.

49. மகாபராக்கிரமசாலியும் வாயுகுமாரருமான ஹனுமார் வைதேகி கண்ணீர்வடித்து இரக்கமெழும்படி மொழிந்த வார்த்தையைக் கேட்டுப் பின்வருமாறு கூறினார்.

---

49. ஹனுமான் ஹரியூதப: ।

त्वच्छोकविमुखो रामो देवि सत्येन ते शपे ।
रामे दुःखाभिपन्ने च लक्ष्मणः परितप्यते ॥५०॥
कथंचिद्भवती दृष्टा न कालः परिशोचितुम् ।
इमं मुहूर्तं दुःखानां द्रक्ष्यस्यन्त-मनिन्दिते ॥५१॥
तावुभौ पुरुषव्याघ्रौ राजपुत्रौ महाबलौ ।
त्वद्दर्शन-कृतोत्साहौ लंकां भस्मीकरिष्यतः ॥५२॥

த்வச்சோக விமுகோ ராமோ தேவி ஸத்யேன தே சபே ।
ராமே து: க்காபிபன்னே ச லக்ஷ்மண: பரிதப்யதே ॥ 50 ॥

கதஞ்சித்பவதி த்ருஷ்டா ந கால: பரிசோசிதும் ।
இமம் முஹுூர்த்தம் து:க்கானாம் த்ரக்ஷ்யஸ்யந்த-மநிந்திதே ॥ 51 ॥

தாவுபௌ புருஷவ்யாக்ரௌ ராஜபுத்ரௌ மஹாபலௌ ।
த்வத்தர்சன-க்ருதோத்ஸாஹௌ லங்காம் பஸ்மீ கரிஷ்யத: ॥ 52 ॥

---

50. 'தேவி! உமக்குச் சத்தியமாக ஆணையிட்டுச் சொல்லுகிறேன். ஸ்ரீராமர் உங்களைப் பிரிந்த துக்கத்தால் அனைத்தையும் வெறுத்திருப்பதால் இலக்ஷ்மணர் பரிதவிக்கிறார்.

51. 'புண்ணியவதி! பெருமாட்டியாகிய உங்களை நான் எப்படியோ கண்டேன். இது துக்கப்படுவதற்குக் காலமன்று. இப்பொழுதே துக்கத்தின் முடிவைக் காண்பீர்கள்.

52. 'மகாபலசாலிகளும் ஆண்புலிகளுமான அவ்விரு அரசகுமாரர்களும் உம்மைக் காணும் ஆவலுடன் வந்து இலங்கையைச் சாம்பலாக்கப் போகிறார்கள்.

---

50. ஸத்யேன மே சபே ।
து:க்கானா-மந்தம் த்ரக்ஷ்யஸி சோபனே ।[1]
52. லோகான் பஸ்மீ கரிஷ்யத: ।

हत्वा च समरे क्रूरं रावणं सहबान्धवम् ।
राघवस्त्वां विशालाक्षि स्वां पुरीं प्रतिनेष्यति ।।५३।।

ब्रूहि यद्राघवो वाच्यो लक्ष्मणश्च महाबलः ।
सुग्रीवो वाऽपि तेजस्वी हरयोऽपि समागताः ।।५४।।

इत्युक्तवति तस्मिंश्च सीता सुरसुतोपमा ।
उवाच शोकसन्तप्ता हनूमन्तं प्लवंगमम् ।।५५।।

ஹத்வா ச ஸமரே க்ரூரம் ராவணம் ஸஹபாந்தவம் l
ராகவஸ்-த்வாம் விசாலாக்ஷி ஸ்வாம் புரீம் ப்ரதிநேஷ்யதி ll 53 ll

ப்ரூஹி யத்ராகவோ வாச்யோ லக்ஷ்மணச்ச மஹாபல: l
ஸுக்ரீவோ வாऽபி தேஜஸ்வீ ஹரயோऽபி ஸமாகதா: ll 54 ll

இத்யுக்தவதி தஸ்மிம்ச்ச ஸீதா ஸுரஸுதோபமா l
உவாச சோகஸந்தப்தா ஹனுமந்தம் ப்லவங்கமம் ll 55 ll

---

53. விசாலாக்ஷி! கொடிய இராவணனைச் சுற்றத்துடன் போரில் கொன்று உங்களை ஸ்ரீராமர் தமது நகரத்திற்கு அழைத்துப் போவார்.

54. ஸ்ரீராகவரிடம் நான் என்ன சொல்ல வேண்டும்? மகாபலசாலி யான இலக்ஷ்மணரிடம் என்ன சொல்ல வேண்டும்? சுக்ரீவரிடமும் வந்து திரண்டுள்ள வானரர்களிடமும் என்ன சொல்ல வேண்டும்? அதைக் கூறியருளும்.

55. அதனைக் கேட்டு துக்கம் மேலிட்டவளும் தெய்வப்பெண் போன்றவளுமான ஸீதை வானரரான ஹனுமாருக்குப் பின்வருமாறு கூறினாள்.

---

55. ஸீதா புனரதாப்ரவீத் l
'உவாச சோகஸந்தப்தா' என்ற அடி சில பாடத்திற்கு இல்லை.

कौसल्या लोकभर्तारं सुषुवे यं मनस्विनी ।
तं ममार्थे सुखं पृच्छ शिरसा चाभिवादय ॥५६॥
स्रजश्च सर्वरत्नानि प्रिया याश्च वरांगनाः ।
ऐश्वर्यं च विशालायां पृथिव्यामपि दुर्लभम् ॥५७॥
पितरं मातरं चैव संमान्याभिप्रसाद्य च ।
अनुप्रव्रजितो रामं सुमित्रा येन सुप्रजाः ॥५८॥
आनुकूल्येन धर्मात्मा त्यक्त्वा सुखमनुत्तमम् ।
अनुगच्छति काकुत्स्थं भ्रातरं पालयन् वने ॥५९॥

கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மனஸ்வினீ ।
தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச சிரஸா சாபிவாதய ॥ 56 ॥
ஸ்ரஜச்ச ஸர்வரத்னானி ப்ரியா யாச்ச வராங்கனா: ।
ஐச்வர்யஞ் ச விசாலாயாம் ப்ருதிவ்யாமபி துர்லபம் ॥ 57 ॥
பிதரம் மாதரஞ்சைவ ஸம்மான்யாபிப்ரஸாத்ய ச ।
அனுப்ரவ்ரஜிதோ ராமம் ஸுமித்ரா யேன ஸுப்ரஜா: ॥ 58 ॥
ஆனுகூல்யேன தர்மாத்மா த்யக்த்வா ஸுகமனுத்தமம் ।
அனுகச்சதி காகுத்ஸ்தம் ப்ராதரம் பாலயன் வனே ॥ 59 ॥

---

56. உத்தம மனம் படைத்த கௌஸல்யா பெற்ற உலக நாயகரை என் பொருட்டுத் தலைவணங்கி க்ஷேமம் விசாரியும்.

57-59. எவரைப் பெற்றதால் சுமித்திரை நல்ல புத்திர பாக்கியத்தை யடைந்தவளாயினளோ அவர் மாலைகளையும் எல்லா ரத்தினங்களையும். அன்புள்ள சிறந்த ஸ்திரீகளையும் பரந்த பூமியில் கிடைத்தற்கரிய ஐசுவரியத்தையும் ஒப்புயர்வற்ற சுகத்தையும் அன்பினால் துறந்து தாய்தந்தையரை வணங்கி விடைபெற்று ஸ்ரீராமரைத் தொடர்ந்து காடேகித் தமயனாராகிய அந்த காகுத்ஸ்தரை கானகத்தில் காப்பவராய்ப் பின்பற்றிச் செல்லுகிறார்.

---

56. **மனஸ்வினீ**—ஸர்வலோகரக்ஷக: புத்ரோ மே பவேதிதி வரதமனுஷ்ட்டாய லோகோபகாராய புத்ரம் ஸுஷுதவதீ ।
ஸுகம் ப்ருச்ச—அஸ்மத்ரக்ஷணம் ந மயா ப்ரார்த்யம் தச்சிந்தா தஸ்யைவ ।
அபிவாதய—மயாப்யபிவாதனம் க்ரியதே இத்யஸ்ம-தர்த்த-மபிவா தனம் குரு

सिंहस्कन्धो महाबाहु-र्मनस्वी प्रियदर्शनः ।
पितृवद्वर्तते रामे मातृवन्मां समाचरन् ॥६०॥
ह्रियमाणां तदा वीरो न तु मां वेद लक्ष्मणः ।
वृद्धोपसेवी लक्ष्मीवाञ्च्छक्तो न बहुभाषिता ॥६१॥
राजपुत्रः प्रियः श्रेष्ठः सदृशः श्वशुरस्य मे ।
मत्तः प्रियतरो नित्यं भ्राता रामस्य लक्ष्मणः ॥६२॥
नियुक्तो धुरि यस्यां तु तामुद्वहति वीर्यवान् ।
यं दृष्ट्वा राघवो नैव वृत्त-मार्य-मनुस्मरेत् ॥६३॥

ஸிம்ஹஸ்கந்தோ மஹாபாஹுர்-மனஸ்வீ ப்ரியதர்சன: ।
பித்ருவத்-வர்த்ததே ராமே மாத்ருவன்மாம் ஸமாசரன் ॥ 60 ॥
ஹ்ரியமாணாம் ததா வீரோ ந து மாம் வேத் லக்ஷ்மண: ।
வ்ருத்தோபஸேவீ லக்ஷ்மீவாஞ்சக்தோ ந பஹுபாஷிதா ॥ 61 ॥
ராஜபுத்ர: ப்ரிய: ச்ரேஷ்ட: ஸத்ருச: ச்வசுரஸ்ய மே ।
மத்த: ப்ரியதரோ நித்யம் ப்ராதா ராமஸ்ய லக்ஷ்மண: ॥ 62 ॥
நியுக்தோ துரி யஸ்யாம் து தாமுத்வஹதி வீர்யவான் ।
யம் த்ருஷ்ட்வா ராகவோ நைவ வ்ருத்த-மார்ய-மனுஸ்மரேத் ॥ 63 ॥

---

60. சிங்கம் போல் தோளும், நீண்ட கைகளும், சிறந்த மனதும் படைத்து காண்பதற்கினியவராகிய அவர் என்னைத் தாயாகவும் இராமரைத் தந்தையாகவும் மதித்து நடப்பவர்.

61-62. நான் கவரப்பட்ட பொழுது அதை வீரராகிய இலக்ஷ்மணர் அறியவில்லை. அவர் முதியோருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்றவர், வலிமை மிக்கவர், அதிகமாகப் பேசாதவர், சிறந்தவர், என் மாமனாரைப் போன்றவர், அவருக்குப் பிரியமான இராஜபுத்திரர், இராமருக்கு எப்பொழுதும் என்னைக் காட்டிலும் அன்பில் மிகுந்த தம்பி.

63. ஸ்ரீராகவர் எவரைக் கண்டு காலஞ் சென்ற தந்தையைக்கூட நினையாமலிருக்கிறாரோ அந்த வீரர் எந்த பாரத்தைச் சுமத்தினாலும் அதைத் தாங்குபவர்.

---

60. ஸமாசரத் । 62. மம ப்ரியதரோ । 63. வ்ருத்தமார்ய-மனுஸ்மரத் ।

स ममार्थाय कुशलं वक्तव्यो वचनान्मम ।
मृदु-र्नित्यं शुचिर्दक्षः प्रियो रामस्य लक्ष्मणः ।।६४।।
यथा हि वानरश्रेष्ठ दुःखक्षयकरो भवेत् ।
त्वमस्मिन् कार्यनिर्योगे प्रमाणं हरिसत्तम ।। ६५ ।।
राघवस्त्वत्समारम्भान्मयि यत्नपरो भवेत् ।
इदं ब्रूयाच्च मे नाथं शूरं रामं पुनः पुनः ।। ६६ ।।
जीवितं धारयिष्यामि मासं दशरथात्मज ।
ऊर्ध्वं मासान्न जीवेयं सत्येनाहं ब्रवीमि ते ।। ६७ ।।

ஸ மமார்த்தாய குசலம் வக்தவ்யோ வசனான் மம ।
ம்ருதுர்-நித்யம் சுசிர்தக்ஷ: ப்ரியோ ராமஸ்ய லக்ஷ்மண: ॥ 64 ॥
யதா ஹி வானரச்ரேஷ்ட துःக்க க்ஷயகரோ பவேத் ।
த்வமஸ்மின் கார்யநிர்யோகே ப்ரமாணம் ஹரிஸத்தம ॥ 65 ॥
ராகவஸ் த்வத் ஸமாரம்பான் மயி யத்னபரோ பவேத் ।
இதம் ப்ரூயாச்ச மே நாதம் சூரம் ராமம் புன: புன: ॥ 66 ॥
ஜீவிதம் தாரயிஷ்யாமி மாஸம் தசரதாத்மஜ ।
ஊர்த்வம் மாஸாந் ந ஜீவேயம் ஸத்யேனாஹம் ப்ரவீமி தே ॥ 67 ॥

---

64. என் பொருட்டு அந்த லக்ஷ்மணரை க்ஷேமம் விசாரித்ததாய்ச் சொல்ல வேண்டும். அவர் அடக்கமுள்ளவர், சாமர்த்தியம் படைத்தவர், தூய்மையானவர், எப்பொழுதும் இராமருக்குப் பிரியமானவர்.

65. வானரத்தலைவரே! வானரர்களிற் சிறந்தவரே! என்னுடைய துக்கத்தை முடிப்பவராக ஸ்ரீராமர் எப்படி ஆவாரோ அப்படி காரியத்தை முடிப்பதற்கு நீர்தான் காரணமாக வேண்டும்.

66. உமது முயற்சியால்தான் ஸ்ரீராகவர் என் விஷயத்தில் பிரயத்னம் செய்பவராக வேண்டும். என் நாயகரும் சூரருமான ஸ்ரீராமருக்கு மறுபடியும் மறுபடியும் எனது இந்த வார்த்தைகளைச் சொல்லும்.

67. 'தசரதபுத்திரரே! ஒரு மாதந்தான் உயிருடனிருப்பேன். ஒருமாதத்திற்கு மேல் பிழைத்திருக்க மாட்டேன். இதை நான் ஸத்தியமாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

रावणेनोपरुद्धां मां निकृत्या पापकर्मणा ।
त्रातु-मर्हसि वीर त्वं पातालादिव कौशिकीम् ॥ ६८ ॥
ततो वस्त्रगतं मुक्त्वा दिव्यं चूडामणिं शुभम् ।
प्रदेयो राघवायेति सीता हनुमते ददौ ॥ ६९ ॥
प्रतिगृह्य ततो वीरो मणिरत्न-मनुत्तमम् ।
अङ्गुल्या योजयामास न ह्यस्य प्राभवद्भुजः ॥ ७० ॥

ராவணேனோபருத்தாம் மாம் நிக்ருத்யா பாபகர்மணா ।
த்ராது-மர்ஹஸி வீர த்வம் பாதாலாதிவ கௌசிகீம் ॥ 68 ॥
ததோ வஸ்த்ரகதம் முக்த்வா திவ்யம் சூடாமணிம் சுபம் ।
ப்ரதேயோ ராகவாயேதி ஸீதா ஹனுமதே ததௌ ॥ 69 ॥
ப்ரதிக்ருஹ்ய ததோ வீரோ மணிரத்ன-மனுத்தமம் ।
அங்குல்யா யோஜயாமாஸ ந ஹ்யஸ்ய ப்ராபவத்புஜ: ॥ 70 ॥

68. 'பாதாளத்திலிருந்து கௌசிகீ மீட்கப்பட்டாற் போல் பாவியான இராவணனால் சிறை வைக்கப்பட்ட என்னை நீங்கள் மீட்க அருள்புரிய வேண்டும்'

69. இப்படிச் சொல்லிவிட்டு ஆடையில் முடிந்திருந்த திவ்ய அழகு பொருந்திய சூடாமணியை அவிழ்த்தெடுத்து 'ஸ்ரீராகவரிடம் இதைக் கொடுக்க வேண்டும்' என்று சீதை ஹனுமாரிடத்தில் தந்தாள்.

70. வீர ஹனுமார் ஒப்புயர்வற்ற அந்த மணிரத்தினத்தை வாங்கி விரலில் அணிந்து கொண்டார். இவருடைய கையும் அதற்கு மீறாமலிருந்தது.

---

65. த்வமஸ்மின் கார்யநிர்வாஹே । ஹரியூதப ।

68. நிக்ருத்யா–வஞ்சனேன ।
பாதாலாதிவ கௌசிகீம்–'கௌசிக: இந்த்ர: தத்ஸம்பந்தினீ ஸ்ரீ: கௌசிகீ ।
முன்பு விருத்ரவதத்தால் பிரம்மஹத்தியால் பீடிக்கப்பட்ட இந்திரனுடைய ராஜ்யலக்ஷ்மி பாதாளம் புகுந்தாள். அவளை நாராயணர் மீட்டு இந்திரனுக்களித்தார் என்பது புராண வரலாறு. பூதேவி கௌசிக கோத்ரத்தைச் சார்ந்தவள் என்றும் அந்த பூதேவியைப் பாதாளத்திலிருந்து ஆதிவராஹாவதாரமெடுத்த பகவான் மீட்டது போலும் என்றும் இதற்கு உரை உளது.

मणिरत्नं कपिवरः प्रतिगृह्याभिवाद्य च ।
सीतां प्रदक्षिणं कृत्वा प्रणतः पार्श्वतः स्थितः ।। ७१ ।।
हर्षेण महता युक्तः सीतादर्शनजेन सः ।
हृदयेन गतो रामं शरीरेण तु विष्ठितः ।। ७२ ।।

மணிரத்னம் கபிவர: ப்ரதிக்ருஹ்யாபிவாத்ய ச ||
ஸீதாம் ப்ரதக்ஷிணம் க்ருத்வா ப்ரணத: பார்ச்வத:-ஸ்தித: || 71 ||
ஹர்ஷேண மஹதா யுக்த: ஸீதாதர்சனஜேன ஸ: |
ஹ்ருதயேன கதோ ராமம் சரீரேண து விஷ்டித: || 72 ||

---

71. வானரசிரேஷ்டர் மணிரத்தினத்தை அணிந்து கொண்டு சீதையை அடிபணிந்து வலம் வந்து கை கூப்பிய வண்ணம் அருகில் நின்றார்.

72. அப்பொழுது சீதையைக் கண்ட பேரானந்தத்துடன் கூடியவராய் மனதை ஸ்ரீராமரிடம் செலுத்திவிட்டு உடலோடு மாத்திரம் அங்கிருந்தார்.

---

70. முன் காட்டிய பெரிய உருவத்தை மறைத்து ஹனுமார் மறுபடி சிறிய உருவத்துடன் இருந்ததால் சூடாமணியைக் கைவிரலில் அணிய முடிந்தது. 'அஸ்ய ஹனுமத: புஜ: ந ப்ராபவத் ந ஸ்தூலோऽபவத்' |
இதற்கு வேறு விதமாயும் அர்த்தம் கூறப்பட்டுள்ளது. நப்ராபவத் தச்சித்ர ப்ரவேசார்ஹோ நாபவத் இத்யர்த்த:' அந்த துவாரத்தில் விரல் நுழையக்கூடிய தாயில்லை. அதைத் துணியில் முடிந்து கெட்டியாகக் கையில் கட்டிக் கொண்டார். 'ஸூக்ஷ்ம வாஸோ பத்தம் அங்குல்யாம் த்ருடம் பபந்த இத்யர்த்த:'

72. ராமம் லக்ஷ்மணஞ்ச ஸலக்ஷணம் |

मणिवरमुपगृह्य तं महार्हं जनकनृपात्मजया धृतं प्रभावात् ।
गिरिरिव पवनावधूतमुक्तः सुखितमनाः प्रतिसंक्रमं प्रपेदे ।। ७३ ।।

इति अष्टत्रिंशः सर्गः
(आदितः श्लोकाः १७५४)

மணிவரமுபக்ருஹ்ய தம் மஹார்ஹம்
ஜனகந்ருபாத்மஜயா த்ருதம் ப்ரபாவாத் ।
கிரிரிவ பவனாவதூதமுக்த:
ஸுகிதமனா: ப்ரதிஸங்க்ரமம் ப்ரபேதே ।। 73 ।।

இதி அஷ்டத்ரிம்ச: ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 1754)

---

73. சீதை தரித்திருந்த மகிமை வாய்ந்ததும் விலை மதிக்க முடியாதது மான அச்சிறந்த மாணிக்கத்தை வாங்கிக் கொண்டு காற்றினால் அலைக்க ழிக்கப்பட்டபின் அமைதியுற்ற மலை போல் களிப்புடைய மனத்தினராய் அவர் திரும்பிச் செல்ல எண்ணினார்.

இங்ஙனம் முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றும்
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 1754)

---

73. கிரிவரபவனாவதூத முக்த: ।

एकोनचत्वारिंशः सर्गः
सीतासमाश्वासनम्

मणिं दत्वा ततः सीता हनुमन्तमथाब्रवीत् ।
अभिज्ञान-मभिज्ञात-मेतद्रामस्य तत्त्वतः ॥ १ ॥
मणिं तु दृष्ट्वा रामो वै त्रयाणां संस्मरिष्यति ।
वीरो जनन्या मम च राज्ञो दशरथस्य च ॥ २ ॥
स भूयस्त्वं समुत्साहे चोदितो हरिसत्तम ।
अस्मिन् कार्यसमारंभे प्रचिन्तय यदुत्तरम् ॥ ३ ॥

ஏகோநசத்வாரிம்ச: ஸர்க்க:
ஸீதாஸமாச்வாஸனம்

மணிம் தத்வா தத: ஸீதா ஹனுமந்த-மதாப்ரவீத் ।
அபிஜ்ஞான-மபிஜ்ஞாத-மேதத்ராமஸ்ய தத்வத: ॥ 1 ॥
மணிம் து த்ருஷ்ட்வா ராமோ வை த்ரயாணாம் ஸம்ஸ்மரிஷ்யதி ।
வீரோ ஜனன்யா மம ச ராஜ்ஞோ தசரதஸ்ய ச ॥ 2 ॥
ஸ பூயஸ்த்வம் ஸமுத்ஸாஹே சோதிதோ ஹரிஸத்தம ।
அஸ்மின் கார்யஸமாரம்பே ப்ரசிந்தய யதுத்தரம் ॥ 3 ॥

முப்பத் தொன்பதாவது ஸர்க்கம்
ஸீதையைச் சமாதானம் செய்தல்

1. ஸீதை சூடாமணியைக் கொடுத்தபின் ஹனுமாரை நோக்கிப் பின் வருமாறு கூறினாள். ''ஸ்ரீராமருக்கு உள்ளபடி நன்றாகத் தெரிந்த அடையாளம் இது.

2. 'வீரரான இராமர் இம்மணியைக் கண்டவுடன் என்னையும் என் தாயாரையும் தசரத மன்னரையும் மூவரையும் நினைத்துக் கொள்வார்.

3. 'வானரசிரேஷ்டரே! மேலும் உற்சாகத்துடன் காரியத்தில் ஏவப்படப் போகும் நீர் இனி நடக்க வேண்டியது எதுவோ அதைப்பற்றி நன்கு ஆலோசிக்க வேண்டும்.

त्वमस्मिन् कार्यनिर्योगे प्रमाणं हरिसत्तम ।
हनुमन् यत्नमास्थाय दुःखक्षयकरो भव ॥
तस्य चिन्तयतो यत्नो दुःखक्षयकरो भवेत् ॥ ४ ॥
स तथेति प्रतिज्ञाय मारुति-र्भीमविक्रमः ।
शिरसाऽऽवन्द्य वैदेहीं गमनायोपचक्रमे ॥ ५ ॥
ज्ञात्वा संप्रस्थितं देवी वानरं मारुतात्मजम् ।
बाष्पगद्गदया वाचा मैथिली वाक्यमब्रवीत् ॥ ६ ॥

த்வமஸ்மின் கார்யநிர்யோகே ப்ரமாணம் ஹரிஸத்தம ।
ஹனுமன் யத்னமாஸ்தாய து:க்கக்ஷயகரோ பவ ।
தஸ்ய சிந்தயதோ யத்னோ து: க்க க்ஷயகரோ ப வேத் ॥ 4 ॥

ஸ ததேதி ப்ரதிஜ்ஞாய மாருதிர்-பீமவிக்ரம: ।
சிரஸா ऽऽவந்த்ய வைதேஹீம் கமனாயோபசக்ரமே ॥ 5 ॥
ஜ்ஞாத்வா ஸம்ப்ரஸ்திதம் தேவீ வானரம் மாருதாத்மஜம் ।
பாஷ்பகத்கதயா வாசா மைதிலீ வாக்ய-மப்ரவீத் ॥ 6 ॥

---

4. 'வானரோத்தமரே! ஹனுமாரே! இந்தக் காரியத்தை முடித்து வைப்பதில் நீர்தான் முக்கியமானவர். பிரயத்தினத்தைச் செய்து என் துக்கத்தை ஒழிப்பவராவீர். அதைப்பற்றிச் சிந்திக்கும் உமக்கு துக்கத்தை முடிக்கும் முயற்சி தானாகவே ஏற்படும்'

5. அதிபராக்கிரமசாலியான அம் மாருதியானவர் சீதையிடம் 'அப்படியே ஆகட்டும்' என்று உறுதிகூறித் தலை வணங்கிப் புறப்படச் சித்தமானார்.

6. வாயு குமாரரான வானரர் புறப்படச் சித்தமானதை யுணர்ந்த சீதா தேவி கண்ணீரால் தடைபட்ட குரலுடன் பின்வரும் வார்த்தையைச் சொன்னாள்.

---

1. அபிஜ்ஞாதம்-ஸம்யக்ஞாதம் । அபிஜ்ஞானம்-சிஹ்னம் ।
2. சூடாமணி விவாக காலத்தில் சீதையின் தாயாரிடமிருந்து தந்தையாகிய ஜனகர் வாங்கி தசரதர் கையில் கொடுத்ததால் மூவருடைய சம்பந்தம்.
3. ஸமுத்ஸாஹ சோதிதோ । அஸ்மின் கார்ய ஸமுத்ஸாஹே ।ஸதுத்தரம்॥
4. தஸ்யசிந்தய யோ யத்னோ ।

कुशलं हनुमन् ब्रूयाः सहितौ रामलक्ष्मणौ ॥ ७ ॥
सुग्रीवं च सहामात्यं वृद्धान् सर्वांश्च वानरान् ।
ब्रूयास्त्वं वानरश्रेष्ठ कुशलं धर्मसंहितम् ॥ ८ ॥
यथा स च महाबाहु-र्मां तारयति राघवः ।
अस्माद्दुःखाम्बुसंरोधात्त्वं समाधातु-मर्हसि ॥ ९ ॥
जीवन्तीं मां यथा रामः संभावयति कीर्तिमान् ।
तत्तथा हनुमान् वाच्यं वाचा धर्ममवाप्नुहि ॥ १० ॥

குசலம் ஹனு'மன் ப்ரூயா: ஸஹிதௌ ராமலக்ஷ்மணௌ ll 7 ll
ஸுக்ரீவஞ்ச ஸஹாமத்யம் வ்ருத்தான் ஸர்வாம்ச்ச வானரான் l
ப்ரூயாஸ்த்வம் வானரச்ரேஷ்ட குசலம் தர்மஸம்ஹிதம் ll 8 ll
யதா ஸ ச மஹாபாஹுர்-மாம் தாரயதி ராகவ: l
அஸ்மாத்து:க்காம்புஸம்ரோதாத்த்வம் ஸமாதாது-மர்ஹஸி ll 9 ll
ஜீவந்தீம் மாம் யதா ராம: ஸம்பாவயதி கீர்த்திமான் l
தத்ததா ஹனுமன் வாச்யம் வாசா தர்ம-மவாப்னுஹி ll 10 ll

---

7. 'ஹனுமாரே! ஸ்ரீராமலக்ஷ்மணர் இருவருக்கும் சேர்த்து நான் க்ஷேமத்தை விரும்பியதாகத் தெரிவியும்.

8. 'வானரசிரேஷ்டரே! மந்திரிகளுடன் கூடிய சுக்ரீவருக்கும் பெரியவர்களுக்கும் எல்லா வானரர்களுக்கும் முறைப்படி நான் க்ஷேமத்தை விரும்பியதாகத் தெரிவியும்.

9. 'புஜபலம் படைத்த இராகவர் துன்பக் கடலில் அடைப்பட்டிருக்கும் என்னை எப்படி விடுவிப்பாரோ அப்படி காரியசித்திக்கு நீர் வழிகாணவேண்டும்.

10. ஹனுமாரே! புகழ்படைத்த இராமர் என்னை எப்படி உயிருடன் கண்டு அருள் புரிவாரோ அப்படி சொல்லி நீர் உமது வார்த்தையால் புண்ணியத்தை அடைவீராக.

---

6. வானரம் பவனாத்மஜம் l

ஒ. சொல்லினால் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன். —கம்பர்.

नित्य-मुत्साह-युक्ताश्च वाचः श्रुत्वा त्वयेरिताः ।
वर्धिष्यते दाशरथेः पौरुषं मदवाप्तये ॥ ११ ॥
मत्सन्देशयुता वाचस्त्वत्तः श्रुत्वैव राघवः ।
पराक्रमविधिं वीरो विधिवत् संविधास्यति ॥ १२ ॥
सीतायास्तद्वचः श्रुत्वा मारुति-र्हरिसत्तमः ।
शिरस्यंजलि-माधाय हनुमान् वाक्यमब्रवीत् ॥ १३ ॥
क्षिप्रमेष्यति काकुत्स्थो हर्यृक्षप्रवरै-र्वृतः ।
यस्ते युधि विजित्यारीञ्च्छोकं व्यपनयिष्यति ॥ १४ ॥

நித்ய-முத்ஸாஹ-யுக்தாச்ச வாச: ச்ருத்வா த்வயேரிதா: ।
வர்த்திஷ்யதே தாசரதே: பௌருஷம் மதவாப்தயே ॥ 11 ॥
மத்ஸந்தேசயுதா வாசஸ்த்வத்த; ச்ருத்வைவ ராகவ: ।
பராக்ரமவிதிம் வீரோ விதிவத் ஸம்விதாஸ்யதி ॥ 12 ॥
ஸீதாயாஸ்-தத்வச: ச்ருத்வா மாருதிர்-ஹரிஸத்தம: ।
சிரஸ்யஞ்ஜலி-மாதாய ஹனுமான் வாக்ய மப்ரவீத் ॥ 13 ॥
க்ஷிப்ரமேஷ்யதி காகுத்ஸ்தோ ஹர்ய்ருக்ஷப்ரவரைர் வ்ருத: ।
யஸ்தே யுதி விஜித்யாரீஞ் சோகம் வ்யபநயிஷ்யதி ॥ 14 ॥

---

11. 'நீர் சொல்லும் ஊக்கமுள்ள சொற்களைக் கேட்டு இராமர் என்னை அடையச் செய்யும் முயற்சி இடைவிடாது வளர வேண்டும்.

12. 'வீரராகவர் என் செய்தி கலந்த உமது வார்த்தைகளைக் கேட்டு தமது பராக்கிரமத்திற்கியைந்த வகையில் வீரச் செயல்களை மேற் கொள்வாராக'

13. சீதையின் அம்மொழியைக் கேட்டு வாயு புத்திரரும் வானர சிரேஷ்டருமான ஹனுமார் தலைமேல் கைகூப்பிப் பின்வரும் வார்த்தையைச் சொன்னார்.

14. 'வானரகுல வீரர்களாலும் கரடிக்குல வீரர்களாலும் சூழப் பெற்று ஸ்ரீராமர் விரைவில் வருவார். சத்துருக்களைப் போரில் வென்று உங்கள் துயரை நீக்குவார்.

---

10. தத் த்வயா ஹனுமன் ।

न हि पश्यामि मर्त्येषु नासुरेषु सुरेषु वा ।
यस्तस्य क्षिपतो बाणां-स्थातु- मुत्सहतेऽग्रतः ॥ १५ ॥
अप्यर्कमपि पर्जन्य-मपि वैवस्वतं यमम् ।
स हि सोढुं रणे शक्त-स्तव हेतो-र्विशेषतः ॥ १६ ॥
स हि सागरपर्यन्तां महीं शासितु-मीहते ।
त्वन्निमित्तो हि रामस्य जयो जनकनन्दिनि ॥ १७ ॥

ந ஹி பச்யாமி மர்த்யேஷு நாஸுரேஷு ஸுரேஷு வா ।
யஸ்தஸ்ய க்ஷிபதோ பாணாம்-ஸ்தாது-முத்ஸஹதேऽக்ரத: ॥ 15 ॥
அப்யர்க்கமபி பர்ஜன்ய-மபி வைவஸ்வதம் யமம் ।
ஸ ஹி ஸோடும் ரணே சக்தஸ்-தவ ஹேதோர்-விசேஷத: ॥ 16 ॥
ஸ ஹி ஸாகரபர்யந்தாம் மஹீம் சாஸிது-மீஹதே ।
த்வந்நிமித்தோ ஹி ராமஸ்ய ஜயோ ஜனகநந்தினி ॥ 17 ॥
தஸ்ய தத்வசனம் ச்ருத்வா ஸம்யக் ஸத்யம் ஸுபாஷிதம் ।

---

15. 'அவர் அம்பு தொடுக்கையில் அவருக்கெதிரில் நிற்கவல்ல மனிதனையோ தேவனையோ அசுரனையோ நான் காணவில்லை.

16. 'உங்கள் பொருட்டு முக்கியமாய் அவர் சூரியனையும் இந்திரனையும் அக்கினியையும் யமனையும் போரில் எதிர்க்க வல்லவர்.

17. 'ஜனகநந்தினி! உங்கள் பொருட்டு ஸ்ரீராமருக்கு வெற்றி ஏற்படுவது நிச்சயம். அவர் கடல் சூழ்ந்த பூவுலகைக் காத்தளிக்க வல்லவர்'

---

11. நித்ய முத்ஸாஹயுக்தஸ்ய ।
13. ஸீதாயா வசனம் ।
15. யஸ்தஸ்ய வமதோ ।
16. பர்ஜன்யம்-இந்த்ரம் ।
'பர்ஜன்யௌ ரஸதப்தேந்த்ரௌ ।
' இத்யமர: ।
17. மஹீம் ஸாதிது-மர்ஹதி ।

तस्य तद्वचनं श्रुत्वा सम्यक् सत्यं सुभाषितम् ।
जानकी बहुमेनेऽथ वचनं चेदमब्रवीत् ।। १८ ।।
ततस्तं प्रस्थितं सीता वीक्षमाणा पुनः पुनः ।
भर्तृस्नेहान्वितं वाक्यं सौहार्दा-दन्वमानयत् ।। १९ ।।
यदि वा मन्यसे वीर वसैकाहमरिन्दम ।
कस्मिंश्चित् संवृते देशे विश्रान्तः श्वो गमिष्यसि ।। २० ।।
मम चेदल्पभाग्यायाः सान्निध्यात्तव वानर ।
अस्य शोकस्य महतो मुहूर्तं मोक्षणं भवेत् ।। २१ ।।

ஜானகீ பஹுமேனே sத வசனஞ் சேதமப்ரவீத் ll 18 ll
ததஸ்தம் ப்ரஸ்திதம் ஸீதா வீக்ஷமாணா புன: புன: l
பர்த்ருஸ் நேஹான்விதம் வாக்யம் ஸௌஹார்த்தா-தன்வமானயத் ll 19 ll
யதி வா மன்யஸே வீர வஸைகாஹ-மரிந்தம l
கஸ்மிச்சித் ஸம்வ்ருதே தேசே விச்ராந்த: ச்வோ கமிஷ்யஸி ll 20 ll
மம சேதல்பபாக்யாயா: ஸாந்நித்யாத்தவ வானர l
அஸ்ய சோகஸ்ய மஹதோ முஹுர்த்தம் மோக்ஷணம் பவேத் ll 21 ll

---

18. அழகாகவும் சாமர்த்தியமாகவும் அவர் சொன்ன ஸத்ய வசனத்தைக் கேட்டு மனமகிழ்ந்து ஜானகி மேலும் கூறுவாள்.

19. திரும்பிப் போகப் புறப்பட்டு நிற்குமவரை அடிக்கடி உற்று நோக்கி நாயகரிடம் அன்பு கலந்து அவர் கூறிய வார்த்தையைப் போற்றி உள்ளன்பினால் பேசலானாள்.

20. 'பகையை வெல்லும் வீரரே! உமக்கிஷ்டமாயின் நீர் இங்கே மறைவான ஏதேனுமோரிடத்தில் ஒரு நாள் இருந்து இளைப்பாறி நாளை போகலாம்.

21. 'வானரரே! நீர் சமீபத்திலிருந்தால் பாக்கியங் குறைந்த எனது துக்கம் சிறிது நேரமாவது என்னை விட்டிருக்கும்.

गते हि हरिशार्दूल पुनरागमनाय तु ।
प्राणानामपि सन्देहो मम स्यान्नात्र संशयः ।। २२ ।।
तवादर्शनजः शोको भूयो मां परितापयेत् ।
दुःखाद्दुःखपरामृष्टां दीपयन्निव वानर ।। २३ ।।
अयं च वीर सन्देह-स्तिष्ठतीव ममाग्रतः ।
सुमहांस्त्वत्सहायेषु हर्यृक्षेषु हरीश्वर ।। २४ ।।

கதே ஹி ஹரிசார்த்தூல புனராகமனாய து l
ப்ராணானாமபி ஸந்தேஹோ மம ஸ்யாந்நாத்ர ஸம்சய: ll 22 ll
தவாதர்சனஜ: சோகோ பூயோ மாம் பரிதாபயேத் l
துःக்காத்து:க்கபராம்ருஷ்டாம் தீபயன்னிவ வானர ll 23 ll
அயஞ்ச வீர ஸந்தேஹஸ்-திஷ்டதீவ மமாக்ரத: l
ஸுமஹாம்ஸ்த்வத்ஸஹாயேஷு ஹர்ய்ருக்ஷேஷு ஹரீச்வர ll 24 ll

---

22. வானரசிரேஷ்டரே! நீர் மறுபடி திரும்பிவருவதற்கே சென்ற போதிலும் என்னுடைய உயிருக்குச் சந்தேகந்தான். இதில் ஐயமில்லை.

23. வானரரே! உம்மைக் காணாமையாலுண்டாகும் வருத்தமானது துக்கத்தின் மேல் துக்கத்தால் வருந்திச் சற்றுத் தேறிய என்னை மீண்டும் பரிதவிக்கச் செய்யும்.

24. வானரத்தலைவரே! வீரரே! உமக்குத் துணைவர்களான வானரர்கள் விஷயத்திலும் கரடிகள் விஷயத்திலும் எனக்கொரு பெரிய சந்தேகம் கண்முன் நிற்பது போலிருக்கிறது.

---

22. ததோ ஹி l
கதே ஹி ஹரிசார்த்தூலே l
24. ஹரீச்வர: l

कथं नु खलु दुष्पारं तरिष्यन्ति महोदधिम् ।
तानि हर्यृक्षसैन्यानि तौ वा दशरथात्मजौ ।। २५ ।।
त्रयाणामेव भूतानां सागरस्यास्य लंघने ।
शक्तिः स्याद्वैनतेयस्य तव वा मारुतस्य वा ।। २६ ।।
एतस्मिन् कार्यनिर्योगे वीरैवं दुरतिक्रमे ।
किं पश्यसि समाधानं त्वं हि कार्यविदां वरः ।। २७ ।।

கதந்நு கலு துஷ்பாரம் தரிஷ்யந்தி மஹோததிம் ।
தானி ஹர்ய்ருக்ஷ-ஸைன்யானி தௌ வா தசரதாத்மஜௌ ।। 25 ।।
த்ரயாணாமேவ பூதானாம் ஸாகரஸ்யாஸ்ய லங்கனே ।
சக்தி: ஸ்யாத் வைநதேயஸ்ய தவ வா மாருதஸ்ய வா ।। 26 ।।
ஏதஸ்மின் கார்யநிர்யோகே வீரைவம் துரதிக்ரமே ।
கிம் பச்யஸி ஸமாதானம் த்வம் ஹி கார்யவிதாம் வர: ।। 27 ।।

---

25. கடத்தற்கரிய பெரிய கடலை வானரர்களும் கரடிகளுமடங்கிய சேனை எப்படித்தாண்டும்? தசரத புத்திரர்களாகிய அவ்விருவர்தாம் எப்படித் தாண்டுவார்கள்?

26. இக் கடலைத் தாண்டுவதில் மூன்று பேருக்குத்தான் ஆற்றல் உண்டு-உமக்கும், வாயுவுக்கும், கருடனுக்கும்.

27. வீரரே! நீர் காரியத்தை அறிந்தவர்களிட் சிறந்தவர்; கடக்க முடியாத இவ்விஷயத்தில் காரியத்தை முடிக்க என்ன உபாயத்தை நீர் காண்கிறீர்?

---

26. ஸாகரஸ்யேஹ லங்க்கனே ।

कामगस्य त्वमेवैकः कार्यस्य परिसाधने ।
पर्याप्तः परवीरघ्न यशास्यस्ते फलोदयः ॥ २८ ॥
बलैः समग्रै-र्यदि मां रावणं जित्य संयुगे ।
विजयी स्वपुरीं यायात् तन्मे तस्य यशस्करम् ॥ २९ ॥
शरैस्तु संकुलां कृत्वा लंकां परबलार्दनः ।
मां नयेद्यदि काकुत्स्थ-स्तत्तस्य सदृशं भवेत् ॥ ३० ॥

காமமஸ்ய த்வமேவைக: கார்யஸ்ய பரிஸாதனே ||
பர்யாப்த: பரவீரக்ன யசஸ்யஸ்-தே பலோதய: || 28 ||
பலை: ஸமக்ரைர்-யதி மாம் ராவணம் ஜித்ய ஸம்யுகே ||
விஜயீ ஸ்வபுரீம் யாயாத் தன்மே தஸ்ய யசஸ்கரம் || 29 ||
சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தன: ||
மாம் நயேத்யதி காகுத்ஸ்தஸ்-தத்தஸ்ய ஸத்ருசம் பவேத் || 30 ||

---

28. பகைவீரரை அழிக்க வல்லவரே! இக்காரியத்தில் சித்திபெறுவதற்கு நீ ஒருவராகவே ஆற்றல் படைத்தவர் எனினும் அப்பொழுது அதன் பயனாய் ஏற்படும் கீர்த்தி உம்முடையதே ஆகும்.

29. திரண்ட சேனைகளுடன் இராவணனைப் போரில் வென்று வெற்றிக் கோலத்துடன் என்னைத் தமது நகரத்திற்கு ஸ்ரீராமர் அழைத்துப் போவாராயின் அது எனக்கும் அவருக்கும் பெருமை தருவதாகும்.

30. பகைவரை முறியடிக்கும் இராகவர் பாணங்களால் இலங்கையை மூடி என்னை மீட்டுச் செல்வாராயின் அதுதான் அவருக்குப் பொருத்தமாயிருக்கும்.

---

29. யாயாத் தத்தஸ்ய ||
30. பலைஸ்து ஸங்குலாம் ||
ஸஹிதம் ஹேது ஸம்ஹிதம் ||

तद्यथा तस्य विक्रान्तमनुरूपं महात्मनः ।
भवेदाहवशूरस्य तथा त्वमुपपादय ॥ ३१ ॥
तथार्थोपहितं वाक्यं प्रश्रितं धर्मसंहितम् ।
निशम्य हनुमाञ्च्छेषं वाक्य-मुत्तर-मब्रवीत् ॥ ३२ ॥
देवि हर्यृक्षसैन्याना-मीश्वरः प्लवतां वरः ।
सुग्रीवः सत्त्वसंपन्नस्तवार्थे कृतनिश्चयः ॥ ३३ ॥
स वानरसहस्राणां कोटीभिरभिसंवृतः ।
क्षिप्रमेष्यति वैदेहि राक्षसानां निबर्हणः ॥ ३४ ॥

தத்யதா தஸ்ய விக்ராந்த-மனுரூபம் மஹாத்மன: ।
பவேதாஹவவ சூரஸ்ய ததா த்வமுபபாதய ॥ 31 ॥
ததார்த்தோபஹிதம் வாக்யம் ப்ரச்ரிதம் தர்மஸம்ஹிதம் ।
நிசம்ய ஹனுமான் சேஷம் வாக்ய-முத்தர-மப்ரவீத் ॥ 32 ॥
தேவி ஹர்ய்ருக்ஷஸைன்யானா-மீச்வர: ப்லவதாம் வர: ।
ஸுக்ரீவ: ஸத்வஸம்பன்னஸ்-தவார்த்தே க்ருதநிச்சய: ॥ 33 ॥
ஸ வானர-ஸஹஸ்ராணாம் கோடிபிரபிஸம்வ்ருத: ।
க்ஷிப்ர-மேஷ்யதி வைதேஹி ராக்ஷஸானாம் நிபர்ஹண: ॥ 34 ॥

---

31. ஆகையால் போர் வீரரான அம்மகாத்மாவின் பராக்கிரமத்திற்கு எது பொருத்தமாயிருக்குமோ அதையே நீர் கைக் கொள்ளவேண்டும்.

32. பொருள் செறிந்ததும் பொருத்தமானதும் தருமத்துடன் கூடியதுமான அவ்வார்த்தையைக் கேட்டு ஹனுமார் மிகுதி சொல்ல வேண்டிய பதிலைக் கூறலானார்.

33. தேவி! வானரர்கள் சிறந்த சுக்ரீவர் வானரர்களும் கரடிகளுமடங்கிய படைக்குத் தலைவர். திண்மையான மனம் படைத்த அவர் உங்கள் பொருட்டு நிச்சயம் செய்துள்ளார்.

34. வைதேகி! ஆயிரம் கோடி வானரர்கள் புடைசூழ அவர் அரக்கர்களை அழிப்பவராய் விரைவில் வரப்போகிறார்.

तस्य विक्रमसंपन्नाः सत्त्ववन्तो महाबलाः ।
मनः संकल्पसंपन्ना निदेशे हरयः स्थिताः ॥ ३५ ॥
येषां नोपरि नाधस्तान्न तिर्यक् सज्जते गतिः ।
न च कर्मसु सीदन्ति महत्स्वमिततेजसः ॥ ३६ ॥
असकृत्तै-र्महोत्साहैः ससागरधराधरा ।
प्रदक्षिणीकृता भूमि-र्वायुमार्गानुसारिभिः ॥ ३७ ॥
मद्विशिष्टाश्च तुल्याश्च सन्ति तत्र वनौकसः ।
मत्तः प्रत्यवरः कश्चिन्नास्ति सुग्रीवसन्निधौ ॥ ३८ ॥

தஸ்ய விக்ரமஸம்பன்னா: ஸத்வவந்தோ மஹாபலா: ǀ
மன: ஸங்கல்பஸம்பன்னா நிதேசே ஹரய: ஸ்திதா: ǀǀ 35 ǀǀ
யேஷாம் நோபரி நாதஸ்தாந்ந திர்யக் ஸஜ்ஜதே கதி: ǀ
நச கர்மஸு ஸீதந்தி மஹத்ஸ்வமிததேஜஸ: ǀǀ 36 ǀǀ
அஸக்ருத்-தைர்மஹோத்ஸாஹை: ஸஸாகரதராதரா ǀ
ப்ரதக்ஷிணீக்ருதா பூமிர்-வாயுமார்க்கானுஸாரிபி: ǀǀ 37 ǀǀ
மத்விசிஷ்டாச்ச துல்யாச்ச ஸந்தி தத்ர வனௌகஸ: ǀ
மத்த: ப்ரத்யவர: கச்சிந்நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ ǀǀ 38 ǀǀ

---

35. அவருடைய கட்டளைக்கடங்கியிருக்கும் வானரர்கள் விக்கிரமசாலிகள், திடநெஞ்சம் படைத்தவர்கள், மகாபலசாலிகள், எண்ணியபடி செல்ல வல்லவர்கள்.

36. அவர்களின் போக்குக்குத் தடை என்பது மேலேயோ, கீழேயோ இடையிலோ இல்லை. அளவிலாத் திறமை படைத்த அவர்கள் மிகப்பெரிய செயல்களிலும் துன்பத்தையடைய மாட்டார்கள்.

37. ஆகாயமார்க்கத்தில் செல்லக்கூடியவர்களும் குன்றாத உற்சாகமுடையவர்களுமான அவர்களால் பூ மண்டலம் பல தடவை சுற்றிவரப்பட்டிருக்கிறது.

38. சுக்ரீவர் ஸந்நிதியில் எனக்கு மேலானவர்களும் சமமானவர்களுமான வானரர்கள் இருக்கிறார்கள்; என்னை விடத்தாழ்ந்தவன் எவனும் அங்கில்லை.

अहं तावदिह प्राप्तः किं पुनस्ते महाबलाः ।
न हि प्रकृष्टाः प्रेष्यन्ते प्रेष्यन्ते हीतरे जनाः ।। ३९ ।।
तदलं परितापेन देवि शोको व्यपैतु ते ।
एकोत्पातेन ते लङ्कामेष्यन्ति हरियूथपाः ।। ४० ।।
मम पृष्ठगतौ तौ च चन्द्रसूर्याविवोदितौ ।
त्वत्सकाशं महासत्त्वौ नृसिंहावागमिष्यतः ।। ४१ ।।

அஹம் தாவதிஹ ப்ராப்த: கிம் புனஸ்தே மஹாபலா: ।
ந ஹி ப்ரக்ருஷ்டா: ப்ரேஷ்யந்தே ப்ரேஷ்யந்தே ஹீதரே ஜனா: ।। 39 ।।
ததலம் பரிதாபேன தேவி சோகோ வ்யபைது தே ।
ஏகோத்பாதேன தே லங்கா-மேஷ்யந்தி ஹரியூதபா: ।। 40 ।।
மம ப்ருஷ்டகதௌ தௌ ச சந்த்ரஸூர்யாவிவோதிதௌ ।
த்வத்ஸகாசம் மஹாஸத்வௌ ந்ருஸிஹ்மாவாகமிஷ்யத: ।। 41 ।।

---

39. மேலானவர்கள் தூதர்களாய் அனுப்பப்படுவதில்லை. மற்றவர்களே அனுப்பப்படுவார்கள். நானே இங்கு வந்திருக்கிறேனென்றால் மகாபலசாலிகளான அவர்களைப்பற்றி இனிச்சொல்ல வேண்டுமா?

40. தேவி! ஆகையால் நீங்கள் வருத்தப்பட்டது போதும். உங்களுடைய துன்பம் தொலையட்டும். வானர வீரர்கள் ஒரே பாய்ச்சலில் உங்கள் பொருட்டு இலங்கைக்கு வந்து சேரப்போகிறார்கள்.

41. ஆண் சிங்கங்களைப் போல் மகாபலசாலிகளான இராமலக்ஷ்மணர்கள் எனது முதுகில் ஏறிக்கொண்டு சந்திரனும் சூரியனும் உதித்த மாதிரி உங்களிடம் வரப்போகிறார்கள்.

---

35. மன: ஸங்கல்ப ஸம்பாதா: மனோவ்யாபாரதுல்ய கமனா: ।
38. ப்ரத்யவர:-ஹீன: ।
41. மஹாஸங்க்கௌ ।

तौ हि वीरौ नरवरौ सहितौ रामलक्ष्मणौ ।
आगम्य नगरीं लंकां सायकै-र्विधमिष्यतः ।। ४२ ।।
सगणं रावणं हत्वा राघवो रघुनन्दनः ।
त्वामादाय वरारोहे स्वां पुरीं प्रति यास्यति ।। ४३ ।।
तदाश्वसिहि भद्रं ते भव त्वं कालकांक्षिणी ।
अचिराद्द्रक्ष्यसे रामं प्रज्वलन्त-मिवानलम् ।। ४४ ।।

தௌ ஹி வீரௌ நரவரௌ ஸஹிதௌ ராமலக்ஷ்மணௌ I
ஆகம்ய நகரீம் லங்காம் ஸாயகைர்-விதமிஷ்யத: II 42 II
ஸகணம் ராவணம் ஹத்வா ராகவோ ரகுநந்தன: I
த்வாமாதாய வராரோஹே ஸ்வாம் புரீம் ப்ரதியாஸ்யதி II 43 II
ததாச்வஸிஹி பத்ரம் தே பவ த்வம் காலகாங்க்ஷிணீ I
அசிராத்-த்ரக்ஷ்யஸே ராமம் ப்ரஜ்வலந்த-மிவானலம் II 44 II

---

42. மனிதர்களிற் சிறந்த வீரர்களாகிய இராமலக்ஷ்மணரிருவரும் வந்து இலங்கா நகரத்தைத் தங்கள் பாணங்களால் அழிக்கப் போகிறார்கள்.

43. ரகு குலத்தை மகிழ்விக்கும் ராகவர் இராவணனைச் சுற்றத்துடன் கொன்று உங்களை அழைத்துக் கொண்டு தமது நகரம் திரும்பப் போகிறார்.

44. ஆகவே மனம் தேறியிருங்கள். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும். சிறிது காலம் பொறுத்திருங்கள். ஜ்வலிக்கும் அக்கினியைப் போன்ற ஸ்ரீராமரைச் சீக்கிரத்தில் காண்பீர்கள்.

---

43. ஸ்வபுரீம் ப்ரதி I

निहते राक्षसेन्द्रेऽस्मिन् सपुत्रामात्यबान्धवे ।
त्वं समेष्यसि रामेण शशांकेनेव रोहिणी ॥ ४५ ॥
क्षिप्रं त्वं देवि शोकस्य पारं यास्यसि मैथिलि ।
रावणं चैव रामेण निहतं द्रक्ष्यसेऽचिरात ॥ ४६ ॥
एवमाश्वास्य वैदेहीं हनुमान् मारुतात्मजः ।
गमनाय मतिं कृत्वा वैदेहीं पुनरब्रवीत ॥ ४७ ॥

நிஹதே ராக்ஷஸேந்த்ரேஸ்மின் ஸபுத்ராமாத்ய-பாந்தவே ।
த்வம் ஸமேஷ்யஸி ராமேண சசாங்கேனேவ ரோஹிணீ ॥ 45 ॥
க்ஷிப்ரம் த்வம் தேவிசோகஸ்ய பாரம் யாஸ்யஸி மைதிலி ।
ராவணஞ்சைவ ராமேண நிஹதம் த்ரக்ஷ்யஸேசிராத் ॥ 46 ॥
ஏவமாச்வாஸ்ய வைதேஹீம் ஹனுமான் மாருதாத்மஜ: ।
கமனாய மதிஞ் க்ருத்வா வைதேஹீம் புனரப்ரவீத் ॥ 47 ॥

---

45. அரக்கர் வேந்தன் தனது மக்கள், மந்திரி, சுற்றத்தார்களுடன் கொல்லப்பட்டபின் சந்திரனுடன் கூடிய ரோஹிணீ தேவியைப் போல் நீங்கள் ஸ்ரீராமருடன் சேரப் போகிறீர்கள்.

46. மைதிலீ தேவீ! துன்பக்கடலின் அக்கரையை நீங்கள் விரைவில் அடைவீர்கள். இராமனால் இராவணன் கொல்லப்படுவதையும் சீக்கிரம் காணப்போகிறீர்கள்.

47. வாயு குமாரராகிய ஹனுமார் இவ்வாறு வைதேஹிக்கு ஆறுதல் மொழி கூறிவிட்டுப் புறப்படக்கருதி வைதேஹியிடம் மறுபடியும் கூறுவார்.

---

45. நிஹதே ராக்ஷஸேந்த்ரே ச ।

46. பாரம் த்ரக்ஷ்யஸி ।

तमरिघ्नं कृतात्मानं क्षिप्रं द्रक्ष्यसि राघवम् ।
लक्ष्मणं च धनुष्पाणिं लंकाद्वार-मुपस्थितम् ॥ ४८ ॥
नखदंष्ट्रायुधान् वीरान् सिंहशार्दूल-विक्रमान् ।
वानरान् वारणेन्द्राभान् क्षिप्रं द्रक्ष्यसि संगतान् ॥ ४९ ॥
शैलाम्बुद-निकाशानां लंकामलयसानुषु ।
नर्दतां कपिमुख्याना-मार्ये यूथान्यनेकशः ॥ ५० ॥

தமரிக்னம் க்ருதாத்மானம் க்ஷிப்ரம் த்ரக்ஷ்யஸி ராகவம் ।
லக்ஷ்மணஞ்ச தனுஷ்பாணிம் லங்காத்வார-முபஸ்திதம் ॥ 48 ॥
நக-தம்ஷ்ட்ராயுதான் வீரான் ஸிஹ்ம-சார்த்தூல-விக்ரமான் ।
வானரான் வாரணேந்த்ராபான் க்ஷிப்ரம் த்ரக்ஷ்யஸி ஸங்கதான் ॥ 49 ॥
சைலாம்புதநிகாசானாம் லங்காமலயஸானுஷு ।
நர்த்ததாம் கபிமுக்யானா-மார்யே யூதான்யனேகச: ॥ 50 ॥

---

48. 'பகைவரையழிக்க நிச்சயித்துள்ள ஸ்ரீராமரையும் விற்பிடித்த கையுடன் இலங்கை வாயிலில் வந்து நிற்கும் இலக்ஷ்மணரையும் விரைவில் காண்பீர்கள்.

49. 'பற்களும் நகங்களும் ஆயுதமாயுடையவர்களும், சிங்கமும் புலியும் போன்ற வலியுடையவர்களும், பெரிய யானை போன்ற தோற்றமுடையவர்களுமான வானர வீரர்களின் கூட்டங்களை விரைவில் காண்பீர்கள்.

50. 'அம்மணி! இலங்கை மலையின் தாழ்வரைகளில் மலையும் முகிலும் போன்ற வானரத் தலைவர்களின் குழுக்கள் பல முழக்கம் செய்வதை (காணப்போகிறீர்கள்).

---

48. லங்காத்வார-முபாகதம் ।

स तु मर्मणि घोरेण ताडितो मन्मथेषुणा ।
न शर्म लभते रामः सिंहार्दित इव द्विपः ॥ ५१ ॥

मा रुदो देवि शोकेन मा भूत्ते मनसोऽप्रियम् ।
शचीव पत्या शक्रेण भर्त्रा नाथवती ह्यसि ॥ ५२ ॥

ஸ து மர்மணி கோரேண தாடிதோ மன்மதேஷுணா ।
ந சர்ம லபதே ராம: ஸிஹ்மார்த்தித இவ த்விப: ॥ 51 ॥

மா ருதோ தேவி சோகேன மாபூத்தே மனஸோऽப்ரியம் ।
சசீவ பத்யா சக்ரேண பர்த்தா நாதவதீ ஹ்யஸி ॥ 52 ॥

---

51. 'உயிர்நிலைகளில் கொடிய மன்மத பாணங்களால் அடிக்கப்பட்ட ஸ்ரீராமர் சிங்கத்திடம் அடியுண்ட யானை போல் ஒரு சுகத்தையும் அடையாமலிருக்கிறார்.

52. 'தேவி! அழ வேண்டாம். உங்கள் மனதிற்குச் சோகத்தால் கலக்கம் வேண்டாம். இந்திரனைப்பதியாயுடைய சசீ தேவி போல் நீங்கள் நாயகருடன் கூடியவர்களாவீர்கள்.

---

52. மனஸோ பயம் ।

रामाद्विशिष्टः कोऽन्योऽस्ति कश्चित् सौमित्रिणा समः ।
अग्नि-मारुत-कल्पौ तौ भ्रातरौ तव संश्रयौ ॥ ५३ ॥
नास्मिंश्चिरं वत्स्यसि देवि देशे रक्षोगणैरध्युषितेऽतिरौद्रे ।
न ते चिरादागमनं प्रियस्य क्षमस्व मत्संगम-कालमात्रम् ॥ ५४ ॥

इति एकोनचत्वारिंशः सर्गः

(आदितः श्लोकाः १८०८)

चत्वारिंशः सर्गः

हनुमद्गमनाभ्यनुज्ञानम्

ராமாத்விசிஷ்ட: கோऽன்யோஸ்தி கச்சித் ஸௌமித்ரிணா ஸம: ।
அக்னி-மாருத-கல்பௌ தௌ ப்ராதரௌ தவ ஸம்ச்ரயௌ ॥ 53 ॥
நாஸ்மிம்ச்சிரம் வத்ஸ்யஸி தேவி தேசே
ரக்ஷோ கணை-ரத்யுஷிதேऽதிரௌத்ரே ।
ந தே சிராதாகமனம் ப்ரியஸ்ய
க்ஷமஸ்வ மத்ஸங்கம-காலமாத்ரம் ॥ 54 ॥

இதி ஏகோநசத்வாரிம்ச: ஸர்க்க:

(ஆதித: ச்லோகா: 1808)

---

53. 'இராமருக்கு மிக்கார் யார் உளர்? இலக்ஷ்மணருக்கு ஒப்பானவர் யார் உளர்? காற்றும் நெருப்பும் சேர்ந்தாற்போன்ற அவ்விரு சகோதரர்களும் உங்களுக்குப் பற்றுக் கோடாகியவர்கள்.

54. 'தேவி! அரக்கர்கள் வசிக்கும் அதிபயங்கரமான இந்த தேசத்தில் நீங்கள் நெடுநாள் வசிக்கப் போவதில்லை. உங்கள் நாதரின் வரவு தாமதமாகாது. நான் அவரிடம் போய்ச் சேரும் வரை பொறுத்திருங்கள்.'

இங்ஙனம் முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றும்

(ஆதியிலிருந்து சுலோகங்கள் 1808)

चव्वारिंशः सर्गः
।। हनुमद्गमनाभ्यनुज्ञानम् ।।

श्रुत्वा तु वचनं तस्य वायुसूनो-र्महात्मनः ।
उवाचात्मह्वितं वाक्यं सीता सुरसुतोपमा ।। १ ।।
त्वां दृष्ट्वा प्रियवक्तारं संप्रहृष्यामि वानर ।
अर्ध-संजात-सस्येव वृष्टिं प्राप्य वसुन्धरा ।। २ ।।

சத்வாரிம்ச: ஸர்க்க:
ஹனுமத்கமனாப்யனுஜ்ஞானம்

ச்ருத்வா து வசனம் தஸ்ய வாயுஸூனோர்-மஹாத்மன: ।
உவாசாத்மஹிதம் வாக்யம் ஸீதா ஸுரஸுதோபமா ।। 1 ।।
த்வாம் திருஷ்ட்வா ப்ரியவக்தாரம் ஸம்ப்ரஹ்ருஷ்யாமி வானர ।
அர்த்த-ஸஞ்ஜாத-ஸஸ்யேவ வ்ருஷ்டிம் ப்ராப்ய வஸுந்தரா ।। 2 ।।

நாற்பதாவது ஸர்க்கம்
ஹனுமார் போக விடைபெறுதல்

1. தெய்வப்பெண் போன்ற ஸீதை வாயு குமாரரான அம்மகாத்மாவின் வார்த்தையைக் கேட்டுத் தனக்கு நன்மை பயக்கும் வாக்கியத்தைச் சொன்னாள்.

2. 'வானரரே! இனிய மொழி கூறும் உம்மைக் கண்டு நான் பாதி முளைத்த பயிருடன் கூடிய பூமி மழையைப் பெற்றாற்போல் மகிழ்கின்றேன்.

यथा तं पुरुषव्याघ्रं गात्रैः शोकाभिकर्शितैः ।
संस्पृशेयं सकामाऽहं तथा कुरु दयां मयि ।। ३ ।।
अभिज्ञानं च रामस्य दद्या हरिगणोत्तम ।
क्षिप्ता-मिषीकां काकस्य कोपादेकाक्षिशातनीम् ।। ४ ।।
मनः शिलायास्तिलको गण्डपार्श्वे निवेशितः ।
त्वया प्रनष्टे तिलके तं किल स्मर्तु-मर्हसि ।। ५ ।।

யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரை: சோகாபிகர்சிதை: I
ஸம்ஸ்ப்ருசேயம் ஸகாமாऽஹம் ததா குரு தயாம் மயி II 3 II
அபிஜ்ஞானஞ்ச ராமஸ்ய தத்யா ஹரிகணோத்தம I
க்ஷிப்தா-மிஷீகாம் காகஸ்ய கோபாதேகாக்ஷிசாதனீம் II 4 II
மன: சிலாயாஸ்திலகோ கண்டபார்ச்வே நிவேசித: I
த்வயா ப்ரநஷ்டே திலகே தம் கில ஸ்மர்த்து-மர்ஹஸி II 5 II

---

3. 'துன்பத்தால் மெலிந்துள்ள அவயவங்களால் நான் ஆசையுடன் அந்தப் புருஷோத்தமரைத் தழுவிக் கொள்வது கூடும் வண்ணம் என்னிடம் நீர் தயை செய்ய வேண்டும்.

4. 'வானர கணத்திற் சிறந்தவரே! நான் தந்த அடையாளத்தை இராமரிடம் கொடும். காகத்தின் ஒரு கண்ணைப் போக்கிவிட அவர் துரும்பைச் செலுத்தியதையும் அடையாளமாகச் சொல்லும். (பின் வருவதையும் நான் கூறியதாய்ச் சொல்லும்).

5. 'என்னுடைய திலகம் அழிந்திருந்த பொழுது உங்களால் மனோசிலை கொண்டு திலகம் கன்னத்தில் விளையாட்டாய் இடப்பட்டதை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளத்தகும்.

---

4. தத்யா-தேஹி
கண்ட பார்ச்வே-கண்டஸ்த்தலே கண்ட சைல பார்ச்வே வா I
கன்னத்தில் அல்லது கண்ட சைலத்தின் அருகாமையில்.
ஒ. என் ஓர் இன்னுயிர் மென் கிளிக்கு யார் பெயர் ஈகேன் மன்ன என்றலும் மாசறு கைகயன்மாது என் அன்னை தன் பெயர் ஆக என அன்பினொடு அந்நாள் சொன்ன மெய்ம் மொழி சொல்லுதி மெய்ம்மை தொடர்ந்தோய்.

स वीर्यवान् कथं सीतां हृतां समनुमन्यसे ।
वसन्तीं रक्षसां मध्ये महेन्द्रवरुणोपम: ।। ६ ।।
एष चूडामणिर्दिव्यो मया सुपरिरक्षित: ।
एतं दृष्ट्वा प्रहृष्यामि व्यसने त्वामिवानघ ।। ७ ।।
एष निर्यातित: श्रीमान् मया ते वारिसंभव:।। ८ ।।
अत: परं न शक्ष्यामि जीवितुं शोकलालसा ।। ९ ।।

ஸ வீர்யவான் கதம் ஸீதாம் ஹ்ருதாம் ஸமனுமன்யஸே ।
வஸந்தீம் ரக்ஷஸாம் மத்யே மஹேந்த்ர வருணோபம: ।। 6 ।।
ஏஷ சூடாமணிர்-திவ்யோ மயா ஸுபரிரக்ஷித: ।
ஏதம் த்ருஷ்ட்வா ப்ரஹ்ருஷ்யாமி வ்யஸனே த்வாமிவானக ।। 7 ।।
ஏஷ நிர்யாதித: ஸ்ரீமான் மயா தே வாரிஸம்பவ: ।। 8 ।।
அத: பரம் ந சக்ஷ்யாமி ஜீவிதும் சோகலாலஸா ।। 9 ।।

---

6. 'வீரியத்தில் இந்திரனுக்கும் வருணனுக்கும் நிகரான நீங்கள் களவுபோன சீதை அரக்கர்களின் மத்தியில் வசிப்பதை எப்படி பொறுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

7. 'மாசற்றவரே! என்னால் மிகப்பரிவுடன் காக்கப்பட்டது இந்த தெய்வீகமான சூடாமணி. விசனத்தில் இதைக் கண்டு உங்களைப் பார்த்தாற் போல் களி கூறுவேன்.

8-9. 'கடலில் தோன்றிய இச்சிறந்த மணி என்னால் உங்களுக்கு இப்பொழுது அனுப்பப்பட்டதாய்விட்டது. சோகத்தில் மூழ்கிய நான் இனிமேல் உயிர் வாழ முடியாது.

---

6. மஹேந்த்ரவருணோபமம் । 7. ஸம்பரிரக்ஷித:
6. ஸமனுமன்யஸே-ஸஹஸே.
ஒ. ஈண்டு நான் இருந்தின்னுயிர்மாயினும்
மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்
தீண்டலாவதொர் தீவினை தீர்வரம்
வேண்டினாள் தொழுதென்று விளம்புவாய். —கம்பர்

असह्यानि च दुःखानि वाचश्च हृदयच्छिदः ।
राक्षसीनां सुघोराणां त्वत्कृते मर्षयाम्यहम् ।। १० ।।
धारयिष्यामि मासन्तु जीवितं शत्रुसूदन ।। ११ ।।
मासादूर्ध्वं न जीविष्ये त्वया हीना नृपात्मज ।। १२ ।।
घोरो राक्षसराजोऽयं दृष्टिश्च न सुखा मयि ।
त्वां च श्रुत्वा विषज्जन्तं न जीवेय-महं क्षणम् ।। १३ ।।

அஸஹ்யானி ச து:க்கானி வாசச்ச ஹ்ருதயச்சித: ||
ராக்ஷஸீனாம் ஸுகோராணாம் த்வத்க்ருதே மர்ஷயாம்யஹம் || 10 ||
தாரயிஷ்யாமி மாஸந்து ஜீவிதம் சத்ருஸூதன || 11 ||
மாஸாதூர்த்வம் ந ஜீவிஷ்யே த்வயா ஹீனா ந்ருபாத்மஜ || 12 ||
கோரோ ராக்ஷஸ ராஜோऽயம் த்ருஷ்டிச்ச ந ஸுகா மயி ||
த்வாஞ்ச ச்ருத்வா விஷஜ்ஜந்தம் ந ஜீவேய-மஹம் க்ஷணம் || 13 ||

---

10. 'பொறுத்தற்கரிய துக்கங்களையும் கொடிய அரக்கிகளின் இருதயத்தைப் பிளக்கும் வார்த்தைகளையும் உங்களுக்காக நான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன்.

11. பகைவரை அழிப்பவரே ஒரு மாதம் தான் நான் உயிரை வைத்திருப்பேன்.

12. ராஜபுத்திரரே! அதற்குமேல் உங்களையடையாவிட்டால் உயிருடனிருக்க மாட்டேன்.

13. இவ்வரக்கர் வேந்தன் கொடியோன். என்மேல் அவனுடைய நோக்கம் சுகமளிப்பதன்று. ஆகையால் நீங்கள் காலந்தாமதிப்பதாய்த் தெரிந்தால் நான் ஒரு கணமும் உயிரைத்தரியேன்.

| 10. ராக்ஷஸை: ஸஹ ஸம்வாஸம். 13. விஷஜ்ஜந்தம்-விலம்பமானம் |

वैदेह्या वचनं श्रुत्वा करुणं साश्रुभाषितम् ।
तथाऽब्रवीन्महातेजा हनुमान् मारुतात्मजः ॥ १४ ॥
त्वच्छोकविमुखो रामो देवि सत्येन ते शपे ।
रामे शोकाभिभूते तु लक्ष्मणः परितप्यते ॥ १५ ॥
दृष्टा कथंचिद्भवती न कालः परिशोचितुम् ।
इमं मुहूर्तं दुःखाना-मन्तं द्रक्ष्यसि भामिनि ॥ १६ ॥

வைதேஹ்யா வசனம் ச்ருத்வா கருணம் ஸாச்ருபாஷிதம் ।
ததாऽப்ரவீன்மஹாதேஜா ஹனுமான் மாருதாத்மஜ: ॥ 14 ॥
த்வச்சோக-விமுகோ ராமோ தேவி ஸத்யேன தே சபே ।
ராமே சோகாபிபூதே து லக்ஷ்மண: பரிதப்யதே ॥ 15 ॥
த்ருஷ்டா கதஞ்சித் பவதீ ந கால: பரிசோசிதும் ।
இமம் முஹூர்த்தம் து: க்கானா-மந்தம் த்ரக்ஷ்யஸி பாமினி ॥ 16 ॥

---

14. இவ்வாறு சீதை கண்ணீர்விட்டுக் கொண்டு சொன்ன இரங்கத்தக்க வார்த்தையைக் கேட்டு வாயுகுமாரரும் மகா வீரருமான ஹனுமார் பின்வருமாறு கூறினார்.

15. தேவி! நான் ஸத்தியத்தின் மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன். ஸ்ரீராமர் உம்மைப் பிரிந்த சோகத்தால் வெறுப்படைந்திருக்கிறார். இராமர் சோகத்தில் மூழ்கியிருப்பதால் இலக்ஷ்மணர் பரிதவிக்கிறார்.

16. மாதரசே! தங்களை எப்படியோ கண்டாயிற்று. இது துக்கிப்பதற்குச் சமயமன்று. இந்த முகூர்த்தற்திலேயே துக்கத்தின் முடிவைக் காணப் போகிறீர்கள்.

---

14. அதாப்ரவீத் । 15. ராமே து:க்காபிபூதே ।

ஒ. திங்கள் ஒன்றின் என் செய்தவம் தீர்ந்ததால்
இங்குவந்திலனே எனின் யாணர் நீர்க்
கங்கை ஆற்றங்கரை அடியேற்குத்தன்
செங்கையால் கடன் செய்கென்று செப்புவாய். —கம்பர்

तावुभौ पुरुषव्याघ्रौ राजपुत्रावनिन्दितौ ।
त्वद्दर्शनकृतोत्साहौ लंकां भस्मीकरिष्यतः ॥ १७ ॥
हत्वा तु समरे क्रूरं रावणं सहबान्धवम् ।
राघवौ त्वां विशालाक्षि स्वां पुरीं प्रापयिष्यतः ॥ १८ ॥
तत्तु रामो विजानीया-दभिज्ञान-मनिन्दिते ।
प्रीति-संजननं तस्य भूयस्त्वं दातु-मर्हसि ॥ १९ ॥

தாவுபௌ புருஷவ்யாக்ரௌ ராஜபுத்ராவநிந்திதௌ l
த்வத்தர்சன-க்ருதோத்ஸாஹௌ லங்காம் பஸ்மீகரிஷ்யத: ll 17 ll
ஹத்வா து ஸமரே க்ரூரம் ராவணம் ஸஹபாந்தவம் l
ராகவௌ த்வாம் விசாலாக்ஷி ஸ்வாம் புரீம் ப்ராபயிஷ்யத: ll 18 ll
தத்து ராமோ விஜாநீயா-தபிஜ்ஞான-மநிந்திதே l
ப்ரீதி-ஸஞ்ஜனனம் தஸ்ய பூயஸ்-த்வம் தாது-மர்ஹஸி ll 19 ll

---

17. புண்ணியசாலிகளும் புருஷசிரேஷ்டர்களுமான அவ்விரண்டு ராஜ குமாரர்களும் உங்களைக் காண உற்சாகங்கொண்டு இலங்கையைச் சாம்பலாக்கப் போகிறார்கள்.

18. விசாலாக்ஷி! இராமலக்ஷ்மணர்கள் கொடிய இராவணனைச் சுற்றத்துடன் போரில் கொன்று உங்களைத் தங்கள் நகரத்திற்கு மீட்டுக் கொண்டு போவார்கள்.

प्रघसं भासकर्णं च पंचसेनाग्रनायकान् ॥ २ ॥
सन्दिदेश दशग्रीवो वीरान्नयविशारदान् ।
हनुमद्ग्रहणे व्यग्रान् वायुवेगसमान् युधि ॥ ३ ॥

ஷட்சத்வாரிம்ச: ஸர்க்க:
பஞ்சஸேனாபதி வத:

ஹதான் மந்த்ரிஸுதான் புத்த்வா வானரேண மஹாத்மனா ।
ராவண: ஸம்வ்ருதாகாரச்-சகார மதிமுத்தமாம் ॥ 1 ॥
ஸ விரூபாக்ஷயூபாக்ஷெள துர்த்தரஞ் சைவ ராக்ஷஸம் ।
ப்ரகஸம் பாஸகர்ணஞ்ச பஞ்சஸேனாக்ர நாயகான் ॥ 2 ॥
ஸந்திதேச தசக்ரீவோ வீராந் நயவிசாரதான் ।
ஹனுமத்-க்ரஹணே வ்யக்ரான் வாயுவேகஸமான் யுதி ॥ 3 ॥

நாற்பத்தாறாம் ஸர்க்கம்
ஐந்து சேனைத்தலைவர்கள் வதம்

1. மகாத்மாவான வானரரால் மந்திரிகுமாரர்கள் கொல்லப்பட்டதையறிந்த இராவணன் தன்னுடைய உள்ளக்கிளர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் ஒரு சிறந்த தீர்மானத்திற்கு வந்தான்.

2-3. பத்துத்தலை படைத்த அவன் ஹனுமாரைப் பிடிப்பதில் ஊக்கமுள்ளவர்களும் போரில் வாயுபகவானைப் போல் வேகமுள்ளவர்களும் வீரர்களும், போர்க்கலை தெரிந்தவர்களும் சேனைத்தலைவர்களுமான விரூபாக்ஷன், யூபாக்ஷன், துர்த்தரன் என்ற அரக்கன், ப்ரகஸன், பாஸகர்ணன் என்ற ஐவருக்கும் கட்டளையிட்டான்.

---

2. ப்ரதர்ஷம் பாஸகர்ணஞ்ச । 3. ஹனுமத்க்ரஹணவ்யக்ரான் ।

यात सेनाग्रगाः सर्वे महाबलपरिग्रहाः ।
सवाजिरथ-मातंगाः स कपिः शास्यतामिति ॥ ४ ॥
यत्तैश्च खलु भाव्यं स्यात्तमासाद्य वनालयम् ।
कर्म चापि समाधेयं देशकालाविरोधिनम् ॥ ५ ॥
न ह्यहं तं कपिं मन्ये कर्मणा प्रतितर्कयन् ।
सर्वथा तन्महद्भूतं महाबलपरिग्रहम् ॥
भवेदिन्द्रेण वा सृष्ट-मस्मदर्थं तपोबलात् ॥ ६ ॥

யாத ஸேனாக்ரகா: ஸர்வே மஹாபல பரிக்ரஹா: ।
ஸவாஜி ரத-மாதங்கா: ஸ கபி: சாஸ்யதா மிதி ॥ 4 ॥
யத்தைச்ச கலு பாவ்யம் ஸ்யாத்தமாஸாத்ய வனாலயம் ।
கர்ம சாபி ஸமாதேயம் தேசகாலாவிரோதினம் ॥ 5 ॥
நஹ்யஹம் தம் கபிம் மன்யே கர்மணா ப்ரதிதர்க்கயன் ।
ஸர்வதா தன்மஹத்பூதம் மஹாபல பரிக்ரஹம் ।
பவேதிந்த்ரேண வா ஸ்ருஷ்ட-மஸ்மதர்த்தம் தபோபலாத் ॥ 6 ॥

---

4. 'சேனைத் தலைவர்களே! குதிரைகள், தேர்கள், யானைகள் முதலியவற்றுடன் பெரிய பலத்தைத் திரட்டிக் கொண்டு நீங்களெல்லோரும் செல்லுங்கள். அந்தக் குரங்கு பிடிக்கப்படட்டும்.

5. 'நீங்கள் அந்தக்குரங்கை யணுகி எச்சரிக்கையுடனிருக்க வேண்டியதவசியம். இடத்திற்கும் காலத்திற்கும் அனுகூலமான செயலைத் தேர்ந்து கைக்கொள்ள வேண்டும்.

6. அக்குரங்கின் செயலைக் கொண்டு முன்பின் ஆலோசித்ததில் அதை நான் குரங்கெனக் கருதவில்லை. அது அளவற்ற பலங்கொண்ட பெரும்பூதம், அல்லது நமக்காக இந்திரன் தன் தவத்தின் வலிமையால் சிருஷ்டித்த ஒன்றாக இருக்க வேண்டும்.

---

5. யத்னைச்ச கலு। தேச கால விரோதிதம் ।

6. வானரோऽயமிதி ஜ்ஞாத்வா ந ஹி சுத்த்யதி மே மன: ।
நைவாஹம் தம் கபிம் மன்யே யதேயம் ப்ரஸ்துதா கதா—அதிக பாடம்.

सनागयक्षगन्धर्वा देवासुर-महर्षयः ।
युष्माभिः सहितैः सर्वै-र्मया सह विनिर्जिताः ॥ ७ ॥
तैरवश्यं विधातव्यं व्यलीकं किंचिदेव नः ।
तदेव नात्र सन्देहः प्रसह्य परिगृह्यताम् ॥ ८ ॥
नावमान्यो भवद्भिश्च हरिर्धीरपराक्रमः ।
दृष्टा हि हरयः पूर्वं मया विपुलविक्रमाः ॥ ९ ॥

ஸநாகயக்ஷகந்தர்வா தேவாஸுர-மஹர்ஷய: ।
யுஷ்மாபி: ஸஹிதை: ஸர்வைர்-மயா ஸஹ விநிர்ஜிதா: ॥ 7 ॥
தைரவச்யம் விதாதவ்யம் வ்யலீகம் கிஞ்சிதேவ ந: ।
ததேவ நாத்ர ஸந்தேஹ: ப்ரஸஹ்ய பரிக்ருஹ்யதாம் ॥ 8 ॥
நாவமான்யோ பவத்பிச்ச ஹரிர்-தீரபராக்ரம: ।
த்ருஷ்டா ஹி ஹரய: பூர்வம் மயா விபுலவிக்ரமா: ॥ 9 ॥

---

7. 'உங்களனைவராலும் என்னுடன் சேர்ந்து நாகர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், தேவர்கள், அசுரர்கள், மகரிஷிகள் எல்லோரும் ஜயிக்கப்பட்டிருக்கிறார்கள்.

8. அவர்களால் நமக்குக் கொஞ்சம் தீங்கு செய்யப்பட வேண்டியது அவசியம்தான். அதுவே இது. அதில் சந்தேகமில்லை. கஷ்டப்பட்டு அது பிடிக்கப்பட வேண்டும்.

9. தைரியமும் பராக்கிரமும் படைத்த அக்குரங்கு உங்களால் அவமதிக்கத் தக்கதன்று. பராக்கிரமத்தில் பிரசித்தி பெற்ற குரங்குகள் என்னால் முன்பு பார்க்கப்பட்டிருக்கின்றன.

---

9. யாத ஸேனாக்ரகா: ஸர்வே மஹாபலபரிக்ரஹா: ।
ஸவாஜிரதமாதங்கா: ஸகபி: சாஸ்யதாமிதி—அதிக பாடம்
(கபிர்-தீர பராக்ரம:, ஹரிர்-தீர பராக்ரம: என்று இரண்டு பாடம்)

वाली च सह सुग्रीवो जाम्बवांश्च महाबलः ।
नीलः सेनापतिश्चैव ये चान्ये द्विविदादयः ॥ १० ॥
नैवं तेषां गति-र्भीमा न तेजो न पराक्रमः ।
न मतिर्न बलोत्साहौ न रूपपरिकल्पनम् ॥ ११ ॥
महत् सत्त्वमिदं ज्ञेयं कपिरूपं व्यवस्थितम् ।
प्रयत्नं महदास्थाय क्रियतामस्य निग्रहः ॥ १२ ॥
कामं लोकास्त्रया-स्सेन्द्राः ससुरासुरमानवाः ।
भवता-मग्रतः स्थातुं न पर्याप्ता रणाजिरे ॥ १३ ॥

வாலீ ச ஸஹ ஸுக்ரீவோ ஜாம்பவாம்ச்ச மஹாபல: l
நீல: ஸேனாபதிச்சைவ யே சான்யே த்விவிதாதய: ll 10 ll
நைவம் தேஷாம் கதிர்-பீமா ந தேஜோ ந பராக்ரம: l
ந மதிர்-ந பலோத்ஸாஹௌ ந ரூபபரிகல்பனம் ll 11 ll
மஹத் ஸத்வமிதம் ஜ்ஞேயம் கபிரூபம் வ்யவஸ்திதம் l
ப்ரயத்னம் மஹதாஸ்தாய க்ரியதாமஸ்ய நிக்ரஹ: ll 12 ll
காமம் லோகாஸ்த்ரயாஸ் ஸேந்த்ரா: ஸஸுராஸுரமானவா: l
பவதாமக்ரத: ஸ்தாதும் ந பர்யாப்தா ரணாஜிரே ll 13 ll

---

10. சுக்ரீவனுடன் கூடிய வாலியும், மகாபலசாலியான ஜாம்பவானும் நீலன் எனும் சேனைத் தலைவனும், இன்னும் துவிவிதன் முதலியவர்களும்.

11. அவர்களுக்கு இப்படிப்பட்ட பயங்கரமான வேகமும், நுட்பமும், பராக்கிரமமும், புத்தியும், பலமும் உற்சாகமும் இஷ்டமான உருவமெடுக்கும் திறமையும் இல்லை.

12. இது குரங்கின் வடிவில் வந்திருக்கும் ஒரு பெரும் பூதம் என்றே தெரிந்து கொள்ள வேண்டும். பெரு முயற்சியைக் கைக் கொண்டு இதை நிக்ரஹம் செய்ய வேண்டும்.

13. இந்திரனுட்பட்ட தேவர்களும் அசுரர்களும் மனிதர்களும் முவ்வுலகத்தார்களும் போர்க் களத்தில் உங்கள் முன் வந்தாலும் உங்களை எதிர்க்க அவர்கள் திறமையற்றவர்கள்.

तथाऽपि तु नयज्ञेन जयमाकांक्षता रणे ।
आत्मा रक्ष्यः प्रयत्नेन युद्धसिद्धिर्हि चंचला ।। १४ ।।
ते स्वामिवचनं सर्वे प्रतिगृह्य महौजसः ।
समुत्पेतु-र्महावेगा हुताश-समतेजसः ।। १५ ।।
रथै-र्मत्तैश्च मातंगै-र्वाजिभिश्च महाजवैः ।
शस्त्रैश्च विविधैस्तीक्ष्णैः सर्वैश्चोपचिता बलैः ।। १६ ।।
ततस्तं ददृशुर्वीरा दीप्यमानं महाकपिम् ।
रश्मिमन्त-मिवोद्यन्तं स्वतेजोरश्मि-मालिनम् ।। १७ ।।

ததாபி து நயஜ்ஞேன ஜயமாகாங்க்ஷதா ரணே ।
ஆத்மா ரக்ஷ்ய: ப்ரயத்னேன யுத்தஸித்திர்ஹி சஞ்சலா ।। 14 ।।
தே ஸ்வாமிவசனம் ஸர்வே ப்ரதிக்ருஹ்ய மஹௌஜஸ: ।
ஸமுத்பேதுர்-மஹாவேகா ஹுதாச ஸமதேஜஸ: ।। 15 ।।
ரதைர்-மத்தைச்ச மாதங்கைர்-வாஜிபிச்ச மஹாஜவை: ।
சஸ்த்ரைச்ச விவிதைஸ்தீக்ஷ்ணை: ஸர்வைச் சோபசிதா பலை: ।। 16 ।।
ததஸ்தம் தத்ருசுர்-வீரா தீப்யமானம் மஹாகபிம் ।
ரச்மிமந்த-மிவோத்யந்தம் ஸ்வதேஜோ ரச்மி-மாலினம் ।। 17 ।।

---

14. ஆயினும் போரில் வெற்றியை விரும்பும் தந்திரசாலியால் முயற்சியின் மூலம் தன்னுயிர் இரக்ஷிக்கப்படுதல் வேண்டும். போரில் வெற்றி நிலையில்லாதது.

15-16. அக்கினிக் கொப்பான ஒளியுடையவர்களும் மகாவேகமுடையவர்களும் சிறந்த பராக்கிரமமுடையவர்களுமான அவர்களனைவரும் அரசன் கட்டளையை ஏற்றுக் கொண்டு தேர்களும் மதயானைகளும், வேகம் மிக்க குதிரைகளும் கூரிய பல ஆயுதங்களும் கொண்ட பலவகைச் சேனைகள் புடைசூழப் புறப்பட்டார்கள்.

17. தனது வீரியமாகிற கிரணங்களால் உதய சூரியன் போல் பிரகாசிக்கும் பெரிய குரங்கை அவ்வீரர்கள் பார்த்தார்கள்.

---

13. காமம்-யத்யபீத்யர்த்த: । 14. நயஜ்ஞேன-நீதிஜ்ஞேன ।
16. ரதைச்ச மத்தைர் நாகைச்ச । நிசிதைஸ்தீக்ஷ்ணை: ।
ஸர்வைச்சோபஹிதா । 17. ததஸ்து !

तोरणस्थं महोत्साहं महासत्त्वं महाबलम् ।
महाशक्तिं महावेगं महाकायं महामतिम् ॥ १८ ॥
तं समीक्ष्यैव ते सर्वे दिक्षु सर्वास्ववस्थिताः ।
तैस्तैः प्रहरणै-र्भीमै-रभिपेतुस्ततस्ततः ॥ १९ ॥
तस्य पंचायसास्तीक्ष्णाः शिताः पीतमुखाः शराः ।
शिरस्युत्पलपत्राभा दुर्धरेण निपातिताः ॥ २० ॥

தோரணஸ்தம் மஹோத்ஸாஹம் மஹாஸத்வம் மஹாபலம் ।
மஹாசக்திம் மஹாவேகம் மஹாகாயம் மஹாமதிம் ॥ 18 ॥
தம் ஸமீக்ஷ்யைவ தே ஸர்வே திக்ஷு ஸர்வாஸ்வவஸ்திதா: ।
தைஸ்தை: ப்ரஹரணைர்-பீமை-ரபிபேதுஸ்-ததஸ் தத: ॥ 19 ॥
தஸ்ய பஞ்சாயஸாஸ்-தீக்ஷ்ணா: சிதா: பீதமுகா: சரா: ।
சிரஸ்யுத்பலபத்ராபா துர்த்தரேண நிபாதிதா: ॥ 20 ॥

18-19. உற்சாகம் மிகுந்தவரும், உறுதி மிகுந்தவரும், பலம் மிகுந்தவரும், பெரிய சக்தி படைத்தவரும், வேகம் மிக்கவரும் பெருத்த உருக்கொண்டவரும், சிறந்த புத்திமானும், தோரண வாயிலில் வீற்றிருப்பவருமான அவரைக் கண்டவுடனேயே எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து நின்று கொண்டு அவர்கள் எல்லோரும் தங்கள் தங்களுடைய பயங்கரமான ஆயுதங்களால் ஆங்காங்கு தாக்கினார்கள்.

20. கூரியவையும், கொடியவையும், கருநெய்தல்போல் கரியவையும், பொன்போன்ற முகமுடையவையும் இரும்பால் செய்யப்பட்டவையுமான ஐந்து பாணங்கள் அவருடைய தலையை நோக்கி துர்த்தரனால் விடப்பட்டன.

---

18. தோரணஸ்தம் மஹாவேகம் । மஹாமதிம் மஹோத்ஸாஹம் மஹாகாயம் மஹாபுஜம் ।
18. ஸத்வம்-'த்ரவ்யாஸு வ்யவஸாயேஷு ஸத்வ-மஸ்த்ரீது ஜந்துஷு' இத்யமர: ।

स तैः पंचभिराविद्धः शरैः शिरसि वानरः ।
उत्पपात नदन् व्योम्नि दिशो दश विनादयन् ॥ २१ ॥
ततस्तु दुर्धरो वीरः सरथः सज्यकार्मुकः ।
किरञ्छरशतै-स्तीक्ष्णै-रभिपेदे महाबलः ॥ २२ ॥
स कपिर्वारयामास तं व्योम्नि शरवर्षिणम् ।
वृष्टिमन्तं पयोदान्ते पयोदमिव मारुतः ॥ २३ ॥
अर्द्यमान-स्ततस्तेन दुर्धरेणानिलात्मजः ।
चकार निनदं भूयो व्यवर्धत च वेगवान् ॥ २४ ॥

ஸ தை: பஞ்சபிராவித்த: சரை: சிரஸி வானர: l
உத்பபாத நதன் வ்யோம்னி திசோ தச விநாதயன் ll 21 ll
ததஸ்து துர்த்தரோ வீர: ஸரத: ஸஜ்யகார்முக: l
கிரஞ்சரசதைஸ்-தீக்ஷ்ணை-ரபிபேதே மஹாபல: ll 22 ll
ஸ கபிர்-வாரயாமாஸ தம் வ்யோம்னி சரவர்ஷிணம் l
வ்ருஷ்டிமந்தம் பயோதாந்தே பயோதமிவ மாருத: ll 23 ll
அர்த்யமானஸ்-ததஸ்தேன துர்த்தரேணாநிலாத்மஜ: l
சகார நிநதம் பூயோ வ்யவர்த்தத ச வேகவான் ll 24 ll

---

21. அவ்வைந்து பாணங்களாலும் தலையில் தாக்குண்ட அவ்வானரர் பத்து திக்குகளும் எதிரொலி செய்யும்படி கர்ஜித்துக் கொண்டு ஆகாயத்தில் கிளம்பினார்.

22. தேரின் மீது விற்பிடித்து நின்ற மகாபலசாலியும் வீரனுமான துர்த்தரன் நூற்றுக் கணக்கான கூரிய பாணங்களால் அவரைத் தாக்கினான்.

23. ஆகாயத்தில் பாணங்களைப் பொழிந்து எதிர்த்த அவனை அவ்வானரர் கார்கால முடிவில் மழைத்தாரைகளைச் சிதறடிக்கும் காற்றுப் போல் தகைத்தார்.

24. மேலும் துர்த்தரனால் துன்புறுத்தப்பட்ட வேகவானான வாயுபுத்திரர் முன்னிலும் அதிகமாக ஓங்கிவளர்ந்து பெரிய கர்ஜனை செய்தார்.

---

24. சகார கதனம் பூயோ வ்யவர்த்தத ச வீர்யவான் l

स दूरं सहसोत्पत्य दुर्धरस्य रथे हरिः ।
निपपात महावेगो विद्युद्राशि-र्गिराविव ॥ २५ ॥
ततः स मथिताष्टाश्वं रथं भग्नाक्षकूबरम् ।
विहाय न्यपतद्भूमौ दुर्धरस्त्यक्त-जीवितः । २६ ॥
तं विरूपाक्ष-यूपाक्षौ दृष्ट्वा निपतितं भुवि ।
संजातरोषौ दुर्धर्षा-वुत्पेततु-ररिन्दमौ ॥ २७ ॥
स ताभ्यां सहसोत्पत्य विष्ठितो विमलेऽम्बरे ।
मुद्गराभ्यां महाबाहु-र्वक्षस्याभिहतः कपिः ॥ २८ ॥

ஸ தூரம் ஸஹஸோத்பத்ய துர்த்தரஸ்ய ரதே ஹரி: ।
நிபபாத மஹாவேகோ வித்யுத்ராசிர்-கிராவிவ ॥ 25 ॥
தத: ஸ மதிதாஷ்டாச்வம் ரதம் மக்னாக்ஷ கூபரம் ।
விஹாய ந்யபதத்பூமௌ துர்த்தரஸ்த்யக்த-ஜீவித: ॥ 26 ॥
தம் விரூபாக்ஷ-யூபாக்ஷௌ த்ருஷ்ட்வா நிபதிதம் புவி ।
ஸஞ்ஜாதரோஷௌ துர்த்தர்ஷா-வுத்பேதது-ரரிந்தமௌ ॥ 27 ॥
ஸ தாப்யாம் ஸஹஸோத்பத்ய விஷ்டிதோ விமலே஽ம்பரே ।
முத்கராப்யாம் மஹாபாஹுர்-வக்ஷஸ்யபிஹத: கபி: ॥ 28 ॥

25. மகா ஸாமர்த்தியசாலியான அவர் உயரக் கிளம்பி மலைமேல் இடிவிழுந்தாற்போல் துர்த்தரனுடைய தேரின் மேல் வேகமாகக் குதித்தார்.

26. அதனால் தேர்க்குதிரைகள் எட்டும் நசுங்கிச் செத்து தேரின் அச்சும் ஏர்க்கால்களும் முறிந்து துர்த்தரனும் தேரிலிருந்து உயிரிழந்து பூமியில் விழுந்தான்.

27. அவன் தரையில் விழுந்ததைக் கண்டு பயமற்றவர்களும் பகையை அழிக்க வல்லவர்களுமான விரூபாக்ஷன் யூபாக்ஷன் ஆகிய இருவரும் மிகுந்த ரோஷத்துடன் பாய்ந்தார்கள்.

28. நிர்மலமான ஆகாயத்தில் நின்ற பெருந்தோளரான ஹனுமார் மார்பில் முத்கரமென்னும் ஆயுதத்தால் தாக்கினார்கள்.

27. தௌ ஜாதரோஷௌ ।

तयो-र्वेगवतो-र्वेगं विनिहत्य महाबलः ।
निपपात पुनर्भूमौ सुपर्णसमविक्रमः ॥ २९ ॥
स सालवृक्षमासाद्य तमुत्पाट्य च वानरः ।
तावुभौ राक्षसौ वीरौ जघान पवनात्मजः ॥ ३० ॥
ततस्तांस्त्रीन् हतान् ज्ञात्वा वानरेण तरस्विना ।
अभिपेदे महावेगः प्रसह्य प्रघसो हरिम् ॥ ३१ ॥
भासकर्णश्च संक्रुद्धः शूलमादाय वीर्यवान् ।
एकतः कपिशार्दूलं यशस्विन-मवस्थितम् ॥ ३२ ॥

தயோர்-வேகவதோர்-வேகம் விநிஹத்ய மஹாபல: l
நிபபாத புனர்ப்பூமௌ ஸுபர்ணஸமவிக்ரம: ll 29 ll
ஸ ஸால-வ்ருக்ஷ-மாஸாத்ய தமுத்பாட்ய ச வானர: l
தாவுபௌ ராக்ஷஸௌ வீரௌ ஜகான பவனாத்மஜ: ll 30 ll
ததஸ்தான் த்ரீன் ஹதான் ஜ்ஞாத்வா வானரேண தரஸ்வினா l
அபிபேதே மஹாவேக: ப்ரஸஹ்ய ப்ரகஸோ ஹரிம் ll 31 ll
பாஸகர்ணச்ச ஸங்க்ருத்த: சூலமாதாய வீர்யவான் l
ஏகத: கபிசார்த்தூலம் யசஸ்வின-மவஸ்திதம் ll 32 ll

---

29. பலம் மிகுந்தவரும் கருடனைப் போன்ற பராக்கிரமம் படைத்தவருமான ஹனுமார் வேகமாய்த் தாக்கிய அவர்களுடைய வேகத்தையடக்குபவராய் பூமியில் குதித்தார்.

30. வாயுபுத்திரரான அவர் ஒரு ஆச்சா மரத்தையணுகி அதைப் பிடுங்கி அவ்விரண்டு அரக்க வீரர்களையும் அடித்துக் கொன்றார்.

31. அம்மூவரும் பலம் மிகுந்த குரங்கால் கொல்லப்பட்டதைக் கண்ட பிரகஸன் அதிவேகமாக வந்து மிக்க வலிமையுடன் தாக்கினான்.

32. பாஸகர்ணன் எனும் வீரனும் கோபமுற்றுச் சூலத்தை எடுத்துக் கொண்டு மற்றொரு பக்கத்தில் வந்து கோபத்துடன் புகழ்மிக்க வானர சிரேஷ்டரைத் தாக்கினான்.

---

28. ஸஹஸோத்ப்லுத்ய l 29. நிஹத்ய ஸ மஹாபல: l ஸுபர்ண இவ வேகித: l

पट्टिशेन शिताग्रेण प्रघसः प्रत्ययोधयत् ।
भासकर्णश्च शूलेन राक्षसः कपिसत्तमम् ॥ ३३ ॥
स ताभ्यां विक्षतै-र्गात्रै-रसृग्दिग्ध-तनूरुहः ।
अभवद्वानरः क्रुद्धो बालसूर्य-समप्रभः ॥ ३४ ॥
समुत्पाट्य गिरेः शृंगं समृगव्यालपादपम् ।
जघान हनुमान् वीरो राक्षसौ कपिकुंजरः ॥ ३५ ॥

பட்டிசேன சிதாக்ரேண ப்ரகஸ: ப்ரத்யயோதயத் l
பாஸகர்ணச்ச சூலேன ராக்ஷஸ: கபிஸத்தமம் ll 33 ll

ஸ தாப்யாம் விக்ஷதைர்-காத்ரை-ரஸ்ருக்திக்த-தனூருஹ: l
அபவத்வானர: க்ருத்தோ பாலஸூர்ய-ஸமப்ரப: ll 34 ll

ஸமுத்பாட்ய கிரே: ச்ருங்கம் ஸம்ருக-வ்யாலபாதபம் l
ஜகான ஹனுமான் வீரோ ராக்ஷஸௌ கபிகுஞ்ஜர: ll 35 ll

---

33. வானரசிரேஷ்டரை பிரகஸன் கூரிய முனையுள்ள பட்டிசத்தால் குத்தினான். பாஸகர்ணன் எனுமரக்கன் சூலத்தால் குத்தினான்.

34. அவ்விருவராலும் காயப்படுத்தப்பட்டு உரோமமெல்லாம் ரத்தம் பூசப்பட்டு அவ்வானரர் கோபத்துடன் இள ஞாயிறு போல் விளங்கினார்.

35. வானரோத்தமரும் வீரருமான ஹனுமார் மிருகங்களும் பாம்புகளும் மரங்களும் நிறைந்த ஒரு மலைச்சிகரத்தைப் பிடுங்கி அவ்விரு அரக்கர்களை தாக்கிக் கொன்றார்.

---

31. அபிகம்ய மஹாவேக: l 32. யசஸ்வின-மவஸ்திதௌ l
33. கபிகுஞ்ஜரம் l
35. கிரிச்ருங்க ஸூநிஷ்பிஷ்டௌ திலசஸ்தௌ பபூவது: ll அதிக பாடம்.

ततस्तेष्ववसन्नेषु सेनापतिषु पंचसु ।
बलं तदवशेषं च नाशयामास वानरः ॥ ३६ ॥

अश्वैरश्वान् गजैर्नागान् योधै-र्योधान् रथै रथान् ।
स कपिर्नाशयामास सहस्राक्ष इवासुरान् ॥ ३७ ॥

हतै-र्नागैश्च तुरगै-र्भग्नाक्षैश्च महारथैः ।
हतैश्च राक्षसै-र्भूमी रुद्धमार्गा समन्ततः ॥ ३८ ॥

ததஸ்தேஷ்வவஸன்னேஷு ஸேனாபதிஷு பஞ்சஸு ।
பலம் ததவசேஷஞ் ச நாசயாமாஸ வானர: ॥ 36 ॥

அச்வை-ரச்வான் கஜைர்-நாகான் யோதைர்-யோதான் ரதை-ரதான் ।
ஸ கபிர்நாசயாமாஸ ஸஹஸ்ராக்ஷ இவாஸுரான் ॥ 37 ॥

ஹதைர்-நாகைச்ச துரகைர்-பக்னாக்ஷைச்ச மஹாரதை: ।
ஹதைச்ச ராக்ஷஸைர்-பூமீ ருத்தமார்க்கா ஸமந்தத: ॥ 38 ॥

---

36. அவ்வானரர் ஐந்து சேனைத் தலைவர்களையும் கொன்ற பிறகு எஞ்சியிருந்த சேனை முழுவதையும் நாசம் செய்தார்.

37. இந்திரன் அசுரர்களையழிப்பதுபோல் அவர் குதிரைகளைக் கொண்டு குதிரைகளையும், யானைகளைக் கொண்டு யானைகளையும், படைவீரர்களைக் கொண்டு படைவீரர்களையும், தேர்க்களைக் கொண்டு தேர்களையும் மோதி நாசம் செய்தார்.

38. கொல்லப்பட்ட யானைகளாலும் குதிரைகளாலும், அச்சுமுறிந்த பெரிய தேர்களாலும், மாண்டுபோன அரக்கர்களாலும் பூமியெங்கும் நிறைந்து நடக்கப் பாதையில்லாமலிருந்தது.

ततः कपिस्तान्ध्वजिनी पतीन् रणे निहत्य वीरान् सबलान् सवाहनान्
तदेव वीरः परिगृह्य तोरणं कृतक्षणः काल इव प्रजाक्षये ॥ ३९ ॥

इति षट्चत्वारिंशः सर्गः
(आदितः श्लोकाः २००४)

தத: கபிஸ்தான் த்வஜினீ பதீன் ரணே
நிஹத்ய வீரான் ஸபலான் ஸவாஹனான் l
ததேவ வீர: பரிக்ருஹ்ய தோரணம்
க்ருதக்ஷண: கால இவ ப்ரஜாக்ஷயே ll 39 ll

ll இதி ஷட்சத்வாரிம்ச: ஸர்க்க: ll
(ஆதித: சலோகா: 2004)

---

39. வீரர்களான சேனாபதிகளை அவர்களுடைய சேனைகளுடனும் வாகனங்களுடனும் போரில் அழித்துவிட்டுத் தோரணவாயிலுக்கே திரும்பிப் போய்ப் பிரஜைகளையழிக்கும் கால புருஷனைப் போல் விளங்கிய அவ்வானரர் சற்று இளைப்பாறினார்.

இங்ஙனம் நாற்பத்தாறாம் ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2004)

---

39. *ததைவ வீர: l*

सप्तचत्वारिंशः सर्गः

अक्षकुमारवधः

सेनापतीन् पंच स तु प्रमापितान् हनूमता सानुचरा सवाहनान् ।
समीक्ष्य राजा समरोद्धतोन्मुखं कुमारमक्षं प्रसमैक्षताग्रतः ॥ १ ॥
स तस्य दृष्ट्यर्पण-संप्रचोदितः प्रतापवान् कांचनचित्रकार्मुकः ।
समुत्पपाताथ सदस्युदीरितो द्विजातिमुख्यै-र्हविषेव पावकः ॥ २ ॥

ஸப்தசத்வாரிம்ச: ஸர்க்க:

அக்ஷகுமாரவத:

ஸேனாபதீ: பஞ்ச ஸது ப்ரமாபிதான்
ஹனூமதா ஸானுசரா ஸவாஹனான் l
ஸமீக்ஷ்ய ராஜா ஸமரோத்ததோன்முகம்
குமாரமக்ஷம் ப்ரஸமைக்ஷதாக்ரத: ll 1 ll
ஸ தஸ்ய த்ருஷ்ட்யர்ப்பண-ஸம்ப்ரசோதித:
ப்ரதாபவான் காஞ்சனசித்ரகார்முக: l
ஸமுத்பபாதாத ஸதஸ்யுதீரிதோ
த்விஜாதி-முக்யைர்-ஹவிஷேவ பாவக: ll 2 ll

நாற்பத்தேழாவது ஸர்க்கம்

அக்ஷகுமாரவதம்

1. ஸேனாபதிகள் ஐவரும் ஸேனைகளோடும் வாஹனங்களோடும் ஹனுமாரால் சிதைந்து போனதையறிந்த இராவணன் போரில் ஊக்கத்துடன் தன்னெதிரில் நின்ற அக்ஷன் என்னும் தன் குமாரனை உற்று நோக்கினான்.

2. பிரதாபவானாகிய அவன் கண் பார்வையாலேயே ஏவப் பெற்றவனாய் பொன்னாற் செய்த அழகிய வில்லுடன் அந்தணர் ஹோமம் செய்யும் ஹவிஸ்ஸால் உயரக் கிளம்பும் அக்கினிபோல் அச்சபையினின்று கிளம்பினான்.

---

1. ப்ரஸமைக்ஷதாக்ஷம் l

ततो महद्बालदिवाकरप्रभं प्रतप्तजाम्बूनद-जालसन्ततम् ।
रथं समास्थाय ययौ स्म वीर्यवान् महाहरिं तं प्रति नैर्ऋतर्षभः ॥ ३ ॥
ततस्तपः संग्रहसंचयार्जितं प्रतप्तजाम्बूनद-जालशोभितम् ।
पताकिनं रत्नविभूषितध्वजं मनोजवाष्टाश्ववरैः सुयोजितम् ॥ ४ ॥
सुरासुराधृष्य-मसंगचारिणं रविप्रभं व्योमचरं समाहितम् ।
सतूण-मष्टासिनिबन्धबन्धुरं यथाक्रमावेशित-शक्तितोमरम् ॥ ५ ॥

ததோ மஹத்பாலதிவாகரப்ரபம்
ப்ரதப்தஜாம்பூனத-ஜாலஸந்ததம் ।
ரதம் ஸமாஸ்தாய யயௌ ஸ வீர்யவான்
மஹாஹரிம் தம் ப்ரதிநைர்ருதர்ஷப: ॥ 3 ॥
ததஸ்தப: ஸங்க்ரஹஸஞ்சயார்ஜிதம்
ப்ரதப்தஜாம்பூனத-ஜால சோபிதம் ।
பதாகினம் ரத்னவிபூஷிதத்வஜம்
மனோஜவாஷ்டாச்வவரை: ஸுயோஜிதம் ॥ 4 ॥
ஸுராஸுராத்ருஷ்ய-மஸங்கசாரிணம்
ரவிப்ரபம் வ்யோமசரம் ஸமாஹிதம் ।
ஸதூண-மஷ்டாஸிநிபந்தபந்துரம்
யதாக்ரமாவேசித-சக்திதோமரம் ॥ 5. ॥

3. வீரியம் மிக்கவனும் அரக்கர் தலைவனுமான அவன் உருக்கிய பொன்னாலிழைக்கப்பட்டு உதய சூரியன் போல் ஒளிவிடும் ஒரு பெரிய தேரின் மேல் ஏறிக் கொண்டு வானரசிரேஷ்டரை எதிர்க்கச் சென்றான்.

4. அந்தத் தேர் பெருந்தவஞ் செய்து பெற்றது; உருக்கின பொன்னாற் செய்த சாளரங்களுடையது; கொடிகளும் இரத்தினமிழைத்த துவஜமும் உடையது; மனோவேகம் போன்ற வேகமுள்ள எட்டுச் சிறந்த குதிரைகள் பூட்டியது.

5. தேவர்களாலும் அசுரர்களாலும் வெல்ல முடியாதது; தடையற்றபோக்குடையது; சூரியன் போன்ற ஒளி பொருந்தியது; வானத்திலும் செல்ல வல்லது; அம்புக் கூடுடையது; எட்டுக் கத்திகள் கட்டிய அழகுடையது; வேல்கள் தோமரங்கள் முறைப்படி வைக்கப்பட்டது.

विराजमानं प्रतिपूर्णवस्तुना सहेमदाम्ना शशिसूर्यवर्चसा ।
दिवाकराभं रथमास्थित-स्ततः स निर्जगामामरतुल्य-विक्रमः ॥ ६ ॥

स पूरयन् खंच महींच साचलां तुरंगमातंग-महारथस्वनैः ।
बलैः समेतैः स हि तोरणस्थितं समर्थ-मासीन-मुपागमत् कपिम् ॥ ७ ॥

விராஜமானம் ப்ரதிபூர்ண வஸ்துனா
ஸஹேமதாம்னா சசிஸூர்யவர்ச்சஸா ।
திவாகராபம் ரதமாஸ்திதஸ்ததஃ
ஸ நிர்ஜகாமாமரதுல்ய-விக்ரமஃ ॥ 6 ॥

ஸ பூரயன் கஞ்ச மஹீஞ்ச ஸாசலாம்
துரங்கமாதங்க-மஹாரதஸ்வனைஃ ।
பலைஃ ஸமேதைஃ ஸ ஹி தோரணஸ்திதம்
ஸமர்த்த-மாஸீன-முபாகமத் கபிம் ॥ 7 ॥

---

6. கருவிகளெல்லாம் நிறைந்தது, பொற்கயிறுகளால் சந்திர சூரியர்களைப் போல் ஒளிவிடுவது; அப்படிப்பட்ட சிறப்புடைய தேரின் மீது ஏறிக் கொண்டு தேவர்களுக்குச் சமமான பராக்கிரமமுடைய அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

7. மலை செறிந்த பூமியிலும் ஆகாயத்திலும் குதிரைகள், யானைகள், பெரிய தேர்கள் ஆகியவற்றின் இரைச்சல் நிறையும்படி திரண்ட சேனைகளுடன் அவன் தோரணவாயிலின் மேல் வீற்றிருந்த ஆற்றல் மிக்க வானரரை நெருங்கினான்.

---

3. மஹான் பாலதிவாகரப்ரபம் ।

4. ஜால-சித்ரிதம் ।

5. தடித்ப்ரபம் ।

स तं समासाद्य हरि हरीक्षणो युगान्तकालाग्निमिव प्रजाक्षये ।
अवस्थितं विस्मितजातसंभ्रमः समैक्षताक्षो बहुमानचक्षुषा ।। ८ ।।
स तस्य वेगंच कपेर्महात्मनः पराक्रमंचारिषु पार्थिवात्मजः ।
विधारयन् स्वं च बलं महाबलो हिमक्षये सूर्य इवाभिवर्धते ।। ९ ।।
स जातमन्युः प्रसमीक्ष्य विक्रमं स्थिरं स्थितः संयति दुर्निवारणम् ।
समाहितात्मा हनुमन्त-माहवे प्रचोदयामास शरै-स्त्रिभिः शितैः ।। १० ।।

ஸ தம் ஸமாஸாத்ய ஹரிம் ஹரீக்ஷணோ
யுகாந்த காலாக்னிமிவ ப்ரஜாக்ஷயே ।
அவஸ்திதம் விஸ்மித-ஜாதஸம்ப்ரம:
ஸமைக்ஷதாக்ஷோ பஹுமானசக்ஷுஷா ॥ 8 ॥
ஸ தஸ்ய வேகஞ்ச கபேர்மஹாத்மன:
பராக்ரமஞ்சாரிஷு பார்த்திவாத்மஜ: ।
விதாரயன் ஸ்வஞ்ச பலம் மஹாபலோ
ஹிமக்ஷயே ஸூர்ய இவாபிவர்த்ததே ॥ 9 ॥
ஸ ஜாதமன்யு: ப்ரஸமீக்ஷ்ய விக்ரமம்
ஸ்திரம் ஸ்தித: ஸம்யதி துர்நிவாரணம் ।
ஸமாஹிதாத்மா ஹனுமந்த-மாஹவே
ப்ரசோதயாமாஸ சரைஸ்-த்ரிபி: சிதை: ॥ 10 ॥

---

8. சிங்கம் போன்ற பார்வையுடைய அக்ஷன் யுகம் முடியும் பொழுது தோன்றும் ஊழிக்கனல் போல் வீற்றிருக்கும் அவ்வானரரை நெருங்கி ஆச்சரியத்தாலுண்டான பரபரப்புடனும் வெகுமானப் பார்வையுடனும் நிமிர்ந்து பார்த்தான்.

9. மகாபலசாலியான அந்த அரச குமாரன் பகைவர் பால் அம்மகாத்மாவான வானரருக்கிருந்த வேகத்தையும் பராக்கிரமத்தையும் தனது வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்துப் பனிக்கால முடிவில் சூரியனைப் போல் கொதிப்பு மிக்கவனானான்.

10. போரில் வெல்லுதற்கரிய ஹனுமாருடைய ஆண்மையையும் அசைவற்ற தன்மையையும் அக்ஷன் கவனித்துப் பார்த்துக் கோபம் மூண்டு கூரிய மூன்று பாணங்களை விடுத்து அவரைப் போர் செய்யத் தூண்டினான்.

ततः कपिं तं प्रसमीक्ष्य गर्वितं जितश्रमं शत्रुपराजयोर्जितम् ।
अवैक्षताक्षः समुदीर्णमानसः स बाणपाणिः प्रगृहीतकार्मुकः ॥ ११ ॥

स हेमनिष्कांगद-चारुकुण्डलः समाससादाशु पराक्रमः कपिम् ।
तयो-र्बभूवाप्रतिमः समागमः सुरासुराणामपि संभ्रमप्रदः ॥ १२ ॥

ததः கபிம் தம் ப்ரஸமீக்ஷ்ய கர்விதம்
ஜிதச்ரமம் சத்ருபராஜயோர்ஜிதம் ।
அவைக்ஷதாக்ஷ: ஸமுதீர்ணமானஸ:
ஸ பாணபாணி: ப்ரக்ருஹீத-கார்முக: ॥ 11 ॥

ஸ ஹேமநிஷ்காங்கத-சாருகுண்டல:
ஸமாஸஸாதாசு பராக்ரம: கபிம் ।
தயோர்-பபூவாப்ரதிம: ஸமாகம:
ஸுராஸுராணாமபி ஸம்ப்ரமப்ரத: ॥ 12 ॥

---

11. அவ்வானரருடைய கர்வத்தையும் களைப்பின்மையையும் பகைவர்களை ஒழிப்பதில் கொண்டுள்ள ஆர்வத்தையும் பார்த்து அக்ஷகுமாரன் மனக்கிளர்ச்சியுற்று அம்பையும் வில்லையும் எடுத்துக் கொண்டு சற்று யோசித்தான்.

12. பொன்னாலான தோள்வளைகளும் குண்டலங்களுமணிந்தவனும் பராக்கிரமசாலியுமான அவன் விரைவாக வானரரைத் தாக்கினான். அவர்களிடை ஏற்பட்ட கைகலப்பு உவமையற்றதாயும் தேவர்களும் அசுரர்களும் கண்டு நடுங்கத்தக்கதாயும் இருந்தது.

---

8. விஸ்மிதஜாதஸம்ப்ரமம் । 9. ராவணாத்மஜ: । விசாரயன் ஸ்வம் । யுகக்ஷயே ஸூர்ய இவாபிவர்த்தத ।

10. ஸ்திர: ஸம்யதி ।

रराम भूमिर्न ततान भानुमान् ववौ न वायुः प्रचचाल चाचलः ।
कपेः कुमारस्य च वीक्ष्य संयुगं ननाद च द्यौरुदधिश्च चुक्षुभे ।। १३ ।।
ततः स वीरः सुमुखान् पतत्रिणः सुवर्णपुंखान् सविषानिवोरगान् ।
समाधि-संयोग-विमोक्ष-तत्त्वविच्छरानथ त्रीन् कपिमूर्ध्न्यताडयत् ।। १४ ।।
स तैः शरै-र्मूर्ध्निसमं निपातितैः क्षरन्नसृग्दिग्ध- विवृत्तलोचनः ।
नवोदितादित्यनिभः शरांशुमान् व्यराजतादित्य इवांशुमालिकः ।। १५ ।।

ரராம பூமிர்-ந ததாப பானுமான்
வவௌ ந வாயு: ப்ரசசால சாசல: ।
கபே: குமாரஸ்ய ச வீக்ஷ்ய ஸம்யுகம்
நநாத ச த்யௌ ருததிச்ச சுக்ஷுபே ॥ 13 ॥
தத: ஸ வீர: ஸுமுகான் பதத்ரிண:
ஸுவர்ண புங்கான் ஸவிஷானிவோரகான் ।
ஸமாதி-ஸம்யோக-விமோக்ஷ-தத்வவிச்
சரானத த்ரீன் கபிமூர்த்ன்யதாடயத் ॥ 14 ॥
ஸ தை: சரைர்-மூர்த்நிஸமம் நிபாதிதை:
க்ஷரந்நஸ்ருக்திக்த-விவ்ருத்தலோசன: ।
நவோதிதாதித்ய நிப: சராம்சுமான்
வ்யராஜதாதித்ய இவாம்சுமாலிக: ॥ 15 ॥

---

13. வானரருக்கும் அக்ஷகுமாரனுக்கும் ஏற்பட்ட யுத்தத்தைக் கண்டு பூமி நடுங்கிற்று; சூரியன் பிரகாசிக்கவில்லை; காற்று வீசவில்லை; மலைகள் அசைந்தன; வானம் முழங்கிற்று; கடல் கலங்கிற்று.

14. குறிவைப்பதிலும் அம்பு தொடுப்பதிலும் ஸாமர்த்தியம் வாய்ந்த அவ்வீரன் கூரிய முனைகளுள்ளவையும், பொன் பூசியவையும், விஷந்தோய்ந்தவையும், சிறகுடையவையுமான ஸர்ப்பங்களைப் போன்ற மூன்று பாணங்களை வானரருடைய முடிமேல் ஏவினான்.

15. ஒரே காலத்தில் தலையிலே பாய்ந்த அப்பாணங்களால் இரத்தம் வழியக் கண்ணும் சிவந்து சுழல, அம்புகளையே கிரணங்களாய்க் கொண்ட இளஞ்சூரியனைப் போல் அவர் விளங்கினார்.

---

13. வீர்யஸம்யுகம் ।
15. விவ்ருத்தநேத்ர: ।

ततः स पिंगाधिप-मन्त्रिसत्तमः समीक्ष्य तं राजवरात्मजं रणे ।
उदग्र-चित्रायुध-चित्रकार्मुकं जहर्ष चापूर्यत चाहवोन्मुखः।। १६ ।।
स मन्दराग्रस्थ इवांशुमालिको विवृद्धकोपो बलवीर्यसंयुतः ।
कुमारमक्षं सबलं सवाहनं ददाह नेत्राग्नि-मरीचिभि-स्तदा।। १७ ।।
ततः स बाणासन-चित्रकार्मुकः शरप्रवर्षो युधि राक्षसाम्बुदः ।
शरान् मुमोचाशु हरीश्वराचले बलाहको वृष्टिमिवाचलोत्तमे।। १८ ।।

தத: ஸ பிங்காதிப-மந்த்ரிஸத்தம:
ஸமீக்ஷ்ய தம் ராஜவராத்மஜம் ரணே ।
உதக்ர-சித்ராயுத-சித்ரகார்முகம்
ஜஹர்ஷ சாபூர்யத சாஹவோன்முக: ।। 16 ।।
ஸ மந்தராக்ரஸ்த இவாம்சுமாலிகோ
விவ்ருத்தகோபோ பலவீர்யஸம்யுத: ।
குமாரமக்ஷம் ஸபலம் ஸவாஹனம்
ததாஹ நேத்ராக்னி-மரீசிபிஸ்-ததா ।। 17 ।।
தத: ஸ பாணாஸன-சித்ர கார்முக:
சர ப்ரவர்ஷோ யுதி ராக்ஷஸாம்புத: ।
சரான் முமோசாசு ஹரீச்வராசலே
பலாஹகோ வ்ருஷ்டிமிவாசலோத்தமே ।। 18 ।।

---

16. வானர மன்னருடைய மந்திரிகளிற் சிறந்தவரான அவர் போர்க்களத்தில் கூரிய பல ஆயுதங்களுடனும் வில்லுடனும் நிற்கும் ராக்ஷஸராஜபுத்திரனை உற்று நோக்கிச் சண்டைக்குத் தயாராகி மகிழ்ச்சியுடன் கர்ஜித்தார்.

17. பின்பு பலமும் வீரியமும் மிகுந்த அவர் கோபம் மேலிட்டவராய் மந்தரமலையுச்சியில் பிரகாசிக்கும் சூரியனைப் போன்றவராய்ச் சேனைகளும் வாகனங்களும் புடைசூழ்ந்த அக்ஷகுமாரனைத் தமது கண்களிலிருந்து கிளம்பிய தீப்பொரிகளால் எரித்தார்.

18. மேகம் போன்ற அவ்வரக்கன் அப்போரில் வானவில் போன்று விசித்திரமான தனது வில்லிலிருந்து மழைபோல் சொரியும் பாணங்களை வானரசிரேஷ்டர் மேல் வேகமாய்ப் பொழிந்தது ஒரு பெரிய மலைமேல் மழை பெய்ந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது.

ततः कपिस्तं रणचण्डविक्रमं विवृद्धतेजोबल-वीर्यसंयुतम् ।
कुमारमक्षं प्रसमीक्ष्य संयुगे ननाद हर्षाद् घनतुल्यविक्रमः ।। १९ ।।
स बालभावाद्युधि वीर्यदर्पितः प्रवृद्धमन्युः क्षतजोपमेक्षणः ।
समाससादाप्रतिमं कपिं रणे गजो महाकूपमिवावृतं तृणैः ।। २० ।।
स तेन बाणैः प्रसभं निपातितै-श्चकार नादं घननादनिस्वनः ।
समुत्पपाताशु नभः स मारुति-र्भुजोरुविक्षेपण-घोरदर्शनः ।। २१ ।।

தத: கபிஸ்தம் ரணசண்டவிக்ரமம்
விவ்ருத்த-தேஜோபல-வீர்யஸம்யுதம் ।
குமாரமக்ஷம் ப்ரஸமீக்ஷ்ய ஸம்யுகே
நநாத ஹர்ஷாத் கனதுல்ய-விக்ரம: ॥ 19 ॥
ஸ பால-பாவாத்யுதி வீர்ய-தர்ப்பித:
ப்ரவ்ருத்தமன்யு: க்ஷதஜோபமேக்ஷண: ।
ஸமாஸஸாதாப்ரதிமம் கபிம் ரணே
கஜோ மஹா கூபமிவாவ்ருதம் த்ருணை: ॥ 20 ॥
ஸ தேன பாணை: ப்ரஸபம் நிபாதிதைச்—
சகார நாதம் கனநாத நிஸ்வன: ।
ஸமுத்புபாதாசு நப: ஸ மாருதிர்—
புஜோரு விக்ஷேபண-கோரதர்சன: ॥ 21 ॥

---

19. அக்ஷனுடைய போர் வன்மையையும் மேன் மேல் வளரும் ஆற்றலும் பலமும் வீரியமும் உடையவனாக அவனிருப்பதையும் பார்த்து மேகம் போன்ற பராக்கிரமம் படைத்த ஹனுமார் கர்ஜித்தார்.

20. அக்ஷன் போரில் சிறு பிள்ளைத்தனத்தால் வீரச் செருக்குடைய வனாய்க் கோபங் கொண்டு இரத்தம் போல் கண்கள் சிவநதவனாய்ப் புல்மூடிய பாழுங் கிணற்றில் விழும் யானையைப் போல் போரில் இணையற்ற வானரர் மேல் பாய்ந்தான்.

21. அவனால் வேகமாய் விடப்பட்ட பாணங்கள் தன்மேல் விழவே மாருதியானவர் மேகம் போல் கர்ஜித்து தோள்களையும் தொடைகளையும் அகன்று விரித்து பயங்கரமான தோற்றமுடையவராய் ஆகாயத்தில் உடனே கிளம்பினார்.

---

18. பாணாஸன-சக்ர-கார்முக: । 19. ஹர்ஷாத்கன துல்யநி: ஸ்வன: ।

समुत्पतन्तं समभिद्रवद्बली स राक्षसानां प्रवरः प्रतापवान् ।
रथी रथिश्रेष्ठतमः किरञ्छरैः पयोधरः शैलमिवाश्मवृष्टिभिः ॥ २२ ॥
स ताञ्छरांस्तस्य हरिर्विमोक्षयंश्चचार वीरः पथि वायुसेविते ।
शरान्तरे मारुतवद्विनिष्पतन् मनोजवः संयति चण्डविक्रमः ॥ २३ ॥
तमात्तबाणासन-माहवोन्मुखं ख-मास्तृणन्तं विशिखैः शरोत्तमैः ।
अवैक्षताक्षं बहुमानचक्षुषा जगाम चिन्तां च स मारुतात्मजः ॥ २४ ॥

ஸமுத்பதந்தம் ஸமபித்ரவத்பலீ
  ஸ ராக்ஷஸாநாம் ப்ரவர: ப்ரதாபவான் ।
ரதீ ரதிச்ரேஷ்டதம: கிரஞ்சரை:
  பயோதர: சைலமிவாச்ம வ்ருஷ்டிபி: ॥ 22 ॥
ஸ தாஞ்ச்சராம் ஸ்தஸ்ய ஹரிர்விமோக்ஷயம்ச்—
  சசார வீர: பதி வாயுஸேவிதே ।
சராந்தரே மாருதவத் விநிஷ்பதன்
  மனோஜவ: ஸம்யதி சண்டவிக்ரம: ॥ 23 ॥
தமாத்த பாணாஸன-மாஹவோன்முகம்
  க-மாஸ்த்ருணந்தம் விசிகை: சரோத்தமை: ।
அவைக்ஷதாக்ஷம் பஹுமானசக்ஷுஷா
  ஜகாம சிந்தாஞ் ச ஸ மாருதாத்மஜ: ॥ 24 ॥

22. உயரக்கிளம்பின அவர் மேல் மலையின் மேல் மேகம் கல்மாரி பெய்தாற் போல் பலவானும் ராக்ஷஸர்களிற் சிறந்தவனும் பிரதாபசாலியும் தேரிலேறியவனும் தேர் வீரர்களிற் சிறந்தவனுமான அக்ஷன் பாணங்களைப் பொழிந்தான்.

23. உக்கிரமான பராக்கிரமமுடையவரும், மனோவேகம் போன்ற வேகமுள்ளவருமான வானரவீரர் அப்பாணங்கள் தன்மேல் படாமல் விலக்கி பாணங்களின் நடுவில் காற்றுப்போல் நுழைந்து வாயுமண்டலத்தில் திரிந்தார்.

24. பின்பு அவ்வாயு குமாரர் வில்லேந்தியவனும் போரில் ஆசை கொண்டவனும் கூர்மையான சிறந்த பாணங்களால் ஆகாயத்தை நிரப்புபவனுமான அவனைப் பெருமதிப்புடன் உற்று நோக்கிச் சிந்திக்கலானார்.

21. ஸமுத்பபாதாசு நப: ஸமாருஜன்புஜோரு । 22. ரதிச்ரேஷ்ட்டதர: ।

ततः शरै-र्भिन्नभुजान्तरः कपिः कुमारवीरेण महात्मना नदन् ।
महाभुजः कर्मविशेषतत्त्ववित् विचिन्तयामास रणे पराक्रमम् ।। २५ ।।

अबालवद्बाल-दिवाकरप्रभः करोत्ययं कर्म महन्महाबलः ।
न चास्य सर्वाहवकर्म-शोभिनः प्रमापणे मे मतिरत्र जायते ।। २६ ।।

தத: சரைர்-பின்ன புஜாந்தர: கபி:
குமாரவீரேண மஹாத்மனா நதன் ।
மஹாபுஜ: கர்மவிசேஷதத்வவித்
விசிந்தயாமாஸ ரணே பராக்ரமம் ॥ 25 ॥

அபாலவத் பால-திவாகரப்ரப:
கரோத்யயம் கர்ம மஹன்மஹாபல: ।
ந சாஸ்ய ஸர்வாஹவகர்ம-சோபின:
ப்ரமாபணே மே மதிரத்ர ஜாயதே ॥ 26 ॥

---

25. அப்பொழுது மகாபலசாலியான அரசகுமாரனால் விடப்பட்ட பாணங்களால் மார்பு கிழிக்கப்பட்ட பெருந்தோளரும் சிறப்பான செயலின் அருமை தெரிந்தவருமான அவ்வானரர் கர்ஜனை செய்து அவனுடைய பராக்கிரமத்தைப் பற்றி மனதில் ஆராய்ந்தார்.

26. இவனோ மகாபலவானாய் பாலசூரியன் போலொளியுடையவனாய்த் தக்க வயது வந்தவன் போல் பெரிய தொழிலைச் செய்கிறான். எல்லாப் போர்ச் செயல்களையும் பழுதறச் செய்கிறான். இவனை இங்கு கொல்ல எனக்கு மனம் எழவில்லை.

---

23. ஸம்யதி பீமவிக்ரம: ।
24. விவிதை: சரோத்தமை: ।
24. கம் ஆஸ்த்ருணந்தம்–ஆகாசம் ஆச்சாதயந்தம் ।
25. குமாரவர்யேண ।
26. மஹான் மஹாபல: ।
ஸர்வாஹம கர்மசாலின: ।
26. ப்ரமாபணே –வித்த்வம்ஸனே ।

अयं महात्मा च महांश्च वीर्यतः समाहितश्चातिसहश्च संयुगे ।
असंशयं कर्मगुणोदयादयं सनागयक्षै-र्मुनिभिश्च पूजितः ।। २७ ।।
पराक्रमोत्साह-विवृद्धमानसः समीक्षते मां प्रमुखागतः स्थितः ।
पराक्रमोह्यस्य मनांसि कम्पयेत् सुरासुराणामपि शीघ्रगामिनः ।। २८ ।।
न खल्वयं नाभिभवेदुपेक्षितः पराक्रमोह्यस्य रणे विवर्धते ।
प्रमापणं त्वेव ममास्य रोचते न वर्धमानोऽग्निरुपेक्षितुं क्षमः ।। २९ ।।

அயம் மஹாத்மா ச மஹாம்ச்ச வீர்யத:
ஸமாஹிதச் சாதிஸஹச்ச ஸம்யுகே ।
அஸம்சயம் கர்ம குணோதயாதயம்
ஸநாகயக்ஷைர்-முனிபிச்ச பூஜித: ।। 27 ।।
பராக்ரமோத்ஸாஹ-விவ்ருத்தமானஸ:
ஸமீக்ஷதே மாம் ப்ரமுகாகத: ஸ்தித: ।
பராக்ரமோஹ்யஸ்ய மனாம்ஸி கம்பயேத்
ஸுராஸுராணாமபி சீக்ரகாமின: ।। 28 ।।
ந கல்வயம் நாபிபவேதுபேக்ஷித:
பராக்ரமோஹ்யஸ்ய ரணே விவர்த்ததே ।
ப்ரமாபணம் த்வேவ மமாஸ்ய ரோசதே
ந வர்த்தமானோऽக்னிருபேக்ஷிதும் க்ஷம: ।। 29 ।।

---

27. இவன் மிகுந்த பலசாலி, வீரியம் மிக்கவன், கஷ்டத்திற்குச் சலியாதவன், போரில் பொறுத்து நிற்பவன்; அதுவுமன்றி இவன் செய்யும் செயல்களில் பெருமையிருப்பதால் நாகர்கள்,யக்ஷர்கள், முனிவர்கள் முதலியோரால் கொண்டாடப்பட்டவன் என்பதில் சந்தேகமில்லை.

28. பராக்கிரமத்தாலும் உற்சாகத்தாலும் மனக்கிளர்ச்சியடைந்து என் முன்னே வந்து நின்று என்னை உற்றுப் பார்க்கிறான். வேகம் படைத்த இவனுடைய வீரியம் தேவர்களையும் அசுரர்களையும் மனம் நடுங்கச் செய்யும்.

29. இவனை நான் பொருட்படுத்தாமலிருந்தாலும் இவன் என்னை வெல்லமாட்டான் என்று கருத முடியாது. போரில் இவன் வலிமை வளர்கின்றது. இவனைக் கொல்வதுதான் நல்லதென்று தோன்றுகிறது. எரிகின்ற தீயைச் சும்மாவிடுவது தகாது.

इति प्रवेगं तु परस्य तर्कयन् स्वकर्मयोगं च विधाय वीर्यवान् ।
चकार वेगं तु महाबल-स्तदा मतिं च चक्रेऽस्य वधे दुरात्मनः ।। ३० ।।
स तस्य तानष्ट हयान् महाजवान् समाहितान् भारसहान् विवर्तने ।
जघान वीरः पथि वायुसेविते तलप्रहारैः पवनात्मजः कपिः ।। ३१ ।।
ततस्तलेनाभिहतो महारथः स तस्य पिंगाधिप मन्त्रिनिर्जितः ।
प्रभग्ननीडः परिमुक्तकूबरः पपात भूमौ हतवाजिरम्बरात्।। ३२ ।।

இதி ப்ரவேகம் து பரஸ்ய தர்க்கயன்
ஸ்வகர்மயோகஞ் ச விதாய வீர்யவான் ।
சகார வேகந் து மஹாபலஸ்-ததா
மதிஞ் ச சக்ரேऽஸ்ய வதே துராத்மன: ॥ 30 ॥
ஸ தஸ்ய தானஷ்ட ஹயான் மஹாஜவான்
ஸமாஹிதான் பாரஸஹான் விவர்த்தனே ।
ஜகான வீர: பதி வாயுஸேவிதே
தலப்ரஹாரை: பவனாத்மஜ: கபி: ॥ 31 ॥
ததஸ்தலேனாபிஹதோ மஹாரத:
ஸ தஸ்ய பிங்காதிப-மந்த்ரிநிர்ஜித: ।
ப்ரபக்னநீட: பரிமுக்த கூபர:
பபாத பூமௌ ஹதவாஜிரம்பராத் ॥ 32 ॥

30. மகாபலசாலியும் வீரியம் மிக்கவருமான அவர் இவ்வாறு எதிரியின் வேகத்தையும் தான் செய்ய வேண்டியதையும் ஆராய்ந்து நிச்சயித்து ஆவேசங்கொண்டார். அந்த துராத்மாவைக் கொன்று விடுவதென்று தீர்மானித்தார்.

31. வாயு குமாரரான வானரவீரர் வேகம் மிகுந்தவையும் கஷ்டங்களுக்குச் சலியாதவையும் சுற்றியோடுவதில் மிக்க வன்மை படைத்தவையுமான அவனுடைய எட்டுக் குதிரைகளையும் வாயு மார்க்கத்திலேயே தமது கைகளால் அறைந்து கொன்றார்.

32. அதன் பின் அவனுடைய பெருந்தேரும் வானர அரசரின் மந்திரியாகிய ஹனுமாரால் குத்தப்பட்டுச் செத்த குதிரைகளுடன் உருவஞ் சிதைந்து இருசு கழன்று ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்தது.

28. ப்ரமுகேऽக்ரத: ஸ்தித: । சீக்ர காரிண: ।
29. ப்ரமாபணம் ஹ்யஸ்ய மமாத்ய । 30. வதே ததானீம் ।

स तं परित्यज्य महारथो रथं सकार्मुकः खड्गधरः खमुत्पतन् ।
तपोऽभियोगादृषिरुग्रवीर्यवान् विहाय देहं मरुतामिवालयम् ॥ ३३ ॥
ततः कपिस्तं विचरन्त-मम्बरे पतत्रिराजानिल-सिद्धसेविते ।
समेत्य तं मारुततुल्यविक्रमः क्रमेण जग्राह स पादयोर्दृढम् ॥ ३४ ॥
स तं समाविध्य सहस्रशः कपि-र्महोरगं गृह्य इवाण्डजेश्वरः ।
मुमोच वेगात् पितृतुल्यविक्रमो महीतले संयति वानरोत्तमः ॥ ३५ ॥

ஸ தம் பரித்யஜ்ய மஹாரதோ ரதம்
ஸ கார்முக: கட்கதர: ஸமுத்பதன் ।
தபோऽபியோகாத்ருஷிருக்ரவீர்யவான்
விஹாய தேஹம் மருதாமிவாலயம் ॥ 33 ॥
தத: கபிஸ்தம் விசரந்த-மம்பரே
பதத்ரிராஜானில-ஸித்த-ஸேவிதே ।
ஸமேத்ய தம் மாருத துல்யவிக்ரம:
க்ரமேண ஜக்ராஹ ஸ பாதயோர்த்ருடம் ॥ 34 ॥
ஸ தம் ஸமாவித்ய ஸஹஸ்ரச: கபிர்—
மஹோரகம் க்ருஹ்ய இவாண்டஜேச்வர: ।
முமோச வேகாத் பித்ருதுல்ய விக்ரமோ
மஹீதலே ஸம்யதி வானரோத்தம: ॥ 35 ॥

---

33. உடனே தவ வலிமையால் உடலைவிட்டுத் தேவலோகத்திற்குச் செல்லும் ஒரு ரிஷியைப் போல் உக்ரவீரியமுடைய அம்மகாரதன் தேரை விட்டிழிந்து கையில் வில்லுடனும் வாளுடனும் ஆகாயத்தில் கிளம்பினான்.

34. பின்பு கருடனும் காற்றும் சித்தர் கணமும் சஞ்சரிக்கும் வானவெளியில் ஓடித்திரியும் அவனை வாயுவுக்குச் சமமான வீரியம் படைத்த வானரர் அணுகித் தன் கால்களிடை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்.

35. தனது தந்தைக்கு நிகரான வலுவுடைய அவ்வானரர் கருடன் பெரிய பாம்பைப்பிடிப்பது போல் அவனைப் பிடித்து ஆயிரம் சுற்றுச்சுற்றி வேகமாக பூமியில் போர்க்களத்தில் எறிந்தார்.

---

31. தானஷ்டவரான் மஹா ஹயான் । 32. ஸபக்னநிட: ।
34. மாருத வேகவிக்ரம: । · 35. ஸ தம் ஸமாருத்ய ।

स भग्नबाहूरुकटीशिरोधरः क्षरन्नसृङ्-निर्मथितास्थिलोचनः ।
संभिन्नसन्धिः प्रविकीर्णबन्धनो हतः क्षितौ वायुसुतेन राक्षसः।। ३६ ।।
महाकपि-र्भूमितले निपीड्य तं चकार रक्षोधिपते-र्महद्भयम् ।। ३७ ।।
महर्षिभि-श्चक्रचरै-र्महाव्रतैः समेत्य भूतैश्च सयक्षपन्नगैः ।
सुरैश्च सेन्द्रै-र्भृशजातविस्मयै-र्हते कुमारे स कपिर्निरीक्षितः।। ३८ ।।

ஸ பக்ன-பாஹூருகடீ ஸிரோதர:
  க்ஷரந்நஸ்ருங் நிர்மதிதாஸ்திலோசன: l
ஸம்பின்ன ஸந்தி: ப்ரவிகீர்ண பந்தனோ
  ஹத: க்ஷிதௌ வாயுஸுதேன ராக்ஷஸ: ll 36 ll
மஹாகபிர்-பூமிதலே நிபீட்ய தம்
  சகார ரக்ஷோதிபதேர்-மஹத்பயம் ll 37 ll
மஹர்ஷிபிச்-சக்ரசரைர்-மஹாவ்ரதை:
  ஸமேத்ய பூதைச்ச ஸயக்ஷபன்னகை: l
ஸுரைச்ச ஸேந்த்ரைர்-ப்ருசஜாதவிஸ்மயைர்—
  ஹதே குமாரே ஸ கபிர் நிரீக்ஷித: ll 38 ll

---

36. வாயு குமாரரால் கொல்லப்பட்ட அவ்வரக்கன் தோளும் தொடையும் இடுப்பும் கழுத்தும் முறிந்து எலும்புகள் ஒடிந்து கண்கள் பிதுங்கி மூட்டுகள் நொறுங்கி கட்டுகள் தளர்ந்து இரத்தத்தைப் பெருக்கிக் கொண்டு தரையில் விழுந்தான்.

37. ஹனுமார் அவனைத் தரையில் சாய்த்து அரக்கர் பெருமானுக்குப் பெரும் பயத்தை விளைவித்தார்.

38. அக்ஷகுமாரன் கொல்லப்பட்டதும் ஹனுமார் ஒளியுலகில் சஞ்சரிக்கும் விரதம் பூண்ட மகரிஷிகளாலும் யக்ஷர்களாலும் நாகர்களாலும் பூதங்களாலும் இந்திரனுடன் கூடிய தேவர்களாலும் கூட்டமாக ஆச்சரியத்துடன் பார்க்கப்பட்டார்.

---

36. ஸபக்னஸந்தி: l 38. சக்ரசரை: ஸமாகதை: l

निहत्य तं वज्रिसुतोपमप्रभं कुमारमक्षं क्षतजोपमेक्षणम् ।

तमेव वीरोऽभिजगाम तोरणं कृतक्षणः काल इव प्रजाक्षये ।। ३९ ।।

इति सप्तचत्वारिंशः सर्गः
(आदितः श्लोकाः २०४३)

நிஹத்ய தம் வஜ்ரிஸுதோபமப்ரபம்
குமாரமக்ஷம் க்ஷதஜோப மேக்ஷணம் l
தமேவ வீரோऽபிஜகாம தோரணம்
க்ருதக்ஷண: கால இவ ப்ரஜாக்ஷயே ll 39 ll

இதி ஸப்த சத்வாரிம்ச: ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 2043)

---

39. இரத்தம்போற் சிவந்த கண்களுடையவனும் இந்திரகுமாரன் போன்றவனுமான அந்த ராஜகுமாரனைக் கொன்று விட்டு அவ்வீரர் ஸம்ஹார காலத்தில் விளங்கும் யமனைப் போல் அடுத்த சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு தோரண வாயிலையே மீண்டும் அடைந்தார்.

இங்ஙனம் நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2043)

---

39. வஜ்ரிஸுதோபமம் ரணே l ததேவ வீரோ' l

अष्टचत्वारिंशः सर्गः
ब्रह्मास्त्रेण हनुमद्बन्धनम्

ततः स रक्षो अधिपति-र्महात्मा हनूमताक्षे निहते कुमारे ।
मनः समाधाय तदेन्द्रकल्पं समादिदेशेन्द्रजितं सरोषम् ।। १ ।।
त्वमस्त्रविच्छस्त्रभृतां वरिष्ठः सुरासुराणामपि शोकदाता ।
सुरेषु सेन्द्रेषु च दृष्टकर्मा पितामहाराधन-संचितास्त्रः ।। २ ।।

அஷ்டசத்வாரிம்ச: ஸர்க்க:
ப்ரஹ்மாஸ்த்ரேண ஹனுமத்பந்தனம்

தத: ஸ ரக்ஷோऽதிபதிர்-மஹாத்மா ஹனுமதாக்ஷே நிஹதே குமாரே।
மன: ஸமாதாய ததேந்த்ரகல்பம் ஸமாதிதேசேந்த்ரஜிதம்
ஸரோஷம் ॥ 1 ॥
த்வமஸ்த்ரவிச்-சஸ்த்ரப்ருதாம் வரிஷ்ட: ஸுராஸுராணாமபி சோகதாதா ।
ஸுரேஷு சேந்த்ரேஷு சத்ருஷ்ட கர்மா பிதாமஹாராதன
-ஸஞ்சிதாஸ்த்ர: ॥ 2 ॥

நாற்பத்தெட்டாவது ஸர்க்கம்
பிரம்மாஸ்திரத்தால் ஹனுமார் கட்டுப்படல்

1. அக்ஷய குமாரன் ஹனுமாரால் கொல்லப்பட்ட பின் பெருமைமிக்க அரக்கர் கோன் மனதை திடப்படுத்திக்கொண்டு கோபத்துடன் இந்திரனுக் கொப்பான இந்திரஜித்தை ஏவினான்.

2. 'நீ அஸ்திரங்கற்றவன், ஆயுதமேந்தியவர்களிற் சிறந்தவன், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் துன்பத்தைக் கொடுத்தவன், இந்திரனுள்பட தேவர்களிடம் உன் செயல் காணப்பட்டுளது, பிரம்மாவைப் பூஜித்து அஸ்திரங்களைச் சேர்த்தவன்.

---

1. ததஸ்து । மன: ஸமாதாய ஸ தேவ கல்பம் । ஸரோஷ: ।

2. த்வமஸ்த்ரவிச்சஸ்த்ரவிதாம் । அஸ்த்ரவித்—ப்ரஹ்மாஸ்த்ரவித் ।

तवास्त्र-बलमासाद्य नासुरा न मरुद्गणाः ।
न शेकुः समरे स्थातुं सुरेश्वर-समाश्रिताः ॥ ३ ॥
न कश्चित्त्रिषु लोकेषु संयुगे न गतश्रमः ।
भुजवीर्याभिगुप्ताश्च तपसा चाभिरक्षितः ॥
देशकालप्रधानश्च त्वमेव मतिसत्तमः ॥ ४ ॥
न ते अस्त्यशक्यं समरेषु कर्मणा न ते अस्त्यकार्यं मतिपूर्वमन्त्रणे ।
न सो अस्ति कश्चित्त्रिषु संग्रहेषु वै न वेद यस्ते अस्त्रबलं बलंच ते ॥ ५ ॥

தவாஸ்த்ர—பலமாஸாத்ய நாஸுரா ந மருத்கணா: ।
ந சேகு: ஸமரே ஸ்தாதும் ஸுரேச்வர-ஸமாச்ரிதா: ॥ 3 ॥
ந கச்சித்-த்ரிஷு லோகேஷு ஸம்யுகே ந கதச்ரம: ।
புஜவீர்யாபிகுப்தாச்ச தபஸா சாபிரக்ஷித: ॥
தேச-கால-ப்ரதானச்ச த்வமேவ மதிஸத்தம: ॥ 4 ॥
ந தேऽஸ்த்யசக்யம் ஸமரேஷு கர்மணா
ந தேऽஸ்த்யகார்யம் மதிபூர்வமந்த்ரணே ।
ந ஸோऽஸ்தி கச்சித் த்ரிஷு ஸங்க்ரஹேஷு வை
ந வேத யஸ்தேऽஸ்த்ரபலம் பலஞ்ச தே ॥ 5 ॥

---

3. உன்னுடைய அஸ்திரபலத்தை எதிர்க்க அசுரர்களாலும் முடியாது மருத்கணங்களாலும் முடியாது; இந்திரனைத் துணை கொண்டாலும் முடியாது.

4. போரில் வருத்தமடையாதவர் மூவுலகத்திலும் எவருமில்லை. நீயோ தவத்தால் காக்கப்பட்டவன்; தோள்வலியால் காக்கப்பட்டவன்; தேசகாலங்களை யனுசரித்து நடப்பவன்; நுண்ணறிவு படைத்தவன்.

5. போரில் உனது செயலால் முடிக்க முடியாதது ஒன்றுமில்லை. புத்தியைக் கொண்டு ஆராயுமிடத்தில் உனக்கு அகார்யம் என்பதே இல்லை. உனது அஸ்திரபலத்தையும் வலிமையையும் அறியாதவன் மூவுலகிலும் இல்லை.

---

3. த்வதஸ்த்ர பலமாஸந்த்ய ஸஸுரா । 4. தேசகால விபாகஜ்ஞ ।

ममानुरूपं तपसो बलं च ते पराक्रमश्चास्त्रबलं च संयुगे ।
न त्वां समासाद्य रणावमर्दे मनः श्रमं गच्छति निश्चितार्थम् ।। ६ ।।
निहताः किंकराः सर्वे जम्बुमाली च राक्षसः ।
अमात्यपुत्रा वीराश्च पंच सेनाग्रनायकाः ।। ७ ।।
बलानि सुसमृद्धानि साश्वनागरथानि च ।
सहोदरस्ते दयितः कुमारो अक्षश्च सूदितः ।। ८ ।।
न हि तेष्वेव मे सारो यस्त्वय्यरिनिषूदन ।। ९ ।।

மமானுரூபம் தபஸோ பலஞ்ச தே பராக்ரச்சாஸ்த்ர பலஞ் ச ஸம்யுகே।
ந த்வாம் ஸமாஸாத்ய ரணாவமர்த்தே மன: ச்ரமம் கச்சதி நிச்சிதார்த்தம் ॥ 6 ॥

நிஹதா: கிங்கரா: ஸர்வே ஜம்புமாலீ ச ராக்ஷஸ:।
அமாத்யபுத்ரா' வீராச்ச பஞ்ச ஸேனாக்ரநாயகா: ॥ 7 ॥
பலானி ஸுஸம்ருத்தானி ஸாச்வநாகரதானி ச।
ஸஹோதரஸ்தே தயித: குமாரோऽக்ஷச்ச ஸூதித: ॥ 8 ॥
ந ஹி தேஷ்வேவ மே ஸாரோ யஸ்த்வய்யரிநிஷூதன ॥ 9 ॥

---

6. உனது தவத்தின் பலமும் உடல் வலிமையும் பராக்கிரமமும் அஸ்திரபலமும் என்னுடையதை ஒத்தது. போரின் நெருக்கடியில் நிச்சயமாய் வெற்றி கொள்ளக்கூடிய உன்னைப் பெற்றபின் என் மனது கவலை அடைவதில்லை.

7–8. கிங்கரர்களனைவரும் கொல்லப்பட்டார்கள். இராக்ஷஸன் ஜம்புமாலியும், வீரர்களான மந்திரிபுத்திரர்களும், ஐந்து சேனாபதிகளும் கொல்லப்பட்டார்கள். குதிரைகள், யானைகள், தேர்கள் இவைகளோடு கூடிய பெருஞ்சேனைகளும் அழிக்கப்பட்டன. உனது பிரியமான சகோதரன் அக்ஷகுமாரனும் கொல்லப்பட்டான்.

9. சத்துருவை யழிப்பவனே! எனக்கு உன்னிடமுள்ள நம்பிக்கை அவர்களிடத்தில் இல்லை.

---

7. ஸேனாக்ரகாமின:।
8. ஸஹோதரச்ச சயித:।
9. ந து தேஷ்வேவ।

इदं हि दृष्ट्वा मतिमन्महद्बलं कपेः प्रभावं च पराक्रमं च ।
त्वमात्मनश्चापि समीक्ष्य सारं कुरुष्व वेगं स्वबलानुरूपम् ।। १० ।।
बलावमर्द-स्त्वयि सन्निकृष्टे यथागते शाम्यति शान्तशत्रौ ।
तथा समीक्ष्यात्मबलं परं च समारभस्वास्त्रविदां वरिष्ठ ।। ११ ।।

இதம் ஹி த்ருஷ்ட்வா மதிமன்மஹத்பலம் கபே: ப்ர பாவஞ் ச
பராக்ரமஞ் ச l
த்வமாத்மமனச்சாபி ஸமீக்ஷ்ய ஸாரம் குருஷ்வ வேகம் ஸ்வபலானு
ரூபம் ll 10 ll
பலாவமர்த்தஸ்-த்வயி ஸந்நிக்ருஷ்டே
யதாகதே சாம்யதி சாந்தசத்ரௌ l
ததா ஸமீக்ஷ்யாத்மபலம் பரஞ் ச
ஸமாரபஸ்வாஸ்த்ரவிதாம் வரிஷ்ட்ட ll 11 ll

---

10. மதிமிக்கோனே! வானரத்தின் பெரும் பலத்தையும் பெருமையையும் ஆண்மையையும் பார்த்து உன்னுடைய திறமையையுமறிந்து உன் பலத்திற்குத் தக்க தீவிர முயற்சியை மேற்கொள்வாயாக.

11. அஸ்திரங்கற்றவருள் சிறந்தவனே! சத்துருக்களை அடக்கவல்லவனான நீ எப்படிச் சென்று நெருங்குகையில் உன் சேனைகளுக்குக் கேடுவராதிருக்குமோ அப்படி உன் பலத்தையும் சத்ரு பலத்தையும் நன்கு ஆராய்ந்து போர் தொடங்கு.

---

10. இதஞ் ச த்ருஷ்ட்வா நிஹதம் l
நிரீக்ஷ்யஸாரம் l
10. ஸாரம்–சாரீரம் பலம் l
பரபாவம்–அந்த:சக்திம் l
ப்ராக்ரமம்–பௌருஷம் l
11. பலாபமர்த்தைஸ்த்வயி l க்ஷாம்யதிசாந்தசத்ரு: l வரிஷ்ட்ட: l

न वीर सेना गणशोच्यवन्ति न वज्रमादाय विशालसारम् ।
न मारुतस्यास्ति गतिप्रमाणं न चाग्निकल्पः करणेन हन्तुम् ।। १२ ।।
तमेवमर्थं प्रसमीक्ष्य सम्यक् स्वकर्मसाम्याद्धि समाहितात्मा ।
स्मरंश्च दिव्यं धनुषो अस्त्रवीर्यं व्रजाक्षतं कर्म समारभस्व ।। १३ ।।
न खल्वियं मतिः श्रेष्ठा यत्त्वां संप्रेषयाम्यहम् ।
इयं च राजधर्माणां क्षत्रस्य च मतिर्मता ।। १४ ।।

ந வீர ஸேனா கணஸோச்யவந்தி
நவஜ்ரமாதாய விசாலஸாரம் ‖
ந மாருதஸ்யாஸ்தி கதிப்ரமாணம்
ந சாக்னிகல்ப: கரணேன ஹந்தும் ‖ 12 ‖
தமேவமர்த்தம் ப்ரஸமீக்ஷ்ய ஸம்யக்
ஸ்வகர்மஸாம்யாத்தி ஸமாஹிதாத்மா ‖
ஸ்மரம்ச்ச திவ்யம் தனுஷோऽஸ்த்ரவீர்யம்
வ்ரஜாக்ஷதம் கர்ம ஸமாரபஸ்வ ‖ 13 ‖
ந கல்வியம் மதி: ச்ரேஷ்டா யத்த்வாம் ஸம்ப்ரேஷயாம்யஹம் ‖
இயஞ் ச ராஜதர்மாணாம் க்ஷத்ரஸ்ய ச மதிர்மதா ‖ 14 ‖

---

12. வீரா! கூட்டங்கூட்டமாய் அழிக்க வல்ல இவனிடத்தில் சேனைகள் பயன்படா. இதற்குப் பயன்படாத வஜ்ராயுதத்தை எடுத்துக் கொண்டு புகாதே. இவனுடைய வேகம் வாயுவினிடத்துமில்லை. நெருப்புக்கு நிகரான இவனை ஆயுதங்களைப் பிரயோகித்துக் கொல்ல முடியாது.

13. இவ்வாறு காரியத்தை நன்றாக ஆராய்ந்து உனது கருமத்திற்குத் தக்க வகையில் மன உறுதியுடன் தெய்வீகமான வில்லிற் பூட்டும் அஸ்திரங்களின் வீரியத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு செல். காரியம் கேடுறாதபடி செய்யத் தொடங்கு.

14. உன்னை நான் போருக்கு அனுப்புகிறேன் என்ற இந்த எண்ணம் சிறந்ததன்றாயினும் இந்தத் தீர்மானம் அரச நீதிக்கும் அரசகுல இயல்பிற்கும் பொருத்தமானதே.

---

12. இது சில பாடங்களில் இல்லை. 14. மதிச்ரேஷ்ட்ட ‖

नानाशास्त्रेषु संग्रामे वैशारद्य-मरिन्दम ।
अवश्यमेव बोद्धव्यं काम्यश्च विजयो रणे ॥ १५ ॥
ततः पितुस्तद्वचनं निशाम्य प्रदक्षिणं दक्षसुतप्रभावः ।
चकार भर्तार-मदीनसत्त्वो रणाय वीरः प्रतिपन्नबुद्धिः ॥ १६ ॥
ततस्तैः स्वगणैरिष्टै-रिन्द्रजित् प्रतिपूजितः ।
युद्धोद्धतः कृतोत्साहः संग्रामं प्रत्यपद्यत ॥ १७ ॥

நானாசாஸ்த்ரேஷு ஸங்க்ராமே வைசாரத்ய-மரிந்தம ।
அவச்யமேவ போத்தவ்யம் காம்யச்ச விஜயோ ரணே ॥ 15 ॥
தத: பிதுஸ்-தத்வசனம் நிசம்ய ப்ரதக்ஷிணம் தக்ஷஸுதப்ரபாவ: ।
சகார பர்த்தார-மதீனஸத்வோ ரணாய வீர: ப்ரதிபன்னபுத்தி: ॥ 16 ॥
ததஸ்தை: ஸ்வகணைரிஷ்டை-ரிந்த்ரஜித் ப்ரதிபூஜித: ।
யுத்தோத்தத: க்ருதோத்ஸாஹ: ஸங்க்ராமம் ப்ரத்யபத்யத ॥ 17 ॥

---

15. பகைவரை அழிப்பவனே! போர் முகத்தில் பல சாஸ்திரங்களில் நன்கு கற்றதையெல்லாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். போரில் விரும்ப வேண்டியது வெற்றியேயாகும்.

16. தேவகுமாரன் போன்றவனும் குறைவற்ற பலமுடையவனுமாகிய அவ்வீரன் தந்தையின் வார்த்தையைக் கேட்டுப் போருக்குச் சித்தமாய்க் காவலனாகிய இராவணனைப் பிரதக்ஷிணம் செய்தான்.

17. பின்னர் இந்திரஜித்து நண்பர்களாலும் உறவினர்களாலும் போற்றப் பெற்று யுத்தம் செய்யும் உற்சாகத்துடனும் வேகத்துடனும் போருக்குக் கிளம்பினான்.

---

15. நானாசாஸ்த்ரைச்ச । 16. பர்த்தார-மதித்வரேண ।
16. தக்ஷஸுதா: தேவா: । ஒ. 'மனஸா த்வேவ பூதானி பூர்வம் தக்ஷோऽஸ்ருஜத்ததா । தேவான் ருஷீன்ஸ்சகந்தர்வா —னுரகான் பக்ஷிணஸ்ததா ॥—விஷ்ணுபுராணம்.
17. யுத்தோத்தத-க்ருதோத்ஸாஹ: । ஸம்ப்ரபத்யத ।

श्रीमान् पद्मपलाशाक्षो राक्षसाधिपतेः सुतः ।
निर्जगाम महातेजाः समुद्र इव पर्वसु ॥ १८ ॥
स पक्षिराजोपमतुल्यवेगैः व्यालैश्चतुर्भिः सिततीक्ष्णदंष्ट्रैः ।
रथं समायुक्त-प्रसंगवेगं समारुराहेन्द्रजिदिन्द्रकल्पः ॥ १९ ॥
स रथी धन्विनां श्रेष्ठः शस्त्रज्ञो अस्त्रविशारदः ।
रथेनाभिययौ क्षिप्रं हनुमान् यत्र सो अभवत् ॥ २० ॥

ஸ்ரீமான் பத்மபலாசாக்ஷோ ராக்ஷஸாதிபதே: ஸுத: ।
நிர்ஜகாம மஹாதேஜா: ஸமுத்ர இவ பர்வஸு ॥ 18 ॥
ஸ பக்ஷிராஜோபமதுல்யவேகை:
வ்யாலைச்-சதுர்ப்பி: ஸிததீக்ஷ்ணதம்ஷ்ட்ரை: ।
ரதம் ஸமாயுக்த-ப்ரஸங்கவேகம்
ஸமாருருஹேந்த்ரஜிதிந்த்ரகல்ப: ॥ 19 ॥
ஸ ரதீ தன்வினாம் ச்ரேஷ்ட: சஸ்த்ரஜ்ஞோऽஸ்த்ரவிசாரத: ।
ரதேனாபியயௌ க்ஷிப்ரம் ஹனுமான் யத்ர ஸோऽபவத் ॥ 20 ॥

---

18. தாமரையிதழ் போன்ற கண்படைத்தவனும், மிகுந்த பராக்கிரமமுடையவனும், சீமானும், அரக்க ராஜகுமாரனுமாகிய அவன் பருவகால சமுத்திரம் போல் கிளம்பினான்.

19. கருடனது வேகம் போன்ற வேகமும் வெண்மையான கூரிய பற்களுமுடைய நான்கு புலிகள் பூட்டப் பெற்றதும் தடைபடாத வேகமுடையதுமான தேரின் மேல் இந்திரனுக் கொப்பான அந்த இந்திரஜித்து ஏறினான்.

20. வில் வீரர்களிற் சிறந்தவனும், படைத் தொழில் பயின்றவனும், அஸ்திர வித்தையில் வல்லவனும், மகாரதனுமான அவன் விரைவாகத் தேரின் மேல் ஆரோகணித்து எங்கு ஹனுமார் இருந்தாரோ அங்கு வந்து சேர்ந்தான்.

---

18. பத்மவிசாலாக்ஷோ । பர்வணி ।

स तस्य रथनिर्घोषं ज्यास्वनं कार्मुकस्य च ।
निशम्य हरिवीरो असौ संप्रहृष्टतरो अभवत् ॥ २१ ॥
इन्द्रजिच्चापमादाय शितशल्यांश्च सायकान् ।
हनुमन्त-मभिप्रेत्य जगाम रणपण्डितः ॥ २२ ॥
तस्मिंस्ततः संयति जातहर्षे रणाय निर्गच्छति बाणपाणौ ।
दिशश्च सर्वाः कलुषा बभूवः मृगाश्च रौद्रा बहुधा विनेदुः ॥ २३ ॥

ஸ தஸ்ய ரதநிர்க்கோஷம் ஜ்யாஸ்வனம் கார்முகஸ்ய ச
நிசம்ய ஹரிவீரோऽஸெள ஸம்ப்ரஹ்ருஷ்டதரோऽபவத் ll 21 ll

இந்த்ரஜிச்-சாபமாதாய சிதசல்யாம்ச்ச ஸாயகான் l
ஹனுமந்த-மபிப்ரேத்ய ஜகாம ரணபண்டித:ll 22 ll

தஸ்மிம்ஸ்தத: ஸம்யதி ஜாதஹர்ஷே
ரணாய நிர்க்கச்சதி பாணபாணௌ l
திசச்ச ஸர்வா: கலுஷா பபூவு:
ம்ருகாச்ச ரௌத்ரா பஹுதா விநேது : ll 23 ll

---

21. அவனுடைய தேரோசையையும் வில்லின் நாணொலியையும் வானர வீரர் கேட்டு மகிழ்ச்சி பொங்கியவரானார்.

22. போர்கலையிற் பண்டிதனாகிய இந்திரஜித்து பெரிய வில்லையும் கூரிய நுனியுடைய அம்புகளையும் எடுத்துக் கொண்டு ஹனுமாரை நோக்கிச் சென்றான்.

23. யுத்தத்தில் மகிழ்ச்சி கொண்ட அவன் போருக்கு பாணத்தைக் கையிலெடுத்துக் கொண்டு செல்லுகையில் திசைகளெல்லாம் கலங்கின. கொடிய மிருகங்களும் பலவாறு கதறின.

---

22. ஸுமஹச்சாபமாதாய l
23. ஸம்யதி-யுத்தே l

समागतास्तत्र तु नागयक्षा महर्षयश्चक्रचराश्च सिद्धाः ।
नभः समावृत्य च पक्षिसंघा विनेदुरुच्चैः परमप्रहृष्टाः ॥ २४ ॥

आयान्तं सरथं दृष्ट्वा तूर्ण-मिन्द्रजितं कपिः।
विननाद महानादं व्यवर्धत च वेगवान् ॥ २५ ॥

इन्द्रजित्तु रथं दिव्य-मास्थित-श्चित्रकार्मुकः ।
धनुर्विस्फारयामास तडिदूर्जित-निस्स्वनम् ॥ २६ ॥

ஸமாகதாஸ்-தத்ர து நாகயக்ஷா
மஹர்ஷயச்சக்ரசராச்ச ஸித்தா :।
நப: ஸமாவ்ருத்ய ச பக்ஷிஸங்கா
விநேதுருச்சை: பரமப்ரஹ்ருஷ்டா: ॥ 24 ॥

ஆயாந்தம் ஸரதம் த்ருஷ்ட்வா தூர்ண-மிந்த்ரஜிதம் கபி: ।
விநநாத மஹாநாதம் வ்யவர்த்தத ச வேகவான் ॥ 25 ॥

இந்த்ரஜித்து ரதம் திவ்ய-மாஸ்திதச்-சித்ரகார்முக: ।
தனுர்விஸ்பாரயாமாஸ தடிதூர்ஜித-நிஸ்ஸ்வனம் ॥ 26 ॥

---

24. அங்கே நாகர், யக்ஷர், முனிவர், வானத்தில் சஞ்சரிக்கும் சித்தர்கள் முதலியவர் வந்து கூடினர். பறவைக் கூட்டங்கள் வானத்தை மறைத்துக் கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் உரக்கக் கூவின.

25. தேரிலேறி விரைந்து வந்த இந்திரஜித்தை வானரர் கண்டு பேரொலி செய்து வேகமாக தமது உடலைப் பெருக்கி வளர்ந்தார்.

26. இந்திரஜித்து தெய்வீகமான தேரிலிருந்து கொண்டே விசித்திரமான வில்லை எடுத்து இடிபோல் பெருத்த பேரோசை கிளம்பும்படி நாணொலி செய்தான்.

---

25. பூர்ண-மிந்த்ரத்வஜம் கபி: । நநாத ச ।

ततः समेतावतितीक्ष्णवेगौ महाबलौ तौ रणनिर्विशङ्कौ ।
कपिश्च रक्षोधिपतेश्च पुत्रः सुरासुरेन्द्राविव बद्धवैरौ ॥ २७ ॥
स तस्य वीरस्य महारथस्य धनुष्मतः संयति सम्मतस्य।
शरप्रवेगं व्यहनत् प्रवृद्धः चचार मार्गे पितुरप्रमेयः ॥ २८ ॥
ततः शरानायत-तीक्ष्णशल्यान् सुपत्रिणः कांचनचित्रपुंखान् ।
मुमोच वीरः परवीरहन्ता सुसन्नतान् वज्रनिपातवेगान् ॥ २९ ॥

ததஃ ஸமேதாவதி தீக்ஷ்ணவேகௌ மஹாபலௌ
தௌ ரணநிர்விசங்கௌ ।
கபிச்ச ரக்ஷோதிபதேச்ச புத்ரஃ ஸுராஸுரேந்த்ராவிவ
பத்தவைரௌ ॥ 27 ॥
ஸ தஸ்ய வீரஸ்ய மஹாரதஸ்ய தனுஷ்மதஃ ஸம்யதி ஸம்மதஸ்ய ।
சரப்ரவேகம் வ்யஹனத் ப்ரவ்ருத்தச்-சசார மார்க்கே
பிதுரப்ரமேயஃ ॥ 28 ॥
ததஃ சரானாயத-தீக்ஷ்ண சல்யான்
ஸுபத்ரிணஃ காஞ்சன சித்ரபுங்கான் ।
முமோச வீரஃ பரவீரஹந்தா
ஸுஸந்நதான் வஜ்ரநிபாதவேகான் ॥ 29 ॥

---

27. பிறகு தேவராஜனும் அசுரராஜனும் போல் போரில் அச்சமென்பதில்லாத மகாபலசாலிகளான வானரரும் அரக்க ராஜகுமாரனும் கடுமையான வேகத்துடன் ஒருவரையொருவர் எதிர்த்தனர்.

28. அளவு கடந்த பலம் படைத்த ஹனுமார் மகாரதனும் வில்வீரனும் போரில் தேர்ந்தவனுமான இந்திரஜித்தின் பாண வேகத்தைப் பாழாக்கிக் கொண்டு மேன்மேலும் வளர்பவராய் வாயுமார்க்கத்தில் உலவி வந்தார்.

29. பகைவர்களை அழிக்கவல்ல இந்திரஜித்து நீண்டு கூரான சல்யங்கள் பொருந்தியவையும், இறகுகள் கட்டியவையும் பொன்னாலான சித்திரப்பிடிகள் உள்ளவையும், நன்றாய் வளைந்தவையும், இடியின் வீழ்ச்சிக்கொப்பான வேகமுடையவையுமான பாணங்களை விட்டான்.

---

27. ரக்ஷோऽதிபதேஸ்தனுஜஃ । 28. பிதுரப்ரமேயே । 29. ஸுஸந்ததான் ।

स तस्य तत्स्यन्दन-निःस्वनश्च मृदंगभेरी-पटहस्वनं च ।
विकृष्यमाणस्य च कार्मुकस्य निशम्य घोषं पुनरुत्पपात ।। ३० ।।
शराणामन्तरेष्वाशु व्यवर्तत महाकपिः ।
हरिस्तस्याभिलक्ष्यस्य मोघयँल्लक्ष्यसंग्रहम् ।। ३१ ।।
शराणामग्रतस्तस्य पुनः समभिवर्तत ।
प्रसार्य हस्तौ हनुमा-नुत्पपातानिलात्मजः ।। ३२ ।।
तावुभौ वेगसंपन्नौ रणकर्मविशारदौ ।
सर्वभूतमनोग्राहि चक्रतु-र्युद्ध-मद्भुतम् ।। ३३ ।।

ஸ தஸ்ய தத்ஸ்யந்தன-நி:ஸ்வனச்ச
ம்ருதங்கபேரீ-படஹஸ்வனஞ் ச ‖
விக்ருஷ்யமாணஸ்ய ச கார்முகஸ்ய
நிசம்ய கோஷம் புனருத்பபாத ‖ 30 ‖
சராணாமந்தரேஷ்வாசு வ்யவர்த்தத மஹாகபி: ‖
ஹரிஸ்தஸ்யாபி லக்ஷ்யஸ்ய மோகயன் லக்ஷ்யஸங்க்ரஹம் ‖ 31 ‖
சராணாமக்ரதஸ்தஸ்ய புன: ஸமபிவர்த்தத ‖
ப்ரஸார்ய ஹஸ்தௌ ஹனுமா-னுத்பபாதாநிலாத்மஜ: ‖ 32 ‖
தாவுபௌ வேகஸம்பன்னௌ ரணகர்மவிசாரதௌ ‖
ஸர்வபூதமனோக்ராஹி சக்ரதுர்-யுத்த-மத்புதம் ‖ 33 ‖

---

30. ஹனுமார் அவனுடைய தேரின் ஒலியையும், மிருதங்கம், பேரி, படகம் முதலிய வாத்திய கோஷங்களையும், வில்லின் நாணொலியையும் செவியுற்று இன்னும் மேலே கிளம்பினார்.

31. குறி தவறாமலடிக்கவல்ல இந்திரஜித்து குறிபார்த்தடித்த எல்லாவற்றையும் வீணாக்குபவராய் அவன் எய்த பாணங்களின் இடைவெளிகளில் வேகமாய் விரைந்து உலவினார்.

32. வாயுபுத்திரரான ஹனுமார் அவனுடைய பாணங்களுக்கு எதிரில் நிற்பார்; உடனே கைகளை விரித்துக்கொண்டு தப்பிப் பாய்ந்து விடுவார்.

33. இவ்வாறு வேகமுடையவர்களும் போர்த் தொழிலில் கைதேர்ந்தவர்களுமான அவ்விருவரும் எல்லாப் பிராணிகளின் மனதையும் கவரத்தக்க முறையில் அற்புதமாய்ப் போர் புரிந்தார்கள்.

हनूमतो वेद न राक्षसो अन्तरम् न मारुतिस्तस्य महात्मनो अन्तरम् ।
परस्परं निर्विषहौ बभूवुः समेत्य तौ देवसमानविक्रमौ ॥ ३४ ॥
ततस्तु लक्ष्ये स विहन्यमाने शरेष्वमोघेषु च संपतत्सु ।
जगाम चिन्तां महतीं महात्मा समाधिसंयोग-समाहितात्मा ॥ ३५ ॥
ततो मतिं राक्षसराजसूनुः चकार तस्मिन् हरिवीरमुख्ये ।
अवध्यता तस्य कपेः समीक्ष्य कथं निगच्छेदिति निग्रहार्थम् ॥ ३६ ॥

ஹனூமதோ வேத ந ராக்ஷஸோऽந்தரம்
ந மாருதிஸ்தஸ்ய மஹாத்மனோऽந்தரம் ।
பரஸ்பரம் நிர்விஷஹௌ பபூவு:
ஸமேத்ய தௌ தேவஸமானவிக்ரமௌ ॥ 34 ॥
ததஸ்து லக்ஷ்யே ஸ விஹன்யமானே
சரேஷ்வமோகேஷு ச ஸம்பதத்ஸு ।
ஜகாம சிந்தாம் மஹதீம் மஹாத்மா
ஸமாதிஸம்யோக-ஸமாஹிதாத்மா ॥ 35 ॥
ததோ மதிம் ராக்ஷஸராஜஸூனு:
சகார தஸ்மின் ஹரிவீரமுக்யே ।
அவத்யதா தஸ்ய கபே: ஸமீக்ஷ்ய
கதம் நிகச்சேதிதி நிக்ரஹார்த்தம் ॥ 36 ॥

---

34. அரக்கன் ஹனுமாருடைய மர்மத்தை அறியவில்லை. ஹனுமார் மகாபலம் படைத்த அரக்கனுடைய மர்மத்தை அறியவில்லை. தேவர்களுக்கு நிகரான வலிமை படைத்த இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்து ஒருவரையொருவர் சகிக்கமாட்டாதவர்களாயிருந்தார்கள்.

35. குறிதவறாமல் பாணங்களைத் தொடுக்கும் மகாவீரனான இந்திரஜித்து வீண்போகாத தனது சரங்கள் வீணாய் விழுவதைக் கண்டு மிகுந்த கவலைக்குள்ளானான்.

36. இராக்ஷஸராஜபுத்திரன் அவ்வானரரைக் கொல்லமுடியாதென்பதைக் கண்டு கொண்டு அந்த வீரவானரரை எவ்வாறு அடக்கிப் பிடிக்கலாம் என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

---

30. நிசம்ய கோரம் । 31. வ்யாவர்த்தத ।

ततः पैतामहं वीरः सोऽस्त्र-मस्त्रविशारदः ।
सन्दधे सुमहातेजास्तं हरिप्रवरं प्रति ॥ ३७ ॥
अवध्योऽयमिति ज्ञात्वा तमस्त्रेणास्त्रतत्त्ववित् ।
निजग्राह महाबाहु-र्मारुतात्मज-मिन्द्रजित् ॥ ३८ ॥
तेन बद्धस्ततोऽस्त्रेण राक्षसेन स वानरः ।
अभवन्निर्विचेष्टश्च पपात च महीतले ॥ ३९ ॥

தத: பைதாமஹம் வீர: ஸோऽஸ்த்ர-மஸ்த்ர விசாரத: ।
ஸந்ததே ஸுமஹாதேஜாஸ்தம் ஹரிப்ரவரம் ப்ரதி ॥ 37 ॥

அவத்யோऽயமிதி ஜ்ஞாத்வா தமஸ்த்ரேணாஸ்த்ரதத்வவித் ।
நிஜக்ராஹ மஹாபாஹுர்-மாருதாத்மஜ-மிந்த்ரஜித் ॥ 38 ॥

தேன பத்தஸ்-ததோऽஸ்த்ரேண ராக்ஷஸேன ஸ வானர: ।
அபவந்நிர்விசேஷ்டச்ச பபாத ச மஹீதலே ॥ 39 ॥

---

37. அஸ்திரவித்தைகளிற் சிறந்தவனும் பராக்கிரமம் மிக்கவனுமான அவ்வீரன் வானரசிரேஷ்டர் மீது பிரம்மாஸ்திரத்தை விடுத்தான்.

38. அஸ்திரங்களின் உண்மையை அறிந்தவனும் தோள்வலி மிகுந்தவனுமான இந்திரஜித்து 'இவர் மரணமற்றவர்' என்றுணர்ந்து வாயுகுமாரராகிய அவரை அஸ்திரத்தால் கட்டிவிட்டான்.

39. அவ்வானரர் அரக்கனுடைய அஸ்திரத்தால் கட்டுண்டு கைகால்களை அசைக்க முடியாதவராய்த் தரைமேல் விழுந்துவிட்டார்.

---

34. நிர்விஷஹௌ-து: ஸஹவேகௌ; அஸஹ்யௌ ।

35. ஸமாதிஸம்யோக-ஸமாஹிதாத்மா—ஸம்யகாதீயத இதி ஸமாதி: லக்ஷ்யம் தஸ்மின் ஸம்யோகே சரஸந்தானே ஸமாஹிதாத்மா அப்ரமத்தசித்த: ஸமஹாத்மா இந்த்ரஜித் மஹதீம்சிந்தாம் ஜகாம ।

ततोऽथ बुद्ध्वा स तदस्त्रबन्धं प्रभोः प्रभावा-द्विगतात्मवेगः ।
पितामहानुग्रह-मात्मनश्च विचिन्तयामास हरिप्रवीरः ।। ४० ।।
ततः स्वायंभुवै-र्मन्त्रै-र्ब्रह्मास्त्र-मभिमन्त्रितम् ।
हनुमांश्चिन्तयामास वरदानं पितामहात् ।। ४१ ।।
न मेऽस्त्रबद्धस्य च शक्तिरस्ति विमोक्षणे लोकगुरोः प्रभावात् ।
इत्येव मत्वा विहितोऽस्त्रबन्धो मयाऽऽत्मयोने-रनुवर्तितव्यः ।। ४२ ।।

ததோऽத புத்த்வா ஸ ததஸ்த்ரபந்தம்
ப்ரபோ: ப்ரபாவாத்—விகதாத்மவேக: ।
பிதாமஹானுக்ரஹ-மாத்மனச்ச
விசிந்தயாமாஸ ஹரிப்ரவீர: ।। 40 ।।
தத: ஸ்வாயம்புவைர்-மந்த்ரைர்-ப்ரஹ்மாஸ்த்ர-மபிமந்த்ரிதம் ।
ஹனுமாம்ச் சிந்தயாமாஸ வரதானம் பிதாமஹாத் ।। 41 ।।
ந மே ऽஸ்த்ரபத்தஸ்ய ச சக்திரஸ்தி
விமோக்ஷணே லோககுரோ: ப்ரபாவாத் ।
இத்யேவ மத்வா விஹிதோऽஸ்த்ர பந்தோ
மயா ऽऽத்மயோனே-ரனுவர்த்திதவ்ய: ।। 42 ।।

---

40. வானரோத்தமர் தான் அஸ்திரத்தால் கட்டப்பட்டிருப்பதையும் பிரம்ம தேவரின் மகிமையால் தன் வேகத்தை இழந்திருப்பதையும் தெரிந்து கொண்டு பிரம்மா தனக்குச் செய்துள்ள அனுக்ரகத்தையும் நினைத்துக் கொண்டார்.

41. ஹனுமார் பிரம்ம மந்திரத்தால் ஏவப்பட்டது அந்த பிரம்மாஸ்திரம் என்றாலும் பிரம்மாவிடமிருந்து தான் வரம் பெற்றிருப்பதையும் (அதாவது பிரம்மாஸ்திரமும் தன்னை ஒரு கணத்திற்கு மேல் கட்டுப்படுத்தாது என்பதையும்) சிந்தித்தார்.

42. 'உலக குருவாகிய பிரம்மாவின் மகிமையால் இவ்வஸ்திரத்தில் கட்டுண்ட எனக்கு இதினின்று விடுபடச் சக்தியில்லை என்று கருதி இது விடப்பட்டிருக்கிறது. நானும் அவ்வஸ்திரத்தின் கட்டுக்கு அடங்கி இருக்க வேண்டியவன்தான்.'

---

40. ப்ரபாவாத் விகதால்பவேக: ।
42. நமேऽஸ்ய பந்தஸ்ய । இத்யேவ மேவம் ।

स वीर्य-मस्त्रस्य कपिर्विचार्य पितामहानुग्रह-मात्मनश्च ।
विमोक्षशक्तिं परिचिन्तयित्वा पितामहाज्ञा-मनुवर्तते स्म ।। ४३ ।।
अस्त्रेणापि हि बद्धस्य भयं मम न जायते ।
पितामह-महेन्द्राभ्यां रक्षितस्यानिलस्य च ।। ४४ ।।
ग्रहणे चापि रक्षोभि-र्महान् मे गुणदर्शनः ।
राक्षसेन्द्रेण संवाद-स्तस्माद्गृह्णन्तु मां परे ।। ४५ ।।

ஸ வீர்ய-மஸ்த்ரஸ்ய கபிர்விசார்ய
பிதாம ஹானுக்ரஹ-மாத்மனச்ச ।
விமோக்ஷசக்திம் பரிசிந்தயித்வா
பிதாமஹாஜ்ஞா-மனுவர்த்ததே ஸ்ம ॥ 43 ॥

அஸ்த்ரேணாபி ஹி பத்தஸ்ய பயம் மம ந ஜாயதே ।
பிதாமஹ-மஹேந்த்ராப்யாம் ரக்ஷிதஸ்யாநிலஸ்ய ச ॥ 44 ॥

गत्वा चाहं महाध्वानं पश्यामि नगमण्डितम् ॥ ४५ ॥
दक्षिणं तीरमुदधे-र्लंका यत्र च सा पुरी ।
अस्तं दिनकरे याते रक्षसां निलयं पुरम् ॥
प्रविष्टोऽह-मविज्ञातो रक्षोभि-र्भीमविक्रमैः ॥ ४६ ॥
तत्र प्रविशतश्चापि कल्पान्तघनसन्निभा ।
अट्टहासं विमुंचन्ती नारी काऽप्युत्थिता पुरः ॥ ४७ ॥

தாம் ஹத்வா புனரேவாஹம் க்ருத்ய-மாத்யயிகம் ஸ்மரன் ।
கத்வா சாஹம் மஹாத்வானம் பச்யாமி நகமண்டிதம் ॥ 45 ॥
தக்ஷிணம் தீர-முததேர்-லங்கா யத்ர ச ஸா புரீ ।
அஸ்தம் தினகரே யாதே ரக்ஷஸாம் நிலயம் புரம் ॥
ப்ரவிஷ்டோ஽ஹ-மவிஜ்ஞாதோ ரக்ஷோபிர்-பீமவிக்ரமை: ॥ 46 ॥
தத்ர ப்ரவிசதச்சாபி கல்பாந்த கனஸந்நிபா ।
அட்டஹாஸம் விமுஞ்சந்தீ நாரீ காऽப்யுத்திதா புர: ॥ 47 ॥

45-46. அவளைக் கொன்று விட்டு அவளைக் கொன்றதையே நினைத்துக்கொண்டு நெடுவழிசென்ற நான் இலங்கை நகரிருக்கும் மலைகளடர்ந்த கடலின் தென்கரையைக் கண்டேன். சூரியன் அஸ்தமித்த பின் பொல்லாத அரக்கர்கள் அறியாதபடி அவர்களுடைய ஊருக்குள்ளே நான் நுழைந்தேன்.

47. அங்கு நான் புகுந்தபொழுது ஊழிக்காலத்து மேகம் போன்ற கரிய பெண்ணொருத்தி அட்டஹாஸம் செய்துகொண்டு என்முன் தோன்றினாள்.

---

45. கத்வா ச மஹதத்வானம்
46. லங்கா யத்ர கதா புரீ । நிலயம்புரீம் ।
47. கல்பாந்தகனஸப்ரபா ।

जिघांसन्तीं ततस्तान्तु ज्वलदग्निशिरोरुहाम् ।
सव्यमुष्टिप्रहारेण पराजित्य सु भैरवाम् ।
प्रदोषकाले प्रविशं भीतयाऽहं तयोदिता ॥ ४८ ॥

अहं लंकापुरी वीर निर्जिता विक्रमेण ते ।
यस्मात्तस्माद्विजेताऽसि सर्वरक्षांस्यशेषतः ॥ ४९ ॥

तत्राहं सर्वरात्रंतु विचिन्वन् जनकात्मजाम् ।
रावणान्तः पुरगतो न चापश्यं सुमध्यमाम् ॥ ५० ॥

ஜிகாம்ஸந்தீம் ததஸ்தாந்து ஜ்வலதக்னிசிரோருஹாம் ।
ஸவ்யமுஷ்டிப்ரஹாரேண பராஜித்ய ஸுபைரவாம் ॥
ப்ரதோஷகாலே ப்ரவிசம் பீதயாऽஹம் தயோதிதா ॥ 48 ॥

அஹம் லங்காபுரீ வீர நிர்ஜிதா விக்ரமேண தே ।
யஸ்மாத் தஸ்மாத் விஜேதாऽஸி ஸர்வரக்ஷாம்ஸ்யசேஷத: ॥ 49 ॥

தத்ராஹம் ஸர்வராத்ரந்து விசின்வன் ஜனகாத்மஜாம் ।
ராவணாந்த:புரகதோ ந சாபச்யம் ஸுமத்யமாம் ॥ 50 ॥

---

48. என்னைக் கொல்ல வந்தவளும் அக்னிபோல் சிவந்த தலைமயிருடையவளும் பயங்கர வடிவுடையவளுமான அவளை நான் இடக்கையால் குத்தி வெற்றிகொண்டு மாலைப்பொழுதில் நான் புகுந்தேன். பயம் மேலிட்ட அவள் என்னிடம் பின்வருமாறு கூறினாள்.

49. 'வீரா! நான் இலங்காதேவி. உனது வலிமையால் நான் வெல்லப்பட்ட காரணத்தால் நீ எல்லா அரக்கர்களையும் மிச்சமின்றி வெல்லப்போகிறாய்.'

50. நான் இரவு முழுதும் ஜனகர் மகளைத் தேடித்திரிந்து இராவணனுடைய அந்தப்புரத்தில் புகுந்தேன். அங்கேயும் அம் மெல்லிடையாளை நான் காணவில்லை.

ततः सीता-मपश्यंस्तु रावणस्य निवेशने ।
शोकसागर-मासाद्य न पारमुपलक्षये ।। ५१ ।।

शोचता च मया दृष्टं प्राकारेण समावृतम् ।
कांचनेन विचित्रेण ग्रहोपवन-मुत्तमम् ।। ५२ ।।

स प्राकार-मवप्लुत्य पश्यामि बहुपादपम् ।। ५३ ।।

अशोकवनिका-मध्ये शिंशुपा-पादपो महान् ।
तमारुह्य च पश्यामि कांचनं कदली वनम् ।। ५४ ।।

தத: ஸீதா-மபச்யம்ஸ்து ராவணஸ்ய நிவேசனே ।
சோகஸாகர-மாஸாத்ய ந பாரமுபலக்ஷயே ।। 51 ।।
சோசதா ச மயா த்ருஷ்டம் ப்ராகாரேண ஸமாவ்ருதம் ।
காஞ்சனேன விசித்ரேண மஹோபவன-முத்தமம் ।। 52 ।।
ஸ ப்ராகார-மவப்லுத்ய பச்யாமி பஹுபாதபம் ।। 53 ।।
அசோகவனிகா-மத்யே சிம்சுபா-பாதபோ மஹான் ।
தமாருஹ்ய ச பச்யாமி காஞ்சனம் கதலீவனம் ।। 54 ।।

---

51. பிறகு இராவணனுடைய மனையிலும் சீதையைக் காணாது துக்கக்கடலில் மூழ்கி அதற்குக் கரை காணாதிருந்தேன்.

52. அப்படி துக்கித்துக் கொண்டிருந்த என்னால் விசித்திரமானதும் தங்கமதிலால் சூழப்பெற்றதுமான ஒரு நந்தவனம் காணப்பட்டது.

53. மதிலைத்தாண்டி பல மரங்கள் நிறைந்த ஒரு தோப்பைக் கண்டேன்.

54. அசோகவனத்தின் மத்தியில் ஒரு பெரிய சிம்சுபாமரம். அதின் மேலேறி பொன்னிறமான வாழைத் தோட்டம் ஒன்றைக்கண்டேன்.

---

52. ப்ராகாரேணாபிஸம்வ்ருதம் ।

अदूरे शिंशुपावृक्षात् पश्यामि वरवर्णिनीम् ।
श्यामां कमलपत्राक्षी-मुपवास-कृशाननाम् ॥ ५५ ॥
तदेकवास-स्संवीतां रजोध्वस्त-शिरोरुहाम् ।
शोकसन्ताप-दीनांगीं सीतां भर्तृहिते स्थिताम् ॥ ५६ ॥
राक्षसीभि-र्विरूपाभिः क्रूराभि-रभिसंवृताम् ।
मांस-शोणित-भक्षाभि-र्व्याघ्रीभि-र्हरिणीमिव ॥ ५७ ॥

அதூரே சிம்சுபாவ்ருக்ஷாத் பச்யாமி வரவர்ணினீம் ।
ச்யாமாம் கமலபத்ராக்ஷீ-முபவாஸ—க்ருசானனாம் ॥ 55 ॥

ததேகவாஸஸ்—ஸம்வீதாம் ரஜோத்வஸ்த-சிரோருஹாம் ।
சோகஸந்தாப-தீனாங்கீம் ஸீதாம் பர்த்ருஹிதே ஸ்திதாம். ॥ 56 ॥

ராக்ஷஸீபிர்-விரூபாபி: க்ரூராபி-ரபிஸம்வ்ருதாம் ।
மாம்ஸ-சோணித-பக்ஷாபிர்-வ்யாக்ரீபிர்-ஹரிணீமிவ ॥ 57 ॥

---

55. சிம்சுபாமரத்திலிருந்து சிறிது தூரத்தில் அழகான நிறமுள்ளவளும் யௌவன வயதினளும் தாமரையிதழ்போன்ற கண்களுடையவளும் உபவாசத்தால் வாடின முகமுள்ளவளும்;

56. (முந்திகண்ட) அந்த ஒருவஸ்திரத்தையே அணிந்திருப்பவளும், புழுதிபடிந்த தலைமயிருடையவளும், துன்பத்தால் மெலிந்த உடலுடையவளும் நாயகனுடைய நன்மையிலேயே சித்தத்தை நிலையாக வைத்தவளுமாகிய ஸீதையை நான் கண்டேன்.

57. விகார ரூபமுள்ள கொடிய அரக்கிகள், ஊனும் உதிரமும் உண்பவர்கள் பெண்மானைப் புலிகள் சூழ்ந்தாற்போல் அவளைச் சூழ்ந்திருந்தார்கள்.

---

55. அதூராச்சிம்சுபா-வ்ருக்ஷாத் ।

55. ச்யாமாம்-யௌவன மத்த்யஸ்த்தாம் । ஏகவாஸ:-யேந வாஸஸா ஹ்ருதா தேனைகவாஸஸா ஸம்வீதாம் । 57. பக்ஷ்யாபி: ।

सा मया राक्षसीमध्ये तर्ज्यमाना मुहु-र्मुहुः ।
एकवेणीधरा दीना भर्तृचिन्ता-परायणा ॥ ५८ ॥
भूमिशय्या विवर्णांगी पद्मिनीव हिमागमे ।
रावणाद्विनिवृत्तार्था मर्तव्यकृतनिश्चया ॥
कथंचिन्मृगशाबाक्षी तूर्णमासादिता मया ॥ ५९ ॥
तां दृष्ट्वा तादृशीं नारीं रामपत्नी-मनिन्दिताम् ।
तत्रैव शिंशुपावृक्षे पश्यन्नह-मवस्थितः ॥ ६० ॥

ஸா மயா ராக்ஷஸீமத்யே தர்ஜ்யமானா முஹுர்-முஹு: ।
ஏகவேணீதரா தீனா பர்த்ருசிந்தா-பராயணா ॥ 58 ॥
பூமிசய்யா விவர்ணாங்கீ பத்மினீவ ஹிமாகமே ।
ராவணாத்விநிவ்ருத்தார்த்தா மர்த்தவ்யக்ருதநிச்சயா ॥
கதஞ்சின்ம்ருகசாபாக்ஷீ தூர்ணமாஸாதிதா மயா ॥ 59 ॥
தாம் த்ருஷ்ட்வா தாத்ருசீம் நாரீம் ராமபத்னீ-மநிந்திதாம் ।
தத்ரைவ சிம்சுபாவ்ருக்ஷே பச்யன்னஹ-மவஸ்தித: ॥ 60 ॥

---

58. அவள் அரக்கிகள் மத்தியில் அவர்களால் அடிக்கடி மிரட்டப்பட்டவளாய், வாருதலில்லாத கூந்தலை ஒரே ஜடையாகத் தரித்துக் கொண்டு, எளிமைப்பட்டு, எப்பொழுதும் வேறு சிந்தையின்றி நாயகனையே நினைத்திருப்பவளாய்;

59. தரையிற்கிடந்து, பனிகாலத்துத் தாமரை மலர்போல் நிறங்கெட்டு,இராவணனிடமிருந்து தப்பும் வழி காணாதவளாய், உயிரைமாய்க்கத் துணிந்தவளாய் இருந்த அந்த மான்விழியாள் எப்படியோ சீக்கிரமே என்னால் அடையப்பட்டாள்.

60. இராமருடைய பத்தினியாகிய மாசற்ற அப்பெண்மணி அங்கு அந்நிலையிலிருப்பதைக் கண்ட நான் அவளைப் பார்த்துக் கொண்டே சிம்சுபாமரத்தில் இருந்தேன்.

---

59. மர்த்தவ்யே ।

ततो हलहलाशब्दं कांचीनूपुर-मिश्रितम् ।
शृणोम्यधिक-गंभीरं रावणस्य निवेशने ।। ६१ ।।
ततोऽहं परमोद्विग्नः स्वरूपं प्रत्यसंहरम् ।
अहं तु शिंशुपावृक्षे पक्षीव गहने स्थितः ।। ६२ ।।
ततो रावणदाराश्च रावणश्च महाबलः ।
तं देश-मभिसंप्राप्ता यत्र सीताऽभवत् स्थिता ।। ६३ ।।
तं दृष्ट्वाऽथ वरारोहा सीता रक्षोगणेश्वरम् ।
संकुच्योरू स्तनौ पीनौ बाहुभ्यां परिरभ्य च ।। ६४ ।।

ததோ ஹலஹலாசப்தம் காஞ்சீநூபுர-மிச்ரிதம் ।
ச்ருணோம்யதிக-கம்பீரம் ராவணஸ்ய நிவேசனே 61 ॥
ததோऽஹம் பரமோத்விக்ன: ஸ்வரூபம் ப்ரத்யஸம்ஹரம் ।
அஹம் து சிம்சுபாவ்ருக்ஷே பக்ஷீவ கஹனே ஸ்தித: ॥ 62 ॥
ததோ ராவணதாராச்ச ராவணச்ச மஹாபல: ।
தம் தேச-மபிஸம்ப்ராப்தா யத்ர ஸீதாऽபவத் ஸ்திதா ॥ 63 ॥
தம் த்ருஷ்ட்வாऽத வராரோஹா ஸீதா ரக்ஷோகணேச்வரம் ।
ஸங்குச்யோரூ ஸ்தனௌ பீனௌ பாஹுப்யாம் பரிரப்ய ச ॥ 64 ॥

61. அப்பொழுது இராவணனுடைய வீட்டில் மேகலை சிலம்பு முதலியவற்றின் கலகலப்பான கம்பீர சப்தத்தைக் கேட்டேன்.

62. அதனால் நான் மிகவும் கவலைகொண்டு எனது உருவத்தைச் சுருக்கிக் கொண்டு சிம்சுபாமரத்தில் தழைகளடர்ந்த மறைவான இடத்தில் ஒரு பறவையைப் போல் ஒளிந்திருந்தேன்.

63. பிறகு இராவணபத்தினிகளும் மகாபலவானான இராவணனும் சீதை இருந்த அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

64. சிறந்தவளான சீதை அந்த அரக்கர் வேந்தனைக் கண்டு தன் தொடைகளை ஒடுக்கிப் பருத்த ஸ்தனங்களைக் கைகளால் மூடிக் கொண்டு இருந்தாள்.

62. ப்ரதிஸம்ஹரன் । அஹஞ்ச । 63. தம் தேசமனுஸம்ப்ராப்தோ ।
64. தத்த்ருஷ்ட்வா । ஸீதா மஹாபலம் ।
62. ப்ரத்யஸம்ஹரம்—ஸூக்ஷ்மமகரவம் ।

वित्रस्तां परमोद्विग्नां वीक्षमाणां ततस्ततः ।
त्राणं किंचिदपश्यन्तीं वेपमानां तपस्विनीम् ॥ ६५ ॥
तामुवाच दशग्रीवः सीतां परमदुः खिताम् ।
अवाक्छिराः प्रपतितो बहुमन्यस्व मामिति ॥ ६६ ॥
यदि चेत्त्वं तु दर्पान्मां नाभिनन्दसि गर्विते ।
द्वौ मासावन्तरं सीते पास्यामि रुधिरं तव ॥ ६७ ॥
एतच्छ्रुत्वा वचस्तस्य रावणस्य दुरात्मनः ।
उवाच परमक्रुद्धा सीता वचन-मुत्तमम् ॥ ६८ ॥

வித்ரஸ்தாம் பரமோத்விக்னாம் வீக்ஷமாணாம் ததஸ்தத: ।
த்ராணம் கிஞ்சிதபச்யந்தீம் வேபமானாம் தபஸ்வினீம் ॥ 65 ॥
தாமுவாச தசக்ரீவ: ஸீதாம் பரமது:க்கிதாம் ।
அவாக்சிரா: ப்ரபதிதோ பஹு மன்யஸ்வ மாமிதி ॥ 66 ॥
யதி சேத்த்வம் து தர்ப்பான் மாம் நாபிநந்தஸி கர்விதே ।
த்வௌ மாஸாவந்தரம் ஸீதே பாஸ்யாமி ருதிரம் தவ ॥ 67 ॥
ஏதச்ச்ருத்வா வசஸ்தஸ்ய ராவணஸ்ய துராத்மன: ।
உவாச பரமக்ருத்தா ஸீதா வசன-முத்தமம் ॥ 68 ॥

65-67. பயந்து, மிகுந்த கவலைகொண்டு, அங்குமிங்கும் பார்த்து, துணை ஒன்றுங்காணாது நடுங்கி மிகவும் துக்கப்பட்ட அந்தத் தபஸ்வினியாகிய சீதையை நோக்கித் தலை கீழாய் விழுந்து விட்ட இராவணன் பின் வருமாறு கூறினான்: 'சீதையே! என்னை நீ நன்கு மதிக்கவேண்டும். கர்வமுடையவளே! கொழுப்பால் நீ என்னை திருப்தி செய்யா விட்டால் இரண்டு மாதக் கெடுவிற்குப் பின் உன்னுடைய இரத்தத்தைக் குடித்துவிடுவேன்.'

68. துராத்மாவான அந்த இராவணனுடைய இச்சொல்லைக் கேட்டு சீதை மிகுந்த கோபத்துடன் உத்தமமான முறையில் பதிலளித்தாள்.

---

65. வீக்ஷமாணாமிதஸ்தத: ।   67. த்விமாஸானந்தரம் ।

राक्षसाधम रामस्य भार्या-ममिततेजसः ।
इक्ष्वाकुकुलनाथस्य स्नुषां दशरथस्य च ॥
अवाच्यं वदतो जिह्वा कथं न पतिता तव ॥ ६९ ॥
किंचिद्वीर्यं तवानार्य यो मां भर्तुरसन्निधौ ।
अपहृत्यागतः पाप तेनादृष्टो महात्मना ॥ ७० ॥
न त्वं रामस्य सदृशो दास्येप्यस्य न युज्यसे ।
यज्ञीयः सत्यवादी च रणश्लाघी च राघवः ॥ ७१ ॥

ராக்ஷஸாதம ராமஸ்ய பார்யா-மமிததேஜஸ: ।
இக்ஷ்வாகு-குலநாதஸ்ய ஸ்நுஷாம் தசரதஸ்ய ச ॥
அவாச்யம் வததோ ஜிஹ்வா கதம் ந பதிதா தவ ॥ 69 ॥

கிஞ்சித்வீர்யம் தவானார்ய யோ மாம் பர்த்துரஸந்நிதௌ ।
அபஹ்ருத்யாகத: பாப தேநாத்ருஷ்டோ மஹாத்மனா ॥ 70 ॥

ந த்வம் ராமஸ்ய ஸத்ருசோ தாஸ்யேப்யஸ்ய ந யுஜ்யஸே ।
யஜ்ஞீய: ஸத்யவாதீச ரணச்லாகீ ச ராகவ: ॥ 71 ॥

---

69. 'அரக்கர்களிற் கடையோனே! இக்ஷ்வாகு குல நாதரான தசரதரின் மருமகளும் அளவற்ற ஆற்றல் படைத்த ஸ்ரீராமருடைய தர்ம பத்தினியுமான என்னைப் பார்த்துத் தகாத வார்த்தை பேசிய உன்னுடைய நாக்கு ஏன் அறுந்து விழவில்லை.'?

70. சீர்மைகெட்டவனே! பாவி! என்னுடைய நாதனில்லாத சமயத்தில், அம்மகாத்மாவினால் காணப்படாமல் என்னை அபகரித்து வந்தவனாகிய உனது வீரியம் அற்பமானது.

71. நீ இராமருக்கு இணையாகமாட்டாய். அவருக்கு ஊழியம் செய்யக்கூட நீ தகுதியற்றவன். இராமர் வேள்வியாளர், வாய்மையுடையவர், போரில் புகழ் பெற்றவர்.

---

69. இக்ஷ்வாகுவம்சநாதஸய ।
71. அஜேய: ஸத்யவாக்சூரோ ரணச்லாகீ ।

जानक्या परुष वाक्य-मेवमुक्तो दशाननः ।
जज्वाल सहसा कोपाच्चितास्थ इव पावकः ॥ ७२ ॥
विवर्त्य नयने क्रूरे मुष्टिमुद्यम्य दक्षिणम् ।
मैथिलीं हन्तु-मारब्धः स्त्रीभि-र्हाहाकृतं तदा ॥ ७३ ॥
स्त्रीणां मध्यात्समुत्पत्य तस्य भार्या दुरात्मनः ।
वरा मण्डोदरी नाम तया स प्रतिषेधितः ॥ ७४ ॥

ஜானக்யா பருஷம் வாக்ய-மேவமுக்தோ தசானன: ।
ஜஜ்வால ஸஹஸா கோபாச்சிதாஸ்த இவ பாவக: ॥ 72 ॥

விவர்த்ய நயனே க்ரூரே முஷ்டிமுத்யம்ய தக்ஷிணம் ।
மைதிலீம் ஹந்து-மாரப்த: ஸ்த்ரீபிர்-ஹாஹாக்ருதம் ததா ॥ 73 ॥

ஸ்த்ரீணாம் மத்யாத்ஸமுத்பத்ய தஸ்ய பார்யா துராத்மன: ।
வரா மண்டோதரீ நாம தயா ஸ ப்ரதிஷேதித: ॥ 74 ॥

---

72. இங்ஙனம் ஜானகியால் சொல்லப்பட்ட கடுமையான வார்த்தையைக் கேட்ட இராவணன் சிதையில் பற்றின நெருப்புப் போல் கோபத்தால் எரிந்தான்.

73. அவன் கொடிய கண்களிரண்டையும் உருட்டி விழித்து வலக்கை முஷ்டியை உயர்த்தி ஸீதையைக் கொல்லப் போனான். அப்பொழுது ஸ்திரீகள் 'ஆ,ஆ' என்று கத்தினார்கள்.

74. அந்த துராத்மாவின் பத்னியான மண்டோதரீ என்ற உத்தமி ஸ்திரிகளின் நடுவிலிருந்து முன் வந்து அவனை விலக்கினாள்.

---

74. மண்டோதரீ-மண்டன பூத-உதரீ (அழகிய வயிறுடையவள்); மந்தோதரீவா—மந்தத்வஞ்சால்பத்வம், க்ருசமஸ்யா உதரம் இத்யர்த்த: । முன்பு தான்யமாலியால் ராவணன் தடுக்கப் பட்டான் எனக் கூறப்பட்டதே எனின், இருவரும் தடுத்திருக்கலாம்.

उक्तश्च मधुरां वाणीं तया स मदनार्दितः ।
सीतया तव किं कार्यं महेन्द्रसम-विक्रम ॥ ७५ ॥

देवगन्धर्व-कन्याभि-र्यक्षकन्याभिरेव च ।
सार्धं प्रभो रमस्वेह सीतया किं करिष्यसि ॥ ७६ ॥

ततस्ताभि-स्समेताभि-र्नारीभिः स महाबलः ।
प्रसाद्य सहसा नीतो भवनं स्वं निशाचरः ॥ ७७ ॥

உக்தச்ச மதுராம் வாணீம் தயா ஸ மதனார்த்தித: ।
ஸீதயா தவ கிம் கார்யம் மஹேந்த்ரஸம-விக்ரம ॥ 75 ॥
தேவகந்தர்வ-கன்யாபிர்-யக்ஷகன்யாபிரேவ ச ।
ஸார்த்தம் ப்ரபோ ரமஸ்வேஹ ஸீதயா கிம் கரிஷ்யஸி ॥ 76 ॥
ததஸ்தாபிஸ்—ஸமேதாபிர்—நாரீபி: ஸ மஹர்பல: ।
ப்ரஸாத்ய ஸஹஸா நீதோ பவனம் ஸ்வம் நிசாசர: ॥ 77 ॥

---

75. காமத்தால் பீடிக்கப்பட்ட அவனைப் பார்த்து அவள் 'இந்திரனுக்கொப்பான ப்ராக்கிரமம் படைத்தவரே! உமக்கு சீதையால் என்ன காரியம்?'

76. 'பிரபுவே! இங்குள்ள தேவகந்தர்வப் பெண்களுடனும் யக்ஷப் பெண்களுடனும் சுகத்தை அனுபவியுங்கள். சீதையைக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்?'

77. அந்த மகா பலசாலியான அரக்கன் அப்பொழுது உடனிருந்த பெண்களால் சமாதானம் செய்யப்பட்டு விரைவில் தனது வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

---

75. இதற்குப்பின் 'மயா ஸஹரமஸ்வாத்ய மத்விசிஷ்டா ந ஜானகீ' என்ற அரைசுலோகம் சில இடங்களில் காணப்படுகிறது.
76. ரமஸ்வேதி । 77. உத்தாப்ய ஸஹஸா நீதோ ।

याते तस्मिन् दशग्रीवे राक्षस्यो विकृताननाः ।
सीतां निर्भर्त्सयामासु-र्वाक्यैः क्रूरैः सुदारुणैः ॥ ७८ ॥
तृणवद्भाषितं तासां गणयामास जानकी ॥
गर्जितं च तदा तासां सीतां प्राप्य निरर्थकम् ॥ ७९ ॥
वृथागर्जित-निश्चेष्टा राक्षस्यः पिशिताशनाः ।
रावणस्य शशंसुस्ताः सीताव्यवसितं महत् ॥ ८० ॥
ततस्ताः सहितास्सर्वा विहताशा निरुद्यमाः ।
परिक्षिप्य समन्तात् तां निद्रावश-मुपागताः ॥ ८१ ॥

யாதே தஸ்மின் தசக்ரீவே ராக்ஷஸ்யோ விக்ருதானனா: ।
ஸீதாம் நிர்ப்பர்த்ஸயாமாஸுர்—வாக்யை: க்ரூரை: ஸுதாருணை: ॥ 78 ॥
த்ருணவத்பாஷிதம் தாஸாம் கணயாமாஸ ஜானகீ ।
கர்ஜிதஞ் ச ததா தாஸாம் ஸீதாம் ப்ராப்ய நிரர்த்தகம் ॥ 79 ॥
வ்ருதாகர்ஜித-நிச்சேஷ்டா ராக்ஷஸ்ய: பிசிதாசனா: ।
ராவணஸ்ய சசம்ஸுஸ்தா: ஸீதாவ்யவஸிதம் மஹத் ॥ 80 ॥
ததஸ்தா: ஸஹிதாஸ்ஸர்வா விஹதாசா நிருத்யமா: ।
பரிக்ஷிப்ய ஸமந்தாத் தாம் நித்ராவச-முபாகதா: ॥ 81 ॥

---

78. இராவணன் போனபிறகு விகாரமான முகமுடைய அரக்கிகள் இரக்கமற்ற கொடுஞ் சொற்களால் சீதையை மிரட்டினார்கள்.

79. சீதை அவர்கள் வார்த்தையைத் துரும்பென மதித்தாள். அவர்களுடைய இரைச்சல் சீதையிடம் பயனற்றதாயிற்று.

80. ஊன் தின்னும் அரக்கிகள் வீணாக இரைந்து ஓய்ந்து சீதையின் திடமான துணிவை இராவணனுக்குப் போய்த் தெரிவித்தார்கள்.

81. பின்பு அவர்கள் எல்லோரும் (சீதையை வசப்படுத்தலாம் என்ற) ஆசையொழிந்தவர்களாய்ச் செயலிழந்து அவளை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு படுத்துறங்கினார்கள்.

---

81. விக்ஷிதாசா । பரிக்ஷிப்ய ஸமஸ்தாஸ்தா ।

तासु चैव प्रसुप्तासु सीता भर्तृहिते रता ।
विलप्य करुणं दीना प्रशुशोच सुदुःखिता ॥ ८२ ॥
तासां मध्यात्समुत्थाय त्रिजटा वाक्यमब्रवीत् ॥ ८३ ॥
आत्मानं खादत क्षिप्रं न सीता विनशिष्यति ।
जनकस्यात्मजा साध्वी स्नुषा दशरथस्य च ॥ ८४ ॥
स्वप्नो ह्यद्य मया दृष्टो दारुणो रोमहर्षणः ।
रक्षसां च विनाशाय भर्तुरस्या जयाय च ॥ ८५ ॥

தாஸு சைவ ப்ரஸுப்தாஸு ஸீதா பர்த்ருஹிதே ரதா ।
விலப்யம கருணம் தீனா ப்ரசுசோச ஸுது: க்கிதா ॥ 82 ॥
தாஸாம் மத்யாத் ஸமுத்தாய த்ரிஜடா வாக்யமப்ரவீத் ॥ 83 ॥
ஆத்மானம் காதத க்ஷிப்ரம் ந ஸீதா விநசிஷ்யதி ।
ஜனகஸ்யாத்மஜா ஸாத்வீ ஸ்நுஷா தசரதஸ்ய ச ॥ 84 ॥
ஸ்வப்னோ ஹ்யத்ய மயா த்ருஷ்டோ தாருணோ ரோமஹர்ஷண: ।
ரக்ஷஸாஞ் ச விநாசாய பர்த்துரஸ்யா ஜயாய ச ॥ 85 ॥

---

82. அவர்கள் உறங்கிய பின்னர் நாயகருடைய நன்மையிலேயே நாட்டமுடைய சீதை மெலிந்து துன்பம் மேலிட்டவளாய்ப் பரிதாபமாய்ப் புலம்பி வாடினாள்.

83. அவர்களின் நடுவிலிருந்த த்ரிஜடை என்பவள் எழுந்து (மற்ற சுரக்கிகளிடம்) பின்வருமாறு பேசினாள்.

84. 'நீங்கள் உங்களையே தான் தின்று கொள்ளவேண்டும். ஜனகர் மகளும் தசரதர் மருமகளும் கற்பரசியுமான சீதை அழிவடையப் போவதில்லை.

85. 'இப்பொழுது என்னால் மயிர் சிலிர்க்கும்படியான ஒரு கொடிய கனவு காணப்பட்டது. அது அரக்கர்களின் அழிவையும் இவளுடைய நாயகரின் வெற்றியையும் குறிப்பதாகும்.

---

83. ஸமுத்தாப்ய। 84. ந ஸீதா-மஸிதேக்ஷணாம்। ஜனகஸ்யாத்மஜாம் ஸாத்வீம் ஸ்நுஷாம்।

अलमस्मात् परित्रातुं राघवाद्राक्षसीगणम् ।
अभियाचाम वैदेही-मेतद्धि मम रोचते ।। ८६ ।।
यस्या ह्येवं विधःस्वप्नो दुःखितायाः प्रदृश्यते ।
सा दुःखै-र्बहुधा मुक्ता सुखमाप्नोत्यनुत्तमम् ।। ८७ ।।
प्रणिपात-प्रसन्ना हि मैथिली जनकात्मजा ।। ८८ ।।
ततः सा ह्रीमती बाला भर्तु-र्विजयहर्षिता ।
अवोचद्यदि तत्तथ्यं भवेयं शरणं हि वः ।। ८९ ।।

அலமஸ்மாத் பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம் ।
அபியாசாம வைதேஹீ-மேதத்தி மம ரோசதே ।। 86 ।।
யஸ்யா ஹ்யேவம் வித: ஸ்வப்னோ து:க்கிதாயா: ப்ரத்ருச்யதே ।
ஸா து:க்கைர்-பஹுதா முக்தா ஸுகமாப்னோத்யனுத்தமம் ।। 87 ।।
ப்ரணிபாத-ப்ரஸன்னா ஹி மைதிலீ ஜனகாத்மஜா ।। 88 ।।
தத: ஸா ஹ்ரீமதீ பாலா பர்த்துர்-விஜயஹர்ஷிதா ।
அவோசத் யதி தத்தத்யம் பவேயம் சரணம் ஹி வ: ।। 89 ।।

86. 'ஸ்ரீராமரிடமிருந்து அரக்கிகள் கூட்டத்தைக் காப்பாற்றுவதற்கு வைதேகியை வேண்டிக் கொள்வோம். அது போதும். அதுதான் நல்லதென எனக்குத் தோன்றுகிறது.

87. 'துக்கமடைந்துள்ள எவள் பொருட்டாக இக்கனவு காணப்பட்டதோ அவள் எல்லாத் துன்பங்களும் நீங்கி இணையற்ற இன்பத்தைப் பலவாறாய் அடையப் போகிறாள்.

88. 'ஜனகர் மகளான மைதிலி பணிந்த மாத்திரத்தில் அருள் புரிபவள் என்பதில் சந்தேகமில்லை'.

89. நாயகரின் வெற்றியைப் பற்றிக் கேட்டுக் களிப்படைந்து நாணத்துடன் 'அது மெய்யானால் நான் உங்களுக்கு அடைக்கல மளிப்பவளாவேன்' என்று சொன்னாள்.

---

87. யதிஹ்யேவம் வித: । 88. இதற்குப்பின் 'அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோபயாத்' என்ற அரை சுலோகம் சில பாடங்க்ளில் உளது.

86. அலம்:— 'அலம் பூஷண-பர்யாப்தி-சக்தி-வாரண-வாசகம்' இத்யமர: ।

तां चाहं तादृशीं दृष्ट्वा सीताया दारुणां दशाम् ।
चिन्तयामास विक्रान्तो न च मे निर्वृतं मनः ॥ ९० ॥
संभाषणार्थं च मया जानक्याश्चिन्तितो विधिः ।
इक्ष्वाकूणां हि वंशस्तु ततो मम पुरस्कृतः ॥ ९१ ॥
श्रुत्वा तु गदितां वाचं राजर्षिगणपूजिताम् ।
प्रत्यभाषत मां देवी बाष्पैः पिहितलोचना ॥ ९२ ॥
कस्त्वं केन कथंचेह प्राप्तो वानरपुंगव ।
का च रामेण ते प्रीति-स्तन्मे शंसितु-मर्हसि ॥ ९३ ॥

தாஞ் சாஹம் தாத்ருசீம் த்ருஷ்ட்வா ஸீதாயா தாருணம் தசாம் ।
சிந்தயாமாஸ விக்ராந்தோ ந ச மே நிர்வ்ருதம் மன: ॥ 90 ॥
ஸம்பாஷணார்த்தஞ் ச மயா ஜானக்யாச்சிந்திதோ விதி: ।
இக்ஷ்வாகூணாம் ஹி வம்சஸ்து ததோ மம புரஸ்க்ருத: ॥ 91 ॥
ச்ருத்வா து கதிதாம் வாசம் ராஜர்ஷிகணபூஜிதாம் ।
ப்ரத்யபாஷத மாம் தேவீ பாஷ்பை: பிஹிதலோசனா ॥ 92 ॥
கஸ்த்வம் கேன கதஞ்சேஹ ப்ராப்தோ வானரபுங்கவ ।
கா ச ராமேண தே ப்ரீதிஸ்-தன்மே சம்ஸிது-மர்ஹஸி ॥ 93 ॥

90. சீதையினுடைய அந்தக் கொடிய நிலைமையைக் கண்டு நான் யோசிக்கலானேன். நான் மனோதிடமுள்ளவனாயினும் என் மனம் பொறுக்கவில்லை.

91. ஜானகிக்கும் எனக்கும் சம்பாஷணை நடைபெறுவதற்கு ஒரு வழியை யோசித்து நான் இக்ஷ்வாகு வம்சத்தை முன் வைத்துப் பேசலானேன்.

92. இராஜரிஷிகளைப் புகழ்ந்து நான் கூறிய வார்த்தையைக் கேட்டு தேவியானவள் கண்ணீரால் மறைக்கப்பட்ட பார்வையுடன் என்னை நோக்கி இவ்வாறு கூறினாள்.

93. 'வானரசிரேஷ்டரே! நீர் யார்? எதற்காக எப்படி இங்கு வந்தீர்? உமக்கும் ஸ்ரீராமருக்கும் சிநேகம் எப்படி ஏற்பட்டது? அதை எனக்கு நீர் விளங்க வைப்பது தகும்.'

90. விச்ராந்தோ । 91. ஸம்பாஷணார்த்தே । இக்ஷ்வாகு குலவம்சஸ்து ஸ்துதோ । 92. ராஜர்ஷிகண பூஜிதாம் ।

तस्यास्तद्वचनं श्रुत्वा ह्यहमप्यब्रवं वचः ॥ ९४ ॥
देवि रामस्य भर्तुस्ते सहायो भीमविक्रमः ।
सुग्रीवो नाम विक्रान्तो वानरेन्द्रो महाबलः ॥ ९५ ॥
तस्य मां विद्धि भृत्यं त्वं हनुमन्त-मिहागतम् ।
भर्त्राऽहं प्रेषितस्तुभ्यं रामेणाक्लिष्टकर्मणा ॥ ९६ ॥
इदं च पुरुषव्याघ्रः श्रीमान् दाशरथिः स्वयम् ।
अंगुलीय-मभिज्ञान-मदात्तुभ्यं यशस्विनि ॥ ९७ ॥

தஸ்யாஸ்-தத்வசனம் ச்ருத்வா ஹ்யஹமப்யப்ரவம் வச: ll 94 ll
தேவி ராமஸ்ய பர்த்துஸ்தே ஸஹாயோ பீமவிக்ரம: l
ஸுக்ரீவோ நாம விக்ராந்தோ வானரேந்த்ரோ மஹாபல: ll 95 ll
தஸ்ய மாம் வித்தி ப்ருத்யம் த்வம் ஹனுமந்த-மிஹாகதம் l
பர்த்ராऽஹம் ப்ரேஷிதஸ்துப்யம் ராமேணாக்லிஷ்டகர்மணா ll 96 ll
இதஞ்ச புருஷவ்யாக்ர: ஸ்ரீமான்தாசரதி: ஸ்வயம் l
அங்குலீய-மபிஜ்ஞான-மதாத்துப்யம் யசஸ்வினி ll 97 ll

---

94. அவளுடைய அவ்வார்த்தையைக் கேட்டு நான் பின்வருமாறு கூறினேன்.

95. 'தேவி! உங்கள் பர்த்தாவான ஸ்ரீராமருக்குத் தோழர் சுக்ரீவர் என்ற வானரவேந்தர். அவர் சிறந்த பலமும் பராக்கிரமும் படைத்த போர்வீரர்.

96. இங்கு வந்துள்ள என்னை அவருடைய வேலைக்காரனாகிய ஹனுமான் என்று நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். தளராத செய்கையுடைய உங்கள் பர்த்தா ஸ்ரீராமரால் நான் உங்களிடம் அனுப்பப் பட்டேன்.

97. 'புகழுடையீர்! புருஷோத்தமரும் ஸ்ரீமானுமான தார்சரதி தாமே உங்களுக்கு அடையாளமாக இந்தக் கணையாழியைக் கொடுத்தனுப்பினார்.

---

96. பர்த்ரா ஸம்ப்ரஹிதஸ்துப்யம் l

तदिच्छामि त्वयाऽऽज्ञप्तं देवि किं करवाण्यहम् ।
रामलक्ष्मणयोः पार्श्वं नयामि त्वां किमुत्तरम् ॥ ९८ ॥
एतच्छ्रुत्वा विदित्वा च सीता जनकनन्दिनी ।
आह रावण-मुत्साद्य राघवो मां नयत्विति ॥ ९९ ॥
प्रणम्य शिरसा देवी-महमार्या-मनिन्दिताम् ।
राघवस्य मनोह्लाद-मभिज्ञान-मयाचिषम् ॥ १०० ॥
अथ मामब्रवीत् सीता गृह्यता-मय-मुत्तमः ।
मणिर्येन महाबाहू रामस्त्वां बहुमन्यते ॥ १०१ ॥

ததிச்சாமி த்வயாऽऽஜ்ஞப்தம் தேவி கிம் கரவாண்யஹம் ।
ராமலக்ஷ்மணயோ: பார்ச்வம் நயாமி த்வாம் கிமுத்தரம் ॥ 98 ॥
ஏதச் ச்ருத்வா விதித்வா ச ஸீதா ஜனகநந்தினீ ।
ஆஹ ராவண—முத்ஸாத்ய ராகவோ மாம் நயத்விதி ॥ 99 ॥
ப்ரணம்ய சிரஸா தேவீ-மஹமார்யா-மநிந்திதாம் ।
ராகவஸ்ய மனோஹ்லாத-மபிஜ்ஞான-மயாசிஷம் ॥ 100 ॥
அத மாமப்ரவீத் ஸீதா க்ருஹ்யதா-மய-முத்தம: ।
மணிர்-யேன மஹாபாஹூ ராமஸ்த்வாம் பஹுமன்யதே ॥ 101 ॥

98. 'தேவி! உங்களுடைய கட்டளையை நான் எதிர்பார்க்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்? தங்களை ஸ்ரீராம லக்ஷ்மணர்களிடம் அழைத்துப் போகிறேன். தங்கள் உத்திரவு என்ன?'

99. ஜனகபுத்திரியாகிய சீதை இதைக் கேட்டுக் கருத்தையறிந்து கொண்டு 'ஸ்ரீராமரே இராவணனையழித்துவிட்டு அழைத்துப் போகட்டும்' என்று கூறினாள்.

100. குற்றமற்றவளும் சிறப்பு மிக்கவளுமான தேவியை நான் தலையால் வணங்கி ஸ்ரீராமருக்கு உகப்பளிக்கக் கூடிய ஒரு அடையாளம் தர வேண்டுமென்று வேண்டிக் கொண்டேன்.

101. 'இதோ இந்தச் சிறந்த ரத்னத்தைப் பெற்றுக் கொள்ளும். இதனால் பெருந் தோளரான இராமர் உம்மை வெகுவாய்ப் பாராட்டுவார்' என்று சீதை என்னிடம் கூறினாள்.

99. ராவணமுத்பாட்ய ।

इत्युक्त्वा तु वरारोहा मणिप्रवर-मद्भुतम् ।
प्रायच्छत्परमोद्विग्ना वाचा मां सन्दिदेश ह ॥ १०२ ॥
ततस्तस्यै प्रणम्याहं राजपुत्र्यै समाहितः।
प्रदक्षिणं परिक्राम-मिहाभ्युद्गत-मानसः ॥ १०३ ॥
उत्तरं पुनरेवेदं निश्चित्य मनसा तया ।
हनुमन् मम वृत्तान्तं वक्तुमर्हसि राघवे ॥ १०४ ॥
यथाश्रुत्वैव न चिरात्तावुभौ रामलक्ष्मणौ ।
सुग्रीवसहितौ वीरावुपेयातां तथा कुरु ॥ १०५ ॥

இத்யுக்த்வா து வராரோஹா மணிப்ரவர-மத்புதம் ।
ப்ராயச்சத் பரமோத்விக்னா வாசா மாம் ஸந்திதேசஹ ॥ 102 ॥
ததஸ்தஸ்யை ப்ரணம்யாஹம் ராஜபுத்ர்யை ஸமாஹித: ।
ப்ரதக்ஷிணம் பரிக்ராம-மிஹாப்யுத்கத-மானஸ: ॥ 103 ॥
உத்தரம் புனரேவேதம் நிச்சித்ய மனஸா தயா ।
ஹனுமன் மம வ்ருத்தாந்தம் வக்துமர்ஹஸி ராகவே ॥ 104 ॥
யதா ச்ருத்வைவ ந சிராத்தாவுபௌ ராமலக்ஷ்மணௌ ।
ஸுக்ரீவஸஹிதௌ வீராவுபேயாதாம் ததா குரு ॥ 105 ॥

---

102. இப்படிச் சொல்லிவிட்டு அவ்வுத்தமி அற்புதமானதும் சிறப்புமிக்கதுமான ரத்தினத்தைத் தந்தருளினாள். இளகிய மனத்துடன் நான் சொல்ல வேண்டிய செய்தியையும் எனக்குத் தெரிவித்தாள்.

103. காரிய சித்தி பெற்ற நான் அதன் மேல் இங்கு வருவதற்கு நிச்சயித்து அவ்வரசகுமாரியை நமஸ்கரித்து வலம் வந்தேன்.

104. மறுபடி அவள் மனதில் ஆலோசித்து நிச்சயித்துப் பின்வரும் முடிவுரையைக் கூறினாள். 'ஹனுமாரே! இராகவரிடம் எனது விருத்தாந்தத்தை நீர் கூறுதல் தகும்.

105. 'வீரர்களான இராமலக்ஷ்மணர்கள் சுக்ரீவருடன் நீர் சொல்வதைக் கேட்டவுடன் விரைவில் வந்து சேரும்படி செய்ய வேண்டும்.

---

102. மணிப்ரவர முத்தமம் । 104. உத்தரம் புனரேவாஹ நிச்சித்ய மனஸா ததா ।

यद्यन्यथा भवेदेतद् द्वौ मासौ जीवितं मम ।
न मां द्रक्ष्यति काकुत्स्थो म्रिये साऽहमनाथवत् ॥ १०६ ॥
तच्छ्रुत्वा करुणं वाक्यं क्रोधो मामभ्यवर्धत ।
उत्तरं च मया दृष्टं कार्यशेष-मनन्तरम् ॥ १०७ ॥
ततोऽवर्धत मे काय-स्तदा पर्वत-सन्निभः ।
युद्धकांक्षी वनं तच्च विनाशयितु-मारभे ॥ १०८ ॥
तद्भग्नं वनषण्डन्तु भ्रान्तत्रस्त-मृगद्विजम् ।
प्रतिबुद्धा निरीक्षन्ते राक्षस्यो विकृताननाः ॥ १०९ ॥

யத்யன்யதா பவேதேதத் த்வௌ மாஸௌ ஜீவிதம் மம ।
ந மாம் த்ரக்ஷ்யதி காகுத்ஸ்தோ ம்ரியே ஸா஽ஹமநாதவத் ॥ 106 ॥
தச்ச்ருத்வா கருணம் வாக்யம் க்ரோதோ மாமப்யவர்த்தத ।
உத்தரஞ் ச மயா த்ருஷ்டம் கார்யசேஷ-மனந்தரம் ॥ 107 ॥
ததோ஽வர்த்தத மே காயஸ்-ததா பர்வத-ஸந்நிப: ।
யுத்த-காங்க்ஷீ வனம் தஞ்ச விநாசயிது-மாரபே ॥ 108 ॥
தத்பக்னம் வனஷண்டந்து ப்ராந்த-த்ரஸ்த-ம்ருகத்விஜம் ।
ப்ரதிபுத்தா நிரீக்ஷந்தே ராக்ஷஸ்யோ விக்ருதானனா: ॥ 109 ॥

106. வேறுவிதமாய் நிகழ்ந்தால் என் உயிர் இரண்டு மாதங்களுக்கு மேல் இராது. இராமர் என்னைப் பார்க்க மாட்டார். அநாதையைப் போல் நான் செத்துப் போவேன்.'

107. மனதை உருக்கும் அவ்வார்த்தையைக் கேட்டவுடன் எனக்கு அதிக கோபம் உண்டாயிற்று. மேலே நான் செய்ய வேண்டி மிகுதியுள்ள காரியம் என்ன வென்று மனக் கண்ணால் கண்டேன்.

108. அதன்பின் என் சரீரம் மலை போல் வளர்ந்தது. நான் போரை விரும்பி அவ் வனத்தை அழிக்கத் தொடங்கினேன்.

109. அப்போது விகாரமான முகம் படைத்த அரக்கிகள் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு மிருகங்களும் பறவைகளும் மிரண்டோட, வனம் முழுதும் உருவழிந்து போனதைக் கண்டார்கள்.

106. மாஸ சப்தோ அத்ர பக்ஷபர:। 'பக்ஷாவை மாஸா' இதிச்ருதே: ॥ கோ ॥

108. யுத்தாகாங்க்ஷீவனம் தஸ்ய । 109. வன கண்டந்து । ப்ரதிபுத்த்ய ।

मां च दृष्ट्वा वने तस्मिन् समागम्य ततस्ततः ।
ताः समभ्यागताः क्षिप्रं रावणायाचचक्षिरे ॥ ११० ॥
राजन् वनमिदं दुर्गं तव भग्नं दुरात्मना ।
वानरेण ह्यविज्ञाय तव वीर्यं महाबल ॥ १११ ॥
दुर्बुद्धेस्तस्य राजेन्द्र तव विप्रियकारिणः ।
वध-माज्ञापय क्षिप्रं यथाऽसौ विलयं व्रजेत् ॥ ११२ ॥
तत्श्रुत्वा राक्षसेन्द्रेण विसृष्टा भृशदुर्जयाः ।
राक्षसाः किंकरा नाम रावणस्य मनोऽनुगाः ॥ ११३ ॥

மாஞ் ச த்ருஷ்ட்வா வனே தஸ்மின் ஸமாகம்ய ததஸ்தத: ।
தா: ஸமப்யாகதா: க்ஷிப்ரம் ராவணாயாசசக்ஷிரே ॥ 110 ॥
ராஜன் வனமிதம் துர்க்கம் தவ பக்னம் துராத்மனா ।
வானரேண ஹ்யவிஜ்ஞாய தவ வீர்யம் மஹாபல ॥ 111 ॥
துர்ப்புத்தேஸ்தஸ்ய ராஜேந்த்ர தவ விப்ரிய- காரிண: ।
வத-மாஜ்ஞாபய க்ஷிப்ரம் யதாऽஸௌ விலயம் வ்ரஜேத் ॥ 112 ॥
தச்ச்ருத்வா ராக்ஷஸேந்த்ரேண விஸ்ருஷ்டா ப்ருசதுர்ஜயா: ।
ராக்ஷஸா: கிங்கரா நாம ராவணஸ்ய மனோऽனுகா: ॥ 113 ॥

---

110. பின்னர் அவர்கள் அங்கங்கிருந்து ஒன்று கூடி வனத்தில் என்னையும் பார்த்துவிட்டு விரைந்து போய் இராவணனுக்குத் தெரிவித்தார்கள்.

111. 'பேராற்றல் படைத்த அரசே! உம்முடைய வலிமையை அறியாத தீய வானரன் ஒருவனால் புகுதற்கரிய உமது நந்தவனம் அழிக்கப்பட்டிருக்கிறது.

112. 'அரசசிரேஷ்டரே! உமக்கு அபகாரம் செய்த அம்மதிகெட்ட வானரனுக்குக் கொலை தண்டனை விதிக்கப்பட வேண்டும். அவன் நாசமடையட்டும்.'

113. அதைக்கேட்ட அரக்கர் வேந்தனால் ஏவப்பட்டவர்களும் அவனுடைய மனம் போல் நடப்பவர்களும் வெல்லுதற்கரியவர்களுமான கிங்கரர்கள் எனும் அரக்கர்கள் கிளம்பி வந்தார்கள்.

---

112. யதாऽஸௌ ந புனர் வ்ரஜேத் । 113. பஹுதுர்ஜயா: ।

तेषा-मशीतिसाहस्रं शूलमुद्गरपाणिनाम् ।
मया तस्मिन् वनोद्देशे परिघेण निषूदितम् ।। ११४ ।।
तेषां तु हतशेषा ये ते गत्वा लघुविक्रमाः ।
निहतं च महत्सैन्यं रावणायाचचक्षिरे ।। ११५ ।।
ततो मे बुद्धिरुत्पन्ना चैत्यप्रासाद-माक्रमम् ।
तत्रस्थान् राक्षसान् हत्वा शतं स्तम्भेन वै पुनः ।।
ललामभूतो लंकायाः स वै विध्वंसितो मया ।। ११६ ।।

தேஷா-மஶீதி ஸாஹஸ்ரம் சூலமுத்கரபாணினாம் ।
மயா தஸ்மின் வநோத்தேசே பரிகேண நிஷூதிதம் ॥ 114 ॥
தேஷாம் து ஹத- சேஷா யே தே கத்வா லகுவிக்ரமா: ।
நிஹதஞ் ச மஹத்ஸைன்யம் ராவணாயாசசக்ஷிரே ॥ 115 ॥
ததோ மே புத்திருத்பன்னா சைத்ய-ப்ராஸாத-மாக்ரமம் ।
தத்ரஸ்தான் ராக்ஷஸான் ஹத்வா சதம் ஸ்தம்பேன வை புன: ॥
லலாமபூதோ லங்காயா: ஸ வை வித்வம்ஸிதோ மயா ॥ 116 ॥

114. அவர்கள் எண்பதினாயிரம் பேர் சூலமும் சம்மட்டியும் எடுத்துக் கொண்டு வந்தவர்கள் அவ்வனத்தில் ஓரிடத்தில் என்னால் இரும்புலக்கையால் புடைத்துக் கொல்லப்பட்டார்கள்.

115. அவர்களில் சாகாமல் தப்பிப் பிழைத்தவர்கள் எவர்களோ அவர்கள் விரைந்தோடிப் பெருஞ்சேனை அழிந்து போனதை இராவணனுக்குத் தெரிவித்தார்கள்.

116. எனக்குப் புதிதாக ஓரெண்ணம் தோன்றிற்று. நான் அங்கிருந்த சைத்ய மண்டபத்தை ஆக்ரமித்து ஒரு தூணைப் பிடுங்கி அங்கிருந்த அரக்கர்களையெல்லாம் கொன்று இலங்கைக்கு அலங்காரமாயிருந்த அந்த மண்டபத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கினேன்.

---

114. மயா தஸ்ய ।
115. ஹதசிஷ்டா யே தே கதா । மஹாஸைன்யம் ।
116. சைத்யப்ராஸாத-முத்தமம்! மயா வித்வம் ஸிதோ ருஷா । சைத்ய ப்ராஸாதம் நகரமத்யஸ்த்தப்ராஸாதம் । லலாமபூத: அலங்காரபூத: ।

ततः प्रहस्तस्य सुतं जम्बुमालिन-मादिशत् ।
राक्षसै-र्बहुभिः सार्धं घोररूपै-र्भयानकैः ॥ ११७ ॥
तमहं बलसम्पन्नं राक्षसं रणकोविदम् ।
परिघेणाति-घोरेण सूदयामि सहानुगम् ॥ ११८ ॥
तच्छ्रुत्वा राक्षसेन्द्रस्तु मन्त्रिपुत्रान् महाबलान् ।
पदातिबलसम्पन्नान् प्रेषयामास रावणः ॥ ११९ ॥
परिघेणैव तान् सर्वाननयं यमसादनम् ॥ १२० ॥

தத: ப்ரஹஸ்தஸ்ய ஸுதம் ஜம்புமாலின-மாதிசத் ।
ராக்ஷஸைர்-பஹுபி: ஸார்த்தம் கோரரூபைர்-பயானகை: ॥ *117* ॥
தமஹம் பலஸம்பன்னம் ராக்ஷஸம் ரண-கோவிதம் ।
பரிகேணாதி-கோரேண ஸூதயாமி ஸஹானுகம் ॥ *118* ॥
தச்ச்ருத்வா ராக்ஷஸேந்த்ரஸ்து மந்த்ரிபுத்ரான் மஹாபலான் ।
பதாதி பலஸம்பன்னான் ப்ரேஷயாமாஸ ராவண: ॥ *119* ॥
பரிகேணைவ தான் ஸர்வானனயம் யமஸாதனம் ॥ *120* ॥

---

117. பிறகு இராவணன் பிரகஸ்தனுடைய குமாரனான ஜம்புமாலியை அச்சந்தரும் கொடிய ரூபமுடைய பல அரக்கர்களுடன் என் மேல் ஏவினான்.

118. சேனா பலத்துடன் வந்தவனும் சண்டையில் வல்லவனுமான அவ்வரக்கனை உடன் வந்தவர்களுடன் கொடியதொரு இருப்புலக்கையாலடித்துக் கொன்றேன்.

119. அரக்கர் கோமானான இராவணன் அதைக் கேட்டு மகாபல சாலிகளான மந்திரிகுமாரர்களைக் காலாட்படையுடன் அனுப்பினான்.

120. அவர்களனைவரையும் இரும்புலக்கையைக் கொண்டே யமாலயத்திற்கு அனுப்பினேன்.

मन्त्रिपुत्रान् हताञ्छ्रुत्वा समरे लघुविक्रमान् ।
पंच सेनाग्रगाञ्छूरान् प्रेषयामास रावणः ॥ १२१ ॥
तानहं सहसैन्यान् वै सर्वानेवाभ्यसूदयम् ॥ १२२ ॥
ततः पुनर्दशग्रीवः पुत्रमक्षं महाबलम् ।
बहुभी राक्षसैः सार्धं प्रेषयामास रावणः ॥ १२३ ॥
तं तु मन्दोदरीपुत्रं कुमारं रणपण्डितम् ।
सहसा खं समुत्क्रान्तं पादयोश्च गृहीतवान् ॥
चर्मासिनं शतगुणं भ्रामयित्वा व्यपेषयम् ॥ १२४ ॥

மந்த்ரிபுத்ரான் ஹதாஞ்ச்ருத்வா ஸமரே லகுவிக்ரமான் ।
பஞ்ச ஸேனாக்ரகாஞ் சூரான் ப்ரேஷயாமாஸ ராவண: ॥ *121* ॥
தானஹம் ஸஹஸைன்யான் வை ஸர்வானேவாப்யஸூதயம் ॥ *122* ॥
தத: புனர்தசக்ரீவ: புத்ரமக்ஷம் மஹாபலம் ॥
பஹுபீ ராக்ஷஸை: ஸார்த்தம் ப்ரேஷயாமாஸ ராவண: ॥ *123* ॥
தம் து மந்தோதரீபுத்ரம் குமாரம் ரணபண்டிதம் ।
ஸஹஸா கம் ஸமுத்க்ராந்தம் பாதயோச்ச க்ருஹீதவான் ॥
சர்மாஸினம் சதகுணம் ப்ராமயித்வா வ்யபேஷயம் ॥ *124* ॥

---

121. போர்த்திறன் வாய்ந்த மந்திரி குமாரர்கள் போரில் மாண்டதைக் கேட்ட இராவணன் ஸேனா நாயகர்களும் சூரர்களுமான ஐவரை அனுப்பினான்.

122. அவர்களையும் நான் சேனையனைத்துடனும் கொன்று வீழ்த்தினேன்.

123. பின்னர் பத்துத்தலை ராவணன் மகாபலசாலியான தனது மகன் அக்ஷனைப் பல அரக்கர்களுடன் அனுப்பினான்.

124. மந்தோதரியின் மைந்தனும் போரில் வல்லவனுமான அவ்வரசகுமாரன் கவசத்துடனும் கத்தியுடனும் மேலே பாயும் பொழுது விரைவில் அவன் கால்களைப் பற்றிப் பிடித்துப் பலமுறை சுழற்றிப் பிழிந்தெறிந்தேன்.

---

123. ப்ரேஷயாமாஸ ஸம்யுகே *124.* ஸஹஸா கம் ஸமுத்யந்தம் ।

तमक्षमागतं भग्नं निशम्य स दशाननः ।
तत इन्द्रजितं नाम द्वितीयं रावणः सुतम् ।
व्यादिदेश सुसंक्रुद्धो बलिनं युद्धदुर्मदम् ॥ १२५ ॥
तच्चाप्यहं बलं सर्वं तं च राक्षसपुंगवम् ।
नष्टौजसं रणे कृत्वा परं हर्ष-मुपागमम् ॥ १२६ ॥
महताऽपि महाबाहुः प्रत्ययेन महाबलः ।
प्रेषितो रावणेनैव सह वीरै-र्मदोत्कटैः ॥ १२७ ॥

தமக்ஷ-மாகதம் பக்னம் நிசம்ய ஸ தசானன: ।
தத இந்த்ரஜிதம் நாம த்வீதீயம் ராவண: ஸுதம் ॥
வ்யாதிதேச ஸு ஸங்க்ருத்தோ பலினம் யுத்ததுர்மதம் ॥ 125 ॥
தச்சாப்யஹம் பலம் ஸர்வம் தஞ் ச ராக்ஷஸபுங்கவம் ।
நஷ்டௌஜஸம் ரணே க்ருத்வா பரம் ஹர்ஷ-முபாகமம் ॥ 126 ॥
மஹதாऽபி மஹாபாஹு: ப்ரத்யயேன மஹாபல: ।
ப்ரேஷிதோ ராவணேனைவ ஸஹ வீரைர்-மதோத்கடை: ॥ 127 ॥

---

125. இராவணன் அக்ஷனுடைய அழிவைக் கேட்டு அதனால் மிகுந்த கோபங் கொண்டு பலசாலியும் போரில் மதங் கொண்டவனுமான இரண்டாவதாக இந்திரஜித்தென்ற குமாரனை ஏவினான்.

126. நான் அரக்கர்களிற் சிறந்த அவனையும் அவனுடைய சேனை முழுவதையும் போரில் வீரியமிழக்கச் செய்து மகிழ்வடைந்தேன்.

127-128. அவன் பெரிய தோளும் பெரும் பலமும் படைத்தவனாயினும், மதம் மிகுந்த வீரர்களுடன் அனுப்பப்பட்டவனாயினும், தனது சேனை பலமிழந்ததையும் என்னை வெல்ல முடியாததையும் உணர்ந்து மிக விரைவாக பிரம்மாஸ்திரத்தால் என்னைக் கட்டிவிட்டான்.

---

125. ததச்சேந்த்ரஜிதம் நாம ।
126. நஷ்டௌஜஸம் । ஹர்ஷ-முபாகத: । 127. ப்ரஹிதோ ராவணேனைஷ । மதோத்ததை:

सोऽविषह्यं हि मां बुद्ध्वा स्वबलंचावमर्दितम् ।
ब्राह्मेणास्त्रेण स तु मां प्राबध्नाच्चातिवेगितः ।। १२८ ।।
रज्जुभिश्च बबन्धुस्ते ततो मां तत्र राक्षसाः ।
रावणस्य समीपं च गृहीत्वा मामुपानयन् ।। १२९ ।।
दृष्ट्वा संभाषितश्चाहं रावणेन दुरात्मना ।
पृष्टश्च लंकागमनं राक्षसानां च तं वधम् ।। १३० ।।
तत्सर्वं च मया तत्र सीतार्थमिति जल्पितम् ।। १३१ ।।

ஸோऽவிஷஹ்யம் ஹிமாம் புத்த்வா ஸ்வபலஞ்சாவமர்த்திதம் ।
ப்ராஹ்மேணாஸ்த்ரேண ஸ து மாம்
ப்ராபத்னாச்சாதிவேகித: ॥ 128 ॥
ரஜ்ஜுபிச்ச பபந்துஸ்தே ததோ மாம் தத்ர ராக்ஷஸா: ।
ராவணஸ்ய ஸமீபஞ்ச க்ருஹீத்வா மாமுபானயன் ॥ 129 ॥
த்ருஷ்ட்வா ஸம்பாஷிதச்சாஹம் ராவணேன துராத்மனா ।
ப்ருஷ்டச்ச லங்காகமனம் ராக்ஷஸானாஞ்ச தம் வதம் ॥ 130 ॥
தத் ஸர்வஞ் ச மயா தத்ர ஸீதார்த்தமிதி ஜல்பிதம் ॥ 131 ॥

---

129. பின்னர் அங்குள்ள அரக்கர்கள் என்னைக் கயிறுகளினாற் கட்டி இராவணனுடைய முன்னிலைக்கு இழுத்துக் கொண்டு போனார்கள்.

130. துராத்மாவான இராவணனால் நான் பார்த்துப் பேசப்பட்டு இலங்கைக்கு வந்ததைப் பற்றியும் அரக்கர்களைக் கொன்றதைப் பற்றியும் வினவப்பட்டேன்.

131. அதற்கு அவையெல்லாம் சீதையின் நிமித்தமாக நிகழ்ந்ததென்று என்னால் இங்ஙனம் கூறப்பட்டது.

---

128. ப்ரஹ்மணோऽஸ்த்ரேண । ப்ரபுத்த்வா சாதிவேகின: ।
129. மாமுபாகமன் । 131. தத்ஸர்வஞ்ச ரணே । ஸீதார்த்த-முபஜல்பிதம்

अस्याः सन्दर्शनाकांक्षी प्राप्तस्त्वद्भवनं विभो ।
मारुतस्यौरसः पुत्रो वानरो हनुमानहम् ॥ १३२ ॥
रामदूतं च मां विद्धि सुग्रीव-सचिवं कपिम् ।
सोऽहं दूत्येन रामस्य त्वत्सकाश-मिहागतः ॥ १३३ ॥
सुग्रीवश्च महातेजाः स त्वां कुशल-मब्रवीत् ।
धर्मार्थकाम-सहितं हितं पथ्य-मुवाच च ॥ १३४ ॥

அஸ்யா: ஸந்தர்சனாகாங்க்ஷீ ப்ராப்தஸ்த்வத்பவனம் விபோ ।
மாருதஸ்யௌரஸ: புத்ரோ வானரோ ஹனுமானஹம் ॥ 132 ॥
ராமதூதஞ்ச மாம் வித்தி ஸுக்ரீவஸசிவம் கபிம் ।
ஸோऽஹம் தூத்யேன ராமஸ்ய த்வத்ஸகாச-மிஹாகத: ॥ 133 ॥
ஸுக்ரீவச்ச மஹாதேஜா: ஸ த்வாம் குசல-மப்ரவீத் ।
தர்மார்த்தகாம-ஸஹிதம் ஹிதம் பத்ய-முவாச ச ॥ 134 ॥

---

132. 'பிரபுவே! நான் வாயுவின் புத்திரன், ஹனுமான், வானரன். சீதையைக் காணவிரும்பி நான் உன் மாளிகைக்கு வந்தேன்.

133. என்னை ஸ்ரீராமருடைய தூதனாகவும் சுக்ரீவருடைய மந்திரியாகவுமுள்ள வானரன் என்று அறிந்து கொள்வீராக. நான் இராமருடைய தூது சொல்ல வேண்டி உம்மிடம் வந்துள்ளேன்.

134. மகாதேஜஸ்வியான சுக்ரீவர் உமக்கு க்ஷேமம் சொன்னார். அறம் பொருள் இன்பம் ஆகியவற்றிற்குப் பொருத்தமானதும் ஹிதமானதும் பத்தியமானதுமான செய்தியைச் சொல்லியனுப்பியுள்ளார்.

---

132. தஸ்யாஸ்து தர்சனாகாங்க்ஷீ
133. இதற்குப் பின் அதிக சுலோகம் ॥ ச்ருணுசாபி ஸமாதேசம் யதஹம் ப்ரப்ரவீமி தே ।
ராக்ஷஸேச ஹரீசஸ்த்வாம் வாக்யமாஹ ஸமாஹிதம் ॥
134. மஹாபாக ஸ த்வாம் கௌசலமப்ரவீத் ।

वसतो ऋश्यमूके मे पर्वते विपुलद्रुमे ।
राघवो रण-विक्रान्तो मित्रत्वं समुपागतः ॥ १३५ ॥
तेन मे कथितं राजन् भार्या मे रक्षसा हृता ।
तत्र साहाय्य-मस्माकं कार्यं सर्वात्मना त्वया ॥ १३६ ॥
मया च कथितं तस्मै वालिनश्च वधं प्रति ।
तत्र साहाय्य-हेतो-र्मे समयं कर्तु-मर्हसि ॥ १३७ ॥
वालिना हृतराज्येन सुग्रीवेण महाप्रभुः ।
चक्रेऽग्निसाक्षिकं सख्यं राघवः सहलक्ष्मणः ॥ १३८ ॥

வஸதோ ருச்யமூகே மே பர்வதே விபுலத்ருமே ।
ராகவோ ரணவிக்ராந்தோ மித்ரத்வம் ஸமுபாகத: ॥ 135 ॥
தேன மே கதிதம் ராஜன் பார்யா மே ரக்ஷஸா ஹ்ருதா ।
தத்ர ஸாஹாய்ய-மஸ்மாகம் கார்யம் ஸர்வாத்மனா த்வயா ॥ 136 ॥
மயா ச கதிதம் தஸ்மை வாலினச்ச வதம் ப்ரதி ।
தத்ர ஸாஹாய்ய-ஹேதோர்-மே ஸமயம் கர்த்து-மர்ஹஸி ॥ 137 ॥
வாலினா ஹ்ருதராஜ்யேன ஸுக்ரீவேண மஹாப்ரபு: ।
சக்ரேऽக்னிஸாக்ஷிகம் ஸக்யம் ராகவ: ஸஹலக்ஷ்மண: ॥ 138 ॥

---

135. (அதாவது) மரங்கள் செறிந்த ரிச்யமூகமலையில் நான் வசித்துக் கொண்டிருந்தபோது எனக்கு ஸ்ரீராமருடைய சிநேகம் ஏற்பட்டது.

136. அவரால் எனக்குக் கூறப்பட்டதாவது: 'அரசே! என்னுடைய மனைவி ஒரு அரக்கனால் கவரப்பட்டிருக்கிறாள். அவ்விஷயத்தில் நீர் எங்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்ய வேண்டும்."

137. நான் அவரிடம் கூறியதாவது: 'எனக்கும் வாலியைக் கொல்லும் விஷயத்தில் நீர் உதவிபுரிய ஒப்புக்கொள்ள வேண்டும்.'

138. லக்ஷ்மணருடன் கூடிய மகாப்பிரபுவான ஸ்ரீராமர் வாலியால் அரசை இழந்திருந்த சுக்ரீவருடன் அக்னிசாக்ஷியாக சிநேகம் செய்து கொண்டார்.

---

138. ஸுக்ரீவேண ஸஹ ப்ரபு:'। வாலினமாஹத்ய ।

तेन वालिनमुत्पाट्य शरेणैकेन संयुगे ।
वानराणां महाराजः कृतः स प्लवतां प्रभुः ॥ १३९ ॥
तस्य साहाय्य-मस्माभिः कार्यं सर्वात्मना त्विह ।
तेन प्रस्थापितस्तुभ्यं समीपमिह धर्मतः ॥ १४० ॥
क्षिप्र-मानीयतां सीता दीयतां राघवाय च ।
यावन्न हरयो वीरा विधमन्ति बलं तव ॥ १४१ ॥
वानराणां प्रभावो हि न केन विदितः पुरा ।
देवतानां सकाशं च ये गच्छन्ति निमन्त्रिताः ॥ १४२ ॥

தேன வாலின-முத்பாட்ய சரேணைகேன ஸம்யுகே ।
வானராணாம் மஹாராஜ: க்ருத: ஸ ப்லவதாம் ப்ரபு: ॥ 139 ॥
தஸ்ய ஸாஹாய்ய-மஸ்மாபி: கார்யம் ஸர்வாத்மனா த்விஹ ।
தேன ப்ரஸ்தாபிதஸ்-துப்யம் ஸமீபமிஹ தர்மத: ॥ 140 ॥
க்ஷிப்ர-மானீயதாம் ஸீதா தீயதாம் ராகவாய ச ।
யாவந்ந ஹரயோ வீரா விதமந்தி பலம் தவ ॥ 141 ॥
வானராணாம் ப்ரபாவோ ஹி ந கேன விதித: புரா ।
தேவதானாம் ஸகாசஞ் ச யே கச்சந்தி நிமந்த்ரிதா: ॥ 142 ॥

139. யுத்தத்தில் வாலியை ஒரு பாணத்தால் கொன்று ஸ்ரீராமரால் வானரத் தலைவரான சுக்ரீவரை வானரர்களுக்கு மகாராஜாவாக்கினார்.

140. அவருக்கு எங்களால் எல்லாவகையிலும் உதவி செய்யப் பட வேண்டும். ஆதலால் முறைப்படி உம்மிடத்திற்கு நான் தூதாக அனுப்பப்பட்டுள்ளேன்.

141 வானர வீரர்கள் உமது சேனையை அழிக்குமுன் சீக்கிரமாகச் சீதையைக் கொண்டு வந்து ஸ்ரீரா்மரிடம் சேர்க்க வேண்டும்.

142. வானரர்களின் பெருமையை ஏற்கெனவே அறியாதார் யார்? தேவர்களாலும் அவர்கள் துணைக்கு அழைக்கப் படுகிறார்கள்.

136. 'தத்ர ஸாஹாய்யம்' முதல் 'வதம் ப்ரதி'। வரை சில பாடங்களில் இல்லை. 137. ஸமயம்-ப்ரதிக்ஞாம்; காலநியமம் ।

इति वानरराजस्त्वा-माहेत्यभिहितो मया ।
मामैक्षत ततः क्रुद्धश्चक्षुषा प्रदहन्निव ॥ १४३ ॥
तेन वध्योऽह-माज्ञप्तो रक्षसा रौद्रकर्मणा ।
मत्प्रभाव-मविज्ञाय रावणेन दुरात्मना ॥ १४४ ॥
ततो विभीषणो नाम तस्य भ्राता महामतिः ।
तेन राक्षसराजोऽसौ याचितो मम कारणात् ॥ १४५ ॥

இதி வானரராஜஸ்-த்வாமாஹேத்யபிஹிதோ மயா ।
மாமைக்ஷத தத: க்ருத்தச்சக்ஷுஷா ப்ரதஹன்னிவ ॥ 143 ॥

தேன வத்யோऽஹ-மாஜ்ஞப்தோ ரக்ஷஸா ரௌத்ரகர்மணா ।
மத்ப்ரபாவ-மவிஜ்ஞாய ராவணேன துராத்மனா ॥ 144 ॥

ததோ விபீஷணோ நாம தஸ்ய ப்ராதா மஹாமதி: ।
தேன ராக்ஷஸராஜோऽஸௌ யாசிதோ மம காரணாத் ॥ 145 ॥

---

143. இப்படி வானரவேந்தர் உமக்குக் கூறினார் என்று என்னால் தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது இராவணன் கோபமூண்டு என்னைத் தனது கண்களால் எரித்து விடுபவன் போல் பார்த்தான்.

144. எனது பெருமையை அறியாமல் கொடுந்தொழில் புரியும் பாதகனாகிய இராவணன் என்னைக் கொலை செய்து விடும்படி கட்டளையிட்டான்.

145. அவனுடைய தம்பி விபீஷணர் என்பவர், சிறந்த மதிபடைத்தவர். அவரால் அரக்கர் வேந்தன் என் பொருட்டு (இரக்கங் காட்டும்படி) வேண்டிக் கொள்ளப்பட்டான்.

---

141. ராகவஸ்ய ச । 142. ப்ரபாவோऽயம்
143. மாமைக்ஷத ததோ ருஷ்ட: । 145. ராக்ஷஸராஜச்ச ।

नैवं राक्षसशार्दूल त्यज्यता-मेष निश्चयः ।
राजशास्त्र-व्यपेतोहि मार्गः संसेव्यते त्वया ।। १४६ ।।
दूतवध्या न दृष्टा हि राजशास्त्रेषु राक्षस ।
दूतेन वेदितव्यं च यथार्थं हितवादिना ।। १४७ ।।
सुमहत्यपराधेऽपि दूतस्यातुलविक्रम ।
विरूपकरणं दृष्टं न वधोऽस्तीति शास्त्रतः ।। १४८ ।।
विभीषणेनैव-मुक्तो रावणः सन्दिदेश तान् ।
राक्षसानेतदेवास्य लांगूलं दह्यतामिति ।। १४९ ।।

நைவம் ராக்ஷஸசார்த்தூலத்யஜ்யதா-மேஷ நிச்சய: ।
ராஜசாஸ்த்ர-வ்யபேதோ ஹி மார்க்க: ஸம்ஸேவ்யதே த்வயா ।। 146 ।।
தூதவத்யா ந த்ருஷ்டா ஹி ராஜசாஸ்த்ரேஷு ராக்ஷஸ ।
தூதேன வேதிதவ்யஞ் ச யதார்த்தம் ஹிதவாதினா ।। 147 ।।
ஸுமஹத்யபராதேऽபி தூதஸ்யாதுலவிக்ரம ।
விரூபகரணம் த்ருஷ்டம் ந வதோऽஸ்தீதி சாஸ்த்ரத: ।। 148 ।।
விபீஷணேனைவ-முக்தோ ராவண: ஸந்திதேச தான் ।
ராக்ஷஸானேத- தேவாஸ்ய லாங்கூலம் தஹ்யதாமிதி ।। 149 ।।

---

146. 'அரக்கர் பெருமானே! இது செய்யக் கூடாது. இந்தத் தீர்மானத்தை விட்டு விட வேண்டும். உம்மால் கைக் கொள்ளப்பட்ட மார்க்கம் அரசநீதிக் கொவ்வாதது.

147. தூதனைக் கொல்வது அரச நீதியில் காணப்படவில்லை. நன்மை சொல்லுகிற தூதனைக் கொண்டே உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

148. 'ஒப்பற்ற வீரம் படைத்தவரே! மிகப்பெரிய குற்றத்திலும் சாஸ்திரத்தின் படி தூதனுக்குக் கொலை தண்டனை என்பது இல்லை. அங்கபங்கம் தான் கூறப்படுகிறது.'

149. விபீஷணரால் இங்ஙனம் கூறப்பட்ட இராவணன் அங்குள்ள அரக்கர்களை நோக்கி, 'அது சரி. இவனுடைய வால் கொளுத்தப்படட்டும்' என்று கட்டளை இட்டான்.

---

146. ஸம்லக்ஷ்யதே த்வயா । 147. யதாபிஹிதவாதினா ।

ततस्तस्य वचः श्रुत्वा मम पुच्छं समन्ततः ।
वेष्टितं शणवल्कैश्च जीर्णैः कार्पासजैः पटैः ॥ १५० ॥

राक्षसाः सिद्धसन्नाहास्ततस्ते चण्डविक्रमाः ।
तदाऽदहन्त मे पुच्छं निघ्नन्तः काष्ठमुष्टिभिः ॥ १५१ ॥

बद्धस्य बहुभिः पाशैर्यन्त्रितस्य च राक्षसैः ।
न मे पीडा भवेत् काचिद्दिदृक्षो-र्नगरीं दिवा ॥ १५२ ॥

ததஸ்-தஸ்ய வச: ச்ருத்வா மம புச்சம் ஸமந்தத: l
வேஷ்டிதம் சணவல்கைச்ச ஜீர்ணை: கார்ப்பாஸஜை: படை: ll 150 ll
ராக்ஷஸா: ஸித்தஸந்நாஹாஸ்-ததஸ்தே சண்டவிக்ரமா: l
ததாऽதஹந்த மே புச்சம் நிக்னந்த: காஷ்டமுஷ்டிபி: ll 151 ll
பத்தஸ்ய பஹுபி: பாசைர்யந்த்ரிதஸ்ய ச ராக்ஷஸை: l
ந மே பீடா பவேத் காசித் தித்ருக்ஷோர்-நகரீம் திவா ll 152 ll

---

150. அவனுடைய வார்த்தையால் எனது வால் முழுவதும் கிழிந்த பருத்தித் துணிகளாலும் சணற்பிரிகளாலும் சுற்றப்பட்டது.

151. பின்னர் அக்கொடிய அரக்கர்கள் அகப்பட்டுக் கொண்ட என்னிடம் ஆத்திரம் மூண்டவர்களாய்க் கட்டைகளாலும் முஷ்டிகளாலும் தாக்கி என் வாலில் தீ வைத்தார்கள்.

152. அரக்கர்களால் மடக்கப்பட்டும் கயிறுகளால் பிணிக்கப்பட்டும் இருந்தாலும் பகல் வேளையில் நகரத்தைப்பார்க்க விருப்பங் கொண்டிருந்த எனக்கு ஆயாஸம் கொஞ்சமும் உண்டாகவில்லை.

---

149. ராக்ஷஸானேத-தேவாத்ய l 150. பட்டை: கார்ப்பாஸஜை: l
151. ததாதீப்யந்த மே புச்சம் ஹனந்த: l 152. 'நமே பீடா' என்ற பாதி சுலோகம் சில பாடங்களில் இல்லை.

ततस्ते राक्षसाः शूरा बद्धं मामग्निसंवृतम् ।
अघोषयन् राजमार्गे नगरद्वार-मागताः ॥ १५३ ॥
ततोऽहं सुमहद्रूपं संक्षिप्य पुनरात्मनः ।
विमोचयित्वा तं बन्धं प्रकृतिस्थः स्थितः पुनः ॥ १५४ ॥
आयसं परिघं गृह्य तानि रक्षांस्यसूदयम् ।
ततस्तन्नगरद्वारं वेगेनाप्लुतवानहम् ॥ १५५ ॥
पुच्छेन च प्रदीप्तेन तां पुरीं साट्टगोपुराम् ।
असंभ्रान्तोऽहमदहं युगान्ताग्निरिव प्रजाः ॥ १५६ ॥

ததஸ்தே ராக்ஷஸா: சூரா பத்தம் மாமக்னிஸம்வ்ருதம் ।
அகோஷயன் ராஜமார்க்கே நகரத்வார-மாகதா: ॥ 153 ॥
ததோऽஹம் ஸுமஹத்ரூபம் ஸம்க்ஷிப்ய புனராத்மன: ।
விமோசயித்வா தம் பந்தம் ப்ரக்ருதிஸ்த: ஸ்தித: புன: ॥ 154 ॥
ஆயஸம் பரிகம் க்ருஹ்ய தானி ரக்ஷாம்ஸ்யஸூதயம் ।
ததஸ்தந்நகரத்வாரம் வேகேனாப்லுதவானஹம் ॥ 155 ॥
புச்சேன ச ப்ரதீப்தேன தாம் புரீம் ஸாட்டகோபுராம் ।
அஸம்ப்ராந்தோऽஹமதஹம் யுகாந்தாக்னிரிவ ப்ரஜா: ॥ 156 ॥

---

153. பின்னர் அவ்வரக்க வீரர்கள் என்னுடன் பட்டணத்தின் வாயிலுக்கு வந்து தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த என்னை ராஜவீதியில் விளம்பரம் செய்தார்கள்.

154. அப்பொழுது நான் என்னுடைய பெரிய வடிவத்தைச் சுருக்கிக் கொண்டு கட்டிலிருந்து விடுபட்டு மறுபடி எனது இயல்பை அடைந்தவனானேன்.

155. இரும்புத்தடி ஒன்றை எடுத்துக் கொண்டு அவ்வரக்கர்களைக் கொன்றேன். பிறகு வேகமாகக் கோட்டை வாயிலின் மேல் பாய்ந்தேன்.

156. ஊழித் தீ உயிர்களை யழிப்பது போல் நான் பரபரப்பின்றிப் பட்டணத்தை யெல்லாம் அட்டாலங்கள் கோபுரங்களுடன் எனது தீப்பற்றியவாலினால் சுட்டொழித்தேன்.

विनष्टा जानकी व्यक्तं न ह्यदग्धः प्रदृश्यते ।
लंकायां कश्चिदुद्देशः सर्वा भस्मीकृता पुरी ॥ १५७ ॥
दहता च मया लंकां दग्धा सीता न संशयः ।
रामस्य हि महत्कार्यं मयेदं वितथी कृतम् ॥
इति शोकसमाविष्ट-श्चिन्ता-मह-मुपागतः ॥ १५८ ॥
अथाहं वाचमश्रौषं चारणानां शुभाक्षराम् ।
जानकी न च दग्धेति विस्मयोदन्तभाषिताम् ॥ १५९ ॥

விநஷ்டா ஜானகீ வ்யக்தம் ந ஹ்யதக்த: ப்ரத்ருச்யதே ।
லங்காயாம் கச்சிதுத்தேச: ஸர்வா பஸ்மீ க்ருதாபுரீ ॥ 157 ॥
தஹதா ச மயா லங்காம் தக்தா ஸீதா ந ஸம்சய: ।
ராமஸ்ய ஹி மஹத்கார்யம் மயேதம் விததீ க்ருதம் ॥
இதி சோகஸமாவிஷ்டச்-சிந்தா-மஹ-முபாகத: ॥ 158 ॥
அதாஹம் வாசமச்ரௌஷம் சாரணானாம் சுபாக்ஷராம் ।
ஜானகீ ந ச தக்தேதி விஸ்மயோதந்த-பாஷிதாம் ॥ 159 ॥

157-8. பின்பு 'ஜானகி நிச்சயம் இறந்திருப்பாள்; இலங்கையில் எரியாத இடமே எதுவுமில்லை. பட்டணம் முழுதும் சாம்பலாகிவிட்டது. இலங்கையை எரித்த என்னால் சீதையும் எரிக்கப்பட்டு விட்டாள்; இதில் சந்தேகமில்லை. ஸ்ரீராமருடைய இந்தப் பெரிய காரியம் என்னால் பாழாக்கப் பட்டதே!' என்று நான் சோகம் மேலிட்டுக் கவலையடைந்தேன்.

159. அப்பொழுது ஆச்சரியத்துடன் (ஆகாயமார்க்கத்தில்) சாரணர்கள் 'ஜானகி எரியவில்லை' என்று பேசிக் கொண்ட இனிய வார்த்தையை நான் செவியுற்றேன்.

---

157. லங்காயா: ।
158. ராமஸ்ய ச । விபலீக்ருதம் ।
159. ததோ஽ஹம் வாசமச்ரௌஷம் । விஸ்மயோதந்தபாஷிணாம் ।
159. விஸ்மய-உதந்தம்-விஸ்மயகாரீ உதந்தம் வ்ருத்தாந்தம் ।

ततो मे बुद्धिरुत्पन्ना श्रुत्वा तामद्भुतां गिरम् ।
अदग्धा जानकीत्येवं निमित्तैश्चोपलक्षिता ।। १६० ।।
दीप्यमाने तु लांगूले न मां दहति पावकः ।
हृदयं च प्रहृष्टं मे वाताः सुरभिगन्धिनः । १६१ ।।
तैर्निमित्तैश्च दृष्टार्थैः कारणैश्च महागुणैः ।
ऋषिवाक्यैश्च सिद्धार्थै-रभवं हृष्टमानसः ।।
पुनर्दृष्ट्वा च वैदेहीं विसृष्टश्च तया पुनः।। १६२ ।।

ததோ மே புத்தி-ருத்பன்னா ச்ருத்வா தாமத்புதாம் கிரம் ।
அதக்தா ஜானகீத்யேவம் நிமித்தைச் சோபலக்ஷிதா ।। 160 ।।

தீப்யமானே து லாங்கூலே ந மாம் தஹதி பாவக: ।
ஹ்ருதயஞ் ச ப்ரஹ்ருஷ்டம் மே வாதா: ஸுரபிகந்தின: ।। 161 ।।

தைர் நிமித்தைச்ச த்ருஷ்டார்த்தை: காரணைச்ச மஹாகுணை: ।
ருஷிவாக்யைச்ச ஸித்தார்த்தை-ரபவம் ஹ்ருஷ்டமானஸ: ।।
புனர்த்ருஷ்ட்வா ச வைதேஹீம் விஸ்ருஷ்டச்ச தயா புன: ।। 162 ।।

---

160. அந்த அற்புதமான வார்த்தையைக் கேட்டு என் புத்தி தெளிந்தது. இன்னும் சில நிமித்தங்களாலும் ஜானகி எரியவில்லை என்பது காட்டப்பட்டது.

161. வால் தீப்பற்றி எரிந்த பொழுதும் என்னை அக்னி சுடவில்லை. காற்று நன்மணத்துடன் வீசிற்று; என் இருதயம் மகிழ்ச்சியுடனிருந்தது.

162. நானே கண்ட இக்காரணங்களாலும், வேறு பெரிய காரணங்களாலும், பிழைபடாத ரிஷிகளின் வாக்கியங்களாலும் நான் மனதில் சமாதான மடைந்தவனானேன். பின்பு சீதையை நேரில் பார்த்து அவளிடம் விடைபெற்றேன்.

ततः पर्वत-मासाद्य तत्रारिष्टमहं पुनः ।
प्रतिप्लवनमारेभे युष्मद्दर्शनकांक्षया ॥ १६३ ॥

ततः पवन चन्द्रार्क-सिद्धगन्धर्व-सेवितम् ।
पन्थान-मह-माक्रम्य भवतो दृष्टवानिह ॥ १६४ ॥

राघवस्य प्रभावेन भवतां चैव तेजसा ।
सुग्रीवस्य च कार्यार्थं मया सर्व-मनुष्ठितम् ॥ १६५ ॥

தத: பர்வத- மாஸாத்ய தத்ராரிஷ்டமஹம் புன: ।
ப்ரதிப்லவன-மாரேபே யுஷ்மத்தர்சனகாங்க்ஷயா ॥ *163* ॥

தத: பவன-சந்த்ரார்க்க-ஸித்தகந்தர்வ-ஸேவிதம் ।
பந்தான-மஹ-மாக்ரம்ய பவதோ த்ருஷ்டவானிஹ ॥ *164* ॥

ராகவஸ்ய ப்ரபாவேன பவதாஞ்சைவ தேஜஸா ।
ஸுக்ரீவஸ்ய ச கார்யார்த்தம் மயா ஸர்வமனுஷ்டிதம் ।

---

163. பின்னர் அங்குள்ள அரிஷ்டம் என்ற மலையை யடைந்து உங்களைக் காணவேண்டும் என்ற ஆவலால் திரும்பிப் பாய ஆயத்தமானேன்.

164. பின்பு காற்றும் சந்திர சூரியர்களும் சித்த கந்தர்வர்களும் சஞ்சரிக்கும் ஆகாயமார்க்கமாகத் தாவி வந்து நான் உங்களை இங்கு கண்டவனாகின்றேன்.

165. ஸ்ரீராமருடைய பெருமையாலும் உங்களுடைய மகிமையாலும் சுக்ரீவருடைய காரிய சித்தியின் பொருட்டும் என்னால் இதுவெல்லாம் செய்யப்பட்டது.

---

164. தத: ச்வஸனசந்த்ரார்க்க ।

एतत्सर्वं मया तत्र यथावदुपपादितम् ।
अतो यत्कर्मशेषं न-स्तत् सर्वं क्रियतामिति ॥ १६६ ॥

इति अष्टपंचाशः सर्गः
(आदितः श्लोकाः २६०४)

ஏதத்ஸர்வம் மயா தத்ர யதாவதுபபாதிதம் ।
அதோ யத்கர்ம ஶேஷம் நஸ்தத் ஸர்வம் க்ரியதாமிதி ॥ 166 ॥

இதி அஷ்டபஞ்சாச:ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 2604)

---

166. நடந்தது நடந்தபடி இதுவெல்லாம் என்னால் கூறப்பட்டது. இனிமேல் எஞ்சியுள்ள நமது கருமம் எதுவோ அதையெல்லாம் செய்வோம்—என்று கூறி முடித்தார்.

இங்ஙனம் ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2604)

---

166. பவதாஞ்சைவ தேஜஸா—பவதனுக்ரஹேண இத்யர்த்த: ।
அஸ்யானுவாத-வாக்ய-விஸ்தரஸ்ய ப்ரயோஜனம் வானராணாம் ச்ரவணகுதூஹலாதிசயப்ரகாசனம் ॥

एकोनषष्टितमः सर्गः
अनन्तरकृत्यालोचनम्

एतदाख्याय तत्सर्वं हनूमान् मारुतात्मजः ।
भूयः समुपचक्राम वचनं वक्तु-मुत्तरम् ॥ १ ॥
सफलो राघवोद्योगः सुग्रीवस्य च संभ्रमः ।
शीलमासाद्य सीताया मम च प्रीणितं मनः ॥ २ ॥

ஏகோநஷஷ்டிதம: ஸர்க்க:
அனந்தரக்ருத்யாலோசனம்

ஏததாக்யாய தத்ஸர்வம் ஹனுமான் மாருதாத்மஜ: ।
பூய: ஸமுபசக்ராம வசனம் வக்து-முத்தரம் ॥ 1 ॥
ஸபலோ ராகவோத்யோக: ஸுக்ரீவஸ்ய ச ஸம்ப்ரம: ।
சீலமாஸாத்ய ஸீதாயா மம ச ப்ரீணிதம் மன: ॥ 2 ॥

ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம்
இனிச் செய்ய வேண்டியதை யோசித்தல்

1. இங்ஙனம் வாயு குமாரரான ஹனுமார் (முன் நடந்த) அது எல்லாவற்றையும் சொல்லிவிட்டு (இனிச்செய்ய வேண்டியதைப் பற்றி) மேலே சொல்ல வேண்டியதைச் சொல்ல ஆரம்பித்தார்.

2. சீதையின் நல்லொழுக்கத்தை நேரில் பார்த்து என் மனம் தணிவையடைந்தது; இராமருடைய முயற்சியும் பயனுடையதாயிற்று; சுக்ரீவருடைய ஊக்கமும் அப்படியே (பயன் பெற்றது).

---

2. ப்ரவணம் மன: ।
2. மம ச ப்ரவணம் மன: இதிபாடே ப்ரவணம் ஸந்தோஷ-ப்ரவணமித்யர்த்த: ।
ப்ரவணம் ப்ரஹ்வம் தத்பரம் । **ஸம்ப்ரம:**-த்வரா, உத்ஸாஹ: ।

तपसा धारयेल्लोकान् क्रुद्धो वा निर्दहेदपि ।
सर्वथाऽतिप्रवृद्धोऽसौ रावणो राक्षसाधिपः ॥
यस्या तां स्पृशतो गात्रं तपसा न विनाशितम् ॥ ३ ॥
न तदग्निशिखा कुर्यात् संस्पृष्टा पाणिना सती ।
जनकस्यात्मजा कुर्याद्यत्क्रोधकलुषीकृता ॥ ४ ॥
अशोकवनिकामध्ये रावणस्य दुरात्मनः ।
अधस्ताच्छिंशुपावृक्षे साध्वी करुण-मास्थिता ॥ ५ ॥

தபஸா தாரயேல்லோகான் க்ருத்தோ வா நிர்தஹேதபி ।
ஸர்வதா ऽதிப்ரவ்ருத்தோऽஸௌ ராவணோ ராக்ஷஸாதிப: ॥
யஸ்யா தாம் ஸ்ப்ருசதோ காத்ரம் தபஸா ந விநாசிதம் ॥ 3 ॥
ந ததக்னிசிகா குர்யாத் ஸம்ஸ்ப்ருஷ்டா பாணினா ஸதீ ।
ஜனகஸ்யாத்மஜா குர்யாத்யத்க்ரோத-கலுஷீ க்ருதா ॥ 4 ॥
அசோகவனிகாமத்யே ராவணஸ்ய துராத்மன: ।
அதஸ்தாச்சிம்சுபாவ்ருக்ஷே ஸாத்வீ கருண-மாஸ்திதா ॥ 5 ॥

3. அரக்கர் கோனான இராவணன் தவ வலிமையால் உலகங்களைத்தாங்க வல்லவன்; கோபங் கொண்டால் அழிக்கவும் வல்லவன்; அந்த சீதையைத் தொட்டும் அவனுடைய தேகம் அழியாமலிருந்தது அவன் தவ வலிமையால்தான் போலும்.

4. ஜனகரின் பெண்ணான அவ்வுத்தமி கோபத்தால் கலங்கினால் எதைச் செய்ய வல்லவளோ அதைக் கையினால் தொட்ட தீக் கொழுந்தும் செய்யாது.

5. துராத்மாவான இராவணனுடைய அசோகவனத்தின் நடுவில் சிம்சுபா மரத்தினடியில் பதிவிரதையான அவள் துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறாள்.

3. ஆர்யாயா: ஸத்ருசம் சீலம் ஸீதாயா: ப்லவகர்ஷபா: ॥ இந்த அரை சுலோகம் அதிகமாகச் சில பாடங்களில் உளது. ।

4. ஒ. 'அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச்சானுபாலனாத் । ந த்வாம் குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதா ॥

राक्षसीभिः परिवृता शोकसन्तापकर्शिता ।
मेघलेखापरिवृता चन्द्रलेखेव निष्प्रभा ॥ ६ ॥
अचिन्तयन्ती वैदेही रावणं बलदर्पितम् ।
पतिव्रता च सुश्रोणी अवष्टब्धा च जानकी ॥ ७ ॥
अनुरक्ता हि वैदेही रामं सर्वात्मना शुभा ।
अनन्यचित्ता रामे च पौलोमीव पुरन्दरे ॥ ८ ॥

ராக்ஷஸீபி: பரிவ்ருதா சோகஸந்தாப-கர்சிதா ।
மேகலேகாபரிவ்ருதா சந்த்ரலேகேவ நிஷ்ப்ரபா ॥ 6 ॥
அசிந்தயந்தீ வைதேஹீ ராவணம் பலதர்ப்பிதம் ।
பதிவ்ரதா ச ஸுச்ரோணீ அவஷ்டப்தா ச ஜானகீ ॥ 7 ॥
அனுரக்தா ஹி வைதேஹீ ராமம் ஸர்வாத்மனா சுபா ।
அனன்யசித்தா ராமே ச பௌலோமீவ புரந்தரே ॥ 8 ॥

---

6. மேகத்தால் மூடுண்ட சந்திரகலை போல் அரக்கிகளால் சூழப்பட்டு ஒளி குன்றிச் சோகத்தால் வாடி இளைத்திருக்கிறாள்.

7. பதிவிரதையும் கட்டழகியும் ஜனகபுத்திரியுமான வைதேகி காவலில் வைக்கப்பட்டிருந்தாலும் பலத்தால் கொழுப்படைந்திருக்கும் இராவணனை ஒரு பொருட்டாய்க் கருதவில்லை.

8. எல்லா வகையிலும் பரம பாவனமான வைதேகி இந்திரனிடத்தில் இந்திராணிபோல் ஸ்ரீராமரிடத்தில் ஒன்றுபட்ட சித்தமுடையவளாய் ஸ்ரீராமரையே இடைவிடாது சிந்திப்பவளாயிருக்கிறாள்.

---

5. இதற்குமுன் 'ஜாம்பவத்ப்ரமுகான்ஸர்வான்' என்று தொடங்கி ஹனுமானிதி ஸர்வத்ர நாம விச்ராவிதம் மயா ।' என்பது வரை பதினைந்து சுலோகங்கள் அதிகமாகச் சில பாடங்களில் உள்ளன.

तदेकवासस्संवीता रजोध्वस्ता तथैव च ।
शोकसन्ताप-दीनांगी सीता भर्तृहिते रता ॥ ९ ॥
सा मया राक्षसीमध्ये तर्ज्यमाना मुहुर्मुहुः ।
राक्षसीभि-र्विरूपाभि-र्दृष्टा हि प्रमदावने ॥ १० ॥
एकवेणीधरा दीना भर्तृचिन्तापरायणा ।
अधः शय्या विवर्णांगी पद्मिनीव हिमोदये ॥ ११ ॥
रावणाद्विनिवृत्तार्था मर्तव्यकृत-निश्चया ।
कथंचिन्मृगशावाक्षी विश्वासमुपपादिता ॥ १२ ॥

ததேகவாஸஸ் ஸம்வீதா ரஜோத்வஸ்தா ததைவ ச ।
சோகஸந்தாப-தீனாங்கீ ஸீதா பர்த்ரு-ஹிதே ரதா ॥ 9 ॥
ஸா மயா ராக்ஷஸிமத்யே தர்ஜமானா முஹுர்முஹு: ।
ராக்ஷஸிபிர்-விருபாபிர்-த்ருஷ்டா ஹி ப்ரமதாவனே ॥ 10 ॥
ஏகவேணீதரா தீனா பர்த்ருசிந்தா-பராயணா ।
அத: சய்யா விவர்ணாங்கீ பத்மினீவ ஹிமோதயே ॥ 11 ॥
ராவணாத்-விநிவ்ருத்தார்த்தா மர்த்தவ்யக்ருத-நிச்சயா ।
கதஞ்சின்ம்ருகசாபாக்ஷீ விச்வாஸமுபபாதிதா ॥ 12 ॥

---

9. சீதை அந்த ஒரே ஆடையை உடுத்தவளாய்ப் புழுதி படிந்து சோகத்தால் வாடி வதங்கிய அங்கங்களுடன் நாயகருடைய நன்மையிலேயே மனம் பற்றியவளாயிருக்கிறாள்.

10. சிங்காரவனத்தில் அரக்கிகளின் நடுவில் கோரரூபமுள்ள அவர்களால் அடிக்கடி பயமுறுத்தப்பட்டவளான சீதை என்னால் பார்க்கப்பட்டாள்.

11-12. மான்குட்டியினது போன்ற விழிபடைத்தவளும், நாதனை நினைப்பதொன்றையே கருத்திற் கொண்டவளும், ஒரே பின்னலான தலைமயிருடையவளும், பூமியில் படுப்பவளும், பனிகாலத்துத் தாமரைபோல் வாடியவளும், இராவணனிடமிருந்து விடுபடுவதற்கு வழிகாணாமல் களையிழந்து உயிரைமாய்க்க நிச்சயித்தவளும் பரிதாபமான நிலையிலுள்ளவளுமான அவள் எப்படியோ நம்பிக்கையை அடையும்படி செய்யப்பட்டாள்.

ततः संभाषिता चैव सर्वमर्थं च दर्शिता ।
रामसुग्रीवसख्यं च श्रुत्वा प्रीतिमुपागता ॥ १३ ॥
नियतः समुदाचारो भक्ति-र्भर्तरि चोत्तमा ।
यन्न हन्ति दशग्रीवं स महात्मा कृतागसम् ॥
निमित्तमात्रं रामस्तु वधे तस्य भविष्यति ॥ १४ ॥
सा प्रकृत्यैव तन्वंगी तद्वियोगाच्च कर्शिता ।
प्रतिपत्पाठशीलस्य विद्येव तनुतां गता ॥ १५ ॥

தத: ஸம்பாஷிதா சைவ ஸர்வமர்த்தஞ் ச தர்சிதா ।
ராமஸுக்ரீவஸக்யஞ் ச ச்ருத்வா ப்ரீதிமுபாகதா ॥ 13 ॥
நியத: ஸமுதாசாரோ பக்திர்பர்த்தரி சோத்தமா ।
யந்ந ஹந்தி தசக்ரீவம் ஸ மஹாத்மா க்ருதாகஸம் ।
நிமித்தமாத்ரம் ராமஸ்து வதே தஸ்ய பவிஷ்யதி ॥ 14 ॥
ஸா ப்ரக்ருத்யைவ தன்வங்கீ தத்வியோகாச்ச கர்சிதா ।
ப்ரதிபத்-பாடசீலஸ்ய வித்யேவ தனுதாம் கதா ॥ 15 ॥

---

13. அதன்மேல் சம்பாஷணை செய்தாள். எல்லா விஷயங்களும் தெரிவிக்கப்பட்டாள். ஸ்ரீராமருக்கும் சுக்ரீவருக்கம் ஏற்பட்டுள்ள நட்பைப்பற்றிக் கேட்டு மனவமைதியைப் பெற்றாள்.

14. நியமத்துடனும் ஆசாரத்துடனும் கூடின உத்தமமான சீதையின் பர்த்ரு பக்தியானது பாவமிழைத்த பத்துத்தலை ராவணனை ஏன் கொன்று விடவில்லை என்றால் மகா தபஸ்வியான அவனைக் கொல்ல ஸ்ரீராமர் நிமித்தமாக வேண்டும் என்பது காரணம்.

15. அவள் இயல்பாகவே மெல்லிய உடல் படைத்தவள். பிரிவாற்றாமையால் பிரதமைதிதியில் அத்தியயனம் செய்பவனுடைய வித்தையைப் போல் அவள் இன்னும் தேய்ந்து மெலிந்திருக்கிறாள்.

---

11. ஹிமாகமே । 13. ஸர்வமர்த்தம் ப்ரகாசிதா ।

एवमास्ते महाभागा सीता शोकपरायणा ॥ १६ ॥
यदत्र प्रतिकर्तव्यं तत्सर्वमुपपाद्यताम् ॥ १७ ॥

इति एकोनषष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २६२१)

ஏவமாஸ்தே மஹாபாகா ஸீதா சோகபராயணா ॥ 16 ॥
யதத்ர ப்ரதிகர்த்தவ்யம் தத்ஸர்வ-முபபாத்யதாம் ॥ 17 ॥

இதி ஏகோநஷஷ்டிதம: ஸர்க்க
(ஆதித: ச்லோகா: 2621)

---

16. சீரியவளான சீதை இவ்வண்ணம் சோகத்திலாழ்ந்துள்ளாள். இதை மாற்றுவதற்கு எது செய்ய வேண்டுமோ அதுவெல்லாம் இனிச் செய்யப்படட்டும்.

இங்ஙனம் ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2621)

षष्टितमः सर्गः
अंगदजांबवत्संवादः

तस्य तद्वचनं श्रुत्वा वालिसूनुरभाषत ॥ १ ॥
जांबवत्प्रमुखान् सर्वाननुज्ञाप्य महाहरीन् ।
अस्मिन्नेवगते कार्ये भवतां च निवेदिते ॥
न्याय्यं स्म सह वैदेह्या द्रष्टुं तौ पार्थिवात्मजौ ॥ २ ॥

ஷஷ்டிதம:ஸர்க்க:
அங்கத ஜாம்பவத் ஸம்வாத:

தஸ்ய தத்வசனம் ச்ருத்வா வாலிஸூனு-ரபாஷத ll 1 ll

ஜாம்பவத்-ப்ரமுகான் ஸர்வானனுஜ்ஞாப்ய மஹாஹரீன் ll
அஸ்மின்னேவ கதே கார்யே பவதாஞ்ச நிவேதிதே ll
ந்யாய்யம் ஸ்ம ஸஹ வைதேஹ்யா த்ரஷ்டும் தௌ பார்த்திவாத்மஜௌ
ll 2 ll

அறுபதாவது ஸர்க்கம்
அங்கதனும் ஜாம்பவானும் பேசியது

1. அந்த ஹனுமாருடைய பேச்சைக் கேட்ட வாலிபுத்திரனான அங்கதன் பின்வருமாறு பேசினான்.

2. ஜாம்பவான் முதலிய மகான்களான வானரர்களுடைய அனுமதியுடன் (நான் கூற விரும்புவதாவது) உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் காரியம் இந்த நிலையிலிருக்கையில் நாம் (ராமலக்ஷ்மணர்களாகிய) அரச குமாரர்களிருவரையும் வைதேகியுடன் கூடவே காண்பது தான் நியாயம்.

अहमेकोऽपि पर्याप्तः सराक्षसगणां पुरीम् ।
तां लंकां तरसा हन्तुं रावणं च महाबलम् ॥ ३ ॥
किं पुनः सहितो वीरै-र्बलवद्भिः कृतात्मभिः ।
कृतास्त्रैः प्लवगैः शूरै-र्भवद्भि-र्विजयैषिभिः ॥ ४ ॥

அஹமேகோऽபி பர்யாப்த: ஸராக்ஷஸகணாம் புரீம் ।
தாம் லங்காம் தரஸா ஹந்தும் ராவணஞ்ச மஹாபலம் ॥ 3 ॥

கிம் புன: ஸஹிதோ வீரைர்-பலவத்பி: க்ருதாத்மபி: ।
க்ருதாஸ்த்ரை: ப்லவகை: சூரைர்-பவத்பிர்-விஜயைஷிபி: ॥ 4 ॥

---

3. அரக்கர் கூட்டங்களுடன் இலங்காபுரியைத் தாக்கி மகாபலசாலியான இராவணனையும் விரைவில் கொல்லுவதற்கு நான் ஒருவனே போதும்.

4. வீரர்களும் பலவான்களும் தைரியசாலிகளும் அஸ்திரங்களில் வல்லவர்களும் சூரர்களும் வெற்றியை விரும்புவர்களுமான வானரர்களாகிய உங்களுடன் கூடியிருக்கும் பொழுது என்ன சொல்ல வேண்டும்.?

1-2. தஸ்ய தத்தசனம் ச்ருத்வா வாலிஸூனுரபாஷத ।
அயுக்தம் துவிநா தே வீம் த்ருஷ்டவத்பிச்ச வானர ॥
ஸமீபம் கந்துமஸ்மாபீ ராகவஸ்ய மஹாத்மன: ।
அச்விபுத்ரௌ மஹாவேகௌ ப்லவந்தௌ ப்லவங்கமௌ ॥
பிதாமஹவரோத்ஸேகாத்பரமம் தர்ப்பமாஸ்திதௌ ॥
அச்வினோர்-மானனார்த்தம் ஹி ஸர்வலோகபிதாமஹ: ॥
ஸர்வாவத்யத்வ மதுலமனயோர்-தத்தவான் புரா ।
வரோத்ஸேகேன மத்தௌ ச ப்ரமத்ய மஹதீஞ்சமூம் ॥
ஸுராணாமம்ருதம் வீரௌ பீதவந்தௌ மஹாபலௌ ।
ஏதாவேவ ஹி ஸங்க்ருத்தௌ ஸவாஜி-ரத-குஞ்ஜராம் ॥
லங்காம் நாசயிதும் சக்தௌ ஸர்வே திஷ்ட்டந்து வாநரா: ।
அஹமேகோऽபி பர்யார்ப்த: ஸராக்ஷஸ கணாம் புரீம் ॥

अहं तु रावणं युद्धे ससैन्यं सपुरस्सरम् ।
सहपुत्रं वधिष्यामि सहोदरयुतं युधि ॥ ५ ॥
ब्राह्म-मैन्द्रं च रौद्रं च वायव्यं वारुणं तथा ।
यदि शक्रजितोऽस्त्राणि दुर्निरीक्षाणि संयुगे ॥ ६ ॥
तान्यहं विधमिष्यामि निहनिष्यामि राक्षसान् ।
भवतामप्यनुज्ञातो विक्रमो मे रुणद्धि तम् ॥ ७ ॥
मयाऽतुला विसृष्टा हि शैलवृष्टि-र्निरन्तरा ।
देवानपि रणे हन्यात् किं पुनस्तान्निशाचरान् ॥ ८ ॥

அஹந் து ராவணம் யுத்தே ஸஸைன்யம் ஸபுரஸ்ஸரம் ।
ஸஹபுத்ரம் வதிஷ்யாமி ஸஹோதரயுதம் யுதி ॥ 5 ॥
ப்ராஹ்ம-மைந்த்ரஞ்ச ரௌத்ரஞ்ச வாயவ்யம் வாருணம் ததா ।
யதி சக்ரஜிதோऽஸ்த்ராணி துர்நிரீக்ஷாணி ஸம்யுகே ॥ 6 ॥
தான்யஹம் விதயிஷ்யாமி நிஹனிஷ்யாமி ராக்ஷஸான் ।
பவதாமப்யனுஜ்ஞாதோ விக்ரமோ மே ருணத்தி தம் ॥ 7 ॥
மயாऽதுலா விஸ்ருஷ்டா ஹி சைலவ்ருஷ்டிர்-நிரந்தரா ।
தேவான்பி ரணே ஹன்யாத் கிம் புனஸ்தாந் நிசாசரான் ॥ 8 ॥

---

5. போர்க்களத்தில் சண்டை போட்டு இராவணனைச் சைனியங்களுடனும் பரிவாரங்களுடனும் புத்திரர்களுடனும் சகோதரர்களுடனும் நான் கொல்வேன்.

6-7. போரில் காணக் கண் கூசும் இந்திரஜித்தினுடைய அஸ்திரங்கள், பிராம்மம், ஐந்த்ரம், ரௌத்ரம், வாயவ்யம், வாருணம் எவையாயினும் அவற்றை நான் அழிப்பேன். அரக்கர்களைக் கொல்வேன். உங்களால் அனுமதிக்கப் பெற்ற எனது பராக்கிரமம் அவனை அடக்கிவிடும்.

8. என்னால் இடைவிடாது போரில் பொழியப்படும் ஒப்பற்ற கல்மாரி தேவர்களையும் கொல்லும். அந்த அரக்கர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

सागरोप्यतियाद्वेलां मन्दरः प्रचलेदपि ।
न जाम्बवन्तं समरे कंपये-दरिवाहिनी ॥ ९ ॥
सर्वराक्षस-संघानां राक्षसा ये च पूर्वकाः ।
अलमेको विनाशाय वीरो वायुसुतः कपिः ॥ १० ॥
पनसस्योरुवेगेन नीलस्य च महात्मनः ।
मन्दरोऽप्यवशीर्येत किं पुन-र्युधि राक्षसाः ॥ ११ ॥
स देवासुरयक्षेषु गन्धर्वोरगपक्षिषु ।
मैन्दस्य प्रतियोद्धारं शंसत द्विविदस्य वा ॥ १२ ॥

ஸாகரோப்யதியாத்-வேலாம் மந்தர: ப்ரசலே-துபி ।
ந ஜாம்பவந்தம் ஸமரே கம்பயே-தரிவாஹினீ ॥ 9 ॥
ஸர்வராக்ஷஸ-ஸங்கானாம் ராக்ஷஸா யே ச பூர்வகா: ।
அலமேகோ விநாசாய வீரோ வாயுஸுத: கபி: ॥ 10 ॥
பனஸஸ்யோருவேகேன நீலஸ்ய ச மஹாத்மன: ।
மந்தரோऽப்யவசீர்யேத கிம் புனர்-யுதி ராக்ஷஸா: ॥ 11 ॥
ஸ தேவாஸுரயக்ஷேஷு கந்தர்வோரகபக்ஷிஷு ।
மைந்தஸ்ய ப்ரதியோத்தாரம் சம்ஸத த்விவிதஸ்ய வா ॥ 12 ॥

---

9. சமுத்திரம் கரைபுரண்டாலும் மந்தரமலை அசைந்தாடினாலும் ஜாம்பவானைப் போரில் எதிரிசேனை அசைக்கமுடியாது.

10. எல்லா ராக்ஷஸக் கூட்டங்களுக்கும் முன்னணியில் நிற்கும் அரக்கர்கள் எவர்களோ அவர்களை அழிப்பதற்கு வாயுகுமாரரான வானரவீரர் ஒருவரே போதும்.

11. பனஸன், மகாத்மாவான நீலன் ஆகியோரின் தொடை வேகத்தால் மந்தரமலையும் பொடிபடும். போரில் அரக்கர்கள் ஒரு பொருட்டா?

12. தேவர், அசுரர், யக்ஷர், கந்தர்வர், நாகர், பக்ஷிகள் இவர்களுள் மைந்தனுடனோ த்விவிதனுடனோ எதிர்த்துப் போர் புரியக்கூடிய ஒருவரைச் சொல்லுங்கள்.

अश्विपुत्रौ महाभागावेतौ प्लवगसत्तमौ ।
एतयोः प्रतियोद्धारं न पश्यामि रणाजिरे ॥ १३ ॥
पितामहवरोत्सेकात् परमं दर्प-मास्थितौ ।
अमृतप्राशिनावेतौ सर्ववानरसत्तमौ ॥ १४ ॥
अश्विनो-र्माननार्थं हि सर्वलोकपितामहः ।
सर्वावध्यत्व-मतुल-मनयो-र्दत्तवान् पुरा ॥ १५ ॥
वरोत्सेकेन मुक्तौ च प्रमथ्य महतीं चमूम् ।
सुराणा-ममृतं वीरौ पीतवन्तौ प्लवंगमौ ॥ १६ ॥

அச்விபுத்ரௌ மஹாபாகாவேதௌ ப்லவகஸத்தமௌ ।
ஏதயோ: ப்ரதியோத்தாரம் ந பச்யாமி ரணாஜிரே ॥ 13 ॥
பிதாமஹ-வரோத்ஸேகாத் பரமம் தர்ப்ப-மாஸ்திதௌ ।
அம்ருத-ப்ராசினாவேதௌ ஸர்வவானர-ஸத்தமௌ ॥ .14 ॥
அச்வினோர்-மானனார்த்தம் ஹி ஸர்வலோகபிதாமஹ: ।
ஸர்வாவத்யத்வ-மதுல-மனயோர்-தத்தவான் புரா ॥ 15 ॥
வரோத்ஸேகேன முக்தௌ ச ப்ரமத்ய மஹதீம் சமூம் ।
ஸுராணா-மம்ருதம் வீரௌ பீதவந்தௌ ப்லவங்கமௌ ॥ 16 ॥

---

13. இவ்விருவரும் அசுவினீதேவர்களின் குமாரர்கள்; மகிமைமிக்க வானர சிரேஷ்டர்கள். இவர்களுடன் யுத்த களத்தில் எதிர்த்துப் போர்புரியக் கூடியவனை நான் அறியேன்.

14. இவர்கள் பிரம்மாவிடம் வரம்பெற்று கருவித்திருக்கக் கூடியவர்கள்; அமிருதபானம் செய்தவர்கள்; எல்லா வானரர்களிலும் சிறந்தவர்கள்.

15. ஸர்வலோகபிதாமகரான பிரம்மா அசுவினீதேவர்களை கௌரவிப்பதற்காக இவர்களுக்கு எவராலும் அழிவில்லாத இணையற்ற வரத்தையளித்திருக்கிறாரன்றோ?

16. வானரவீரர்களாகிய இவர்கள் வரத்தின் பெருமையால் தேவர்களின் சைனியத்தையும் வென்று விடுபட்டு அமிருதம் அருந்தினவர்கள்.

एतावेव हि संक्रुद्धौ सवाजिरथकुंजराम् ।
लंकां नाशयितुं शक्तौ सर्वे तिष्ठन्तु वानराः ॥ १७ ॥

अयुक्तं तु विना देवीं दृष्टवद्भिश्च वानराः ।
समीपं गन्तु-मस्माभी राघवस्य महात्मनः ॥ १८ ॥

दृष्टा देवी न चानीता इति तत्र निवेदनम् ।
अयुक्तमिव पश्यामि भवद्भिः ख्यातविक्रमैः॥ १९ ॥

ஏதாவேவ ஹி ஸங்க்ருத்தௌ ஸவாஜிரதகுஞ்ஜராம் ।
லங்காம் நாசயிதும் சக்தௌ ஸர்வே திஷ்டந்து வானரா: ॥ 17 ॥

அயுக்தம் து விநா தேவீம் த்ருஷ்டவத்பிச்ச வானரா: ।
ஸமீபம் கந்து-மஸ்மாபீ ராகவஸ்ய மஹாத்மன: ॥ 18 ॥

த்ருஷ்டா தேவீ ந சானீதா இதி தத்ர நிவேதனம் ।
அயுக்தமிவ பச்யாமி பவத்பி: க்யாதவிக்ரமை: ॥ 19 ॥

---

17. வானரர்கள் அனைவருமிருக்கட்டும்; கோபம் மூண்டால் இவ்விருவருமே குதிரை தேர் யானைகளுடன் கூடிய இலங்கையை அழிப்பதற்குப் போதுமானவர்கள் என்பது நிச்சயம்

18. வானரர்களே! நிலைமையைக் கண்டு கொண்ட நம்மால் சீதையில்லாமல் மகாத்மாவான ஸ்ரீராகவருடைய சந்நிதிக்குச் செல்வது தகாது.

19. புகழ் பெற்ற வீரர்களான உங்களால் 'தேவி காணப்பட்டாள்; ஆனால் அழைத்துவரப்படவில்லை' என்று அங்கு தெரிவிப்பது பொருந்தாது என நான் காண்கிறேன்.

न हि नः प्लवने कश्चिन्नापि कश्चित् पराक्रमे ।
तुल्यः सामरदैत्येषु लोकेषु हरिसत्तमाः ।। २० ।।

तेष्वेवं हतवीरेषु राक्षसेषु हनूमता ।
किमन्यदत्र कर्तव्यं गृहीत्वा याम जानकीम् ।। २१ ।।

तमेवं कृतसंकल्पं जाम्बवान् हरिसत्तमः ।
उवाच परमप्रीतो वाक्य-मर्थव-दर्थवित् ।। २२ ।।

ந ஹி ந: ப்லவனே கச்சிந்நாபி கச்சித் பராக்ரமே ।
துல்ய: ஸாமரதைத்யேஷு லோகேஷு ஹரிஸத்தமா: ।। 20 ।।
தேஷ்வேவம் ஹதவீரேஷு ராக்ஷஸேஷு ஹனூமதா ।
கிமன்யதத்ர கர்த்தவ்யம் க்ருஹீத்வா யாம ஜானகீம் ।। 21 ।।
தமேவம் க்ருதஸங்கல்பம் ஜாம்பவான் ஹரிஸத்தம: ।
உவாச பரமப்ரீதோ வாக்ய-மர்த்தவ-தர்த்தவித் ।। 22 ।।

---

20. வானரசிரேஷ்டர்களே! தேவர்களிடையோ அசுரர்களிடையோ எல்லா உலகங்களிலும் வானவெளியில் பறப்பதிலோ, வீரச் செயலிலோ நமக்கீடானவர் எவரும் இல்லை.

21. அரக்கர்களில் வீரர்கள் ஹனுமாரால் இவ்வாறு ஏற்கெனவே கொல்லப்பட்டிருப்பதால் நாமே சீதையை அழைத்துக் கொண்டே போகலாம். இவ்விஷயத்தில் செய்யத்தக்கது வேறு என்ன இருக்கிறது?

22. இப்படி தீர்மானங்கொண்ட அங்கதனைப் பார்த்துச் செயல் நுட்பமறிந்தவரும் வானரர்களின் தலைவருமான ஜாம்பவான் மிகுந்த பிரீதியுடன் பின்வருமாறு பொருள் பொதிந்த வார்த்தையைச் சொன்னார்.

न तावदेषा मतिरक्षमा नो यथा भवान् पश्यति राजपुत्र ।
यथा तु रामस्य मतिर्निविष्टा तथा भवान् पश्यतु कार्यसिद्धिम् ॥ २३ ॥

इति षष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २६४४)

ந தாவதேஷா மதிரக்ஷமா நோ
யதா பவான் பச்யதி ராஜபுத்ர।
யதா து ராமஸ்ய மதிர் நிவிஷ்டா
ததா பவான் பச்யது கார்யஸித்திம்॥ 23 ॥

இதி ஷஷ்டிதம: ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 2644)

---

23. 'அரச குமாரா! நீர் எவ்வண்ணம் காண்கிறீரோ அந்த அபிப்பிராயம் நமக்கு இப்பொழுது அஸாத்தியமன்று. ஆயினும் ஸ்ரீராமருடைய தீர்மானமான திருவுள்ளம் எப்படியிருக்கிறதோ அதன்படி நீர் காரியசித்தியை கவனிக்க வேண்டும்.'

இங்ஙனம் அறுபதாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2644)

एकषष्टितमः सर्गः
मधुवनभंगः

ततो जाम्बवतो वाक्य-मगृह्णन्त वनौकसः ।
अंगदप्रमुखा वीरा हनुमांश्च महाकपिः ।। १ ।।
प्रीतिमन्तस्ततः सर्वे वायुपुत्रपुरस्सराः ।
महेन्द्राद्रिं परित्यज्य पुप्लवुःप्लवगर्षभाः ।। २ ।।
मेरुमन्दरसंकाशा मत्ता इव महागजाः ।
छादयन्त इवाकाशं महाकाया महाबलाः ।। ३ ।।

ஏகஷஷ்டிதம: ஸர்க்க:
மதுவனபங்க:

ததோ ஜாம்பவதோ வாக்ய-மக்ருஹ்ணந்த வநௌகஸ: ।
அங்கதப்ரமுகா வீரா ஹனுமாம்ச்ச மஹாகபி: ।। 1 ।।
ப்ரீதிமந்தஸ்-தத: ஸர்வே வாயுபுத்ர-புரஸ்ஸரா: ।
மஹேந்த்ராத்ரிம் பரித்யஜ்ய புப்லுவு: ப்லவகர்ஷபா: ।। 2 ।।
மேருமந்தரஸங்காசா மத்தா இவ மஹாகஜா: ।
ச்சாதயந்த இவாகாசம் மஹாகாயா மஹாபலா: ।। 3 ।।

அறுபத்தொராவது ஸர்க்கம்
மது வனச் சிதைவு

1. வானரசிரேஷ்டரான ஹனுமாரும் அங்கதன் முதலிய மற்ற வானரவீரர்களும் ஜாம்பவானுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டார்கள்.

2. பின்பு வானரர்களெல்லோரும் மனமகிழ்ந்து மகேந்திர மலையை விட்டு வாயுகுமாரர் முன் செல்ல அவர் பின்னே பாய்ந்து சென்றார்கள்.

3. மேரு மந்தர மலைகள் போலவும் மதயானைகள் போலவும் பேருடலும் பெரு வலிமையுமுடைய அவ்வானரர்கள் ஆகாயத்தையே மறைத்து விட்டாற் போலிருந்தது.

सभाज्यमानं भूतै-स्तमात्मवन्तं महाबलम् ।
हनुमन्तं महावेगं वहन्त इव दृष्टिभिः ॥ ४ ॥
राघवे चार्थनिर्वृत्तिं कर्तुं च परमं यशः ।
समाधाय समृद्धार्थाः कर्मसिद्धिभि-रुन्नताः ॥ ५ ॥
प्रियाख्यानपराः सर्वे सर्वे युद्धाभिनन्दिनः ।
सर्वे रामप्रतीकारे निश्चितार्था मनस्विनः ॥ ६ ॥

ஸபாஜ்யமானம் பூதைஸ்த-மாத்மவந்தம் மஹாபலம் ||
ஹனுமந்தம் மஹாவேகம் வஹந்த இவ த்ருஷ்டிபி: || 4 ||
ராகவே சார்த்தநிர்வ்ருத்திம் கர்த்துஞ் ச பரமம் யச: |
ஸமாதாய ஸம்ருத்தார்த்தா: கர்மஸித்திபி-ருந்நதா: || 5 ||
ப்ரியாக்யானபரா: ஸர்வே ஸர்வே யுத்தாபிநந்தின: |
ஸர்வே ராமப்ரதீகாரே நிச்சிதார்த்தா மனஸ்வின: || 6 ||

---

4. உயிர்க்கூட்டங்களால் போற்றப்பட்டவரும் மிக்க வலிமையும் வேகமுமுள்ளவருமான ஹனுமாரை அவர்கள் தங்கள் பார்வையினால் தூக்கிக் கொண்டு போகிறவர்கள் போல் பார்த்துக் கொண்டு போனார்கள்.

5. அவர்கள் ஸ்ரீராமருடைய காரியத்தை முடித்துப் பெரும்புகழ் பெற ஒருமைப்பாடுடையவர்களாகவும், காரிய சித்தியால் சிறப்புடையவர்களாகவுமிருந்தனர்.

6. எல்லோரும் இராமருக்குப் பிரியத்தைக் கூறுவதில் ஆவல் கொண்டவர்கள்; எல்லோரும் போரில் உற்சாகமுடையவர்கள்; எல்லோரும் இராமருக்குக் கைம்மாறு செய்வதில் நிச்சயமும் ஊக்கமும் உடையவர்கள்.

---

2. மஹேந்த்ராக்ராத்ஸமுத்பத்ய |
5. உந்நதா:- ஸீதாதர்சன-லங்காதஹன-கர்மபி: உந்நத சித்தா: |
6. ராமப்ரதீகாரே -ராமார்த்தம் ராவண நிக்ரஹே நிச்சிதார்த்தா: |

प्लवमानाःखमाप्लुत्य ततस्ते काननौकसः ।
नन्दनोपम-मासेदु-र्वनं द्रुमलतायुतम् ।। ७ ।।
यत्तन्मधुवनं नाम सुग्रीवस्याभिरक्षितम् ।
अधृष्यं सर्वभूतानां सर्वभूत-मनोहरम् ।। ८ ।।
यद्रक्षति महावीर्यः सदा दधिमुखः कपिः ।
मातुलः कपिमुख्यस्य सुग्रीवस्य महात्मनः ।। ९ ।।
ते तद्वनमुपागम्य बभूवुः परमोत्कटाः ।
वानरा वानरेन्द्रस्य मनः कान्तं महावनम् ।। १० ।।

ப்லவமானா: கமாப்லுத்ய ததஸ்தே கானநௌகஸ: ।
நந்தனோபம-மாஸேதுர்-வனம் த்ருமலதாயுதம் ।। 7 ।।
யத்தன்-மதுவனம் நாம ஸுக்ரீவஸ்யாபிரக்ஷிதம் ।
அத்ருஷ்யம் ஸர்வபூதானாம் ஸர்வபூதமனோஹரம் ।। 8 ।।
யத்ரக்ஷதி மஹாவீர்ய: ஸதா ததிமுக: கபி: ।
மாதுல: கபிமுக்யஸ்ய ஸுக்ரீவஸ்ய மஹாத்மன: ।। 9 ।।
தே தத்வன-முபாகம்ய பபூவு: பரமோத்கடா: ।
வானரா வானரேந்த்ரஸ்ய மன:காந்தம் மஹாவனம் ।। 10 ।।

7, ஆகாயத்தில் பாய்ந்து சென்ற அவ்வானரர்கள் மரங்களும் கொடிகளும் அடர்ந்த இந்திரனுடைய நந்தனம் போன்ற ஒரு வனத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

8. அது ஒரு பிராணியும் உட்புகமுடியாமல் நன்றாகக் காவல் செய்யப்பட்ட சுக்ரீவனுடைய மதுவனம். எல்லாப் பிராணிகளுடைய மனதையும் கவரக் கூடியது.

9. மகாத்மாவான வானர மன்னனுடைய மாமனும் மகாவீரனுமான ததிமுகன் என்பவன் அதை இடைவிடாது காத்து வந்தான்.

10. வானர வேந்தருக்குப் பிரியமான அந்தப் பெரிய வனத்தையடைந்த அவ்வானரர்கள் அடக்கமுடியாத உற்சாக முடையவர்களானார்கள்.

7. த்ருமசதாயுதம் । 9. யத்ரக்ஷதி மஹாவீர: ।

ततस्ते वानरा हृष्टा दृष्ट्वा मधुवनं महत् ।
कुमारमभ्ययाचन्त मधूनि मधुपिंगलाः ॥ ११ ॥
ततः कुमारस्तान् वृद्धाञ्जाम्बवत् प्रमुखान् कपीन् ।
अनुमान्य ददौ तेषां निसर्गं मधुभक्षणे ॥ १२ ॥
ततश्चानुमताः सर्वे संप्रहृष्टा वनौकसः ।
मुदिताश्च ततः केचित् प्रनृत्यन्तोऽभवंस्ततः ॥ १३ ॥

ததஸ்தே வானரா ஹ்ருஷ்டா த்ருஷ்ட்வா மதுவனம் மஹத் ।
குமார-மப்யயாசந்த மதூனி மது பிங்கலா: ॥ 11 ॥
தத: குமாரஸ்தான் வ்ருத்தான் ஜாம்பவத் ப்ரமுகான் கபீன் ।
அனுமான்ய ததௌ தேஷாம் நிஸர்க்கம் மதுபக்ஷணே ॥ 12 ॥
ததச்சானுமதா: ஸர்வே ஸம்ப்ரஹ்ருஷ்டா வநௌகஸ: ।
முதிதாச்ச தத: கேசித் ப்ரந்ருத்யந்தோऽபவம்ஸ்தத: ॥ 13 ॥

---

11. தேன் போன்ற நிறம் படைத்த வானரர்கள் விசாலமான அந்த மதுவனத்தைக் கண்டதால் களிப்புடன் இளவரசனை யணுகி மதுவைப் பருக அனுமதி கேட்டார்கள்.

12. ஜாம்பவான் முதலிய முதியோர்களின் ஸம்மதத்துடன் இளவரசன் அவர்களுக்கு மதுவுண்ண அனுமதி கொடுத்தான்.

13. அவ்வாறு உத்தரவு பெற்ற வானரர்களெல்லோரும் முன்னினும் அதிகமான மகிழ்ச்சி பொங்கியவர்களானார்கள். சிலர் கூத்தாடத் தொடங்கினார்கள்.

---

13. ஸுஸம்ஹ்ருஷ்டா ।

13. இதற்குமுன் இரண்டு சுலோகங்கள் அதிகபாடம்.
தே நிஸ்ருஷ்டா: குமாரேண தீமதா வாலிஸூனுனா ।
ஹரய: ஸமபத்யந்த த்ருமான் மதுகராகுலான் ॥
பக்ஷயந்த: ஸுகந்தீனிமூலானிச பலானி ச ।
ஜக்மு: ப்ரஹர்ஷம் தே ஸர்வே பபூவுச்ச மதோத்கடா: ॥

गायन्ति केचित् प्रणमन्ति केचित् नृत्यन्ति केचित् प्रहसन्ति केचित् ।
पतन्ति केचि-द्विचरन्ति केचित्
प्लवन्ति केचित् प्रलपन्ति केचित् ॥ १४ ॥
परस्परं केचिदुपाश्रयन्ते परस्परं केचिदुपाक्रमन्ते ।
परस्परं केचिदुपब्रुवन्ते परस्परं केचिदुपारमन्ते ॥ १५ ॥

காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித் ந்ருத்யந்தி கேசித்
ப்ரஹஸந்தி கேசித் ǀ
பதந்தி கேசித்-விசரந்தி கேசித் ப்லவந்தி கேசித்
ப்ரலபந்தி கேசித் ǁ 14 ǁ

பரஸ்பரம் கேசிதுபாச்ரயந்தே
பரஸ்பரம் கேசிதுபாக்ரமந்தே ǀ
பரஸ்பரம் கேசிதுபப்ருவந்தே
பரஸ்பரம் கேசிதுபாரமந்தே ǁ 15 ǁ

---

14. சிலர் பாடுகிறார்கள்; சிலர் கவிழ்ந்து விழுகிறார்கள், சிலர் நடனம் புரிகிறார்கள், சிலர் பரிகாசமாகச் சிரிக்கிறார்கள், சிலர் கீழே குதிக்கிறார்கள், சிலர் இங்குமங்கும் உலவுகிறார்கள், சிலர் உயரக் கிளம்புகிறார்கள், சிலர் பிதற்றுகிறார்கள்.

15. சிலர் ஒருவரையொருவர் கட்டிக் கொள்ளுகிறார்கள், சிலர் ஒருவரையொருவர் தள்ளுகிறார்கள், சிலர் ஒருவருடனொருவர் நெருங்கிப் பேசுகிறார்கள், சிலர் ஒருவரோடொருவர் கூடி விளையாடுகிறார்கள்.

---

14. படந்தி கேசித் ǀ

ஒ. ஒருவர் வாய் கொள்ளுந் தேனை ஒருவர் உண்டெளிதில் போவார்
ஒருவர் கைக் கொள்ளுந் தேனை ஒருவர் கொண்டோடிப் போவார்
ஒருவரோடொருவ ரொன்றத் தழுவுவர் விழுவரோடி
ஒருவர் மேலொருவரேறி ஓகையென்றுவகை கூர்வார்.

—கம்பர்.

दुमाद् द्रुमं केचिदभिद्रवन्ते क्षितौ नगाग्रान्निपतन्ति केचित् ।
महीतलात् केचिदुदीर्णवेगा महाद्रुमाग्राण्यभिसंपतन्ति ॥ १६ ॥
गायन्त-मन्यः प्रहसन्नुपैति हसन्त-मन्यः प्ररुदन्नुपैति ।
रुदन्त-मन्यः प्रणुदन्नुपैति नुदन्तमन्यः प्रणदन्नुपैति ॥ १७ ॥
समाकुलं तत् कपिसैन्यमासीन्मधुप्रपानोत्कटसत्वचेष्टम् ।
न चात्र कश्चिन्न बभूव मत्तो न चात्र कश्चिन्न बभूव तृप्तः ॥ १८ ॥

த்ருமாத்-த்ருமம் கேசிதபித்ரவந்தே
க்ஷிதௌ நகாக்ராந்நிபதந்தி கேசித் ।
மஹீதலாத் கேசிதுதீர்ணவேகா
மஹாத்ருமாக்ராண்யபிஸம்பதந்தி ॥ 16 ॥
காயந்தமன்ய: ப்ரஹஸன்னுபைதி
ஹஸந்தமன்ய: ப்ரருதன்னுபைதி
ருதந்த-மன்ய: ப்ரணுதன்னுபைதி
நுதந்தமன்ய: ப்ரணதன்னுபைதி ॥ 17 ॥
ஸமாகுலம் தத் கபிஸைன்யமாஸீன்-
மதுப்ரபானோத்கட ஸத்வ சேஷ்டம் ।
ந சாத்ர கச்சிந் ந பபூவ மத்தோ
ந சாத்ர கச்சிந் ந பபூவ த்ருப்த: ॥ 18 ॥

---

16. சிலர் மரத்திற்குமரம் தாவுகிறார்கள், சிலர் மரத்தின் உச்சியிலிருந்து தரையில் குதிக்கிறார்கள், சிலர் தரையிலிருந்து வேகமாய்க் கிளம்பிப் பெரிய மரங்களின் கிளைகளைத் தாவிப் பற்றுகிறார்கள்.

17. பாடுபவனைச் சிரிப்பவனொருவன் அணுகுகிறான்; சிரிப்பவனை வேறொருவன் அழுது கொண்டே நெருங்குகிறான்; அழுபவனை ஒருவன் சீண்டிக் கொண்டு நெருங்குகிறான்; சீண்டுபவனை இன்னொருவன் கூச்சலிட்டுக் கொண்டு நெருங்குகிறான்.

18. அந்த வானரசேனை மதுபானத்தால் வெறிபிடித்த சேஷ்டை மிகுந்து தலை தடுமாறியதாயிற்று. இதில் களிப்பேறாதவனோ திருப்தியடையாதவனோ எவனுமில்லை.

ततो वनं तत्परिभक्ष्यमाणं द्रुमांश्च विध्वंसित-पत्रपुष्पान् ।
समीक्ष्य कोपाद्दधिवक्त्र नामा निवारयामास कपिः कपींस्तान् ।। १९ ।।

स तैः प्रवृद्धैः परिभर्त्स्यमानो वनस्य गोप्ता हरिवीरवृद्धः ।
चकार भूयो मतिमुग्रतेजा वनस्य रक्षां प्रति वानरेभ्यः ।। २० ।।

ததோ வனம் தத்பரிபக்ஷ்யமாணம்
த்ருமாம்ச்ச வித்வம்ஸித-பத்ரபுஷ்பான் ।
ஸமீக்ஷ்ய கோபாத்ததிவக்த்ர நாமா
நிவாரயாமாஸ கபி: கபீம்ஸ்தான் ।। 19 ।।

ஸ தை: ப்ரவ்ருத்தை: பரிபர்த்ஸ்யமானோ வனஸ்ய கோப்தா ஹரிவீரவ்ருத்த: ।
சகாரபூயோ மதிமுக்ரதேஜா வனஸ்ய ரக்ஷாம் ப்ரதி வானரேப்ய: ।। 20 ।।

---

19. இலைகளும் பூக்களும் நாசஞ் செய்யப்பட்ட மரங்களையும் மதுவெல்லாம் பருகப்பட்ட வனத்தையும் கண்ட ததிமுகன் என்ற வானரன் கோபங் கொண்டு அவர்களைத் தடுத்தான்.

20. வனத்தைக் காப்பவனும், வானரவீரர்களில் முதியவனும், மிகுந்த பராக்கிரம் முடையவனுமான அவன் மிதமிஞ்சிய அவர்களால் பலவாறு ஏளனம் பண்ணப்படவே மேற்கொண்டு வனத்தைக்காக்க எண்ணிப் பின் வருமாறு செய்தான்.

---

21. உவாச காம்ச்சித் பருஷாண்யபீதம் ।

उवाच कांश्चित् परुषाणि धृष्ट-मसक्तमन्यांश्च तलैर्जघान ।
समेत्य कैश्चित् कलहं चकार तथैव साम्नोपजगाम कांश्चित् ॥ २१ ॥

स तैर्मदात् संपरिवार्य वाक्यै-र्बलाच्च तेन प्रतिवार्यमाणैः ।
प्रधर्षितस्त्यक्तभयैः समेत्य प्रकृष्यते चाप्यनवेक्ष्य दोषम् ॥ २२ ॥

உவாச காம்ச்சித் பருஷாணி த்ருஷ்ட-
மஸக்தமன்யாம்ச்ச தலைர்ஜகான ।
ஸமேத்ய கைச்சித் கலஹஞ் சகார
ததைவ ஸாம்னோபஜகாம காம்ச்சித் ॥ 21 ॥

ஸ தைர்-மதாத் ஸம்பரிவார்ய வாக்யைர்
பலாச்ச தேன ப்ரதிவார்யமாணை: ।
ப்ரதர்ஷிதஸ்த்யக்தபயை: ஸமேத்ய
ப்ரக்ருஷ்யதே சாப்யனவேக்ஷ்ய தோஷம் ॥ 22 ॥

---

21. சிலரைக் கண்டபடி வைதான், வேறு சிலரை ஓயாமல் கைகளாலறைந்தான், சிலரை நெருங்கிக் கலகம் செய்தான், சிலரை நல்ல பேச்சால் வேண்டினான்.

22. இவ்வாறு அவனால் தடுக்கப்பட்டவர்கள் மதவெறியாலும் உடல் வலிமையாலும் பயமின்றித் தாங்கள் செய்வது குற்றமென்றறியாமல் ஒன்று கூடி அவனைச் சூழ்ந்து கொண்டு தாக்கி இழுத்தார்கள்.

---

22. ஸ தைர்மதா-தப்ரதிவார்ய வேகைர்பலாச்ச தேன । ப்ரதர்ஷணேத்யக்த-।

नखैस्तुदन्तो दशनै-र्दशन्त-स्तलैश्च पादैश्च समापयन्तः ।
मदात् कपिं तं कपयः समग्रा महावनं निर्विषयं च चक्रुः ॥ २३ ॥

इति एकषष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २६६७)

நகைஸ் துதந்தோ தசனைர்தசந்தஸ்-
தலைச்ச பாதைச்ச ஸமாபயந்த: ।
மதாத் கபிம் தம் கபய: ஸமக்ரா
மஹாவனம் நிர்விஷயஞ் ச சக்ரு: ॥ 23 ॥

இதி ஏகஷஷ்டிதம: ஸர்க்க:
(ஆதித, ச்லோகா: 2667)

---

23. ஒன்று சேர்ந்த அவர்கள் குடிவெறியால் அவனை நகங்களால் கீறிப் பற்களால் கடித்து, கையாலடித்துக் காலாலுதைத்து அவ்வனத்தை ஒன்றுமில்லாமல் செய்து விட்டார்கள்.

இங்ஙனம் அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2667)

23. ஸமந்தான் மஹாவனம் ।

द्विषष्टितमः सर्गः
वनपालप्रधर्षणम्

तानुवाच हरिश्रेष्ठो हनुमान् वानरर्षभः ।
अव्यग्रमनसो यूयं मधु सेवत वानराः ।। १ ।।
अहमावारयिष्यामि युष्माकं परिपन्थिनः ।। २ ।।
श्रुत्वा हनुमतो वाक्यं हरीणां प्रवरोऽङ्गदः ।
प्रत्युवाच प्रसन्नात्मा पिबन्तु हरयो मधु ।। ३ ।।

த்விஷஷ்டடிதம: ஸர்க்க:
வனபால ப்ரதர்ஷணம்

தானுவாச ஹரிச்ரேஷ்டோ ஹனுமான் வானரர்ஷப: ।
அவ்யக்ரமனஸோ யூயம் மது ஸேவத வானரா: ।। 1 ।।
அஹ-மாவாரயிஷ்யாமி யுஷ்மாகம் பரிபந்தின: ।। 2 ।।
ச்ருத்வா ஹனுமதோ வாக்யம் ஹரீணாம் ப்ரவரோऽங்கத: ।
ப்ரத்யுவாச ப்ரஸன்னாத்மா பிபந்து ஹரயோ மது ।। 3 ।।

அறுபத்திரண்டாவது ஸர்க்கம்
மதுவனக்காவலர்களை அச்சுறுத்துதல்

1-2. வானரர்களின் தலைவரும் உத்தமருமான ஹனுமார் அவர்களிடம் 'வானரர்களே! நீங்கள் கவலையில்லாமல் மதுவைப் பருகுங்கள். உங்களை எதிர்ப்பவர்களை நான் விலக்கிவிடுகிறேன்' என்று கூறினார்.

3-4. வானரர்களின் தலைவனான அங்கதனும் ஹனுமாருடைய வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியுடன் 'வானரர்கள் மதுவைப் பருகட்டும். காரியசித்தி பெற்ற ஹனுமாருடைய வார்த்தை தகாததாயிருந்தாலும் என்னால் அவசியம் பூர்த்திசெய்யப்பட வேண்டும். இப்படிப்பட்டதைப் பற்றிக் கேட்க வேண்டுமா?' என்று கூறினான்.

अवश्यं कृतकार्यस्य वाक्यं हनुमतो मया ।
अकार्यमपि कर्तव्यं किमंग पुनरीदृशम् ।। ४ ।।

अंगदस्य मुखाच्छ्रुत्वा वचनं वानरर्षभाः ।
साधु साध्विति संहृष्टा वानराः प्रत्यपूजयन् ।। ५ ।।

पूजयित्वाऽङ्गदं सर्वे वानरा वानरर्षभम् ।
जग्मुर्मधुवनं यत्र नदी वेगा इव द्रुतम् ।। ६ ।।

அவச்யம் க்ருதகார்யஸ்ய வாக்யம் ஹனுமதோ மயா ।
அகார்யமபி கர்த்தவ்யம் கிமங்க புனரீத்ருசம் ।। 4 ।।

அங்கதஸ்ய முகாச்ச்ருத்வா வசனம் வானரர்ஷபா: ।
ஸாது ஸாத்விதி ஸம்ஹ்ருஷ்டா வானரா: ப்ரத்யபூஜயன் ।। 5 ।।

பூஜயித்வாऽங்கதம் ஸர்வே வானரா வானரர்ஷபம் ।
ஜக்முர்-மதுவனம் யத்ர நதீவேகா இவ த்ருதம் ।। 6 ।।

---

5. வானரவீரர்கள் அங்கதனுடைய வாயினின்று வந்த வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சிபொங்க 'நல்லது, நல்லது' என்று கொண்டாடினார்கள்.

6. அவர்களெல்லோரும் தலைவனான அங்கதனைப் போற்றிப் புகழ்ந்து இன்னும் மதுவிருக்கும் வனப் பிரதேசத்தை நாடிப் பெருக்கெடுத்த நதிபோல் வேகமாய்ப் பாய்ந்தார்கள்.

---

2. அஹமாவாஜயிஷ்யாமி ।

ते प्रविष्टा मधुवनं पालानाक्रम्य वीर्यतः ।
अतिसर्गाच्च पटवो दृष्ट्वा श्रुत्वा च मैथिलीम् ॥
पपुः सर्वे मधु तदा रसवत्फल-माददुः ॥ ७ ॥
उत्पत्य च ततः सर्वे वनपालान् समागतान् ।
ताडयन्ति स्म शतशः सक्तान् मधुवने तदा ॥ ८ ॥
मधूनि द्रोणपात्राणि बाहुभिः परिगृह्य ते ।
पिबन्ति सहिताः सर्वे निघ्नन्ति स्म तथापरे ॥ ९ ॥

தே ப்ரவிஷ்டா மதுவனம் பாலானாக்ரம்ய வீர்யத: ।
அதிஸர்க்காச்ச படவோ த்ருஷ்ட்வா ச்ருத்வா ச மைதிலீம் ॥
பபு: ஸர்வே மது ததா ரஸவத்பல-மாதது: ॥ 7 ॥
உத்பத்ய ச தத: ஸர்வே வனபாலான் ஸமாகதான் ।
தாடயந்தி ஸ்ம சதச: ஸக்தான் மதுவனே ததா ॥ 8 ॥
மதூனி த்ரோணபாத்ராணி பாஹுபி: பரிக்ருஹ்ய தே ।
பிபந்தி ஸஹிதா: ஸர்வே நிக்னந்தி ஸ்ம ததாபரே ॥ 9 ॥

---

7. மைதிலியைக் கண்டும் அவளுடைய செய்தியைக் கேட்டும் வந்த விஷயத்தில் ஏற்பட்ட உற்சாகப் பெருக்கினால் மதுவனத்தில் புகுந்த அவர்களெல்லோரும் தைரியமாகக் காவற்காரர்களைப் பொருட்படுத்தாமல் மதுவைப் பருகினார்கள். இனிய பழங்களையும் உண்டார்கள்.

8. மதுவனத்தில் அக்கரையுள்ள காவற்காரர்கள் அங்கு நெருங்கிய பொழுது வானரர்களெல்லோரும் அவர்கள் மேல் பாய்ந்து அவர்களைப் பல விதமாய்த் தாக்கினார்கள்.

9. அவர்கள் ஒன்று கூடி தொன்னை போல் கைகளைக் குவித்துக் கொண்டு மதுவை ஏந்திக் குடித்தார்கள்; சிலர் அப்படியே சிதற விட்டார்கள்.

---

7. பாலானாக்ரம்ய சக்தித: । 8. தே தாடயந்த: சதச: ஸக்தா ।

9. பிபந்திகபய: கேசித் ஸங்கசஸ் தத்ர ஹ்ருஷ்டவத் ।

केचित् पीत्वाऽपविध्यन्ति मधूनि मधुपिंगलाः ।
मधूच्छिष्टेन केचिच्च जघ्नुरन्योन्य-मुत्कटाः ॥ १० ॥
अपरे वृक्षमूले तु शाखां गृह्य व्यवास्थिताः ।
अत्यर्थं च मदग्लानाः पर्णान्यास्तीर्य शेरते ॥ ११ ॥
उन्मत्तभूताः प्लवगा मधुमत्ताश्च हृष्टवत् ।
क्षिपन्ति च तदाऽन्योन्यं स्खलन्ति च तथापरे ॥ १२ ॥
केचित् क्ष्वेलां प्रकुर्वन्ति केचित् कूजन्ति हृष्टवत् ।
हरयो मधुना मत्ताः केचित् सुप्ता महीतले ॥ १३ ॥

கேசித் பீத்வாऽபவித்யந்தி மதூனி மதுபிங்கலா: ।
மதூச்சிஷ்டேன கேசிச்ச ஜக்னுரன்யோன்ய-முத்கடா: ॥ 10 ॥
அபரே வ்ருக்ஷமூலே து சாகாம் க்ருஹ்ய வ்யவஸ்திதா: ।
அத்யர்த்தஞ்ச மதக்லானா: பர்ணான்யாஸ்தீர்ய சேரதே ॥ 11 ॥
உன்மத்தபூதா: ப்லவகா மது-மத்தாச்ச ஹ்ருஷ்டவத் ।
க்ஷிபந்தி ச ததாऽன்யோன்யம் ஸ்கலந்தி ச ததாபரே ॥ 12 ॥
கேசித்க்ஷ்வேலாம் ப்ரகுர்வந்தி கேசித் கூஜந்தி ஹ்ருஷ்டவத் ।
ஹரயோ மதுனா மத்தா: கேசித் ஸுப்தா மஹீதலே ॥ 13 ॥

10. பிங்கள வாணம் படைத்த சிலர் குடித்துவிட்டு மதுவைக் கீழே கொட்டிப் பாழாக்கினார்கள். குடிவெறிகொண்ட சிலர் ஒருவரையொருவர் குடித்த மிகுதியால் அடித்துக் கொண்டார்கள்.

11. மதத்தினால் களைத்த சிலர் கிளைகளைப் பிடித்துக் கொண்டு நின்றார்கள். சிலர் மரத்தடியில் இலைகளைப் பரப்பிப் படுத்துக் கொண்டார்கள்.

12. உன்மத்தர்களான வானரர்கள் தள்ளாடி வீழ்ந்தார்கள். பித்துப் பிடித்தவர்களைப் போல் சிலர் வெறியின் வேகத்தால் ஒருவரையொருவர் தள்ளிக் கொண்டார்கள்.

13. மதுவால் மதமேறின சிலர் தரையில் படுத்துறங்கினார்கள். சிலர் சிங்கநாதம் செய்தார்கள். சிலர் மகிழ்ச்சியைக் காட்ட கீச்சுக்கீச்சென்று கத்தினார்கள்.

12. உன்மத்தவேகா: । க்ஷிபந்த்யபி ।

कृत्वा केचिद्धसन्त्यन्ये केचित् कुर्वन्ति चेतरत् ।
कृत्वा केचिद्वदन्त्यन्ये केचिद्बुध्यन्ति चेतरत् ॥ १४ ॥

येऽप्यत्र मधुपालाः स्युः प्रेष्या दधिमुखस्य तु ।
तेऽपि तै-र्वानरै-र्भीमैः प्रतिषिद्धा दिशो गताः ॥ १५ ॥

जानुभिस्तु प्रकृष्टाश्च देवमार्गं प्रदर्शिताः ।
अब्रुवन् परमोद्विग्ना गत्वा दधिमुखं वचः ॥ १६ ॥

க்ருத்வா கேசித்தஸந்த்யன்யே கேசித் குர்வந்தி சேதரத் ।
க்ருத்வா கேசித்வதந்த்யன்யே கேசித்புத்த்யந்தி சேதரத் ॥ 14 ॥
யேடப்யத்ர மதுபாலா: ஸ்யு: ப்ரேஷ்யா ததிமுகஸ்ய து ।
தேடபி தைர் வானரைர்-பீமை: ப்ரதிஷித்தா திசோ கதா: ॥ 15 ॥
ஜானுபிஸ்து ப்ரக்ருஷ்டாச்ச தேவமார்க்கம் ப்ரதர்சிதா: ।
அப்ருவன் பரமோத்விக்னா கத்வா ததிமுகம் வச: ॥ 16 ॥

---

14. சிலர் ஒரு செயலைச் செய்து விட்டுச் சிரிப்பார்கள்; சிலர் மற்றொரு செயலைச் செய்வார்கள்; சிலர் ஒன்றைச் செய்து விட்டு அதனைச் சொல்லுவார்கள்; சிலர் வேறொன்று செய்ய முற்படுவார்கள்.

15. அங்கு ததிமுகனுக்குப் பணியாட்களாயிருந்த மதுவின் காவலர்கள் அந்த பயங்கரமான வானரர்களால் அடிக்கப்பட்டு திக்குத் திக்காக ஓடிவிட்டார்கள்.

16. முழங்கால்களைப் பிடித்து இழுக்கப்பட்டும் அபானத்துவாரத்தைக் காட்டப்பட்டும் மிகவும் மனம் நொந்து போன சிலர் ததிமுகனிடம் போய்ப் பின்வருமாறு கூறினார்கள்.

---

13. க்ஷ்வேலாம்—'க்ஷ்வேலா து ஸிஹ்ம நாதஸ்யாத்' இத்யமர: ।

14. த்ருஷ்டா: கேசித்தஸந்த்யன்யே ।

हनूमता दत्तवरै-र्हतं मधुवनं बलात् ।
वयं च जानुभिः कृष्टा देवमार्गं च दर्शिताः ।। १७ ।।
ततो दधिमुखः क्रुद्धो वनपस्तत्र वानरः ।
हतं मधुवनं श्रुत्वा सान्त्वयामास तान् हरीन् ।। १८ ।।
इहागच्छत गच्छामो वानरान् बलदर्पितान् ।
बलेन वारयिष्यामो मधु भक्षयतो वयम् ।। १९ ।।
श्रुत्वा दधिमुखस्येदं वचनं वानरर्षभाः ।
पुनर्वीरा मधुवनं तेनैव सहसा ययुः ।। २० ।।

ஹனுமதா தத்த வரைர்-ஹதம் மதுவனம் பலாத் ।
வயஞ் ச ஜானுபி: க்ருஷ்டா தேவமார்க்கஞ் ச தர்சிதா: ॥ 17 ॥
ததோ ததிமுக: க்ருத்தோ வனபஸ்தத்ர வானர: ।
ஹதம் மதுவனம் ச்ருத்வா ஸாந்த்வயாமாஸ தான் ஹரீன் ॥ 18 ॥
இஹாகச்சத கச்சாமோ வானரான் பலதர்ப்பிதான் ।
பலேன வாரயிஷ்யாமோ மது பக்ஷயதோ வயம் ॥ 19 ॥
ச்ருத்வா ததிமுகஸ்யேதம் வசனம் வானரர்ஷபா: ।
புனர்வீரா மதுவனம் தேனைவ ஸஹஸா யயு: ॥ 20 ॥

17. 'ஹனுமாரிடம் வரம் பெற்றவர்களால் மதுவனம் வலுவில் அழிக்கப்பட்டதாய் விட்டது. நாங்களும் முழங்கால்களால் பிடித்திழுக்கப்பட்டு அபானத்துவாரத்தையும் காண்பிக்கப்பட்டோம்.'

18. வனத்தைப் பரிபாலிக்கும் ததிமுகன் என்ற வானரன் மதுவனம் அழிந்து போனதைக் கேட்டுக் கோபம் மூண்டு அவ்வானரர்களைச் சமாதானப்படுத்திப் பின்வருமாறு கூறினான்.

19. 'இங்கு வாருங்கள். நாம் போய் மதுவைப்பருகிவிட்டு பலத்தால் கொழுப்படைந்திருக்கும் அவ்வானரர்களை வலுக் கொண்டு தடுப்போம்.'

20. வானர வீரர்கள் ததிமுகனுடைய அவ்வார்த்தையைக் கேட்டு அவனுடன் மதுவனத்திற்கு மறுபடி விரைந்து சென்றார்கள்.

17. தேவமார்க்கம்- அபானத்வாரம்! தேவசப்தோ வாயுவாசீ உபநிஷதி வாயுலோகே தேவலோக சப்தப்ரயோகாத் ।

मध्ये चैषां दधिमुखः प्रगृह्य तरसा तरुम् ।
समभ्यधावद्वेगेन ते च सर्वे प्लवंगमाः ।। २१ ।।
ते शिलाः पादपांश्चापि पर्वतांश्चापि वानराः ।
गृहीत्वाऽभ्यगमन् क्रुद्धा यत्र ते कपिकुंजराः ।। २२ ।।
ते स्वामिवचनं वीरा हृदयेष्ववसज्य तत् ।
त्वरया ह्यभ्यधावन्त सालतालशिलायुधाः ।। २३ ।।

மத்யே சைஷாம் ததிமுக: ப்ரக்ருஹ்ய தரஸா தரும் ।
ஸமப்யதாவத் வேகேன தே ச ஸர்வே ப்லவங்கமா: ।। 21 ।।

தே சிலா: பாதபாம்ச்சாபி பர்வதாம்ச்சாபி வானரா: ।
க்ருஹீத்வா ऽப்யகமன் க்ருத்தா யத்ர தே கபிகுஞ்ஜரா: ।। 22 ।।

தே ஸ்வாமிவசனம் வீரா ஹ்ருதயேஷ்வவஸஜ்ய தத் ।
த்வரயா ஹ்யப்யதாவந்த ஸாலதாலசிலாயுதா: ।। 23 ।।

---

21. அவ் வானரர்கள் சூழ நடுவில் வந்த ததிமுகன் தன் வலிமையால் ஒரு மரத்தைப் பிடுங்கிக் கொண்டு வேகமாய் ஓடினான்.

22. சினங் கொண்ட மற்ற வானரர்களும் கற்களையும் மரங்களையும் குன்றுகளையும் எடுத்துக் கொண்டு வானரவீரர்கள் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

23. ஆச்சாமரம் பனைமரம் ஆகியவற்றை ஆயுதங்களாகக் கொண்ட அவ்வீரர்கள் தலைவன் வார்த்தையை மனதில் கொண்டு பரபரப்புடன் மேல் விழுந்து தாக்கினார்கள்.

---

18. ஹதம் மதுவனம் த்ருஷ்ட்வா ।
19. ஏதாகச்சத கச்சாமோ வானரானதி-தர்ப்பிதான் பலேனாவாரயிஷ்யாமி ।
20. ஸஹிதா யயு: । 21. ஸம்ப்ரக்ருஹ்ய மஹாதரும் ।

वृक्षस्थांश्च तलस्थांश्च वानरान् बलदर्पितान् ।
अभ्यक्रामंस्ततो वीराः पालास्तत्र सहस्रशः ॥ २४ ॥

अथ दृष्ट्वा दधिमुखं क्रुद्धं वानरपुंगवाः ।
अभ्यदावन्त वेगेन हनुमत्प्रमुखास्तदा ॥ २५ ॥

तं सवृक्षं महाबाहु-मापतन्तं महाबलम् ।
आर्यकं प्राहरत्तत्र बाहुभ्यां कुपितोऽङ्गदः ॥ २६ ॥

வ்ருக்ஷஸ்தாம்ச்ச ஸ்தலஸ்தாம்ச்ச வானரான் பலதர்ப்பிதான் ।
அப்யக்ராமம்ஸ்ததோ வீரா: பாலாஸ்தத்ர ஸஹஸ்ரச: ॥ 24 ॥
அத த்ருஷ்ட்வா ததிமுகம் க்ருத்தம் வானரபுங்கவா: ।
அப்யதாவந்த வேகேன ஹனுமத்ப்ரமுகாஸ் ததா ॥ 25 ॥
தம் ஸவ்ருக்ஷம் மஹாபாஹு-மாபதந்தம் மஹாபலம் ।
ஆர்யகம் ப்ராஹரத் தத்ர பாஹுப்யாம் குபிதோऽங்கத: ॥ 26 ॥

---

24. தைரியசாலிகளான காவல்காரர்கள் பலரும் வலிமையால் கர்வங் கொண்டவர்களும் மரத்திலும் தரையிலும் இருந்தவர்களுமான வானரர்களை ஆங்காங்கு சூழ்ந்து மடக்கிக் கொண்டார்கள்.

25. அப்பொழுது ஹனுமார் முதலிய வானரத்தலைவர்கள் ததிமுகன் கோபமூண்டிருப்பதைக் கண்டு வேகமாய் ஓடி வந்தார்கள்.

26. தோள்வலிபடைத்தவனும் பலம் மிகுந்தவனும் பெரியவனும் மரத்தை யெடுத்துக் கொண்டு எதிர்த்து வருபவனுமான அவனை அங்கதன் கோபத்துடன் இருகைகளாலும் ஓங்கி அறைந்தான்.

23-24. சில பாடங்களில் இல்லை. அதிகபாடம்—'பலாந்நிவாரயந்தச்ச ஆஸேதுர்—ஹரயோ ஹரீன் ஸந்தஷ்டோஷ்டபுடா: க்ருத்தா பர்த்ஸயந்தோ முஹுர் முஹு: ॥

मदान्धश्च न वेदैन-मार्यकोयं ममेति सः ।
अथैनं निष्पिपेषाशु वेगवद्वसुधातले ॥ २७ ॥
स भग्नबाहूरूभुजो विह्वलः शोणितोक्षितः ।
मुमोह सहसा वीरो मुहूर्तं कपिकुंजरः ॥ २८ ॥
स समाश्वास्य सहसा संक्रुद्धो राजमातुलः ।
वानरान् वारयामास दण्डेन मधुमोहितान् ॥ २९ ॥
स कथंचिद्विमुक्तस्तै-र्वानरै-र्वानरर्षभः ।
उवाचैकान्त-माश्रित्य भृत्यान् स्वान् समुपागतान् ॥ ३० ॥

மதாந்தச்ச ந வேதைன-மார்யகோயம் மமேதி ஸ: ।
அதைனம் நிஷ்பிபேஷாசு வேகவத் வஸுதா-தலே ॥ 27 ॥
ஸ பக்னபாஹூருபுஜோ விஹ்வல: சோணிதோக்ஷித: ।
முமோஹ ஸஹஸா வீரோ முஹூர்த்தம் கபிகுஞ்ஜர: ॥ 28 ॥
ஸ ஸமாச்வாஸ்ய ஸஹஸா ஸங்க்ருத்தோ ராஜமாதுல: ।
வானரான் வாரயாமாஸ தண்டேன மதுமோஹிதான் ॥ 29 ॥
ஸ கதஞ்சித் விமுக்தஸ்தைர்-வானரைர்-வானரர்ஷப: ।
உவாசைகாந்த-மாச்ரித்ய ப்ருத்யான் ஸ்வான் ஸமுபாகதான் ॥ 30 ॥

---

27. மதத்தால் செருக்குற்றிருந்த அங்கதன் பிறகு இவனைத் தனது மரியாதைக்குரியவன் என்று கூட அறியாமல் தரையில் வேகமாய்த் தள்ளி பிசைந்து விட்டான்.

28. வீரனாகிய அவ்வானரத்தலைவன் கைகளிலும் கால்களிலும் தோள்களிலும் காயம்பட்டு இரத்தம்பாய சிறிதுகாலம் விலவிலத்து மூர்ச்சித்துக் கிடந்தான்.

29. அரசனின் மாமனாகிய அவன் மூர்ச்சை தெளிந்து சீக்கிரமே எழுந்து இன்னும் அதிகமான கோபத்துடன் மதுவெறி கொண்ட வானரர்களைத் தடிகொண்டு தடுத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டான்.

30. வானரத்தலைவனான அவன் அவர்களிடமிருந்து எப்படியோ விடுபட்டுத் தனியான ஓரிடத்தையடைந்து தன்னுடன் வந்திருந்த பணியாட்களிடம் பின் வருமாறு கூறினான்.

एते तिष्ठन्तु गच्छामो भर्ता नो यत्र वानरः ।
सुग्रीवो विपुलग्रीवः सह रामेण तिष्ठति ।। ३१ ।।
सर्वं चैवांगदे दोषं श्रावयिष्यामि पार्थिवे ।
अमर्षी वचनं श्रुत्वा घातयिष्यति वानरान् ।। ३२ ।।
इष्टं मधुवनं ह्येतत् सुग्रीवस्य महात्मनः ।
पितृपैतामहं दिव्यं देवैरपि दुरासदम् ।। ३३ ।।
स वानरानिमान् सर्वान् मधुलुब्धान् गतायुषः ।
घातयिष्यति दण्डेन सुग्रीवः ससुहृज्जनान् ।। ३४ ।।

ஏதே திஷ்டந்து கச்சாமோ பர்த்தா நோ யத்ர வானர: ।
ஸுக்ரீவோ விபுலக்ரீவ: ஸஹ ராமேண திஷ்டதி ।। 31 ।।
ஸர்வஞ் சைவாங்கதே தோஷம் ச்ராவயிஷ்யாமி பார்த்திவே ।
அமர்ஷீ வசனம் ச்ருத்வா காதயிஷ்யதி வானரான் ।। 32 ।।
இஷ்டம் மதுவனம் ஹ்யேதத் ஸுக்ரீவஸ்ய மஹாத்மன: ।
பித்ருபைதாமஹம் திவ்யம் தேவைரபி துராஸதம் ।। 33 ।।
ஸ வானரானிமான் ஸர்வான் மதுலுப்தான் கதாயுஷ: ।
காதயிஷ்யதி தண்டேன ஸுக்ரீவ: ஸஸுஹ்ருஜ்ஜனான் ।। 34 ।।

31. 'இவர்கள் இங்கிருக்கட்டும். நமது அரசனும் அழகிய கழுத்துப் படைத்தவருமான சுக்ரீவர் ஸ்ரீராமருடன் உள்ள இடத்திற்கு நாம் போவோம்.

32. 'அங்கதன் செய்த குற்றங்களையெல்லாம் அரசனிடம் நான் தெரிவிக்கிறேன். அதைக் கேட்டு அவர் கோபங்கொண்டு வானரர்களை தண்டிப்பார்.

33. 'இந்த மதுவனம் மஹாத்மாவான சுக்ரீவனுக்கு மிகவும் பிரியமானது; தாதை மூதாதை வழியாக வந்தது; மிக அழகியது; தேவர்களாலும் அணுகமுடியாதது.

34. 'மதுவில் துராசை கொண்டவர்களும் ஆயுள் முடிந்து விட்டவர்களுமான இந்த வானரர்களனைவரையும் அவர்களுக்கு வேண்டியவர்களுடன் சுக்ரீவர் தண்டித்துத் தொலைத்துவிடுவார்.

29. சில பாடங்களில் இல்லை. 30. உவாசைகாந்த-மாகத்ய ।

वध्या ह्येते दुरात्मानो नृपाज्ञापरिभाविनः ।
अमर्षप्रभवो रोषः सफलो नो भविष्यति ॥ ३५ ॥
एवमुक्त्वा दधिमुखो वनपालान् महाबलः ।
जगाम सहसोत्पत्य वनपालैः समन्वितः ॥ ३६ ॥
निमेषान्तरमात्रेण स हि प्राप्तो वनालयः ।
सहस्रांशुसुतो धीमान् सुग्रीवो यत्र वानरः ॥ ३७ ॥
रामं च लक्ष्मणं चैव दृष्ट्वा सुग्रीवमेव च ।
समप्रतिष्ठां जगती-माकाशान्निपपात ह ॥ ३८ ॥

வத்யாஹ்யேதே துராத்மானோ ந்ருபாஜ்ஞாபரிபாவின: |
அமர்ஷப்ரபவோ ரோஷ: ஸபலோ நோ பவிஷ்யதி || 35 ||
ஏவமுக்த்வா ததிமுகோ வனபாலான் மஹாபல: |
ஜகாம ஸஹஸோத்பத்ய வனபாலை: ஸமன்வித: || 36 ||
நிமேஷாந்தரமாத்ரேண ஸ ஹி ப்ராப்தோ வனாலய: |
ஸஹஸ்ராம்சுஸுதோ தீமான் ஸுக்ரீவோ யத்ர வானர: || 37 ||
ராமஞ் ச லக்ஷ்மணஞ் சைவ த்ருஷ்ட்வா ஸுக்ரீவ-மேவ ச |
ஸமப்ரதிஷ்டாம் ஜகதீ-மாகாசாந்நிபபாத ஹ || 38 ||

---

35. 'அரசர் கட்டளையை மீறிய இந்த துஷ்டர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள். அடக்கமுடியாதெழுந்துள்ள நமது கோபம் பயனளிக்கப் போகிறது.'

36. மகாபலசாலியான ததிமுகன் தோட்டக்காரர்களிடம் இவ்வாறு கூறிவிட்டு அவர்களுடன் கூட உடனே கிளம்பிச் சென்றான்.

37. அவ்வானரர் ஒரு நிமிஷத்தில் சூரியபுத்திரனும் புத்திமானுமான சுக்ரீவன் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

38. ஸ்ரீராமரையும் லக்ஷ்மணரையும் சுக்ரீவனையும் கண்டதும் ஆகாயத்திலிருந்து சம நிலமான பூமியில் இறங்கினான்.

---

31. ஏதா கச்சத கச்சாமோ | 32. ஸர்வே |
35. பத்த்வாஹ்யேதே | ந்ருபாஜ்ஞா பரிபந்தின: | ஸபலோ மே |

सन्निपत्य महावीर्यः सर्वैस्तैः परिवारितः ।
हरि-र्दधिमुखः पालैः पालानां परमेश्वरः ॥ ३९ ॥
स दीनवदनो भूत्वा कृत्वा शिरसि चाञ्जलिम् ।
सुग्रीवस्य शुभौ मूर्ध्ना चरणौ प्रत्यपीडयत् ॥ ४० ॥

इति द्विषष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २८०७)

ஸந்நிபத்ய மஹாவீர்ய: ஸர்வைஸ்தை: பரிவாரித: ।
ஹரிர்-ததிமுக: பாலை: பாலானாம் பரமேச்வர: ॥ 39 ॥
ஸ தீனவதனோ பூத்வா க்ருத்வா சிரஸி சாஞ்ஜலிம் ।
ஸுக்ரீவஸ்ய சுபௌ மூர்த்னா சரணௌ ப்ரத்யபீடயத் ॥ 40 ॥

இதி த்விஷஷ்டிதம: ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 2707)

39-40. வனத்தைப் பரிபாலிப்பவர்களின் தலைவனும் மகா வானரவீரனுமான ததிமுகன் பரிபாலகர்களனைவராலும் சூழப்பட்டு வாடிய முகத்துடன் தலைமேல் கைகூப்பிக் கொண்டு சுக்ரீவனை அணுகி அவருடைய அழகிய பாதங்களில் தலைவைத்து வணங்கினான்.

இங்ஙனம் அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2707)

---

39. ஸ நிபத்ய । 40. ஸுக்ரீவஸ்யாசு தௌ ।

त्रिषष्टितमः सर्गः
मधुवनभंग निवेदनम्

ततो मूर्ध्ना निपतितं वानरं वानरर्षभः ।
दृष्ट्वैवोद्विग्न-हृदयो वाक्यमेत-दुवाच ह ॥ १ ॥

उत्तिष्ठोत्तिष्ठ कस्मात्त्वं पादयोः पतितो मम ।
अभयं ते भवद्वीर सर्वमेवाभिधीयताम् ॥ २ ॥

த்ரிஷஷ்டிதம: ஸர்க்க:
மதுவனபங்க நிவேதனம்

ததோ மூர்த்னா நிபதிதம் வானரம் வானரர்ஷப: ।
த்ருஷ்ட்வைவோத்விக்ன-ஹ்ருதயோ வாக்ய-மேததுவாச ஹ ॥ 1 ॥
உத்திஷ்டோத்திஷ்ட கஸ்மாத் த்வம் பாதயோ: பதிதோ மம ।
அபயம் தே பவத்வீர ஸர்வமேவாபிதீயதாம் ॥ 2 ॥

அறுபத்து மூன்றாவது ஸர்க்கம்
மதுவனபங்கத்தை அறிவித்தல்

1. தரையில் விழுந்து தலைவணங்கிய வானரனை நோக்கி வானர வேந்தன் பதை பதைத்த மனத்துடன் பின்வரும் வார்த்தையைச் சொன்னான்.

2. 'எழுந்திரும், எழுந்திரும். வீரரே! ஏன் நீர் என் கால்களில் விழுந்தீர்? எல்லாவற்றையும் விளக்கிக் கூறும். உமது பயம் போகட்டும்.'

---

1. மாமனாயினும் காலில் விழுந்தது சுக்ரீவன் அரசன் என்பதால்.
2. அபயம் தே ப்ரதாஸ்யாமி ஸத்ய மேவாபிதீயதாம் ।

स तु विश्वासितस्तेन सुग्रीवेण महात्मना ।
उत्थाय सुमहाप्राज्ञो वाक्यं दधिमुखोऽब्रवीत् ॥ ३ ॥
नैवर्क्षरजसा राजन् न त्वया नापि वालिना ।
वनं निसृष्टपूर्वं हि भक्षितं तच्च वानरैः ॥ ४ ॥
एभिः प्रधर्षिताश्चैव वानरा वनरक्षिभिः ।
मधून्यचिन्तयित्वेमान् भक्षयन्ति पिबन्ति च ॥ ५ ॥

ஸ து விச்வாஸிதஸ்-தேன ஸுக்ரீவேண மஹாத்மனா।
உத்தாய ஸுமஹாப்ராஜ்ஞோ வாக்யம் ததிமுகோऽப்ரவீத் ॥ 3 ॥
நைவர்க்ஷரஜஸா ராஜன் த்வயா நாபி வாலினா।
வனம் நிஸ்ருஷ்டபூர்வம் ஹி பக்ஷிதம் தச்ச வானரை: ॥ 4 ॥
ஏபி:ப்ரதர்ஷிதாச்சைவ வானரா வநரக்ஷிபி:।
மதூன்யசிந்தயித்வேமான் பக்ஷயந்தி பிபந்தி ச॥ 5 ॥

---

3. சிறந்த மதிமானான அந்த ததிமுகன் மகாத்மாவான சுக்ரீவரால் தேற்றப்பட்டு எழுந்து நின்று பின் வருமாறு கூறினான்.

4. 'அரசே! ரிக்ஷர்ஜஸ்ஸாலோ, உம்மாலோ, வாலியாலோ இதற்குமுன் வனம் எவரும் உட்புகுவதற்கு அனுமதிக்கப்பட்டதில்லை. அது இப்பொழுது வானரர்களால் புசிக்கப்பட்டது.

5. இந்த வனபாலர்களால் தடுக்கப்பட்ட வானரர்கள் இவர்களைப் பொருட்படுத்தாமல் மதுவைப் பருகிக் கொண்டிருக்கிறார்கள். பழங்களைப் புசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

3. இதற்குமுன் 'கிம் ஸம்ப்ரமாத்' என்று ஆரம்பிக்கும் ஒரு சுலோகம் சில பாடங்களில் உளது.
5. ப்ரதர்ஷணாயாம் யாமப்யசிந்தயன் தேவ பக்ஷயந்தி வநௌகஸ:।

शिष्ट-मत्रापविध्यन्ति भक्षयन्ति तथा परे ।
निवार्यमाणास्ते सर्वे भ्रुवौ वै दर्शयन्ति हि ।। ६ ।।

इमे हि संरब्धतरास्तथा तैः संप्रधर्षिताः ।
वारयन्तो वनात्तस्मात् क्रुद्धै-र्वानरपुंगवैः ।। ७ ।।

ततस्तै-र्बहुभिर्वीरै-र्वानरै-र्वानरर्षभ ।
संरक्तनयनैः क्रोधाद्धरयः प्रविचालिताः ।। ८ ।।

சிஷ்டமத்ராபவித்யந்தி பக்ஷயந்தி ததா பரே ।
நிவார்யமாணாஸ்தே ஸர்வே ப்ருவௌ வை தர்சயந்தி ஹி ॥ 6 ॥

இமே ஹி ஸம்ரப்ததராஸ்-ததா தை: ஸம்ப்ரதர்ஷிதா: ।
வாரயந்தோ வனாத் தஸ்மாத் க்ருத்தைர்-வானரபுங்கவை: ॥ 7 ॥

ததஸ்தைர்-பஹுபிர்-வீரைர்-வானரைர்-வானரர்ஷப ।
ஸம்ரக்தநயனை: க்ரோதாத்தரய: ப்ரவிசாலிதா: ॥ 8 ॥

---

6. எல்லோரும் சாப்பிடுகிறார்கள். சிலர் மிகுந்ததைக் கீழே சிதறடித்துப் பாழாக்குகிறார்கள். விலக்கப்பட்ட அவர்கள் புருவங்களை நெரிக்கிறார்கள்.

7. அவர்களை விரட்டப்போன இவர்கள் சினங்கொண்ட அவ்வானரவீரர்களால் அடித்துத் துன்புறுத்தப்பட்டு ஓடி வந்து விட்டார்கள்.

8. வானரசிரேஷ்டரே! கோபத்தால் கண்சிவந்த வானர வீரர்கள் பலராலும் இவர்கள் துரத்தப்பட்டார்கள்.

---

6. ப்ருகுடிம் தர்சயந்தி ஹி । 7. நிவார்யந்தே வனாத் ।

पाणिभि-र्निहताः केचित् केचिज्जानुभि-राहताः ।
प्रकृष्टाश्च यथाकामं देवमार्गं च दर्शिताः ॥ ९ ॥
एवमेते हताः शूरास्त्वयि तिष्ठति भर्तरि ।
कृत्स्नं मधुवनं चैव प्रकामं तैः प्रभक्ष्यते ॥ १० ॥
एवं विज्ञाप्यमानं तं सुग्रीवं वानरर्षभम् ।
अपृच्छत्तं महाप्राज्ञो लक्ष्मणः परवीरहा ॥ ११ ॥
किमयं वानरो राजन् वनपः प्रत्युपस्थितः ।
कंचार्थ-मभिनिर्दिश्य दुःखितो वाक्यमब्रवीत् ॥ १२ ॥

பாணிபிர்-நிஹதா: கேசித் கேசிஜ்ஜானுபி-ராஹதா: ।
ப்ரக்ருஷ்டாச்ச யதாகாமம் தேவமார்க்கஞ் ச தர்சிதா: ॥ 9 ॥
ஏவமேதே ஹதா: ஸூராஸ்த்வயி திஷ்டதி பர்த்தரி ।
க்ருத்ஸ்னம் மதுவனஞ் சைவ ப்ரகாமம் தை: ப்ரபக்ஷ்யதே ॥ 10 ॥
ஏவம் விஜ்ஞாப்யமானம் தம் ஸுக்ரீவம் வானரர்ஷபம் ।
அப்ருச்சத் தம் மஹாப்ராஜ்ஞோ லக்ஷ்மண: பரவீரஹா ॥ 11 ॥
கிமயம் வானரோ ராஜன் வனப: ப்ரத்யுபஸ்தித: ।
கஞ்சார்த்த-மபிநிர்திச்ய து:க்கிதோ வாக்யமப்ரவீத் ॥ 12 ॥

---

9. சிலர் கைகளால் அறையப்பட்டார்கள். சிலர் முழங்கால்களால் உதைக்கப்பட்டார்கள். சிலர் இஷ்டப்படி பிடித்திழுக்கப்பட்டு அபானத்துவாரத்தைக் காட்டப்பட்டார்கள்.

10. தாங்கள் நாதராயிருக்கையில் இந்த சூரர்கள் இப்படி அவர்களால் இம்சிக்கப்பட்டிருக்கிறார்கள். மதுவனம் முழுவதும் அவர்களால் இஷ்டப்படி அழிக்கப்படுகிறது.

11. இவ்வாறு விண்ணப்பம் செய்யப்படும் வானர சிரேஷ்டராகிய சுக்ரீவரை நோக்கி எதிரிவீரர்களை ஒழிப்பவரும் சிறந்த புத்திமானுமாகிய லக்ஷ்மணர் பின்வருமாறு வினவினார்.

12. 'அரசே! வனபாலனாகிய இவ்வானரன் எதற்காக இங்கு வந்துள்ளான்? என்ன விஷயத்தைப் பற்றி விசனத்துடன் விண்ணப்பம் செய்கிறான்?'

एवमुक्तस्तु सुग्रीवो लक्ष्मणेन महात्मना ।
लक्ष्मणं प्रत्युवाचेदं वाक्यं वाक्यविशारदः ॥ १३ ॥
आर्य लक्ष्मण संप्राह वीरो दधिमुखः कपिः ।
अंगदप्रमुखै-र्वीरैर्भक्षितं मधु वानरैः ॥ १४ ॥
वनं यदभिपन्नास्ते साधितं कर्म वानरैः ॥ १५ ॥
दृष्टा देवी न सन्देहो न चान्येन हनूमता ।
न ह्यन्यः साधने हेतुः कर्मणोऽस्य हनूमतः ॥ १६ ॥

ஏவமுக்தஸ்து ஸுக்ரீவோ லக்ஷ்மணேன மஹாத்மனா ।
லக்ஷ்மணம் ப்ரத்யுவாசேதம் வாக்யம் வாக்யவிசாரத: ॥ 13 ॥
ஆர்ய லக்ஷ்மண ஸம்ப்ராஹ வீரோ ததிமுக: கபி: ।
அங்கதப்ரமுகைர்-வீரைர்-பக்ஷிதம் மது வானரை: ॥ 14 ॥
வனம் யதபிபன்னாஸ்தே ஸாதிதம் கர்ம வானரை: ॥ 15 ॥
த்ருஷ்டா தேவீ ந ஸந்தேஹோ ந சான்யேன ஹனுமதா ।
ந ஹ்யன்ய: ஸாதனே ஹேது: கர்மணோ ऽஸ்ய ஹனுமத: ॥ 16 ॥

---

13. மகாத்மாவான லக்ஷ்மணரால் இப்படி வினவப்பட்டவரும் பேச்சில் வல்லவருமான சுக்ரீவர் லக்ஷ்மணரிடம் பின்வரும் பதிலையளித்தார்.

14. 'ஐயா லக்ஷ்மணரே! அங்கதன் முதலிய வானரவீரர்களால் மதுவனம் அழிக்கப்பட்டதென்று ததிமுகன் என்ற இவ்வானர வீரர் கூறுகிறார்.'

15. 'அவர்கள் மதுவனத்திற்கு வந்துவிட்டமையால் வானரர்களால் காரியம் சாதிக்கப் பட்டிருக்கவேண்டும்.

16. ஹனுமாரால் தேவி காணப்பட்டிருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. வேறொருவராலும் அது முடியாது. இந்தக் காரியத்தைச் சாதிப்பதில் வேறொருவரும் காரணமாயிருக்க முடியாது.

---

15. 'நைஷாமக்ருத-கார்யாணாமீத்ருச: ஸ்யாத் வ்யதிக்ரம: என்ற சுலோகம் 20ன் பாதி சில பாடங்களில் இங்கு உளது.

16. இதற்கு முன் 'வாரயந்தோ ப்ருசம் ப்ராப்தா:' என்று தொடங்கும் சுலோகம் ஒன்று சில பாடங்களில் உளது.

कार्यसिद्धि-र्मतिश्चैव तस्मिन् वानरपुंगवे ।
व्यवसायं च वीर्यं च श्रुतं चापि प्रतिष्ठितम् ।। १७ ।।
जाम्बवान् यत्र नेता स्यादंगदश्च महाबलः ।
हनुमांश्चाप्यधिष्ठाता न ह्यस्य गतिरन्यथा ।। १८ ।।
अंगदप्रमुखै-र्वीरै-र्हतं मधुवनं किल ।
विचित्य दक्षिणामाशां-मागतै-र्हरिपुंगवैः ।। १९ ।।
नैषा-मकृतकृत्याना-मीदृशः स्यादुपक्रमः ।
आगतैश्च प्रमथितं यथा मधुवनं हि तैः ।।
धर्षितं च वनं कृत्स्न-मुपयुक्तं च वानरैः ।। २० ।।

கார்யஸித்திர்- மதிச்சைவ தஸ்மின் வானரபுங்கவே ।
வ்யவஸாயஞ்ச வீர்யஞ் ச ச்ருதஞ் சாபி ப்ரதிஷ்டிதம் ।। 17 ।।
ஜாம்பவான் யத்ர நேதாஸ்யாதங்கதச்ச மஹாபல: ।
ஹனுமாம்ச்சாப்யதிஷ்டாதா ந ஹ்யஸ்ய கதிரன்யதா ।। 18 ।।
அங்கத-ப்ரமுகைர்-வீரைர்-ஹதம் மதுவனம் கில ।
விசித்ய தக்ஷிணா-மாசா-மாகதைர்-ஹரிபுங்கவை: ।। 19 ।।
நைஷா-மக்ருதக்ருத்யானா-மீத்ருச: ஸ்யாதுபக்ரம: ।
ஆகதைச்ச ப்ரமதிதம் யதா மதுவனம் ஹி தை: ।।
தர்ஷிதஞ்ச வனம் க்ருத்ஸ்ன-முபயுக்தஞ் ச வானரை: ।। 20 ।।

---

17. 'காரியசித்தியும் மதியும் தீர்மானமும் பராக்கிரமமும் கல்வி கேள்வியும் அந்த வானரோத்தமரிடமே நிலை பெற்றுள்ளது.

18. 'எங்கு மகாபலசாலியான அங்கதன் உள்ளானோ, ஜாம்பவான் தலைவராயுள்ளாரோ ஹனுமார் காரியத்தை ஏற்று நடத்துபவரோ அங்கு பயன் வேறு விதமாயிருக்க முடியாது.

19. தெற்கு திக்கில் தேடிவிட்டுத் திரும்பிய அங்கதன் முதலிய வானரவீரர்களால் மதுவனம் அழிக்கப்பட்டிருக்கிறது.

20. திரும்பி வந்த அவர்களால் மதுவனம் அழிக்கப்பட்டதென்ற மிதமிஞ்சிய காரியம் காரியசித்தி பெறாமலிருந்தால் ஏற்பட்டிருக்காது. வானரர்களால் அனுபவிக்கப்பட்டு வனம் முழுதும் சேதமாக்கப் பட்டுமிருக்கிறது.

वारयन्तश्च सहितास्तथा जानुभिराहताः ॥ २१ ॥
एतदर्थ-मयं प्राप्तो वक्तुं मधुर-वागिह ।
नाम्ना दधिमुखो नाम हरिः प्रख्यातविक्रमः ॥ २२ ॥
दृष्टा सीता महाबाहो सौमित्रे पश्य तत्त्वतः ।
अभिगम्य तथा सर्वे पिबन्ति मधु वानराः ॥ २३ ॥
न चाप्यदृष्ट्वा वैदेहीं विश्रुताः पुरुषर्षभ ।
वनं दत्तवरं दिव्यं धर्षयेयु-र्वनौकसः ॥ १४ ॥

வாரயந்தச்ச ஸஹிதாஸ்ததா ஜானுபிராஹதா: ll 21 ll
ஏததர்த்த-மயம் ப்ராப்தோ வக்தும் மதுர-வாகிஹ l
நாம்னா ததிமுகோ நாம ஹரி: ப்ரக்யாதவிக்ரம: ll 22 ll
த்ருஷ்டா ஸீதா மஹாபாஹோ ஸௌமித்ரே பச்ய தத்வத: l
அபிகம்ய ததா ஸர்வே பிபந்தி மது வானரா: ll 23 ll
ந சாப்யத்ருஷ்ட்வா வைதேஹீம் விச்ருதா: புருஷர்ஷப l
வனம் தத்தவரம் திவ்யம் தர்ஷயேயுர்-வநௌகஸ: ll 24 ll

---

21. அவர்களை ஒன்று கூடி விலக்க வந்தவர்களும் முழங்கால்களால் உதைக்கப் பட்டிருக்கிறார்கள்.

22. இந்த விஷயத்தைச் சொல்லுவதற்கு இனிமையாகப் பேசும் ததிமுகன் என்றவரும் புகழ் பெற்றவருமான இவ்வானரர் இங்கு வந்திருக்கிறார்.

23. பெருந்தோளரே! ஸுமித்ரைமகனே! இதை உள்ளபடி பாரும். வானரர்கள் அனைவரும் திரும்பிவந்து மதுவைப் பருகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் சீதையைக் கண்டிருக்கிறார்கள்.

24. புருஷ சிரேஷ்டரே! வானரர்கள் கேள்வியிற் சிறந்தவர்கள். வைதேகியைக் காணாமல் வரத்தாலடையப் பெற்ற வனத்தைச் சிதைக்க மாட்டார்கள்.

श्रुत्वा कर्णसुखां वाणीं सुग्रीववदनाच्च्युताम् ।
प्राहृष्यत भृशं रामो लक्ष्मणश्च महायशाः ।। २५ ।।

श्रुत्वा दधिमुखस्येदं वचनं संप्रहृष्य सः ।
उत्तरं वनपालं च सुग्रीवः प्रत्यभाषत ।। २६ ।।

प्रीतोऽस्मि सोऽहं यद्भुक्तं वनं तैः कृतकर्मभिः ।
मर्षणीयं च मे तेषां चेष्टितं कृतकर्मणाम् ।। २७ ।।

ச்ருத்வா கர்ணஸுகாம் வாணீம் ஸுக்ரீவ-வதனாச்ச்யுதாம் ।
ப்ராஹ்ருஷ்யத ப்ருசம் ராமோ லக்ஷ்மணச்ச மஹாயசா: ।। 25 ।।
ச்ருத்வா ததிமுகஸ்யேதம் வசனம் ஸம்ப்ரஹ்ருஷ்ய ஸ: ।
உத்தரம் வனபாலஞ் ச ஸுக்ரீவ: ப்ரத்யபாஷத ।। 26 ।।
ப்ரீதோऽஸ்மி ஸோऽஹம் யத்புக்தம் வனம் தை: க்ருதகர்மபி: ।
மர்ஷணீயஞ் ச மே தேஷாம் சேஷ்டிதம் க்ருத கர்மணாம் ।। 27 ।।

---

25. சுக்ரீவனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட செவிக்கினிய சொல்லைக் கேட்டுப் புகழ்மிக்க லக்ஷ்மணரும் ஸ்ரீராமரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

26. சுக்ரீவன் ததிமுகனுடைய வார்த்தையைக் கேட்டுக் களித்து மேலே செய்ய வேண்டியதைப்பற்றி அவ்வனபாலருக்குப் பின்வருமாறு பதிலளித்தான்.

27. காரியத்தை முடித்து வந்திருக்கும் அவர்களால் வனம் புசிக்கப் பட்டதென்ற இதைக்கேட்டு நான் மகிழ்சியடைகிறேன். காரியசித்திபெற்ற அவர்களுடைய சேஷ்டைகள் என்னால் பொறுக்கத்தக்கவையே.

28. காரியத்தை முடித்துக்கொண்டு சிங்கம் போன்ற பராக்கிரமத்துடன் திரும்பி வந்திருக்கும் ஹனுமார் முதலிய வானர வீரர்களைச் சீக்கிரம் பார்க்கவும் சீதையை மீட்கும் விஷயத்தில் செய்ய வேண்டியதைப் பற்றிக் கேட்கவும் ஸ்ரீராமலக்ஷ்மணர்களுடன் நான் அவாமிக்கவனாயிருக்கிறேன்.

---

25. லக்ஷ்மணச்ச மஹாபல: । 27. தர்ஷிதம் மர்ஷணீயஞ்ச சேஷ்டிதம்

इच्छामि शीघ्रं हनुमत्प्रधानान् शाखामृगांस्तान् मृगराजदर्पान् ।
द्रष्टुं कृतार्थान् सह राघवाभ्यां श्रोतुं च सीताधिगमे प्रवृत्तिम् ॥ २८ ॥

प्रीतिस्फीताक्षौ संप्रहृष्टौ कुमारौ दृष्ट्वा सिद्धार्थौ वानराणां च राजा ।
अंगैः संहृष्टैः कर्मसिद्धिं विदित्वा बाह्वोरासन्नां
सोऽतिमात्रं ननन्द ॥ २९ ॥

इति त्रिषष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २७३६)

இச்சாமி சீக்ரம் ஹனுமத்ப்ரதானான்
சாகாம்ருகாம்ஸ்தான் ம்ருகராஜ-தர்ப்பான் ।
த்ரஷ்டும் க்ருதார்த்தான் ஸஹ ராகவாப்யாம்
ச்ரோதுஞ் ச ஸீதாதிகமே ப்ரவ்ருத்திம் ॥ 28 ॥

ப்ரீதிஸ்பீதாக்ஷெள ஸம்ப்ரஹ்ருஷ்டெள குமாரெள
த்ருஷ்ட்வா ஸித்தார்த்தெள வானராணானாஞ் ச ராஜா ।
அங்கை: ஸம்ஹ்ருஷ்டை: கர்மஸித்திம் விதித்வா
பாஹ்வோ ராஸன்னாம் ஸோऽதிமாத்ரம் நநந்த ॥ 29 ॥

இதி த்ரிஷஷ்டிதம: ஸர்க்க:
(ஆதித:ச்லோகா: 2736)

---

29. காரியசித்தியால் மகிழ்ச்சியடைந்தவர்களும் அம்மகிழ்ச்சியால் கண்கள் மலர்ந்தவர்களுமான இரு அரசகுமாரர்களையும் பார்த்தும் காரியசித்தி கைகளுக்குக் கிட்டியிருப்பதை யறிந்தும் வானரவேந்தன் அங்கங்கள் புளகிப்ப அடக்கமுடியாத ஆனந்தமடைந்தான்.

இங்ஙனம் அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றும்
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2736)

---

28. 'கச்ச சீக்ரம் மதுவனம்' என்று தொடங்கும் ஒரு சுலோகம் சிலபாடங்களில் இதற்கு முன் உளது.

चतुःषष्टितमः सर्गः

हनुमदाद्यागमनम्

सुग्रीवेणैव-मुक्तस्तु हृष्टो दधिमुखः कपिः ।
राघवं लक्ष्मणं चैव सुग्रीवं चाभ्यवादयत् ॥ १ ॥
स प्रणम्य च सुग्रीवं राघवौ च महाबलौ ।
वानरैः सहितैः शूरै-र्दिवमेवोत्पपात ह ॥ २ ॥
स यथैवागतः पूर्वं तथैव त्वरितं गतः ।
निपत्य गगनाद्भूमौ तद्वनं प्रविवेश ह ॥ ३ ॥

சது: ஷஷ்டிதம: ஸர்க்க:

ஹனுமதாத்யாகமனம்

ஸுக்ரீவேணைவ முக்தஸ்து ஹ்ருஷ்டோ ததிமுக: கபி: ।
ராகவம் லக்ஷ்மணஞ் சைவ ஸுக்ரீவஞ் சாப்யவாதயத் ॥ *1* ॥
ஸ ப்ரணம்ய ச ஸுக்ரீவம் ராகவௌ ச மஹாபலௌ ।
வானரை: ஸஹிதை: சூரைர்-திவமேவோத்பபாத ஹ ॥ *2* ॥
ஸ யதைவாகத: பூர்வம் ததைவ த்வரிதம் கத: ।
நிபத்ய ககனாத்பூமௌ தத்வனம் ப்ரவிவேச ஹ ॥ *3* ॥

அறுபத்து நான்காவது ஸர்க்கம்

ஹனுமார் முதலியோர் வரவு

1. சுக்ரீவனால் இவ்வாறு கூறப்பெற்ற வானரனாகிய ததிமுகன் மகிழ்ச்சியுடன் ஸ்ரீராமரையும் லக்ஷ்மணரையும் சுக்ரீவனையும் நமஸ்கரித்தான்.

2. மகாபலசாலிகளான இராமலக்ஷ்மணர்களையும் சுக்ரீவனையும் நமஸ்கரித்தபின் தன்னுடன் வந்த வானரவீரர்களுடன் ஆகாய மார்க்கமாகக் கிளம்பினான்.

3. முதலில் எப்படி வந்தானோ அப்படியே வேகமாய்ச் சென்று ஆகாயத்திலிருந்து பூமியிலிறங்கி அவ்வனத்தில் புகுந்தான்.

---

2. வானரை: ஸஹித: ।

स प्रविष्टो मधुवनं ददर्श हरियूथपान् ।
विमदानुत्थितान् सर्वान् मेहमानान् मधूदकम् ॥ ४ ॥
स तानुपागमद्वीरो बद्ध्वा करपुटांजलिम् ।
उवाच वचनं श्लक्ष्णमिदं हृष्टवदंगदम् ॥ ५ ॥
सौम्य रोषो न कर्तव्यो यदेभिरभिवारितः ।
अज्ञानाद्रक्षिभिः क्रोधाद्भवन्तः प्रतिषेधिताः ॥ ६ ॥
युवराजस्त्वमीशश्च वनस्यास्य महाबल ।
मौर्ख्यात् पूर्वं कृतो दोषस्तं भवान् क्षन्तुमर्हति ॥ ७ ॥

ஸ ப்ரவிஷ்டோ மதுவனம் ததர்ச ஹரியூதபான் ।
விமதானுத்திதான் ஸர்வான் மேஹமானான் மதூதகம் ॥ 4 ॥
ஸ தானுபாகமத்வீரோ பத்த்வா கரபுடாஞ்ஜலிம் ।
உவாச வசனம் ச்லக்ஷ்ணமிதம் ஹ்ருஷ்டவதங்கதம் ॥ 5 ॥
ஸௌம்ய ரோஷோ ந கர்த்தவ்யோ யதேபிரபிவாரித: ।
அஜ்ஞானாத்-ரக்ஷிபி: க்ரோதாத் பவந்த: ப்ரதிஷேதிதா: ॥ 6 ॥
யுவராஜஸ்-த்வமீசச்ச வனஸ்யாஸ்ய மஹாபல ।
மௌர்க்யாத் பூர்வம் க்ருதோ தோஷஸ் தம் பவான் க்ஷந்துமர்ஹதி ॥ 7 ॥

---

4. மதுவனத்தில் நுழைந்து அவன் வானரத்தலைவர்கள் எல்லோரும் குடிமயக்கந் தெளிந்து குடித்த மதுவைச் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கக் கண்டான்.

5. அவ் வீரன் அவர்களையணுகி அங்கதன் முன் கைகூப்பிக் கொண்டு மகிழ்வுடன் பின்வரும் இனிய வார்த்தையைப் பேசினான்.

6. 'மனதிற்கினியவரே! அறியாமையாலும் சினத்தாலும் காவலாளர்களால் நீங்கள் தடுக்கப்பட்டீர்கள். இவர்களால், தடுக்கப்பட்டதைக் குறித்து நீங்கள் கோபங் கொள்ள வேண்டாம்.

7. 'வலிமைமிக்க' யுவராஜாவான நீங்கள் இவ்வனத்திற்கு யஜமானர். மூடத்தனத்தால் பிழை செய்யப் பட்டது. அதைத் தாங்கள் பொறுத்தருள வேண்டும்.

---

4. விமதானுத்ததான் ।

आख्यातं हि मया गत्वा पितृव्यस्य तवानघ ।
इहोपयातं सर्वेषा-मेतेषां वनचारिणाम् ॥ ८ ॥
स त्वदागमनं श्रुत्वा सहैभिर्हरियूथपैः ।
प्रहृष्टो न तु रुष्टोऽसौ वनं दृष्ट्वा प्रधर्षितम् ॥ ९ ॥
प्रहृष्टो मां पितृव्यस्ते सुग्रीवो वानरेश्वरः ।
शीघ्रं प्रेषय सर्वांस्तानिति होवाच पार्थिवः ॥ १० ॥

ஆக்யாதம் ஹி மயா கத்வா பித்ருவ்யஸ்ய தவானக l
இஹோபயாதம் ஸர்வேஷா-மேதேஷாம் வனசாரிணாம் ll 8 ll
ஸ த்வதாகமனம் ச்ருத்வா ஸஹைபிர்ஹரியூதபை: l
ப்ரஹ்ருஷ்டோ ந து ருஷ்டோऽஸௌ வனம் த்ருஷ்ட்வா ப்ரதர்ஷிதம் ll 9 ll
ப்ரஹ்ருஷ்டோ மாம் பித்ருவ்யஸ்தே ஸுக்ரீவோ வானரேச்வர: l
சீக்ரம் ப்ரேஷய ஸர்வாம்ஸ்தானிதி ஹோவாச பார்த்திவ: ll 10 ll

---

8. பாவமற்றவரே! இவ்வானரர்களெல்லாம் இங்கு திரும்பி வந்திருக்கும் செய்தி உங்கள் சிறிய தந்தைக்கு விரைந்தோடி என்னால் தெரிவிக்கப்பட்டது.

9. 'இவ்வானர வீரர்களுடன் நீங்கள் வந்துள்ள செய்தியைக் கேட்ட அவர் மிகச்சந்தோஷமடைந்தார். இவ்வனம் அழிக்கப்பட்டதை யறிந்தும் சினங் கொள்ளவில்லை.'

10. உமது சிறிய தந்தையும் வானரவேந்தருமாகிய சுக்ரீவ மகாராஜா மகிழ்ச்சியுடன் 'அவர்களெல்லோரையும் விரைவில் அனுப்பு' என்று என்னிடம் கூறினார்.

---

6. யதேபி: பரிவாரணம் l 7. இதற்குமுன் அரை சுலோகம் அதிக பாடம்:- ச்ராந்தோ தூராதனுப்ராப்தோ பக்ஷயஸ்வ ஸ்வகம் மது ll
8. இதற்குமுன் அதிகபாடம்:- யதைவ ஹி பிதாதேऽபூத் பூர்வம் ஹரிகணேச்வர:l ததா த்வமபி ஸுக்ரீவோ நான்யஸ்து ஹரிஸத்தம ll
9. பவதாகமனம் ச்ருத்வா l

श्रुत्वा दधिमुखस्येदं वचनं श्लक्ष्ण-मंगदः ।
अब्रवीत् तान् हरिश्रेष्ठो वाक्यं वाक्यविशारदः ॥ ११ ॥
शंके श्रुतोऽयं वृत्तान्तो रामेण हरियूथपाः ।
तत् क्षणं नेह नः स्थातुं कृते कार्ये परन्तपाः ॥ १२ ॥
पीत्वा मधु यथाकामं विश्रान्ता वनचारिणः ।
किं शेषं गमनं तत्र सुग्रीवो यत्र मे गुरुः ॥ १३ ॥
सर्वे यथा मां वक्ष्यन्ति समेत्य हरियूथपाः ।
तथाऽस्मि कर्ता कर्तव्ये भवद्भिः परवानहम् ॥ १४ ॥

ச்ருத்வா ததிமுகஸ்யேதம் வசனம் ச்லக்ஷ்ண-மங்கத: ।
அப்ரவீத் தான் ஹரிச்ரேஷ்டோ வாக்யம் வாக்ய விசாரத: ॥ 11 ॥
சங்கே ச்ருதோऽயம் வ்ருத்தாந்தோ ராமேண ஹரியூதபா: ।
தத்க்ஷணம் நேஹ ந: ஸ்தாதும் க்ருதே கார்யே பரந்தபா: ॥ 12 ॥
பீத்வா மது யதாகாமம் விச்ராந்தா வனசாரிண: ।
கிம் சேஷம் கமனம் தத்ர ஸுக்ரீவோ யத்ர மே குரு: ॥ 13 ॥
ஸர்வே யதா மாம் வக்ஷ்யந்தி ஸமேத்ய ஹரியூதபா: ।
ததாऽஸ்மி கர்த்தா கர்த்தவ்யே பவத்பி : பரவானஹம் ॥ 14 ॥

11. ததிமுகனுடைய இந்த இனிய சொல்லைக் கேட்டு சொல்வன்மை படைத்த வானர சிரேஷ்டனான அங்கதன் மற்றவானரர்களை நோக்கிப் பின் வருமாறு கூறினான்.

12. 'வானரத்தலைவர்களே! இந்த விருத்தாந்தம் ஸ்ரீராமர் காதுக்கு எட்டிவிட்டதெனத் தோன்றுகிறது. ஆகையால் பகைவர்களை வெல்பவர்களே! நமது காரியம் முடிந்தபின் இனி இங்கு தங்குவது நமக்குப் பொருந்தாது.

13. 'வானரர்களே! வேண்டியபடி மதுவுண்டு இளைப்பாறி விட்டீர்கள். இனிச் செய்ய வேண்டியதென்ன? என் தந்தையாகிய சுக்ரீவர் இருக்குமிடத்திற்குப் போவதுதான்.

14. 'நீங்கள் எல்லோருங்கூடி என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்களோ அப்படி செய்ய நான் கடமைப் பட்டவன்.'

14. ஹரிபுங்கவா: ।

नाज्ञापयितु-मीशोऽहं युवराजोऽस्मि यद्यपि ।
अयुक्तं कृतकर्माणो यूयं धर्षयितुं मया ।। १५ ।।
ब्रुवतश्चांगदस्यैवं श्रुत्वा वचन-मव्ययम् ।
प्रहृष्टमनसो वाक्य-मिद-मूचु-र्वनौकसः ।। १६ ।।
एवं वक्ष्यति को राजन् प्रभुः सन् वानरर्षभ ।
ऐश्वर्यमदमत्तो हि सर्वोऽहमिति मन्यते ।। १७ ।।
तव चेदं सुसदृशं वाक्यं नान्यस्य कस्यचित् ।
सन्नतिर्हि तवाख्याति भविष्यच्छुभयोग्यताम् ।। १८ ।।

நாஜ்ஞாபயிது-மீசோऽஹம் யுவராஜோऽஸ்மி யத்யபி ।
அயுக்தம் க்ருதகர்மாணோ யூயம் தர்ஷயிதும் மயா ॥ 15 ॥
ப்ருவதச்சாங்கதஸ்யைவம் ச்ருத்வா வசன-மவ்யயம் ।
ப்ரஹ்ருஷ்டமனஸோ வாக்ய-மித-மூசுர்-வநௌகஸ: ॥ 16 ॥
ஏவம் வக்ஷ்யதி கோ ராஜன் ப்ரபு: ஸன் வானரர்ஷப ।
ஐச்வர்ய-மதமத்தோ ஹி ஸர்வோऽஹமிதி மன்யதே ॥ 17 ॥
தவ சேதம் ஸுஸத்ருசம் வாக்யம் நான்யஸ்ய கஸ்யசித் ।
ஸந்நதிர்ஹி தவாக்யாதி பவிஷ்யச்சுப-யோக்யதாம் ॥ 18 ॥

15. நான் உங்கள் இளவரசனாயினும் உங்களுக்குக் கட்டளையிடக் கூடியவனல்லன். காரியத்தைப் பூர்த்தி செய்துள்ள நீங்கள் என்னால் அதிகாரம் செய்யக் கூடியவர்களாக மாட்டீர்கள்.

16. இவ்வாறு அங்கதன் சொன்ன சிறந்த வார்த்தையைக் கேட்டு வானரர்கள் மட்டற்ற மகிழ்ச்சியுடன் பின் வருமாறு பதிலளித்தனர்.

17. 'வானரப் பெருமானே! அரசே! பிரபுவாயிருக்கும் எவன் இவ்வண்ணம் பேசுவான்? செல்வச் செருக்கினால் மதங் கொண்டவன் 'எல்லாம் நானே' என்றல்லவோ எண்ணுவான்.?

18. 'இவ்வார்த்தை உமக்கே தகும். வேறு எவருக்கும் தகாது.. உம்முடைய பணிவு இனி உமக்கு வரவிருக்கும் பாக்கியத்தைத் தெரிவிக்கிறது.

12. தத்க்ஷமம் ॥ க்ருதேऽகார்யே ॥ இதற்குமுன் அதிகபாடம்:— 'அயஞ்ச ஹர்ஷாதாக்யாதி தேந ஜானாமி ஹேதுனா ॥

सर्वे वयमपि प्रामास्तत्र गन्तुं कृतक्षणाः ।
स यत्र हरिवीराणां सुग्रीव पतिरव्ययः ।। १९ ।।

त्वया ह्यनुक्तै- र्हरिभि-र्नैव शक्यं पदात पदम ।
क्वचिद्गन्तुं हरिश्रेष्ठ ब्रूमः सत्यमिदं तु ते ।। २० ।।

एवं तु वदतां तेषा-मंगदः प्रत्यभाषत ।
बाढं गच्छाम इत्युक्त्वा खमुत्पेतु-र्महाबलाः ।। २१ ।।

ஸர்வே வயமபி ப்ராப்தாஸ் தத்ர கந்தும் க்ருதக்ஷணா: ।
ஸ யத்ர ஹரிவீராணாம் ஸுக்ரீவ: பதிரவ்யய: ।। 19 ।।

த்வயா ஹ்யனுக்தைர்-ஹரிபிர்-நைவ சக்யம் பதாத் பதம் ।
க்வசித் கந்தும் ஹரிச்ரேஷ்ட ப்ரூம: ஸத்யமிதம் து தே ।। 20 ।।

ஏவம் து வததாம் தேஷா-மங்கத: ப்ரத்யபாஷத ।
பாடம் கச்சாம இத்யுக்த்வா கமுத்பேதுர்-மஹாபலா: ।। 21 ।।

---

19. 'வானரவீரர்களின் அரசரும் காரியத்தில் கவனக் குறைவற்றவருமான சுக்ரீவர் எங்குள்ளாரோ அங்கு செல்ல நாங்களெல்லோரும் சித்தமாக இதோ வந்து விட்டோம்.

20. 'உம்முடைய கட்டளையின்றி ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு எங்கும் செல்ல வானரர்களால் இயலாது. வானரசிரேஷ்டரே! உமக்கு இதை நாங்கள் உண்மையாய்ச் சொல்லுகிறோம்.'

21. இவ்வாறு கூறும் வானரர்களுக்கு 'சரி, இனி நாம் போவோம்' என்று அங்கதன் பதிலளித்தான். இங்ஙனம் அங்கதன் கூறியதும் மகாபலசாலிகளான அனைவருமே ஆகாயத்தில் கிளம்பினார்கள்

---

15. தர்ஷயிதும் பலாத் । 16. வசன முத்தமம் । 21. ஸாது கச்சாம ।
19. க்ருதக்ஷணா:- க்ருதாவஸரா: । க்ருதோத்ஸாஹா: ।

उत्पतन्त-मनूत्पेतुः सर्वे ते हरियूथपाः ।
कृत्वाऽऽकाशं निराकाशं यन्त्रोत्क्षिप्ता इवाचलाः ॥ २२ ॥
तेऽम्बरं सहसोत्पत्य वेगवन्तः प्लवंगमाः ।
विनदन्तो महानादं घना वातेरिता यथा ॥ २३ ॥
अंगदे समनुप्राप्ते सुग्रीवो वानराधिपः ।
उवाच शोकोपहतं रामं कमललोचनम् ॥ २४ ॥

உத்பதந்த-மனூத்பேது: ஸர்வே தே ஹரியூதபா: ।
க்ருத்வா ऽऽகாசம் நிராகாசம் யந்தரோத்க்ஷிப்தா இவாசலா: ॥ 22 ॥

தேऽம்பரம் ஸஹஸோத்பத்ய வேகவந்த: ப்லவங்கமா: ।
விநதந்தோ மஹாநாதம் கனா வாதேரிதா யதா ॥ 23 ॥

அங்கதே ஸமனுப்ராப்தே ஸுக்ரீவோ வானராதிப: ।
உவாச சோகோபஹதம் ராமம் கமலலோசனம் ॥ 24 ॥

---

22. ஆகாயத்தில் இடமில்லை என்று சொல்லும்படி யந்திரத்திலிருந்து விடப்பட்ட மலைகளைப்போல் முன் சென்றவனைப்பின்பற்றி எல்லோரும் சென்றார்கள்.

23. வேகம் படைத்த அவ்வானரர்கள் ஆகாயத்தில் விரைவாய்ப் பறந்து கொண்டு காற்றினாலுந்தப்பட்ட மேகங்களைப் போல் கம்பீரமாய் கர்ஜித்தார்கள்.

24. அங்கதன் நெருங்கி வந்து கொண்டிருக்கும் பொழுது வானர வேந்தனாகிய சுக்ரீவன் சோகத்தால் வாட்டமுற்றிருந்த கமலக்கண்ணரான இராமரைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்.

---

22. இவா பலா: ।
22. நிராகாசம்- நிரவகாசம் ।
23. இதற்குமுன் அதிகபாடம்:— 'அங்கதம் புரத: க்ருத்வா ஹனுமந்தஞ்ச வானரம் ॥ 24. சோக ஸந்தப்தம் ।

समाश्वसिहि भद्रं ते दृष्टा देवी न संशयः ।
नागन्तु-मिह शक्यं तैरतीते समये हि नः ॥ २५ ॥
न मत्सकाशमागच्छेत् कृत्ये हि विनिपातिते ।
युवराजो माहाबाहुः प्लवतां प्रवरोऽङ्गदः ॥ २६ ॥
यद्यप्यकृतकृत्याना-मीदृशः स्यादुपक्रमः ।
भवेत् स दीनवदनो भ्रान्तविप्लुत-मानसः ॥ २७ ॥
पितृपैतामहं चैतत् पूर्वकैरभिरक्षितम् ।
न मे मधुवनं हन्या-दहृष्टः प्लवगेश्वरः ॥ २८ ॥

ஸமாச்வஸி ஹி பத்ரம் தே த்ருஷ்டா தேவீ ந ஸம்சய: l
நாகந்து-மிஹசக்யம் தைரதீதே ஸமயே ஹி ந: ll 25 ll
ந மத்ஸகாச-மாகச்சேத் க்ருத்யே ஹி விநிபாதிதே l
யுவராஜோ மஹாபாஹு: ப்லவதாம் ப்ரவரோऽங்கத: ll 26 ll
யத்யப்யக்ருத-க்ருத்யானா-மீத்ருச:ஸ்யாதுபக்ரம: l
பவேத் ஸ தீனவதனோ ப்ராந்தவிப்லுத-மானஸ: ll 27 ll
பித்ரு-பைதாமஹஞ் சைதத் பூர்வகைரபிரக்ஷிதம் l
ந மே மதுவனம் ஹன்யா-தஹ்ருஷ்ட:ப்லவகேச்வர: ll 28 ll

25. 'தேறுதல் அடையுங்கள். உமக்கு மங்களம் உண்டாகும். தேவி காணப்பட்டாள் என்பதில் சந்தேகமில்லை. குறித்த காலங்கடந்து விட்டதால் அங்ஙனமல்லாது அவர்களால் இங்கு வர இயலாது.

26. 'வானரத்தலைவனும் தோள்வலி படைத்தவனும் இளவரசுமான அங்கதன் காரியங்கைகூடாதிருந்தால் என் முன் வரமாட்டான்.

27. 'காரியததை முடிக்காத வானரர்களுடைய செயல் இப்படி இருந்திருந்தால் அவன் மனங்கலங்கி முகம் வாடியிருப்பான்.

28. 'தகப்பன் பாட்டன் முறையாக வந்ததும் முன்னோர்களால் பரிவுடன் காக்கப்பட்டதுமான இம்மதுவனத்தை மனமகிழ்ச்சியிருந்தாலன்றி இளவரசன் அழிக்கமாட்டான்.

25. தைரதீத ஸமயைரிஹ l
28. ஹன்யா-தத்ருஷ்ட்வா ஜனகாத்மஜாம் ll

कौसल्यासुप्रजा राम समाश्वसिहि सुव्रत ।
दृष्टा देवी न सन्देहो न चान्येन हनूमता ॥ २९ ॥
न ह्यन्यः कर्मणो हेतुः साधनेऽस्य हनूमतः ।
हनूमति हि सिद्धिश्च मतिश्च मतिसत्तम ॥
व्यवसायश्च वीर्यश्च सूर्ये तेज इव ध्रुवम् ॥ ३० ॥
जाम्बवान् यत्र नेतास्यादंगदश्च बलेश्वरः ।
हनूमांश्चाप्यधिष्ठाता न तस्य गतिरन्यथा ॥ ३१ ॥

கௌஸல்யா ஸுப்ரஜா ராம ஸமாச்வஸிஹி ஸுவ்ரத ।
த்ருஷ்டா தேவீ ந ஸந்தேஹோ ந சான்யேன ஹனூமதா ॥ 29 ॥
ந ஹ்யன்ய: கர்மணோ ஹேது: ஸாதனேऽஸ்ய ஹனூமத: ।
ஹனூமதி ஹி ஸித்திச்ச மதிச்ச மதிஸத்தம ॥
வ்யவஸாயச்ச வீர்யச்ச ஸூர்யே தேஜ இவ த்ருவம் ॥ 30 ॥
ஜாம்பவான் யத்ர நேதாஸ்யாதங்கதச்ச பலேச்வர: ।
ஹனூமாம்ச்சாப்யதிஷ்டாதா ந தஸ்ய கதிரன்யதா ॥ 31 ॥

---

29. 'கௌஸல்யை பெற்ற செல்வமாகிய ஸ்ரீராமா! நல்ல விரதசீலரே! ஆறுதல் அடையுங்கள். ஹனுமாரால் தேவி காணப்பட்டிருக்கிறாள். வேறொருவராலுமன்று, சந்தேகமில்லை.

30. சிறந்த மதி படைத்தவரே! இந்தக் காரியத்தைச் சாதிக்க ஹனுமாரையன்றி வேறொருவரும் காரணமாயிருக்க முடியாது. ஹனுமாரிடம்தான் சூரியனிடத்தில் ஒளிபோல் காரியம் முடிக்கும் ஆற்றலும் புத்தியும் முயற்சியும் வீரமும் நிலை பெற்றுள்ளன.

31-32 'எந்தக்காரியத்தில் ஜாம்பவான் வழிகாட்டுபவராயும் அங்கதன் சேனைத்தலைவனாயும் ஹனுமார் காரியத்தை நடத்துபவராயும் விளங்குகிறார்களோ அந்தக் காரியத்தின் முடிவு வேறு விதமாயிராது. அளவிலா ஆற்றலுடையவரே! இனி நீங்கள் கவலைப் படவேண்டாம்.'

---

26. இதற்குமுன் அதிகபாடம்:-
'அங்கதஸ்ய ப்ரஹர்ஷாச்ச ஜானாமி சபதர்சன ॥ ப்லவதாமங்கதோ வர: । 31. அதிஷ்ட்டாதா-கார்யகரண-உத்யோகவான் ।
31. அங்கதச்ச ஹரீச்வர: । ந தத்ர கதிரன்யதா ।

मा भूश्चिन्तासमायुक्तः संप्रत्यमितविक्रम ।। ३२ ।।
ततः किलकिलाशब्दं शुश्रावासन्नमंबरे ।
हनूमत्कर्मदृप्तानां नर्दतां काननौकसाम् ।। ३३ ।।
ततः श्रुत्वा निनादं तं कपीनां कपिसत्तमः ।
आयतांचित-लांगूलः सोऽभवद्धृष्टमानसः ।। ३४ ।।
आजग्मुस्तेऽपि हरयो रामदर्शन-कांक्षिणः ।
अंगदं पुरतः कृत्वा हनूमन्तं च वानरम् ।। ३५ ।।

மா பூச்சிந்தாஸமாயுக்த: ஸம்ப்ரத்யமிதவிக்ரம ll 32 ll
தத: கிலகிலாசப்தம் சுச்ராவாஸந்நமம்பரே l
ஹனுமத் கர்மத்ருப்தானாம் நர்த்ததாம் கானனௌகஸாம் ll 33 ll
தத: ச்ருத்வா நிநாதம் தம் கபீனாம் கபிஸத்தம: l
ஆயதாஞ்சித-லாங்கூல: ஸோऽபவத்த்ருஷ்ட-மானஸ: ll 34 ll
ஆஜக்முஸ்தேऽபி ஹரயோ ராமதர்சன-காங்க்ஷிண: l
அங்கதம் புரத: க்ருத்வா ஹனுமந்தஞ் ச வானரம் ll 35 ll

33. அதன்பின் ஹனுமாருடைய செயலால் செருக்குற்றிருந்த வானரர்கள் கிஷ்கிந்தையை யணுகிய பொழுது காரிய சித்தியைத் தெரிவிப்பது போல் 'கில கில' என்று ஆகாயத்தில் சத்தமிட்டதை சுக்ரீவன் கேட்டான்.

34. அப்பொழுது வானரர்களின் சத்தத்தைக் கேட்ட அந்த வானரசிரேஷ்டன் களைத்துக் கிடந்த வாலை நீட்டிக் கொண்டு மகிழ்ச்சி பொங்கும் மனமுடையனானான்.

35. ஸ்ரீராமரை தரிசிக்க ஆவல் மிக்கவர்களான அவ்வானரர்கள் அங்கதனையும் ஹனுமாரையும் முன்னிட்டுக் கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

---

30. நஹ்யஸ்ய l ஸாதனே தத்விதோ பவேத் l ஹனுமதீஹ l வ்யவஸாயச்ச சௌர்யஞ்ச l

33. இதற்குமுன் அதிகபாடம்:— யதாஹி தர்ப்பிதோதக்ரா: ஸங்கதா: கானநௌகஸ: l நைஷாமக்ருத-கா(ர்)யாணா-மீத்ருச: ஸ்யாதுபக்ரம: l வனபங்கேன ஜானாமி மதூனாம் பக்ஷணேன ச ll

तेऽङ्गदप्रमुखा वीराः प्रहृष्टाश्च मुदान्विताः ।
निपेतु-र्हरिराजस्य समीपे राघवस्य च ॥ ३६ ॥
हनुमांश्च महाबाहुः प्रणम्य शिरसा ततः ।
नियता-मक्षतां देवीं राघवस्य न्यवेदयत् ॥ ३७ ॥
दृष्टा देवीति हनुमद्वदनादमृतोपमम् ।
आकर्ण्य वचनं रामो हर्षमाप सलक्ष्मणः ॥ ३८ ॥
निश्चितार्थ-स्ततस्तस्मिन् सुग्रीवः पवनात्मजे ॥ ३९ ॥
लक्ष्मणः प्रीतिमान् प्रीतं बहुमाना-दवैक्षत ॥ ४० ॥

தேऽங்கதப்ரமுகா வீரா: ப்ரஹ்ருஷ்டாச்ச முதான்விதா: ।
நிபேதுர்-ஹரிராஜஸ்ய ஸமீபே ராகவஸ்ய ச ॥ 36 ॥
ஹனுமாம்ச்ச மஹாபாஹு: ப்ரணம்ய சிரஸா தத: ।
நியதா-மக்ஷதாம் தேவீம் ராகவஸ்ய ந்யவேதயத் ॥ 37 ॥
த்ருஷ்டா தேவீதி ஹனுமத்-வதனாதம்ருதோபமம் ।
ஆகர்ண்ய வசனம் ராமோ ஹர்ஷமாப ஸலக்ஷ்மண: ॥ 38 ॥
நிச்சிதார்த்தஸ்-ததஸ்தஸ்மின் ஸுக்ரீவ: பவனாத்மஜே ॥ 39 ॥
லக்ஷ்மண: ப்ரீதிமான் ப்ரீதம் பஹுமானா-தவைக்ஷத ॥ 40 ॥

36. மகிழ்ச்சிநிறைந்து முகம் மலர்ந்த அங்கதன் முதலான அவ்வீரர்கள் வானர வேந்தனுக்கும் ஸ்ரீராமருக்கும் சமீபத்தில் இறங்கினார்கள்.

37. அதன்பின் பெருந்தோள் படைத்த ஹனுமார் ஸ்ரீராமரைத் தலையால் வணங்கி சீதை கற்பின் நிலை நிற்பதையும் கற்புக்குக் களங்க மேற்படாதிருப்பதையும் தெரிவித்தார்.

38. 'தேவி கண்டுபிடிக்கப்பட்டாள்' என்ற அமுதம் போன்ற சொல்லை ஹனுமாருடைய வாயினின்று கேட்டு ஸ்ரீராமர் லக்ஷ்மணருடன் மகிழ்வுற்றார்.

39-40. சுக்ரீவன் தன் சொல் ஹனுமார் மூலம் நிச்சயமாயிற்றென்று மகிழ்ந்தார். இலக்ஷ்மணரும் மகிழ்ச்சியுற்று அன்பிற்குரிய ஹனுமாரை வெகுமானத்துடன் பார்த்தார்.

36. மதான்விதா: ।

प्रीत्या च रममाणोऽथ राघवः परवीरहा ।
बहुमानेन महता हनुमन्त-मवैक्षत ।। ४१ ।।

इति चतुःषष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २७७७)

ப்ரீத்யா ச ரமமாணோऽத ராகவ: பரவீரஹா ।
பஹுமானேன மஹதா ஹனுமந்த-மவைக்ஷத ॥ 41 ॥

இதி சது: ஷஷ்டிதம: ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 2777)

---

41. பின்பு பகைவரை வாட்டவல்ல ஸ்ரீராகவரும் களிகூர்ந்து ஹனுமாரைப் பிரீதியுடனும் கௌரவத்துடனும் கண் குளிரப் பார்த்தார்.

இங்ஙனம் அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றும்
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2777)

---

38. இது சில பாடங்களில் இல்லை. 39. ஸுக்ரீவம் ।
41. ப்ரீதிமான் ப்ரீதோ । ப்ரீத்யா ச பரமோபேதோ ॥

पंचषष्टितमः सर्गः
चूडामणि प्रदानम्

ततः प्रस्रवणं शैलं ते गत्वा चित्रकाननम् ।
प्रणम्य शिरसा रामं लक्ष्मणं च महाबलम् ॥ १ ॥
युवराजं पुरस्कृत्य सुग्रीव-मभिवाद्य च ।
प्रवृत्ति-मथ सीतायाः प्रवक्तु-मुपचक्रमुः ॥ २ ॥

பஞ்ச ஷஷ்டிதம: ஸர்க்க:
சூடாமணி ப்ரதானம்

தத: ப்ரஸ்ரவணம் சைலம் தே கத்வா சித்ரகானனம் ।
ப்ரணம்ய சிரஸா ராமம் லக்ஷ்மணஞ் ச மஹாபலம் ॥ 1 ॥
யுவராஜம் புரஸ்க்ருத்ய ஸுக்ரீவ-மபிவாத்ய ச ।
ப்ரவ்ருத்தி-மத ஸீதாயா: ப்ரவக்து-முபசக்ரமு: ॥ 2 ॥

அறுபத்தைந்தாவது ஸர்க்கம்
சூடாமணிப்ரதானம்

1-2. அழகிய வனங்கள் நிறைந்த பிரஸ்ரவணமலையை அடைந்த அவ்வானரர்கள் ஸ்ரீராமரைத் தலையால் வணங்கி, மகாபலசாலியான இலக்ஷ்மணரையும் வணங்கி இளவரசான அங்கதனை முன்னிட்டுக் கொண்டு சுக்ரீவனையும் நமஸ்கரித்து விட்டு சீதையின் செய்தியைச் சொல்லத் தொடங்கினார்கள்.

---

2. ப்ரவக்துமுபசக்ரமே ।

रावणान्तः पुरे रोधं राक्षसीभिश्च तर्जनम् ।
रामे समनुरागं च यश्चायं समयः कृतः ।।
एत-दाख्यान्ति ते सर्वे हरयो रामसन्निधौ ।। ३ ।।
वैदेही-मक्षतां श्रुत्वा रामस्तूत्तर-मब्रवीम् ।
क्व सीता वर्तते देवी कथं च मयि वर्तते ।।
एतन्मे सर्वमाख्यात वैदेहीं प्रति वानराः ।। ४ ।।
रामस्य गदितं श्रुत्वा हरयो रामसन्निधौ ।
चोदयन्ति हनूमन्तं सीतावृत्तान्तकोविदम् ।। ५ ।।

ராவணாந்த: புரே ரோதம் ராக்ஷஸீபிச்ச தர்ஜனம் ।
ராமே ஸமனுராகஞ் ச யச்சாயம் ஸமய: க்ருத: ॥
ஏத-தாக்யாந்தி தே ஸர்வே ஹரயோ ராமஸந்நிதௌ ॥ 3 ॥
வைதேஹீமக்ஷதாம் ச்ருத்வா ராமஸ்தூத்தர-மப்ரவீத் ।
க்வ ஸீதா வர்த்ததே தேவீ கதஞ் ச மயி வர்த்ததே ॥
ஏதன்மே ஸர்வமாக்யாத வைதேஹீம் ப்ரதி வானரா: ॥ 4 ॥
ராமஸ்ய கதிதம் ச்ருத்வா ஹரயோ ராமஸந்நிதௌ ।
சோதயந்தி ஹனுமந்தம் ஸீதாவ்ருத்தாந்த-கோவிதம் ॥ 5 ॥

---

3. சீதை இராவணனுடைய அந்தப்புரத்தில் சிறைவைக்கப் பட்டிருப்பதையும் அரக்கிகளால் மிரட்டப்படுவதையும் அவள் ஸ்ரீராமரிடத்திலேயே சித்தத்தை வைத்திருப்பதையும் இராவணன் அவளுக்குக் காலத்தவணை வைத்திருப்பதையும் பற்றி அவர்கள் எல்லோரும் ஸ்ரீராமர் ஸந்நிதியில் தெரிவித்துக் கொண்டார்கள்.

4. சீதை பழுதில்லாமலிருப்பதைக் கேட்ட இராமர் அவர்களிடம் பின்வருமாறு வினவினார்: 'வானரர்களே! சீதாதேவி எங்கிருக்கிறாள்? என்னிடத்தில் எவ்வாறிருக்கிறாள்? வைதேகியைப்பற்றி எல்லாவற்றையும் எனக்குச் சொல்லுங்கள்.'

5. ஸ்ரீராமர் கூறியதைக் கேட்ட வானரர்கள் சீதையின் வரலாற்றைக் கூறும்படி அதை உள்ளபடி அறிந்த ஹனுமாரைத் தூண்டினார்கள்.

---

3. யதா ச நியம: க்ருத: । ஏத-தாக்யாய தே ஸர்வம் ।

श्रुत्वा तु वचनं तेषां हनुमान् मारुतात्मजः ।
प्रणम्य शिरसा देव्यै सीतायै तां दिशं प्रति ।।
उवाच वाक्यं वाक्यज्ञः सीताया दर्शनं यथा ।। ६ ।।
समुद्रं लंघयित्वाऽहं शतयोजनमायतम् ।
अगच्छं जानकीं सीतां मार्गमाणो दिदृक्षया ।। ७ ।।
तत्र लंकेति नगरी रावणस्य दुरात्मनः ।
दक्षिणस्य समुद्रस्य तीरे वसति दक्षिणे ।। ८ ।।

ச்ருத்வா து வசனம் தேஷாம் ஹனுமான் மாருதாத்மஜ: l
ப்ரணம்ய சிரஸா தேவ்யை ஸீதாயை தாம் திசம் ப்ரதி ll
உவாச வாக்யம் வாக்யஜ்ஞ: ஸீதாயா தர்சனம் யதா ll 6 ll
ஸமுத்ரம் லங்கயித்வாऽஹம் சதயோஜன-மாயதம் l
அகச்சம் ஜானகீம் ஸீதாம் மார்க்கமாணோ தித்ருக்ஷயா ll 7 ll
தத்ர லங்கேதி நகரீ ராவணஸ்ய துராத்மன: l
தக்ஷிணஸ்ய ஸமுத்ரஸ்ய தீரே வஸதி தக்ஷிணே ll 8 ll

---

6. அவர்கள் சொல்லைக் கேட்டு சொல்வல்லவரும் வாயுகுமாரருமான ஹனுமார் ஸீதா தேவிஸ்யத் திக்கு நோக்கித் தலையால் வணங்கித் தான் அவளைக் கண்ட வரலாற்றைக் கூறலானார்.

7. 'நான் ஜனகர் திருமகளான சீதையைக் காணவேண்டுமென்ற விருப்பத்தால் நூறு யோஜனை பரந்த கடலைத் தாண்டி அவளைத் தேடிக் கொண்டு சென்றேன்.

8. 'அங்கே தென்திசையில் கடலின் தென்கரையில் தீயவனான இராவணனுடைய இலங்கை எனும் நகர் உளது.

---

7. இதற்குமுன் அதிகபாடம்:- தம் மணிம் காஞ்சனம் திவ்யம் தீப்யமானம் ஸ்வதேஜஸா l தத்வா ராமாய ஹனுமாம் ஸ்தத: ப்ராஞ்ஜலி-ரப்ரவீத் ll

तत्र दृष्टा मया सीता रावणान्तःपुरे सती ।
सन्न्यस्य त्वयि जीवन्ती रामा राम मनोरथम् ॥ ९ ॥
दृष्टा मे राक्षसीमध्ये तर्ज्यमाना मुहुर्मुहुः ।
राक्षसीभि-र्विरूपाभी रक्षिता प्रमदावने ॥ १० ॥
दुःख-मासाद्यते देवी तथाऽदुःखोचिता सती ॥ ११
रावणान्तःपुरे रुद्धा राक्षसीभिः सुरक्षिता ।
एकवेणीधरा दीना त्वयि चिन्तापरायणा ॥ १२ ॥

தத்ர த்ருஷ்டா மயா ஸீதா ராவணாந்த:புரே ஸதீ ।
ஸந்ந்யஸ்ய த்வயி ஜீவந்தீ ராமா ராம மனோரதம் ॥ 9 ॥
த்ருஷ்டா மே ராக்ஷஸீமத்யே தர்ஜ்யமானா முஹுர்முஹு: ।
ராக்ஷஸீபிர்-விருபாபீ ரக்ஷிதா ப்ரமதாவனே ॥ 10 ॥
துःக்கமாஸாத்யதே தேவீ ததாऽது:க்கோசிதா ஸதீ ॥ 11 ॥
ராவணாந்த:புரே ருத்தா ராக்ஷஸீபி: ஸுரக்ஷிதா ।
ஏகவேணீதரா தீனா த்வயி சிந்தாபராயணா ॥ 12 ॥

---

9. 'ஸ்ரீராமரே! அங்கு இராவணனுடைய அந்தப்புரத்தில் கற்புமிக்க பெண்ணரசியாகிய சீதை என்னால் காணப்பட்டாள். உங்களிடம் நம்பிக்கையுடன் மனதை வைத்து உயிரைத் தரித்திருக்கிறாள்.

10. 'சிங்காரவனத்தில் அரக்கிகளிடையில் கோரரூபமுள்ள அவ்வரக்கிகளால் அடிக்கடி மிரட்டப்பட்டுக் காவலில் இருப்பதை நான் கண்டேன்.

11. துக்கத்தை யடையத்தகாத கற்பரசியான தேவி அவ்வண்ணம் துக்கத்தை யனுபவிக்கிறாள்.

12. இராவணனுடைய அந்தப்புரத்தில் சிறைவைக்கப்பட்டு, அரக்கிகளால் நன்றாகக் காக்கப்பட்டு ஒன்றாகப் பின்னிய சடையுடன் ஏழையாய் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

---

9. தத்ர ஸீதா மயா த்ருஷ்டா । த்வயி ஸந்ந்யஸ்ய ஜீவந்தீ ।
11. து:க்க-மாபத்யதே ।

अधः शय्या विवर्णांगी पद्मिनीव हिमागमे ।
रावणाद्विनिवृत्तार्था मर्तव्यकृतनिश्चया ।।
देवी कथंचित् काकुत्स्थ त्वन्मना मार्गिता मया ।। १३ ।।
इक्ष्वाकुवंश-विख्यातिं शनैः कीर्तयताऽनघ ।
सा मया नरशार्दूल विश्वास-मुपपादिता ।। १४ ।।
ततः संभाषिता देवी सर्वमर्थं च दर्शिता ।
राम-सुग्रीव-सख्यं च श्रुत्वा प्रीतिमुपागता ।। १५ ।।
नियतः समुदाचारो भक्तिश्चास्यास्तथा त्वयि ।। १६ ।।

அத:சய்யா விவர்ணாங்கீ பத்மினீவ ஹிமாகமே ‖
ராவணாத்-விநிவ்ருத்தார்த்தா மர்த்தவ்யக்ருத நிச்சயா ‖
தேவீ கதஞ்சித் காகுத்ஸ்த த்வன்மனா மார்க்கிதா மயா ‖ 13 ‖
இக்ஷ்வாகுவம்ச-விக்யாதிம் சனை: கீர்த்தயதாऽநக ‖
ஸா மயா நரசார்தூல விச்வாஸ-முபபாதிதா ‖ 14 ‖
தத: ஸம்பாஷிதா தேவீ ஸர்வமர்த்தஞ்ச தர்சிதா ‖
ராம-ஸுக்ரீவ-ஸக்யஞ் ச ச்ருத்வா ப்ரீதிமுபாகதா ‖ 15 ‖
நியத: ஸமுதாசாரோ பக்திச்சாஸ்யாஸ்-ததா த்வயி ‖ 16 ‖

13. அவள் தரையிலே படுத்து, பனியின் வருகையால் பொலிவிழந்த தாமரைபோல் நிறம் மாறி இராவணனிடமிருந்து தப்ப வழிகாணாதவளாய் உயிரை விடத் துணிந்தவளாயிருக்கிறாள்.

14. மாசற்ற புருஷசிரேஷ்டரே! இக்ஷ்வாகு குலத்தின் புகழை எடுத்துரைத்த என்னால் அவள் பொதுவாக நம்பிக்கை யடையும்படி செய்யப்பட்டாள்.

15. அதன்பின் அவள் என்னுடன் வார்த்தையாடினாள். எல்லாச் செய்திகளும் தெரிவிக்கப்பட்டாள். ஸ்ரீராமருக்கும் சுக்ரீவருக்கும் உண்டான நட்பைப்பற்றிக் கேட்டு மகிழ்ச்சியடைந்தாள்.

16. உங்களிடத்தில் பக்தியும் அதற்கனுகுணமான நியமமும் ஆசாரமும் அவளிடம் உளது.

14. சனைர்-விச்வாஸிதா ததா ‖ 15. ச்ருத்வா ஹர்ஷமுபாகதா ‖

एवं मया महाभागा दृष्टा जनकनन्दिनी ।
उग्रेण तपसा युक्ता त्वद्भक्त्या पुरुषर्षभ ॥ १७ ॥
अभिज्ञानं च मे दत्तं यथावृत्तं तवान्तिके ।
चित्रकूटे महाप्राज्ञ वायसं प्रति राघव ॥ १८ ॥
विज्ञाप्यश्च नरव्याघ्रो रामो वायुसुत त्वया ।
अखिलेनेह यद्दृष्ट-मिति मामाह जानकी ॥ १९ ॥

ஏவம் மயா மஹாபாக த்ருஷ்டா ஜனகநந்தினீ ।
உக்ரேண தபஸா யுக்தா த்வத்பக்த்யா புருஷர்ஷப ॥ 17 ॥
அபிஜ்ஞானஞ் ச மே தத்தம் யதாவ்ருத்தம் தவாந்திகே ।
சித்ரகூடே மஹாப்ராஜ்ஞ வாயஸம் ப்ரதி ராகவ ॥ 18 ॥
விஜ்ஞாப்யச்ச நரவ்யாக்ரோ ராமோ வாயுஸுத த்வயா ।
அகிலேனேஹ யத்த்ருஷ்ட-மிதி மாமாஹ ஜானகீ ॥ 19 ॥

---

17. புருஷோத்தமரே! இவ்வாறு உம்மிடம் பக்தியாகிற கடுந்தவத்துடனிருப்பவளும் மகிமை மிக்கவளுமான ஜனகநந்தினி என்னால் காணப்பட்டாள்.

18. மகாமதிமானாகிய ரகுகுலப்பெருமானே! சித்திர கூடத்தில் உமது முன்னிலையில் நிகழ்ந்த காக்கையின் விருத்தாந்தத்தை ஒரு அடையாளமாய்த் தெரிவிக்க என்னிடம் ஒப்படைத்தாள்.

19. 'வாயுகுமாரரே! நீர் இங்கே கண்டதையெல்லாம் புருஷோத்தமரான ஸ்ரீராமரிடம் தெரிவிக்க வேண்டும்' என்று என்னிடம் ஜானகி கூறினாள்.

---

18. அபிஜ்ஞானம்-சின்ஹபூதம் வாக்யம் ।
19. விஜ்ஞாப்ய: புனரப்யேஷ । அகிலேன யதா த்ருஷ்டமிதி ।
16. பக்திச்சாஸ்யா: ஸதா த்வயி । 19. மஹாபாகா ।
17. ஒ. விற்பெருந் தடந்தோள்வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில் நற்பெருந்தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்! இல்பிறப்பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும் கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.

अयं चास्मै प्रदातव्यो यत्नात् सुपरिरक्षितः ।
ब्रुवता वचनान्येवं सुग्रीवस्योपशृण्वतः ॥ २० ॥
एष चूडामणिः श्रीमान् मया सुपरिरक्षितः ।
मनश्शिलायास्तिलकं तत् स्मरस्वेति चाब्रवीत् ॥ २१ ॥
एष निर्यातितः श्रीमान् मया ते वारिसंभवः ॥ २२ ॥
एतं दृष्ट्वा प्रमोदिष्ये व्यसने त्वामिवानघ ।
जीवितं धारयिष्यामि मासं दशरथात्मज ॥ २३ ॥

அயஞ்சாஸ்மை ப்ரதாதவ்யோ யத்னாத் ஸுபரிரக்ஷித: ।
ப்ருவதா வசனான்யேவம் ஸுக்ரீவஸ்யோபச்ருண்வத: ॥ 20 ॥
ஏஷ சூடாமணி: ஸ்ரீமான் மயா ஸுபரிரக்ஷித: ।
மன:சிலாயாஸ்திலகம் தத் ஸ்மரஸ்வேதி சாப்ரவீத் ॥ 21 ॥
ஏஷ நிர்யாதித: ஸ்ரீமான் மயா தே வாரிஸம்பவ: ॥ 22 ॥
ஏதம் த்ருஷ்ட்வா ப்ரமோதிஷ்யே வ்யஸனே த்வாமிவானக ।
ஜீவிதம் தாரயிஷ்யாமி மாஸம் தசரதாத்மஜ ॥ 23 ॥

20-22. 'இவ்வார்த்தைகளைச் சுக்ரீவரும் கேட்கும்படியாகச் சொல்லி என்னால் ஜாக்கிரதையாய் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த இந்தச் சூடாமணியை அவரிடம் கொடுக்க வேண்டும். சிறப்பான இந்தச் சூடாமணியை நான் வெகு கவனமாகக் காப்பாற்றினேன். மனோ சிலையால் எனக்குத் திலகமிட்டதும் நினைத்தருள்க. கடலில் தோன்றிய ஒளிமிக்க இம்மணி என்னால் உங்களுக்கு அனுப்பப்படுகிறது என்று கூறினாள்.

23. 'விசனத்தில் இந்த மணியைப் பார்த்து உங்களைப் பார்த்தாற்போல் மகிழ்வேன். தசரதகுமாரரே! இன்னும் ஒரு மாதம் உயிரைத் தரித்திருப்பேன்.

---

21. திலகோ கண்ட பார்ச்வே நிவேசித: ॥ த்வயா ப்ரணஷ்டேதிலகே தம்கில ஸ்மர்த்துமர்ஹஸி ॥
23. ஏனம் த்ருஷ்ட்வா ।

ऊर्ध्वं मासान्न जीवेयं रक्षसां वश्यमागता ॥ २४ ॥

इति मामब्रवीत् सीता कृशांगी धर्मचारिणी ।
रावणान्तः पुरे रुद्धा मृगीवोत्फुल्ललोचना ॥ २५ ॥

एतदेव मयाऽऽख्यातं सर्वं राघव यद्यथा ।
सर्वथा सागरजले सन्तारः प्रविधीयताम् ॥ २६ ॥

ஊர்த்வம் மாஸாந்ந ஜீவேயம் ரக்ஷஸாம் வச்யமாகதா ll 24 ll

இதி மாமப்ரவீத் ஸீதா க்ருசாங்கீ தர்மசாரிணீ l
ராவணாந்த:புரே ருத்தா ம்ருகீவோத்புல்லலோசனா ll 25 ll

ஏததேவ மயாSSக்யாதம் ஸர்வம் ராகவ யத்யதா l
ஸர்வதா ஸாகரஜலே ஸந்தார: ப்ரவிதீயதாம் ll 26 ll

---

24. 'அரக்கர்களின் வசப்பட்ட நான் ஒரு மாதத்துக்கப்பால் பிழைத்திருக்கமாட்டேன்.'

25. இராவணனுடைய அந்தப்புரத்தில் காவலில் வைக்கப்பட்டவளும் மானைப்போல் மலர்ந்த கண்படைத்தவளும் தர்மசாரிணியும் உடல் மெலிந்தவளுமான சீதை இவ்வாறு என்னிடம் கூறினாள்

26. 'ஸ்ரீராகவரே! இது எல்லாம் உள்ளபடி என்னால் கூறப்பட்டது. எப்படியும் கடல் நீரில் ஒரு அணை கட்ட உத்திரவாக வேண்டும்.'

---

26. ஸந்தார:-ஸந்தரணோபாய: l ஸந்தீர்யதே அனேனேதி ஸந்தார: ஸேது: l

तौ जाताश्वासौ राजपुत्रौ विदित्वा तथाभिज्ञानं राघवाय प्रदाय ।
देव्या चाख्यातं सर्वमेवानुपूर्व्यात् वाचा संपूर्णं वायुपुत्रः शशंस ॥ २७ ॥

इति पंचषष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २८०४)

தௌ ஜாதாச்வாஸௌ ராஜபுத்ரௌ விதித்வா
தநாபிஜ்ஞானம் ராகவாய ப்ரதாய ।
தேவ்யா சாக்யாதம் ஸர்வமேவானுபூர்வ்யாத்
வாசா ஸம்பூர்ணம் வாயுபுத்ர: சசம்ஸ ॥ 27 ॥

இதிபஞ்சஷஷ்டிதம: ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 2804)

---

27. அரச குமாரர்களாகிய இருவரும் ஆறுதலடைந்ததை அறிந்த வாயுபுத்திரர் அடையாளமாகிய சூடாமணியை ஸ்ரீராமரிடம் கொடுத்து தேவியால் சொல்லப்பட்டிருந்த அனைத்தையும் முறையாகத் தமது வாக்கால் தெரிவித்தார்.

இங்ஙனம் அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2804)

षट् षष्टितमः सर्गः

सीताभाषितप्रश्नः

एवमुक्तो हनुमता रामो दशरथात्मजः ।
तं मणिं हृदये कृत्वा प्ररुरोद सलक्ष्मणः ॥ १ ॥
तं तु दृष्ट्वा मणिश्रेष्ठं राघवः शोककर्शितः ।
नेत्राभ्या-मश्रुपूर्णाभ्यां सुग्रीव-मिद-मब्रवीत् ॥ २ ॥
यथैव धेनुः स्रवति स्नेहाद्वत्सस्य वत्सला ।
तथा ममापि हृदयं मणिरत्नस्य दर्शनात् ॥ ३ ॥

ஷட்ஷஷ்டிதம: ஸர்க்க:

ஸீதாபாஷிதப்ரச்ன:

ஏவமுக்தோ ஹனுமதா ராமோ தசரதாத்மஜ: ।
தம் மணிம் ஹ்ருதயே க்ருத்வா ப்ரருரோத ஸலக்ஷ்மண: ॥ 1 ॥
தம் து த்ருஷ்ட்வா மணிச்ரேஷ்டம் ராகவ: சோககர்சித: ।
நேத்ராப்யா-மச்ருபூர்ணாப்யாம் ஸுக்ரீவ-மித-மப்ரவீத் ॥ 2 ॥
யதைவ தேனு: ஸ்ரவதி ஸ்நேஹாத்வத்ஸஸ்ய வத்ஸலா ।
ததா மமாபி ஹ்ருதயம் மணிரத்னஸ்ய தர்சனாத் ॥ 3 ॥

அறுபத்தாறாவது ஸர்க்கம்

ஸீதா வசனமுரைத்தல்

1. தசரதபுத்திரரான ஸ்ரீராமர் ஹனுமாரால் இவ்வாறு கூறப்பெற்றபின் அந்த மணியை மார்புடன் அணைத்துக் கொண்டு இலக்ஷ்மணருடன் விம்மி அழுதார்.

2. அவர் அந்தச்சிறந்த மணியைப் பார்த்து துக்கம் மேலிட்டவராய்க் கண்களில் நீர்ததும்ப சுக்ரீவனிடம் பின்வருமாறு கூறினார்.

3. கன்றினிடம் அன்பினால் புதிதாய் ஈன்ற பசு மனங்கரைவது போல் என்னுடைய இருதயம் இந்தச் சூடாமணியைக் கண்டு உருகுகிறது.

मणिरत्न-मिदं दत्तं वैदेह्याः श्वशुरेण मे ।
वधूकाले यथा बद्ध-मधिकं मूर्ध्नि शोभते ॥ ४ ॥
अयं हि जलसंभूतो मणिः सज्जनपूजितः ।
यज्ञे परमतुष्टेन दत्तः शक्रेण धीमता ॥ ५ ॥
इमं दृष्ट्वा मणिश्रेष्ठं यथा तातस्य दर्शनम् ।
अद्यास्म्यवगतः सौम्य वैदेहस्य तथा विभोः ॥ ६ ॥
अयं हि शोभते तस्याः प्रियाया मूर्ध्नि मे मणिः ।
अस्याद्य दर्शनेनाहं प्राप्तां तामिव चिन्तये ॥ ७ ॥

மணிரத்ன-மிதம் தத்தம் வைதேஹ்யா: ச்வசுரேண மே ।
வதூகாலே யதா பத்த-மதிகம் மூர்த்னி சோபதே ॥ 4 ॥
அயம் ஹி ஜலஸம்பூதோ மணி: ஸஜ்ஜனபூஜித: ।
யஜ்ஞே பரமதுஷ்டேன தத்த: சக்ரேண தீமதா ॥ 5 ॥
இமம் த்ருஷ்ட்வா மணிச்ரேஷ்டம் யதா தாதஸ்ய தர்சனம் ।
அத்யாஸ்ம்யவகத: ஸௌம்ய வைதேஹஸ்ய ததா விபோ: ॥ 6 ॥
அயம் ஹி சோபதே தஸ்யா: ப்ரியாயா மூர்த்னி மே மணி: ।
அஸ்யாத்ய தர்சனேனாஹம் ப்ராப்தாம் தாமிவ சிந்தயே ॥ 7 ॥

---

4. இச்சிறந்த ஆபரணம் வைதேகிக்கு என் மாமனாரால் கொடுக்கப்பட்டது. விவாக காலத்தில் அவள் சிரசில் சூட்டப்பெற்று அதிகமான அழகுடன் விளங்கிற்று.

5. இந்த மணி கடலில் தோன்றினது. ஸாதுக்களால் நன்கு மதிக்கப்பட்டது. ஜனகர் செய்த யாகத்தில் மிகவும் மகிழ்ச்சியுற்ற மதிமானான இந்திரனால் அவருக்கு அளிக்கப்பட்டது.

6. மனமழகியவரே! இப்பொழுது இச்சிறந்த ஆபரணத்தைக் கண்ணுற்று எனது தந்தையையும் பிரபுவான விதேக மன்னரையும் கண்டாற்போன்ற மனநிலையை அடைந்துள்ளேன்.

7. 'இந்த மணி என் காதலியின் தலையில் பிரகாசிப்பது. இதனுடைய தரிசனத்தால் நான் அவளையே அடைந்தாற்போல் கருதுகிறேன்.

---

1. ருரோத ஸஹலக்ஷ்மண: । 3. மணிச்ரேஷ்டஸ்ய ।

किमाह सीता वैदेही ब्रूहि सौम्य पुनः पुनः ।
पिपासुमिव तोयेन सिंचन्ती वाक्यवारिणा ॥ ८ ॥
इतस्तु किं दुःखतरं यदिमं वारिसम्भवम् ।
मणिं पश्यामि सौमित्रे वैदेहीमागतं विना ॥ ९ ॥
चिरं जीवति वैदेही यदि मासं धरिष्यति ।
क्षणं सौम्य न जीवेयं विना तामसितेक्षणाम् ॥ १० ॥

கிமாஹ ஸீதா வைதேஹீ ப்ரூஹி ஸௌம்ய புன: புன:।
பிபாஸுமிவ தோயேன ஸிஞ்சந்தீ வாக்யவாரிணா ॥ 8 ॥
இதஸ்து கிம் து:க்கதரம் யதிமம் வாரிஸம்பவம் ।
மணிம் பச்யாமி ஸௌமித்ரே வை தேஹீமாகதம் விநா ॥ 9 ॥
சிரம் ஜீவதி வைதேஹீ யதி மாஸம் தரிஷ்யதி ।
க்ஷணம் ஸௌம்ய ந ஜீவேயம் விநா தாமஸிதேக்ஷணாம் ॥ 10 ॥

---

8. 'மனமழகியவரே! விதேகராஜபுத்திரியான சீதை தாகமுள்ளவனுக்குத் தண்ணீர் போன்ற வார்த்தைகளாகிற நீரினால் என்மனதை நனைக்க என்ன பேசினாளோ அதை அடிக்கடி சொல்லும்.

9. 'இலக்ஷ்மணா! வைதேகியின்றி வந்துள்ள இந்தக் கடலிலுதித்த மணியைப் பார்க்கிறேன் என்பதை விடப் பெரிய துக்கம் யாதுளது?

10. 'ஸௌம்யா! வைதேகி ஒரு மாதம் உயிர் தரித்திருந்தால் நெடுங்காலம் வாழ்வாள். கரிய கண்படைத்த அவளை விட்டுப் பிரிந்து இனிக்கணப்பொழுதும் நான் உயிருடன் இரேன்.

---

5. மணி: ப்ரவரபூஜித:। 6. யதா தாதஸ்ய । அஸ்யாத்ய ।
9. யமிமம் வாரிஸம்பவம் ।
10. க்ஷணம்வீர । 13. ஆவ்ருதோ ।
ந விராஜதி ஸாம்ப்ரதம் ।

नय मामपि तं देशं यत्र दृष्टा मम प्रिया ।
न तिष्ठेयं क्षणमपि प्रवृत्ति-मुपलभ्य च ।। ११ ।।
कथं सा मम सुश्रोणी भीरुभीरुः सती सदा ।
भयावहानां घोराणां मध्ये तिष्टति रक्षसाम् ।। १२ ।।
शारदस्तिमिरोन्मुक्तो नूनं चन्द्र इवांबुदैः ।
आवृतं वदनं तस्या न विराजति राक्षसैः ।। १३ ।।
किमाह सीता हनुमंस्तत्त्वतः कथयाद्य मे ।
एतेन खलु जीविष्ये भेषजेनातुरो यथा ।। १४ ।।

நய மாமபி தம் தேசம் யத்ர த்ருஷ்டா மம ப்ரியா ।
ந திஷ்டேயம் க்ஷணமபி ப்ரவ்ருத்தி-முபலப்ய ச ॥ 11 ॥
கதம் ஸா மம ஸுச்ரோணீ பீருபீரு: ஸதீ ஸதா ।
பயாவஹானாம் கோராணாம் மத்யே திஷ்டதி ரக்ஷஸாம் ॥ 12 ॥
சாரதஸ்திமிரோன்முக்தோ நூனம் சந்த்ர இவாம்புதை: ।
ஆவ்ருதம் வதனம் தஸ்யா ந விராஜதி ராக்ஷஸை: ॥ 13 ॥
கிமாஹ ஸீதா ஹனுமம்ஸ்தத்வத: கதயாத்ய மே ।
ஏதேன கலு ஜீவிஷ்யே பேஷஜேனாதுரோ யதா ॥ 14 ॥

---

11. 'எனக்குப் பிரியமான அவள் எங்கு காணப்பட்டாளோ அவ்விடத்திற்கு என்னையும் அழைத்துக் கொண்டு போ. அவளுடைய செய்தியை அறிந்து விட்டு இனி ஒரு கணமும் தரிக்க மாட்டேன்.

12. 'நுண்ணிடையாளான எனது கற்பரசி பயமுறுத்தும் கொடிய அரக்கர் நடுவில் எப்பொழுதும் நடுநடுங்கிக் கொண்டு எப்படியிருக்கிறாளோ?

13. இருளினின்று நீங்கி மேகங்களால் சூழப்பட்ட சரத் காலச் சந்திரனையொத்த அவளுடைய முகம் அரக்கர்களால் சூழப்பட்டுப் பிரகாசமற்றிருக்கும். இது நிச்சயம்.

14. 'ஹனுமானே! சீதை என்ன சொன்னாள்? அதை உள்ளபடி எனக்குச் சொல். நோயாளி மருந்தினால் பிழைப்பது போல் இப்பொழுது நான் அதைக் கொண்டு பிழைக்க வேண்டும்.

मधुरा मधुरालापा किमाह मम भामिनी ।
मद्विहीना वरारोहा हनुमन् कथयस्व मे ॥ १५॥ ॥
इति षट्षष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २८१९)

மதுரா மதுராலாபா கிமாஹ மம பாமினீ
மத்விஹீனா வராரோஹா ஹனுமன் கதயஸ்வ மே ll 15 ll
இதி ஷட்ஷஷ்ட்டிதம: ஸர்க்க:
(ஆதித: ச்லோகா: 2819)

---

15. 'ஹனுமானே! என்னைப் பிரிந்திருக்கும் என் நாயகி இனியவள், இனிமையாய்ப் பேசுபவள், கட்டழகி. அவள் என்ன சொல்லியனுப்பினாள்? அதை எனக்குச் சொல்.'

இங்ஙனம் அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2819)

---

15. இதற்குப்பின் அதிக பாடம் அரை சுலோகம்:- 'து:க்காத்து:க்கதரம் ப்ராப்ய கதம் ஜீவதி ஜானகீ ll

सप्तषष्टितमः सर्गः
सीतावचनानुवादः

एवमुक्तस्तु हनुमान् राघवेण महात्मना ।
सीताया भाषितं सर्वं न्यवेदयत राघवे ।। १ ।।

इदमुक्तवती देवी जानकी पुरुषर्षभ ।
पूर्ववृत्तमभिज्ञानं चित्रकूटे यथातथम् ।। २ ।।

ஸப்தஷஷ்டிதம: ஸர்க்க:
ஸீதாவசனானுவாத:

ஏவமுக்தஸ்து ஹனுமான் ராகவேண மஹாத்மனா ।
ஸீதாயா பாஷிதம் ஸர்வம் ந்யவேதயத ராகவே ॥ 1 ॥
இதமுக்தவதீ தேவீ ஜானகீ புருஷர்ஷப ।
பூர்வவ்ருத்த-மபிஜ்ஞானம் சித்ரகூடே யதாததம் ॥ 2 ॥

அறுபத்தேழாவது ஸர்க்கம்
ஹனுமார் சீதையின் வசனமுரைத்தல்

1. மகாத்மாவான ஸ்ரீராமரால் இவ்வாறு கூறப்பெற்ற ஹனுமார் சீதை கூறியதையெல்லாம் அவரிடம் தெரிவித்தார்.

2. 'புருஷோத்தமரே! ஜானகிதேவி சித்திரகூடத்தில் முன்பு நிகழ்ந்த இந்தச் செய்தியை நடந்தபடி அடையாளமாகச் சொன்னார்.

सुखसुप्ता त्वया सार्धं जानकी पूर्वमुत्थिता ।
वायसः सहसोत्पत्य विरराद स्तनान्तरे ।। ३ ।।
पर्यायेण च सुप्तस्त्वं देव्यंके भरताग्रज ।
पुनश्च किल पक्षी स देव्या जनयति व्यथाम् ।। ४।।
पुनः पुनरुपागम्य विरराद भृशं किल ।
ततस्त्वं बोधितस्तस्याः शोणितेन समुक्षितः ।। ५ ।।

ஸுகஸுப்தா த்வயா ஸார்த்தம் ஜானகீ பூர்வமுத்திதா ।
வாயஸ: ஸஹஸோத்பத்ய விரராத ஸ்தனாந்தரே ॥ 3 ॥
பர்யாயேண ச ஸுப்தஸ்த்வம் தேவ்யங்கே பரதாக்ரஜ ।
புனச்ச கில பக்ஷீ ஸ தேவ்யா ஜனயதி வ்யதாம் ॥ 4 ॥
புன: புனருபாகம்ய விரராத ப்ருசம் கில ।
ததஸ்த்வம் போதிதஸ்தஸ்யா: சோணிதேன ஸமுக்ஷித: ॥ 5 ॥

---

3. 'உங்களுடன் கூட இருக்கையில் சுகமாக நித்திரை செய்துவிட்டு ஜானகிதேவி முன்னதாக விழித்தெழுந்தாள். காக்கை ஒன்று பறந்துவந்து அவளுடைய மார்பில் திடீரெனக் காயப்படுத்திற்று.

4. 'பின்பு தேவியின் மடியில் சாய்ந்து நீங்கள் உறங்கினீர்கள். மறுபடியும் அதே பறவை தேவிக்குத் துன்பம் விளைத்தது.

5. அடிக்கடி வந்து மேல் பாய்ந்து அது மிகவும் புண்படுத்திற்று. அப்பொழுது அவளுடைய இரத்தத்தால் நனைந்து நீங்கள் விழித்துக் கொண்டீர்கள்.

---

3. ஸ்தனாந்தரம் ।
ஓ. உன் பெருந்தேவி என்னும் உரிமைக்கும் உன்னைப்பெற்ற
மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன் பெருந்தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்.
என்பெருந்தெய்வம் ஐயா! இன்னமும் கேட்டி என்பான்.
— கம்பர்.

वायसेन च तेनैव सततं बाध्यमानया ।
बोधितः किल देव्या त्वं सुखसुप्तः परन्तप ।। ६ ।।
तां च दृष्ट्वा महाबाहो दारितां च स्तनान्तरे ।
आशीविष इव क्रुद्धो निःश्वसन्नभ्यभाषथाः ।। ७ ।।
नखाग्रैः केन ते भीरु दारितं तु स्तनान्तरम् ।
कः क्रीडति सरोषेण पंचवक्त्रेण भोगिना ।। ८ ।।

வாயஸேன ச தேனைவ ஸததம் பாத்யமானயா ।
போதித: கில தேவ்யா த்வம் ஸுகஸுப்த: பரந்தப ।। 6 ।।
தாஞ் ச த்ருஷ்ட்வா மஹாபாஹோ தாரிதாஞ் ச ஸ்தனாந்தரே ।
ஆசீவிஷ இவ க்ருத்தோ நி: ச்வஸந்நப்ய பாஷதா: ।। 7 ।।
நகாக்ரை: கேன தே பீரு தாரிதம் து ஸ்தனாந்தரம் ।
க: க்ரீடதி ஸ ரோஷேண பஞ்சவக்த்ரேண போகினா ।। 8 ।।

---

6. 'பகைவரை வாட்டுபவரே! நன்றாகத் தூங்கிய நீங்கள் அந்தக் காக்கையால் இடைவிடாது துன்புறுத்தப்பட்ட தேவியாலும் எழுப்பப்பட்டீர்கள்.

7. 'பெருந்தோள் படைத்தவரே! அவள் மார்பில் காயப்பட்டிருந்ததைக் கண்டு நீங்கள் கோபத்துடன் பாம்பு போல் சீறி இப்படிப் பேசினீர்கள்.

8. ''பயந்தவளே! உன்னுடைய மார்பில் நகத்தால் கீறினது யார்? கோபங்கொண்ட ஐந்தலை நாகத்துடன் விளையாடுவது யார்?"

---

7. தாம் து த்ருஷ்ட்வா ।
க்ருத்தஸ்ததோ வாக்யம் த்வமூசிவான் ।
8. பீரு ராதிம் து ।

निरीक्षमाणः सहसा वायसं समवैक्षथाः ।
नखैः सरुधिरैस्तीक्ष्णै-स्तामेवाभिमुखं स्थितम् ॥ ९ ॥
सुतः किल स शक्रस्य वायसः पततां वरः ।
धरान्तरचरः शीघ्रं पवनस्य गतौ समः ॥ १० ॥
ततस्तस्मिन् महाबाहो कोपसंवर्तितेक्षणः ।
वायसे त्वं कृथाः क्रूरां मतिं मतिमतां वर ॥ ११ ॥
स दर्भ-संस्तराद्गृह्य ब्रह्मास्त्रेण ह्योजयः ।
स दीप्त इव कालाग्नि-र्जज्वालाभिमुखः खगम् ॥ १२ ॥

நிரீக்ஷமாண: ஸஹஸா வாயஸம் ஸமவைக்ஷதா: ।
நகை: ஸருதிரைஸ்தீக்ஷ்ணைஸ்-தாமேவாபிமுகம் ஸ்திதம் ॥ 9 ॥
ஸுத: கில ஸ சக்ரஸ்ய வாயஸ: பததாம் வர: ।
தராந்தரசர: சீக்ரம் பவனஸ்ய கதௌ ஸம: ॥ 10 ॥
ததஸ்தஸ்மின் மஹாபாஹோ கோபஸம்வர்த்திதேக்ஷண: ।
வாயஸே த்வம் க்ருதா: க்ரூராம் மதிம் மதிமதாம்வர ॥ 11 ॥
ஸ தர்ப்பம் ஸம்ஸ்தராத் க்ருஹ்ய ப்ரஹ்மாஸ்த்ரேண ஹ்யயோஜய: ।
ஸதீப்த இவ காலாக்னிர்-ஜஜ்வாலாபிமுக: ககம் ॥ 12 ॥

---

9. 'உடனே நீங்கள் நாற்புறமும் பார்த்து இரத்தந் தோய்ந்த கூரிய நகங்களுடன் அவளுக்கெதிரிலிருந்த காக்கையைக் கண்டீர்கள்.

10. 'பறவைகளில் சிறந்த அந்தக் காக்கை இந்திரனுடைய மகன். பறப்பதில் காற்றுக்கு நிகரானது. ஆகையால் அது சீக்கிரமே ஓடி பூமிக்குள் மறைந்து விட்டது.

11. 'மதிமான்களிற் சிறந்தவரே! பெருந்தோள் படைத்தவரே! அதன்பின் நீங்கள் கோபத்தால் கண் சுழன்று அந்தக் காகத்தின் விஷயத்தில் ஒரு கடுமையான தீர்மானத்தை அடைந்தீர்கள்.

12. 'அப்படிப்பட்ட நீங்கள் தர்ப்பாஸனத்திலிருந்து ஒரு புல்லை எடுத்து பிரம்மாஸ்திரமந்திரத்தை ஓதினீர்கள். காக்கைக்காகச் சித்தமாக்கப்பட்ட அது ஊழித் தீ போல் எரிந்தது.

---

10. தராந்தரகத:। 11. த்வம் வ்யதா: க்ரூராம் மதிம் மதிமதாம் வர:।

क्षिप्तवांस्त्वं प्रदीप्तं हि दर्भं तं वायसं प्रति ।
ततस्तु वायसं दीप्तः स दर्भोऽनुजगाम ह ॥ १३ ॥
स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः ।
त्रींल्लोकान् संपरिक्रम्य त्रातारं नाधिगच्छति ॥ १४ ॥
पुनरेवागत-स्त्रस्त-स्त्वत्सकाश-मरिन्दम ।
स तं निपतितं भूमौ शरण्यः शरणागतम् ।
वधार्हमपि काकुत्स्थ कृपया पर्यपालयः ॥ १५ ॥

க்ஷிப்தவாம்ஸ்த்வம் ப்ரதீப்தம் ஹி தர்ப்பம் தம் வாயஸம் ப்ரதி ।
ததஸ்து வாயஸம் தீப்த: ஸ தர்ப்போ ऽனுஜகாமஹ ॥ 13 ॥
ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: ।
த்ரீன் லோகான் ஸம்பரிக்ரம்ய த்ராதாரம் நாதிகச்சதி ॥ 14 ॥
புனரேவாகதஸ்-த்ரஸ்தஸ்-த்வத்ஸகாச-மரிந்தம ।
ஸ தம் நிபதிதம் பூமௌ சரண்ய: சரணாகதம் ॥
வதார்ஹமபி காகுத்ஸ்த க்ருபயா பர்யபாலய: ॥ 15 ॥

13. நீங்கள் அப்படி எரியத் தொடங்கிய அந்தப் புல்லைக் காக்கையின் மேல் ஏவினீர்கள். அந்த தர்ப்பைப்புல் எரிந்து கொண்டு காக்கையைத் துரத்தலாயிற்று.

14. அக்காக்கை மூன்று லோகங்களும் சுற்றித் தன் தந்தையாலும் தேவர்களாலும் முனிவர்களாலும் கைவிடப் பட்டுக் காப்பாற்றுவார் எவரையும் காணவில்லை.

15. 'காகுத்ஸ்தரே! பகைவரையடக்குபவரே! அது மறுபடி பயந்து நடுங்கி உமது முன்னிலைக்கே வந்தது. உம்மைச் சரணடைந்து விழுந்து கிடந்த காக்கையைச் சரணளிக்கும் இயல்புள்ள நீங்கள் அது கொல்லத் தகுந்ததாயிருந்தும் கருணையால் காப்பாற்றினீர்கள்.

12. தர்ப்பஸம்ஸ்தராத் । ஜஜ்வாலாபிமுகம் ககம் । 13. ஸத்வம் ப்ரதீப்தம் சிக்ஷேப ।
14. பீதைச்ச ஸம்பரித்யக்த: ஸுரை: ஸர்வைச்ச வாயஸ:
15. புனரப்யாகதஸ்தத்ர । த்வம் தம் நிபதிதம் பூமௌ தரண்யாம் சரணாகதம் ।

मोघमस्त्रं न शक्यं तु कर्तु-मित्येव राघव ।
भवांस्तस्याक्षि काकस्य हिनस्ति स्म स दक्षिणम् ।। १६ ।।
राम त्वां स नमस्कृत्य राज्ञे दशरथाय च ।
विसृष्टस्तु तदा काकः प्रतिपेदे स्वमालयम् ।। १७ ।।
एवमस्त्रविदां श्रेष्ठः सत्त्ववाञ्च्छीलवानपि ।
किमर्थ-मस्त्रं रक्षःसु न योजयति राघवः ।। १८ ।।
न नागा नापि गन्धर्वा नासुरा न मरुद्गणाः ।
न च सर्वे रणे शक्ता रामं प्रति समासितुम् ।। १९ ।।

மோகமஸ்த்ரம் ந சக்யம் து கர்த்து-மித்யேவ ராகவ ।
பவாம்ஸ்தஸ்யாக்ஷி காகஸ்ய ஹிநஸ்தி ஸ்ம ஸ தக்ஷிணம் ।। 16 ।।
ராம த்வாம் ஸ நமஸ்க்ருத்ய ராஜ்ஞே தசரதாய ச ।
விஸ்ருஷ்டஸ்து ததா காக: ப்ரதிபேதே ஸ்வமாலயம் ।। 17 ।।
ஏவமஸ்த்ரவிதாம்ச்ரேஷ்ட: ஸத்வவாஞ்ச் சீலவானபி ।
கிமர்த்த-மஸ்த்ரம் ரக்ஷ: ஸு ந யோஜயதி ராகவ: ।। 18 ।।
ந நாகா நாபி கந்தர்வா நாஸுரா ந மருத்கணா: ।
ந ச ஸர்வே ரணே சக்தா ராமம் ப்ரதி ஸமாஸிதும் ।। 19 ।।

16. 'ஸ்ரீராகவரே! அப்படிப்பட்ட நீங்கள் அஸ்திரம் வீண்போகமாட்டாதென்று சொல்லி அந்தக் காக்கையின் வலது கண்ணைக் கெடுத்து விட்டீர்கள்.

17. 'ஸ்ரீராமா! அதன்மேல் அக்காகம் உங்களுக்கும் தசரதமகாராஜருக்கும் வணக்கம் செலுத்தி விடைபெற்றுத் தனது இருப்பிடம் போய்ச் சேர்ந்தது.

18. 'இவ்வாறு அஸ்திரவித்தையறிந்தவர்களில் சிறந்த ஸ்ரீராகவர் உடல்வன்மையும் உள்ளப்பண்பும் உடையவராயிருந்தும் யாது காரணத்தால் அரக்கர்கள் மேல் அஸ்திரம் தொடுக்காமலிருக்கிறார்?

19. 'நாகர்களல்லர், கந்தர்வர்களல்லர், அசுரர்களல்லர், மருத்கணங்களல்லர்; யாவரும் கூடினாலும் போரில் ஸ்ரீராமரை எதிர்க்க வல்லவர்களாக மாட்டார்கள்.

तस्य वीर्यवतः कश्चिद्यद्यस्ति मयि संभ्रमः ।
क्षिप्रं सुनिशितै-र्बाणै-र्हन्यतां युधि रावणः ॥ २० ॥
भ्रातुरादेश-माज्ञाय लक्ष्मणो वा परन्तपः ।
स किमर्थं नरवरो न मां रक्षति राघवः ॥ २१ ॥
शक्तौ तौ पुरुषव्याघ्रौ वाय्वग्निसमतेजसौ ।
सुराणामपि दुर्धर्षौ किमर्थं मामुपेक्षतः ॥ २२ ॥

தஸ்ய வீர்யவத: கச்சித்யத்யஸ்தி மயி ஸம்ப்ரம: ।
க்ஷிப்ரம் ஸுநிசிதைர்-பாணைர்-ஹன்யதாம் யுதி ராவண: ॥ 20 ॥
ப்ராது-ராதேச-மாஜ்ஞாய லக்ஷ்மணோ வா பரந்தப: ।
ஸ கிமர்த்தம் நரவரோ ந மாம் ரக்ஷதி ராகவ: ॥ 21 ॥
சக்தௌ தௌ புருஷவ்யாக்ரௌ வாய்வக்னி-ஸமதேஜஸௌ ।
ஸுராணாமபி துர்த்தர்ஷௌ கிமர்த்தம் மாமுபேக்ஷத: ॥ 22 ॥

---

20. 'வீரரான அவருக்கு என்னிடம் சிறிதேனும் பரிவிருக்குமேயானால் கூரிய பாணங்களால் விரைவில் இராவணன் போரில் கொல்லப்பட வேண்டும்.

21. 'சத்துருக்களை எரிப்பவரும் ரகுகுலத்திற் பிறந்தவரும் புருஷசிரேஷ்டருமாகிய அந்த இலக்ஷ்மணருந்தான் தமயனுடைய கட்டளையைப் பெற்று என்னை ஏன் காப்பாற்றாதிருக்கிறார்.?

22. 'ஆற்றல்படைத்தவர்களும் வாயுவும் அக்னியும் போன்ற வலிமையுள்ளவர்களும் தேவர்களும் கண்டு அஞ்சக்கூடியவர்களுமான அவர்கள் ஏன் என்னைப் புறக்கணிக்கின்றனர்.?

---

20. தவ வீர்யவத: । ஸுநியதைர்-பாணை: ।

16. ததஸ்தஸ்யாக்ஷி காகஸ்ய । 17. வாயஸஸ்த்வாம் நமஸ்க்ருத்ய ராஜ்ஞோ ।
18. ந யோஜயஸி ராகவ । 19. ந தானவா ந கந்தர்வா ।
தவ ராம ரணேசக்தா ।

ममैव दुष्कृतं किंचिन्महदस्ति न संशयः ।
समर्थौ सहितौ यन्मां नावेक्षेते परन्तपौ ॥ २३ ॥
वैदेह्या वचनं श्रुत्वा करुणं साश्रु भाषितम् ।
पुनरप्यह-मार्यां ता-मिदं वचन-मब्रवम् ॥ २४ ॥
त्वच्छोकविमुखो रामो देवि सत्येन ते शपे ।
रामे दुःखाभिभूते तु लक्ष्मणः परितप्यते ॥ २५ ॥
कथंचिद्भवती दृष्टा न कालः परिशोचितुम् ।
इमं मुहूर्तं दुःखानामन्तं द्रक्ष्यसि भामिनि ॥ २६ ॥

மமைவ துஷ்க்ருதம் கிஞ்சின் மஹதஸ்தி ந ஸம்சய: ।
ஸமர்த்தௌ ஸஹிதௌ யன்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ ॥ 23 ॥
வைதேஹ்யா வசனம் ச்ருத்வா கருணம் ஸாச்ருபாஷிதம் ।
புனரப்யஹ-மார்யாம் தா-மிதம் வசன-மப்ரவம் ॥ 24 ॥
த்வச்சோகவிமுகோ ராமோ தேவி ஸத்யேன தே சபே ।
ராமே து: க்காபிபூதே து லக்ஷ்மண: பரிதப்யதே ॥ 25 ॥
கதஞ்சித்பவதீ த்ருஷ்டா ந கால: பரிசோசிதும் ।
இமம் முஹூர்த்தம் து:க்கானாமந்கம் க்ரக்ஷ்யஸி பாமினி ॥ 26 ॥

23. 'பகைவர்களை வாட்டக்கூடிய ஸாமர்த்தியம் படைத்த அவ்விருவரும் சேர்ந்து என்னை கவனியாமலிருப்பதால் என்னிடம் ஏதோ பெரிய பாவமிருக்க வேண்டும்; சந்தேகமில்லை.'

24. கண்ணீர் பெருக்கி இரக்கப்படும்படி வைதேகியால் சொல்லப்பட்ட இவ்வார்த்தையைக் கேட்டு நான் அவ்வம்மணிக்கு மீண்டும் பின்வருமாறு கூறினேன்.

25. 'தேவி! உங்களைப் பிரிந்த சோகத்தால் ஸ்ரீராமர் செயலற்றிருக்கிறார்; சத்தியத்தின் மேல் ஆணையிட்டுக் கூறகின்றேன்; ஸ்ரீராமர் துக்கத்தில் மூழ்கியிருப்பதால் இலக்ஷ்மணரும் பரிதவிக்கிறார்.

26. 'பெண்ணரசியே! எப்படியோ நீங்கள் காணப்பட்டீர்கள். இது துக்கிப்பதற்குச் சமயமன்று. இதே முகூர்த்தத்தில் துக்கத்தின் முடிவைக்காண்பீர்கள்.

---

23. யன்மாம் ந ரக்ஷேதே 24. கருணம் ஸாதுபாஷிதம் ।

तावुभौ नरशार्दूलौ राजपुत्रावनिन्दितौ ।
त्वद्दर्शन-कृतोत्साहौ लंकां भस्मीकरिष्यतः ॥ २७ ॥
हत्वा च समरे रौद्रं रावणं सहबान्धवम् ।
राघवस्त्वां वरारोहे स्वां पुरीं नयते ध्रुवम् ॥ २८ ॥
यत्तु रामो विजानीया-दभिज्ञान-मनिन्दिते ।
प्रीतिसंजननं तस्य प्रदातुं त्वमिहार्हसि ॥ २९ ॥
साऽभिवीक्ष्य दिशः सर्वा वेण्युदग्रथन-मुत्तमम् ।
मुक्त्वा वस्त्राद्ददौ मह्यं मणिमेतं महाबल ॥ ३० ॥

தாவுபௌ நரசார்தூலௌ ராஜபுத்ராவநிந்திதௌ ।
த்வத்தர்சன-க்ருதோத்ஸாஹௌ லங்காம பஸ்மீகரிஷ்யத: ॥ 27 ॥
ஹத்வா ச ஸமரே ரௌத்ரம் ராவணம் ஸஹபாந்தவம் ।
ராகவஸ்த்வாம் வராரோஹே ஸ்வாம் புரீம் நயதே த்ருவம் ॥ 28 ॥
யத்து ராமோ விஜானீயா-தபிஜ்ஞான-மநிந்திதே ।
ப்ரீதிஸஞ்ஜனனம் தஸ்ய ப்ரதாதும் த்வமிஹார்ஹஸி ॥ 29 ॥
ஸாபிவீக்ஷ்ய திச: ஸர்வா வேண்யுத்க்ரதன-முத்தமம் ।
முக்த்வா வஸ்த்ராத்ததௌ மஹ்யம் மணிமேதம் மஹாபல ॥ 30 ॥

27. 'மாசற்றவர்களும் மானிடசிரேஷ்டர்களுமான அவ்விரு அரசகுமாரர்களும் உங்களைக்காண வேண்டி மேற்கொள்ளும் முயற்சியில் இலங்கையை நீறாக்கப் போகிறார்கள்.

28. 'உத்தமி! ஸ்ரீராகவர் கொடிய இராவணனைச் சுற்றத்தாருடன் போரில் கொன்று உங்களை அயோத்தியாபுரிக்கு அழைத்துப் போவார். இது நிச்சயம்.

29. 'புண்யவதி! ஸ்ரீராமர் நன்கு அறிந்து கொள்ளக் கூடியதும் அவருக்குப் பிரீதியை உண்டாக்கக் கூடியதுமான ஒரு அடையாளத்தை நீங்கள் கொடுத்தருள வேண்டும்.

30. 'பலம் மிக்கவரே! தேவியார் எல்லாத் திசைகளையும் உற்று நோக்கிவிட்டுப் பின்னலில் அணிவதான இந்தச் சிறந்த இரத்தினத்தை ஆடைத்தலைப்பிலிருந்து அவிழ்த்தெடுத்து என்னிடம் கொடுத்தார்.

26. இதம் முஹூர்த்தம் । 27 ராஜபுத்ரௌ பரந்தபௌ ।

प्रतिगृह्य मणिं दिव्यं तव हेतो रघूद्वह ।
शिरसा तां प्रणम्यार्या-मह-मागमने त्वरे ॥ ३१ ॥
गमने च कृतोत्साह-मवेक्ष्य वरवर्णिनी ।
विवर्धमानं च हि मामुवाच जनकात्मजा ॥ ३२ ॥
अश्रुपूर्णमुखी दीना बाष्पसन्दिग्ध-भाषिणी ।
ममोत्पतनसंभ्रान्ता शोकवेग-समाहता ॥ ३३ ॥
हनुमन् सिंहसंकाशावुभौ तौ रामलक्ष्मणौ ।
सुग्रीवश्च सहामात्यं सर्वान् ब्रूया ह्यनामयम् ॥ ३४ ॥

ப்ரதிக்ருஹ்ய மணிம் திவ்யம் தவ ஹேதோ ரகூத்வஹ ।
சிரஸா தாம் ப்ரணம்யார்யா-மஹ-மாகமனே த்வரே ॥ 31 ॥
கமனே ச க்ருதோத்ஸாஹ-மவேக்ஷ்ய வரவர்ணினீ ।
விவர்த்தமானஞ் ச ஹி மாமுவாச ஜனகாத்மஜா ॥ 32 ॥
அச்ருபூர்ணமுகீ தீனா பாஷ்பஸந்திக்த-பாஷிணீ ।
மமோத்பதன-ஸம்ப்ராந்தா சோகவேக-ஸமாஹதா ॥ 33 ॥
ஹனுமன் ஸிஹ்மஸங்காசாவுபௌ தௌ ராமலக்ஷ்மணௌ ।
ஸுக்ரீவச்ச ஸஹாமாத்யம் ஸர்வான் ப்ரூயாஹ்யனாமயம் ॥ 34 ॥

31. 'ரகுநந்தனரே! திவ்யமான இம்மணியைத் தங்கள் பொருட்டுப் பெற்றுக் கொண்டு தேவியாரை தலையால் வணங்கித் திரும்பிவர விரைந்தேன்.

32-33. நான் திரும்பிவர முயல்வதையும் அதற்காக என் உடலைப் பெரிதாக்கிக் கொள்வதையும் கண்டு நான் போய்விடுவேன் என்று மனம் பதறி துக்கமிகுதியால் வருந்தி, கண்ணீர் முகத்தில் வழிய, அதனால் தழதழத்துப் பேசுபவளாய்க் கஷ்டதசையிலிருந்த ஜானகிப் பெருமாட்டி பின்வருமாறு கூறினாள்.

34. 'ஹனுமாரே! சிங்கம் போன்ற இராமலக்ஷ்மணர்கள் இருவருக்கும் மந்திரிகளுடன் கூடிய சுக்ரீவருக்கும் நான் க்ஷேமம் விசாரித்ததாகத் தெரிவியும்.

28. ஸ்வபுரீம் நயிதா த்ருவம் । 29. ப்ரதாதும் தத் த்வமர்ஹஸி ।
31. ப்ரதிக்ருஹ்ய மணிம் தோர்ப்ப்யாம் தவ ஹேதோ ரகுப்ரிய ।

यथा च स महाबाहु-र्मां तारयति राघवः ।
अस्माद्दुःखांबु-संरोधात्त्वं समाधातु-मर्हसि ॥ ३५ ॥

इमं च तीव्रं मम शोकवेगं रक्षोभिरेभिः परिभर्त्सनं च ।
ब्रूयास्तु रामस्य गतः समीपं शिवश्च तेऽध्वाऽस्तु हरिप्रवीर ॥ ३६ ॥

யதா ச ஸ மஹாபாஹுர்-மாம் தாரயதி ராகவ: ।
அஸ்மாத்து:க்காம்பு-ஸம்ரோதாத் த்வம் ஸமாதாது-மர்ஹஸி ॥ 35 ॥

இமஞ் ச தீவ்ரம் மம சோகவேகம் ரக்ஷோபிரேபி: பரிபர்த்ஸனஞ்ச ।
ப்ரூயாஸ்து ராமஸ்ய கத: ஸமீபம் சிவச்ச தேऽத்வாஸ்து ஹரிப்ரவீர
॥ 36 ॥

---

35. 'பெருந்தோள் படைத்த ஸ்ரீராகவர் என்னை இந்தத் துயரக் கடலின் பிடிப்பினின்று எப்படிக் கரையேற்றுவாரோ அப்படி நீர் காரியத்தைச் செய்வது தகும்.

36. 'வானரோத்தமரே! ஸ்ரீராமரிடம் சென்றதும் நான் படும் இக்கொடிய துன்பத்தின் வேகத்தையும் இவ்வரக்கிகளால் நான் வெருட்டப் படுவதையும் தெரிவியும். நீர் போகும் வழி மங்களமானதாயிருக்கட்டும்.

---

30. திசைகளை உற்று நோக்கியது அரக்கிகள் பார்த்து இராவணனிடம் சொல்லிவிடுவார்களோ என்ற பயத்தால்.
33. பாஷ்பகத்கதபாஷிணீ ।
35. ஸம்ரோதாத் தத்வமாக்யாது-மர்ஹஸி ।
36. இதஞ்ச

एतत्तवार्या नृपराजसिंह सीता वचः प्राह विषादपूर्वम् ।
एतच्च बुद्ध्वा गदितं मया त्वं श्रद्धत्स्व सीतां कुशलां समग्राम् ।। ३७ ।।

इति सप्तषष्टितमः सर्गः
(आदितः श्लोकाः २८५६)

ஏதத்தவார்யா ந்ருப ராஜஸிஹ்ம ஸீதா வச: ப்ராஹ விஷாதபூர்வம் ।
ஏதச்ச புத்த்வா கதிதம் மயா த்வம் ச்ரத்தத்ஸ்வ ஸீதாம் குசலாம் ஸமக்ராம் ॥ 37 ॥

இதி ஸப்தஷஷ்டிதம: ஸர்க்க:
(ஆதித ச்லோகா: 2856)

---

37. 'அரசர்க்கரசே! என்னால் சொல்லப்பட்ட இந்தத் துன்பம் நிறைந்த வார்த்தையைச் சீதைப்பெருமாட்டி உங்களுக்குச் சொல்லியனுப்பினாள். நீங்கள் சீதையைப் பழுதுபடாத நன்னெறியிலிருப்பவளாகத் திருவுளத்தில் கொள்ள வேண்டும்.

இங்ஙனம் அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2856)

---

37. ந்ருப ஸம்யதா ஸா । கதிதோ யதா த்வம் ।

अष्टषष्टितमः सर्गः

सीतासमाश्वासन-कथनम्

अथाह-मुत्तरं देव्या पुनरुक्तः ससंभ्रमः ।
तव स्नेहान्नरव्याघ्र सौहार्दा-दनुमान्य वै ॥ १ ॥
एवं बहुविधं वाच्यो रामो दाशरथिस्त्वया ।
यथा मामाप्नुयाच्छीघ्रं हत्वा रावण-माहवे ॥ २ ॥
यदि वा मन्यसे वीर वसैकाह-मरिन्दम ।
कस्मिंश्चित् संवृते देशे विश्रान्तः श्वो गमिष्यसि ॥ ३ ॥

அஷ்டஷஷ்டிதம: ஸர்க்க:

ஸீதாஸமாச்வாஸன-கதனம்

அதா்ஹமுத்தரம் தேவ்யா புனருக்த: ஸஸம்ப்ரம: ।
தவ ஸ்நேஹாந்நரவ்யாக்ர ஸௌஹார்த்தா-தனுமான்ய வை ॥ 1 ॥
ஏவம் பஹுவிதோவாச்யோ ராமோ தாசரதிஸ்த்வயா ।
யதா மாமாப்னுயாச்சீக்ரம் ஹத்வா ராவண-மாஹவே ॥ 2 ॥
யதி வா மன்யஸே வீர வஸைகாஹ-மரிந்தம ।
கஸ்மிச்சித் ஸம்வ்ருதே தேசே விச்ராந்த: ச்வோ கமிஷ்யஸி ॥ 3 ॥

அறுபத்தெட்டாவது ஸர்க்கம்

ஹனுமார் சீதைக்குக் கூறிய தேறுதல்

1. 'புருஷோத்தமரே! தங்களுடைய அன்பாலும் அருளாலும் தேவியால் மீண்டும் போற்றப்பட்டுத் திரும்பி வர விரைந்த நான் மேலும் பின் வருமாறு கூறப்பெற்றேன்.

2. 'தசரதகுமாரரான ஸ்ரீராமர் எவ்வண்ணம் இராவணனைப் போரில் கொன்று விரைவில் என்னை அடைவாரோ அவ்வண்ணம் பலவாறு உம்மால் சொல்லப்படவேண்டும்.

3. 'பகைவரை அடக்கும் வீரரே! ஒருக்கால் நீர் விரும்பினால் இங்கே எதாவதொரு மறைவிடத்தில் ஒருநாள் இருந்து இளைப்பாறி நாளை போகலாம்.

---

1. ஸஸம்ப்ரமம் ।

मम चाप्यल्प-भाग्यायाः सान्निध्यात्तव वीर्यवान् ।
अस्य शोकविपाकस्य मुहूर्तं स्याद्विमोक्षणम् ॥ ४ ॥
गते हि त्वयि विक्रान्ते पुनरागमनाय वै ।
प्राणानामपि सन्देहो मम स्यान्नात्र संशयः ॥ ५ ॥
तवादर्शनजः शोको भूयो मां परितापयेत् ।
दुःखाद्दुःखपराभूतां दुर्गतां दुःखभागिनीम् ॥ ६ ॥
अयं च वीर सन्देहस्तिष्ठतीव ममाग्रतः ।
सुमहांस्त्वत्सहायेषु हर्यृक्षेषु हरीश्वर ॥ ७ ॥

மம சாப்யல்பபாக்யாயா: ஸந்நித்த்யாத்தவ வீர்யவான் ।
அஸ்ய சோகவிபாகஸ்ய முஹூர்த்தம் ஸ்யாத்விமோக்ஷணம் ॥ 4 ॥
கதே ஹி த்வயி விக்ராந்தே புனராகமனாய வை ।
ப்ராணானாமபி ஸந்தேஹோ மம ஸ்யாந்நாத்ர ஸம்சய: ॥ 5 ॥
தவாதர்சனஜ: சோகோ பூயோ மாம் பரிதாபயேத் ।
து: க்காத்துக்க: பராபூதாம் துர்க்கதாம் து: க்கபாகினீம் ॥ 6 ॥
அயஞ் ச வீர ஸந்தேஹஸ்திஷ்டதீவ மமாக்ரத: ।
ஸுமஹாம்ஸ்த்வத்ஸஹாயேஷு ஹர்யருக்ஷேஷு ஹரீச்வர ॥ 7 ॥

4. 'வீரியம் படைத்தவரே! உம்முடைய அருகாமையால் பாக்கியங்குறைந்த என்னுடைய சோகமாகிற தீவினைப்பயனுக்கு அது சிறிதுபோது விமோசன காலமாயிருக்கும்.

5. 'பராக்கிரமசாலியான நீர் மறுபடி திரும்பிவருவதற்காகவே சென்றபோதிலும் இங்கு என்னுடைய உயிருக்குச் சந்தேகம்தான். இதில் ஐயமில்லை.

6. 'துக்கத்தின்மேல் துக்கத்தையனுபவித்து துக்கத்தில் மூழ்கியிருக்கும் அபாக்கியவதியான என்னை உம்மைக் காணாமையாலுண்டாகும் சோகம் மீளவும் பரிதவிக்கச் செய்யும்.

7. 'வானரத்தலைவரே! வீரரே! உமது துணைவர்களான வானரர்களையும் கரடிகளையும் பற்றி முதலில் எனக்கொரு பெரிய சந்தேகம் கண்முன் நிற்பது போலிருக்கிறது.

---

4. ஸாந்நித்த்யாத் தவ வானர । 5. விக்ராந்த । 6. தவாதர்சனஜம் ।

कथं नु खलु दुष्पारं तरिष्यन्ति महोदधिम् ।
तानि हर्यृक्ष-सैन्यानि तौ वा नरवरात्मजौ ॥ ८ ॥
त्रयाणामेव भूतानां सागरस्यास्य लंघने ।
शक्तिः स्याद्वैनतेयस्य तव वा मारुतस्य वा ॥ ९ ॥
तदस्मिन् कार्यनियोगे वीरैवं दुरतिक्रमे ।
किं पश्यसि समाधानं ब्रूहि कार्यविदां वर ॥ १० ॥
काममस्य त्वमेवैकः कार्यस्य परिसाधने ।
पर्याप्तः परवीरघ्न यशस्यस्ते बलोदयः ॥ ११ ॥

கதந் நு கலு துஷ்பாரம் தரிஷ்யந்தி மஹோததிம் ।
தானி ஹர்ய்ருக்ஷ-ஸைன்யானி தௌ வா நரவராத்மஜௌ ॥ 8 ॥
த்ரயாணாமேவ பூதானாம் ஸாகரஸ்யாஸ்ய லங்கனே ।
சக்தி: ஸ்யாத்வைநதேயஸ்ய தவ வா மாருதஸ்ய வா ॥ 9 ॥
ததஸ்மின் கார்யநிர்யோகே வீரைவம் துரதிக்ரமே ।
கிம் பச்யஸி ஸமாதானம் ப்ரூஹி கார்யவிதாம் வர ॥ 10 ॥
காமமஸ்ய த்வமேவைக: கார்யஸ்ய பரிஸாதனே ।
பர்யாப்த: பரவீரக்ன யசஸ்யஸ்தே பலோதய: ॥ 11 ॥

8. 'கடத்தற்கரிய பெரியகடலை வானரர்களையும் கரடிகளையும் கொண்ட சேனைகள் எப்படித் தாண்டும்? அரச குமாரர்களான அவ்விருவரும் தான் எப்படி தாண்டுவார்கள்?

9. 'இந்தக் கடலை தாண்டும் சக்தி வாயுவுக்கும் கருடனுக்கும் உமக்கும், உங்கள் மூவருக்கும் தானே சமமாக உண்டு?

10. 'வீரரே! காரியங்களை அறிந்தவர்களில் சிறந்தவரே! கடக்க முடியாதிருக்கும் இவ்விஷயத்தில் அதைச் சாதிப்பதற்கு என்ன உபாயத்தைக் காண்கிறீர்? அதைக் கூறும்.

11. 'பகைவரை அழிக்கவல்லவரே! இந்தக் காரியத்தைச் சாதிக்க நீர் ஒருவரே போதும். பலத்தாலுண்டாகும் கீர்த்தி அப்பொழுது உம்முடையதே ஆகும்.

7. ஸமஹாம்ஸ்த்வத் ஸஹாயேன
ஹர்ய்ருக்ஷேஷு அஸம்சய:। 10. வாக்யவிதாம்வர ।
9. ஸாகரஸ்யேஹலங்க்கனே । வாயோர் வா தவசாநக ।

बलैः समग्रै-र्यदि मां हत्वा रावण-माहवे ।
विजयी स्वां पुरीं रामो नयेत्तत्स्याद्यशस्करम् ।। १२ ।।
यथाऽहं तस्य वीरस्य वनादुपधिना हृता ।
रक्षसा तद्भयादेव तथा नार्हति राघवः ।। १३ ।।
बलैस्तु संकुलां कृत्वा लंकां परबलार्दनः ।
मां नयेद्यदि काकुत्स्थस्तत्तस्य सदृशं भवेत् ।। १४ ।।
तद्यथा तस्य विक्रान्त-मनुरूपं महात्मनः ।
भवत्याहवशूरस्य तथा त्वमुपपादय ।। १५ ।।

பலை: ஸமக்ரைர்-யதி மாம் ஹத்வா ராவண-மாஹவே ।
விஜயீ ஸ்வாம் புரீம் ராமோ நயேத் தத்ஸ்யாத் யசஸ்கரம் ।। 12 ।।
யதாऽஹம் தஸ்ய வீரஸ்ய வனா-துபதினா ஹ்ருதா ।
ரக்ஷஸா தத்பயாதேவ ததா நார்ஹதி ராகவ: ।। 13 ।।
பலைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தன: ।
மாம் நயேத்யதி காகுத்ஸ்தஸ்-தத்தஸ்ய ஸத்ருசம் பவேத் ।। 14 ।।
தத்யதா தஸ்ய விக்ராந்த-மனுரூபம் மஹாத்மன: ।
பவத்யாஹவசூரஸ்ய ததா த்வமுபபாதய ।। 15 ।।

---

12. 'திரண்ட சேனைகளுடன் ஸ்ரீராமர் இராவணனைப் போரில் கொன்று வெற்றியடைந்து தமது நகருக்கு என்னை அழைத்துப் போனால் அது அவருக்குப் பெருமை தருவதாகும்.

13. 'நான் காட்டிலிருந்து ஸ்ரீராமரிடம் பயந்த அரக்கனால் வஞ்சனையாக எடுத்து வரப்பட்டேன். ஸ்ரீராகவரும் அப்படிச் செய்வதென்றால் அது அவ்வீரருக்கு ஏற்றதாகாது.

14. 'பகைவர் வலிமையை அழிக்க வல்ல இராகவர் சைனியத்தால் இலங்கையைச் சிதறடித்து என்னை அழைத்துப் போனால் அது தான் அவருக்குப் பொருத்தமாயிருக்கும்.'

15. 'ஆதாலால் போர்வீரரான அப்பெருமானுடைய ஆண்மைக்கு ஒத்ததாய் எது இருக்குமோ அப்படி நீர் செய்வீராக.'

---

12. ஸ்வபுரீம் ராமோ ।

तदर्थोपहितं वाक्यं प्रश्रितं हेतुसहितम् ।
निशाम्याहं ततः शेषं वाक्यमुत्तर-मब्रवम् ॥ १६ ॥
देवि हर्यृक्षसैन्याना-मीश्वरः प्लवतां वरः ।
सुग्रीवः सत्त्वसंपन्नस्तवार्थे कृतनिश्चयः ॥ १७ ॥
तस्य विक्रमसंपन्नाः सत्त्ववन्तो महाबलाः ।
मनः संकल्पसंपाता निदेशे हरयः स्थिताः ॥ १८ ॥
येषां नोपरि नाधस्तान्न तिर्यक् सज्जते गतिः ।
न च कर्मसु सीदन्ति महत्स्वमिततेजसः ॥ १९ ॥

ததர்த்தோபஹிதம் வாக்யம் ப்ரச்ரிதம் ஹேதுஸம்ஹிதம் ।
நிசம்யாஹம் தத: சேஷம் வாக்யமுத்தர-மப்ரவம் ॥ 16 ॥
தேவி ஹர்ய்ருக்ஷ ஸைன்யானா-மீச்வர: ப்லவதாம் வர: ।
ஸுக்ரீவ: ஸத்வஸம்பன்னஸ்-தவார்த்தே க்ருதநிச்சய: ॥ 17 ॥
தஸ்ய விக்ரமஸம்பன்னா: ஸத்வவந்தோ மஹாபலா: ।
மன: ஸங்கல்ப-ஸம்பாதா நிதேசே ஹரய: ஸ்திதா: ॥ 18 ॥
யேஷாம் நோபரி நாதஸ்தாந்ந திர்யக் ஸஜ்ஜதே கதி: ।
ந ச கர்மஸு ஸீதந்தி மஹத்ஸ்வமிததேஜஸ: ॥ 19 ॥

---

16. பொருள் செறிந்ததும், பொருத்தமானதும், காரணத்துடன் கூடியதுமான அவ்வார்த்தையைக் கேட்டு நான் பின்வருமாறு பதிலளித்தேன்.

17. 'தேவி! குரங்குப் படைக்கும் கரடிப்படைக்கும் தலைவரும் வலிமை மிக்கவரும் ஆகிய சுக்ரீவர் உங்கள் காரியத்தைச் செய்து முடிக்க நிச்சயித்திருக்கிறார்.

18. 'அவருடைய கட்டளையின் கீழிருக்கும் வானரர்கள் விக்கிரமசாலிகள், திடநெஞ்சம் படைத்தவர்கள், மகாபலம் பொருந்தியவர்கள், நினைத்தபடி பாயக்கூடியவர்கள்.

19. 'அவர்கள் போக்குக்குத் தடை என்பது மேலேயோ, கீழேயோ, குறுக்கிலோ இல்லை. அளவிலாத் திறமை படைத்த அவர்கள் எவ்வளவு பெரிய காரியங்களிலும் தளரமாட்டார்கள்.

असकृत्तै-र्महाभागै-र्वानरै-र्बलदर्पितैः ।
प्रदक्षिणीकृता भूमि-र्वायुमार्गानुसारिभिः ॥ २० ॥
मद्विशिष्टाश्च तुल्याश्च सन्ति तत्र वनौकसः ।
मत्तः प्रत्यवरः कश्चिन्नास्ति सुग्रीवसन्निधौ ॥ २१ ॥
अहं तावदिह प्राप्तः किं पुनस्ते महाबलाः ।
न हि प्रकृष्टाः प्रेष्यन्ते प्रेष्यन्ते हीतरे जनाः ॥ २२ ॥

அஸக்ருத்தைர்-மஹாபாகைர்-வானரைர்-பலதர்ப்பிதை: ।
ப்ரதக்ஷிணீக்ருதா பூமிர்-வாயுமார்க்கானுஸாரிபி: ॥ 20 ॥

மத்விசிஷ்டாச்ச துல்யாச்ச ஸந்தி தத்ர வநௌகஸ: ।
மத்த: ப்ரத்யவர: கச்சிந்நாஸ்தி ஸுக்ரீவஸந்நிதௌ ॥ 21 ॥

அஹம் தாவதிஹ ப்ராப்த: கிம் புனஸ்தே மஹாபலா: ।
ந ஹி ப்ரக்ருஷ்டா: ப்ரேஷ்யந்தே ப்ரேக்ஷ்யந்தே ஹீதரோ ஜனா. ॥ 22 ॥

---

20. 'மகிமை பொருந்தியவர்களும் பலத்தால் செருக்குற்றவர்களும் வாயுமார்க்கத்தில் சஞ்சரிப்பவர்களுமான அவ்வானரர்களால் பூமியானது பலமுறை பிரதக்ஷிணம் செய்யப்பட்டிருக்கிறது.

21. 'சுக்ரீவஸந்நிதியில் உள்ள வானரர்கள் எனக்கு மேலானவர்களும் சமமானவர்களுமே; என்னைவிடத் தாழ்ந்தவன் எவனும் அங்கில்லை.

22. 'நானே இங்கு வந்துவிட்டேன் என்றால் மகாபலசாலிகளான அவர்களைப்பற்றிச் சொல்ல வேண்டுமா? சிறந்தவர்கள் தூதுவராய் அனுப்பப்படுவதில்லை. மற்றவர்கள்தான் அனுப்பப்படுவார்கள்.

---

17. த்வதர்த்தே க்ருதநிச்சய: । 18. ஸங்கல்பஸத்ருசா ।
20. பலஸம்யுதை: ।

तदलं परितापेन देवि मन्यु-र्व्यपैति ते ।
एकोत्पातेन वै लंकामेष्यन्ति हरियूथपाः ।। २३ ।।
मम पृष्ठगतौ तौ च चन्द्रसूर्याविवोदितौ ।
त्वत्सकाशं महाभागे नृसिंहावागमिष्यतः ।। २४ ।।
अरिघ्नं सिंहसंकाशं क्षिप्रं द्रक्ष्यसि राघवम् ।
लक्ष्मणं च धनुष्पाणिं लंकाद्वार-मुपस्थितम् ।। २५ ।।

ததலம் பரிதாபேன தேவி மன்யுர்-வ்யபைதி தே ।
ஏகோத்பாதேன வை லங்கா-மேஷ்யந்தி ஹரியூதபா: ।। 23 ।।

மம ப்ருஷ்டகதௌ தௌ ச சந்த்ரஸூர்யாவிவோதிதௌ ।
த்வத்ஸகாசம் மஹாபாகே ந்ருஸிம்ஹாவாகமிஷ்யத: ।। 24 ।।

அரிக்னம் ஸிம்ஹஸங்காசம் க்ஷிப்ரம் த்ரக்ஷயஸி ராகவம் ।
லக்ஷ்மணஞ் ச தனுஷ்பாணிம் லங்காத்வார-முபஸ்திதம் ।। 25 ।।

---

23. 'தேவி! ஆகையால் நீங்கள் வருந்தியது போதும்; உங்கள் சோர்வு ஒழியட்டும். வானரத்தலைவர்கள் ஒரே பாய்ச்சலில் இலங்கைக்கு வந்து விடுவார்கள்.

24. 'பெருமைமிக்க தேவி! சந்திரனும் சூரியனும் உதித்தாற் போன்றவர்களும் ஆண்சிங்கங்களைப் போன்றவர்களுமான இராமலக்ஷ்மணர்களிருவரும் என் முதுகில் ஏறிக்கொண்டு உங்களிடம் வரப் போகிறார்கள்.

25. 'பகைவரை அழிப்பவரும், சிங்கத்தை யொத்தவருமான ஸ்ரீராமரையும் கையில் வில்லுடன் இலங்கை வாயிலில் நிற்கும் இலக்ஷ்மணரையும் நீங்கள் விரைவில் காண்பீர்கள்.

---

23. ஏகோத்பாதேன தே ।
23. மன்யு:-தைன்யம் । ஒ. மன்யுர்-தைன்யே க்ரதௌ க்ருதித்யமர: ।

नखदंष्ट्रायुधान् वीरान् सिंहशार्दूल-विक्रमान् ।
वानरान् वारणेन्द्राभान् क्षिप्रं द्रक्ष्यसि संगतान् ॥ २६ ॥

शैलांबुद-निकाशानां लंकामलयसानुपु ।
नर्दतां कपिमुख्याना-मचिराच्छ्रोष्यसि स्वनम् ॥ २७ ॥

निवृत्तवनवासं च त्वया सार्ध-मरिन्दमम् ।
अभिषिक्त-मयोध्यायां क्षिप्रं द्रक्षयसि राघवम् ॥ २८ ॥

நகதம்ஷ்ட்ராயுதான் வீரான் ஸிம்ஹசார்த்தூல-விக்ரமான் ।
வானரான் வாரணேந்த்ராபான் க்ஷிப்ரம் த்ரக்ஷ்யஸி ஸங்கதான் ॥ 26 ॥

சைலாம்புத-நிகாசானாம் லங்காமலயஸாநுஷு ।
நர்த்ததாம் கபிமுக்யானா-மசிராச்ச்ரோஷ்யஸி ஸ்வநம் ॥ 27 ॥

நிவ்ருத்தவனவாஸஞ்ச த்வயா ஸார்த்த-மரிந்தமம் ।
அபிஷிக்த-மயோத்யாயம் க்ஷிப்ரம் த்ரக்ஷ்யஸி ராகவம் ॥ 28 ॥

---

26. 'நகங்களையும் பற்களையும் ஆயுதமாய்க் கொண்டவர்களும் சிங்கமும் புலியும் போன்ற வலிமையுடையவர்களும், சிறந்த யானைகளைப்போன்ற தோற்றமுள்ளவர்களுமான வானர வீரர்கள் திரண்டுவருவதை நீங்கள் விரைவில் காண்பீர்கள்.

27. 'மலையும் மேகமும் போன்ற வானரத்தலைவர்களின் கர்ஜனையின் ஒலியை இலங்கையின் மலைத்தாழ்வரைகளில் சீக்கிரமே கேட்கப் போகிறீர்கள்.

28. 'சத்துருக்களை ஒழித்து வனவாசத்திலிருந்து திரும்பி உங்களுடன் அயோத்தியில் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும் ஸ்ரீராகவரை விரைவில் காணப் போகிறீர்கள்.

ततो मया वाग्भि-रदीनभाषिणा शिवाभि-रिष्टाभि-रभिप्रसादिता ।
जगाम शान्तिं मम मैथिलात्मजा तवापि शोकेन
तदाऽभिपीडिता ।। २९ ।।

इति अष्टषष्टितमः सर्गः

(आदितः श्लोकाः २८८५)

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये

सुन्दरकाण्डं समाप्तम्

ததோ மயா வாக்பி-ரதீனபாஷிணா
சிவாபி-ரிஷ்டாபி-ரபிப்ரஸாதிதா ।
ஜகாம சாந்திம் மம மைதிலாத்மஜா
தவாபி சோகேன ததா஽பி பீடிதா ॥ 29 ॥

இதி அஷ்டஷஷ்டிதம: ஸர்க்க:

(ஆதித: ச்லோகா: 2885)

---

29. 'மிதிலையரசன் புத்திரி உங்களுடைய துக்கத்தால் பீடிக்கப்பட்டவளாயினும் நான் உறுதியாய்ச் சொன்னதும் பிரியமானதும் மங்களமானதுமான வார்த்தையால் ஆறுதல் கூறப்பெற்று மனந்தெளிந்து சாந்தியை அடைந்தாள்.

இங்ஙனம் அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றும்.
(ஆதியிலிருந்து சுலோகங்கள் 2885)

சுபம்



ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்

श्रीरामपट्टाभिषेक सर्गः

शिरस्यंजलिमाधाय कैकेय्यानन्दवर्धनः ।
बभाषे भरतो ज्येष्ठं रामं सत्यपराक्रमम् ॥ १ ॥
पूजिता मामिका माता दत्तं राज्यमिदं मम ।
तद्ददामि पुनस्तुभ्यं यथा त्वमददा मम ॥ २ ॥
धुरमेकाकिना न्यस्ता-मृषभेण बलीयसा ।
किशोरवद्गुरुं भारं न वोढु-महमुत्सहे ॥ ३ ॥

ஸ்ரீராமபட்டாபிஷேக ஸர்க்க:

சிரஸ்யஞ்ஜலிமாதாய கைகேய்யானந்தவர்த்தன: ।
பபாஷே பரதோ ஜ்யேஷ்டம் ராமம் ஸத்யபராக்ரமம் ॥ 1 ॥
பூஜிதா மாமிகா மாதா தத்தம் ராஜ்யமிதம் மம ।
தத்ததாமி புனஸ்துப்யம் யதா த்வமததா மம ॥ 2 ॥
துரமேகாகினா ந்யஸ்தாம்ருஷபேண பலீயஸா ।
கிசோரவத்குரும் பாரம் ந வோடு-மஹமுத்ஸஹே ॥ 3 ॥

ஸ்ரீராமபட்டாபிஷேக ஸர்க்கம்

1. தலைமேல் கைகூப்பிக்கொண்டு கைகேயியை மகிழ்விக்கும் பரதர் ஸத்ய பராக்ரமம் படைத்தவரும் மூத்தவருமான ஸ்ரீராமரிடம் பின்வருமாறு கூறினார்.

2. 'என் தாய் பூஜிக்கப்பட்டாள். எனக்கு இந்த அரசு கொடுக்கப் பட்டது. நீங்கள் எனக்கு எப்படிக் கொடுத்தீர்களோ அப்படியே அதை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கிறேன்.

3. 'தனியே பாரந்தாங்கவல்ல ஒரு காளையால் ஒப்புவிக்கப்பட்ட பாரத்தை ஒரு இளங்கன்று எப்படித் தாங்காதோ அப்படி நான் பெரிய பாரத்தைத் தாங்க வல்லவனல்லேன்.

वारिवेगेन महता भिन्नः सेतुरिव क्षरन् ।
दुर्बन्धन-मिदं मन्ये राज्यच्छिद्र-मसंवृतम् ॥ ४ ॥
गतिं खर इवाश्वस्य हंसस्येव च वायसः ।
नान्वेतु-मुत्सहे राम तव मार्ग-मरिन्दम ॥ ५ ॥
यथा चारोपितो वृक्षो जातश्चान्तर्निवेशने ।
महांश्च सुदुरारोहो महास्कन्ध-प्रशाखवान् ॥ ६ ॥
शीर्येत पुष्पितो भूत्वा न फलानि प्रदर्शयन् ।
तस्य नानुभवेदर्थं यस्य हेतोः सरोप्यते ॥ ७ ॥

வாரிவேகேன மஹதா பின்ன: ஸேதுரிவ க்ஷரன் ।
துர்ப்பந்தன-மிதம் மன்யே ராஜ்யச்சித்ர-மஸம்வ்ருதம் ॥ 4 ॥
கதிம் கர இவாச்வஸ்ய ஹம்ஸஸ்யேவ ச வாயஸ: ।
நான்வேது-முத்ஸஹே ராம தவ மார்க்க-மரிந்தம ॥ 5 ॥
யதா சாரோபிதோ வ்ருக்ஷோ ஜாதச்சாந்தர்-நிவேசனே ।
மஹாம்ச்ச ஸுதுராரோஹோ மஹாஸ்கந்த-ப்ரசாகவான் ॥ 6 ॥
சீர்யேத புஷ்பிதோ பூத்வா ந பலானி ப்ரதர்சயன் ।
தஸ்ய நானுபவேதர்த்தம்-யஸ்ய ஹேதோ: ஸரோப்யதே ॥ 7 ॥

---

4. 'இந்த அரசாட்சிக்கேற்பட்டுள்ள குறை பெரிய வெள்ளத்தால் இடிந்து கரைந்து எவராலும் கட்டுதற்கரிதாயிருக்கும் கரை போன்றிருப்பதாய் நான் கருதுகிறேன்.

5. 'ஸ்ரீராமா! சத்துருக்களை யடக்குபவரே! குதிரையின் நடையைக் கழுதையும் ஹம்ஸத்தின் நடையைக் காகமும் எப்படி பின்பற்ற இயலாதோ அப்படியே நானும் உங்களுடைய சீரிய நடையைப் பின்பற்றச் சக்தியில்லாதவன்.

6-7. 'ஒருமரம் வீட்டினுள் வைக்கப்பட்டுப் பெரிதாயும் நீண்டகிளைகளையும் கப்புகளையும் உடையதாயும் வளர்ந்து மேலே பரவ முடியாமல் புஷ்பித்தும் பழங்களைக் காட்டாமல் பட்டுப் போகுமேயானால் எதற்காக அது வளர்க்கப்பட்டதோ அந்தப் பயனை ஒருவன் அனுபவிக்காமற் போவான்.

एषोपमा महाबाहो त्वदर्थं वेत्तुमर्हसि ।
यद्यस्मान् मनुजेन्द्र त्वं भक्तान् भृत्यान् न शाधि हि ॥ ८ ॥
जगदद्याभिषिक्तं त्वामनुपश्यतु सर्वतः ।
प्रतपन्त-मिवादित्यं मध्याह्ने दीप्ततेजसम् ॥ ९ ॥
तूर्य-संघात-निर्घोषैः कांची-नूपुर-निस्वनैः ।
मधुरै-र्गीतशब्दैश्च प्रतिबुध्यस्व राघव ॥ १० ॥
यावदावर्तते चक्रं यावती च वसुन्धरा ।
तावत्त्वमिह सर्वस्य स्वामित्व-मनुवर्तय ॥ ११ ॥

ஏஷோபமா மஹாபாஹோ த்வதர்த்தம் வேத்துமர்ஹஸி ।
யத்யஸ்மான் மனுஜேந்த்ர த்வம் பக்த்யா ப்ருத்யான் ந சாதி ஹி ॥ 8 ॥
ஜகதத்யாபிஷிக்தம் த்வா-மனுபச்யது ஸர்வத: ।
ப்ரதபந்த-மிவாதித்யம் மத்த்யாஹ்னே தீப்ததேஜஸம் ॥ 9 ॥
தூர்ய-ஸங்காத-நிர்க்கோஷை: காஞ்சீ-நூபுர-நிஸ்வனை: ।
மதுரைர்-கீதசப்தைச்ச ப்ரதிபுத்த்யஸ்வ ராகவ ॥ 10 ॥
யாவதாவர்த்ததே சக்ரம் யாவதீ ச வஸுந்தரா ।
தாவத் த்வமிஹ ஸர்வஸ்ய ஸ்வாமித்வ-மனுவர்த்தய ॥ 11 ॥

---

8. 'பெருந்தோள் படைத்தவரே! மக்களை ஆள்பவரே! நீங்கள் அன்பு பூண்ட அடிமைகளாகிய எங்களைப் பரிபாலிக்காவிட்டால் இந்த உவமை உங்களிடத்தில் பொருந்தும் என்பதை உணரத்தகும்.'

9. 'இப்பொழுதே பட்டாபிஷேகம் செய்து கொண்டு நடுப்பகல் சூரியனைப்போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் உங்களை உலகம் முழுதும் கண் குளிரப் பார்க்கட்டும்.'

10. 'ஸ்ரீராகவா! பல வாத்தியங்களின் இசையும் மேகலை சிலம்பு முதலியவற்றின் ஒலியும் கலந்த இனிய கீதங்களின் சப்தத்தால் நீங்கள் நாள்தோறும் துயிலெழ வேண்டும்.

11. 'காலசக்ரம் எதுவரை சுழல்கிறதோ அவ்வளவு காலம் பூமண்டலம் முழுவதிற்கும் சக்கிரவர்த்தியாக நீங்கள் விளங்க வேண்டும்.

भरतस्य वचः श्रुत्वा रामः परपुरंजयः ।
तथेति प्रतिजग्राह निषसादासने शुभे ॥ १२ ॥
ततः शत्रुघ्नवचनान्निपुणाः श्मश्रुवर्धकाः ।
सुखहस्ताः सुशीघ्राश्च राघवं पर्युपासत ॥ १३ ॥
पूर्वं तु भरते स्नाते लक्ष्मणे च महाबले ।
सुग्रीवे वानरेन्द्रे च राक्षसेन्द्रे विभीषणे ॥ १४ ॥
विशोधितजटः स्नात-श्चित्रमाल्यानुलेपनः ।
महार्हवसनो रामस्तस्थौ तत्र श्रिया ज्वलन् ॥ १५ ॥

பரதஸ்ய வச: ச்ருத்வா ராம: பரபுரஞ்ஜய: ।
ததேதி ப்ரதிஜக்ராஹ நிஷஸாதாஸனே சுபே ॥ 12 ॥
தத: சத்ருக்னவசனாந்நிபுணா: ச்மச்ருவர்த்தகா: ।
ஸுகஹஸ்தா ஸுசீக்ராச்ச ராகவம் பர்யுபாஸத ॥ 13 ॥
பூர்வம் து பரதே ஸ்நாதே லக்ஷ்மணே ச மஹாபலே ।
ஸுக்ரீவே வானரேந்த்ரே ச ராக்ஷஸேந்த்ரே விபீஷணே ॥ 14 ॥
விசோதித-ஜட: ஸ்நாதச்-சித்ரமால்யானுலேபன: ।
மஹார்ஹவஸனோ ராமஸ்தஸ்தௌ தத்ர ச்ரியா ஜ்வலன் ॥ 15 ॥

---

12. 'பகையை வென்ற ஸ்ரீராமர் பரதன் கூறியதைக் கேட்டு 'அங்ஙனமே ஆகுக' என்று மறுமொழி பகர்ந்து அழகிய ஆசனத்தில் அமர்ந்தார்.

13. பிறகு சத்ருக்னன் கட்டளைப்படி சுகமாகவும் சீக்கிரமாகவும் தொழில்புரியும் திறமை வாய்ந்த நாவிதர்கள் ஸ்ரீராமருக்கு க்ஷவரம் செய்தார்கள்.

14-15. முதலில் பரதனும், லக்ஷ்மணனும், வானர வேந்தனான சுக்ரீவனும், அரக்கர் மன்னனான விபீஷணனும் ஸ்நானம் செய்தபின் ஸ்ரீராமர் சிக்கு நீங்கிய சடை உடையவராய் ஸ்நானம் செய்து சிறப்பான ஆடையணிந்து அழகிய மாலைகளுடனும் சந்தனப் பூச்சுடனும் பிரகாசிக்கலானார்.

प्रतिकर्म च रामस्य कारयामास वीर्यवान् ।
लक्ष्मणस्य च लक्ष्मीवानिक्ष्वाकुकुलवर्धनः ।। १६ ।।
प्रतिकर्म च सीतायाः सर्वा दशरथस्त्रियः ।
आत्मनैव तदा चक्रु-र्मनस्विन्यो मनोहरम् ।। १७ ।।
ततो वानरपत्नीनां सर्वासामेव शोभनम् ।
चकार यत्नात् कौसल्या प्रहृष्टा पुत्रवत्सला ।। १८ ।।
ततः शत्रुघ्नवचनात् सुमन्त्रो नाम सारथिः ।
योजयित्वाऽभिचक्राम रथं सर्वांगशोभनम् ।। १९ ।।

ப்ரதிகர்ம ச ராமஸ்ய காரயாமாஸ வீர்யவான் ।
லக்ஷ்மணஸ்ய ச லக்ஷ்மீவானிக்ஷ்வாகு-குலவர்த்தன: ।। 16 ।।
ப்ரதிகர்ம ச ஸீதாயா: ஸர்வா தசரதஸ்த்ரிய: ।
ஆத்மனைவ ததா சக்ருர்-மனஸ்வின்யோ மனோஹரம் ।। 17 ।।
ததோ வானரபத்னீனாம் ஸர்வாஸாமேவ சோபனம் ।
சகார யத்னாத் கௌஸல்யா ப்ரஹ்ருஷ்டா புத்ரவத்ஸலா ।। 18 ।।
தத: சத்ருக்னவசனாத் ஸுமந்த்ரோ நாம ஸாரதி: ।
யோஜயித்வாऽபிசக்ராம ரதம் ஸர்வாங்க-சோபனம் ।। 19 ।।

---

16. வீரியவானும் ஸ்ரீமானும் இக்ஷ்வாகு குல நந்தனனுமான ஸ்ரீமானுமான சத்ருக்னன் ஸ்ரீராமருக்கும் இலக்ஷ்மணருக்கும் அலங்காரம் செய்தார்.

17. உத்தமிகளான தசரத பத்தினிகள் எல்லோரும் தாங்களே சீதைக்கு மனதைக் கவரும் வகையில் அலங்காரம் செய்தார்கள்.

18. பிறகு புத்திரனிடம் பேரன்புள்ள கௌசல்யை மகிழ்வுடன் வானரபத்னிகளனைவருக்கும் அலங்காரம் செய்வதில் ஈடுபட்டாள்.

19. சத்ருக்னனால் ஏவப்பட்டு ஸுமந்திரர் என்ற ஸாரதி எல்லாப் பகுதிகளிலும் அழகிய ஒரு தேரைத் தயாரித்துக் கொணர்ந்து நிறுத்தினார்.

अर्कमण्डलसंकाशं दिव्यं दृष्ट्वा रथोत्तमम् ।
आरुरोह महाबाहु रामः सत्यपराक्रमः ॥ २० ॥
सुग्रीवो हनुमांश्चैव महेन्द्रसदृशद्युतिः ।
स्नातौ दिव्यनिभै-र्वस्त्रै-र्जग्मतुः शुभकुण्डलौ ॥ २१ ॥
वराभरणसंपन्ना ययुस्ताः शुभकुण्डलाः ।
सुग्रीवपत्न्यः सीता च द्रष्टुं नगर-मुत्सुकाः ॥ २२ ॥
अयोध्यायां तु सचिवा राज्ञो दशरथस्य ये ।
पुरोहितं पुरस्कृत्य मन्त्रयामासुरर्थवत् ॥ २३ ॥

அர்க்கமண்டலஸங்காசம் திவ்யம் த்ருஷ்ட்வா ரதோத்தமம் ।
ஆருரோஹ மஹாபாஹு ராம: ஸத்யபராக்ரம: ॥ 20 ॥
ஸுக்ரீவோ ஹனுமாம்ச்சைவ மஹேந்த்ர ஸத்ருசத்யுதி: ।
ஸ்நாதௌ திவ்யநிபைர்-வஸ்த்ரைர்-ஜக்மது: சுபகுண்டலௌ ॥ 21 ॥
வராபரணஸம்பன்னா யயுஸ்தா: சுபகுண்டலா: ।
ஸுக்ரீவபத்ன்ய: ஸீதா ச த்ரஷ்டும் நகரமுத்ஸுகா: ॥ 22 ॥
அயோத்யாயாந்து ஸசிவா ராஜ்ஞோ தசரதஸ்ய யே ।
புரோஹிதம் புரஸ்க்ருத்ய மந்த்ரயாமாஸுரர்த்தவத் ॥ 23 ॥

---

20. பெருந்தோள் படைத்தவரும் ஸத்தியபராக்கிரமருமான ஸ்ரீராமர் சூரியமண்டலம் போல் பிரகாசிக்கும் திவ்வியமான சிறந்த தேர் வந்ததைக் கண்டு அதில் ஏறிக் கொண்டார்.

21. ஸ்நானம் செய்து திவ்யமான ஆடைகளும் குண்டலங்களுமணிந்து இந்திரனைப் போல் பிரகாசித்த சுக்ரீவரும் ஹனுமாரும் புறப்பட்டார்கள்.

22. குண்டலங்கள் முதலிய ஆபரணங்களாலலங்கரிக்கப் பெற்று நகரத்தைக் காண ஆவலுடனிருந்த சுக்ரீவபத்னிகள் சீதையுடன் புறப்பட்டார்கள்.

23. அயோத்தியில் தசரதருடைய மந்திரிகள் புரோகிதராகிய வசிஷ்டரை முன்னிட்டுக் கொண்டு நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றி யோசித்து ஏற்பாடு செய்தார்கள்.

अशोको विजयश्चैव सुमन्त्रश्चैव संगताः ।
मन्त्रयन् रामवृद्ध्यर्थ-मृद्ध्यर्थं नगरस्य च ॥ २४ ॥
सर्वमेवाभिषेकार्थं जयार्हस्य महात्मनः ।
कर्तुमर्हथ रामस्य यद्यन्मंगलपूर्वकम् ॥ २५ ॥
इति ते मन्त्रिणः सर्वे संदिश्य तु पुरोहितम् ।
नगरान्निर्ययुस्तूर्णं रामदर्शन-बुद्धयः ॥ २६ ॥
हरियुक्तं सहस्राक्षो रथमिन्द्र इवानघः ।
प्रययौ रथमास्थाय रामो नगरमुत्तमम् ॥ २७ ॥

அசோகோ விஜயச்சைவ ஸுமந்த்ரச்சைவ ஸங்கதா: ।
மந்த்ரயன் ராமவ்ருத்த்யர்த்தம் ருத்த்யர்த்தம் நகரஸ்ய ச ॥ 24 ॥
ஸர்வமேவாபிஷேகார்த்தம் ஜயார்ஹஸ்ய மஹாத்மன: ।
கர்த்துமர்ஹத ராமஸ்ய யத்யன்மங்கலபூர்வகம் ॥ 25 ॥
இதி தே மந்த்ரிண: ஸர்வே ஸந்திச்ய து புரோஹிதம் ।
நகராந்நிர்யயுஸ்தூர்ணம் ராமதர்சன-புத்தய: ॥ 26 ॥
ஹரியுக்தம் ஸஹஸ்ராக்ஷோ ரதமிந்த்ர இவானக: ।
ப்ரயயௌ ரதமாஸ்தாய ராமோ நகரமுத்தமம் ॥ 27 ॥

---

24. அசோகர், விஜயர், ஸுமந்திரர், ஆகியோர் கூடி ஸ்ரீராமரின் அபிவிருத்திக்காகவும் நகரத்தின் செழிப்பிற்காகவும் செய்ய வேண்டியவைகளைப் பற்றி யோசனை கூறினார்கள்.

25. 'வெற்றியுடன் விளங்கும் மகாத்மாவான ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்தில் மங்கள பூர்வகமாக எது எது கிரமமாய்ச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் நீங்கள் செய்ய வேண்டும்.'

26. என்றிவ்வாறு அம்மந்திரிமார்கள் அனைவரும் புரோகிதரிடம் கூறிவிட்டு ஸ்ரீராமரை தரிசிக்க ஆவல் கொண்டு நகரத்தினின்று விரைவாகப் புறப்பட்டார்கள்.

27. குதிரைகள் பூட்டப்பெற்ற தேரில் ஆயிரம் கண் படைத்த தேவேந்திரனைப் போல் மாசற்ற ஸ்ரீராமர் ஏறிக் கொண்டு உத்தமமான நகரை நோக்கிப் புறப்பட்டார்.

जग्राह भरतो रश्मीन् शत्रुघ्नश्छत्र-माददे ।
लक्ष्मणो व्यजनं तस्य मूर्ध्नि संपर्यवीजयत् ।। २८ ।।
श्वेतं च वालव्यजनं जग्राह पुरतः स्थितः ।
अपरं चन्द्रसंकाशं राक्षसेन्द्रो विभीषणः ।। २९ ।।
ऋषिसंघैस्तदाकाशे देवैश्च समरुद्गणैः ।
स्तूयमानस्य रामस्य शुश्रुवे मधुरध्वनिः ।। ३० ।।
ततः शत्रुजयं नाम कुंजरं पर्वतोपमम् ।
आरुरोह महातेजाः सुग्रीवः प्लवगर्षभः ।। ३१ ।।

ஜக்ராஹ பரதோ ரச்மீன் ச்சத்ருக்னச்சத்ர-மாததே ।
லக்ஷ்மணோ வ்யஜனம் தஸ்ய மூர்த்னி ஸம்பர்யவீஜயத் ।। 28 ।।
ச்வேதஞ்ச வாலவ்யஜனம் ஜக்ராஹ புரத: ஸ்தித: ।
அபரஞ் சந்த்ரஸங்காசம் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண: ।। 29 ।।

ருஷிஸங்கைஸ்-ததாகாசே தேவைச்ச ஸமருத்கணை: ।
ஸ்தூயமானஸ்ய ராமஸ்ய சுச்ருவே மதுரத்வனி: ।। 30 ।।
தத: சத்ருஞ்ஜயம் நாம குஞ்ஜரம் பர்வதோபமம் ।
ஆருரோஹ மஹாதேஜா: ஸுக்ரீவ: ப்லவகர்ஷப: ।। 31 ।।

---

28. பரதர் கடிவாளங்களைப் பிடித்துக் கொண்டார்; சத்ருக்னர் குடை பிடித்தார்; இலக்ஷ்மணர் தலைக்கு மேல் விசிறியால் வீசினார்.

29. அரக்கர் வேந்தராகிய விபீஷணர் முன் நின்று கொண்டு சந்திரனைப் போன்ற மற்றொரு வெண் சாமரத்தை வீசினார்.

30. அப்பொழுது ஆகாயத்தில் ரிஷிகணங்களும் மருத்துக்களுடன் கூடிய தேவர்களும் ஸ்ரீராமருடைய புகழைப் பாடும் இன்னொலி கேட்டது.

31. பிறகு மகா தேஜஸ்வியான வானர வேந்தன் சுக்ரீவன் சத்ருஞ்ஜயம் எனப் பெயர் பெற்று மலை போலிருந்த ஒரு யானைமேல் ஏறிக் கொண்டான்.

नवनागसहस्राणि ययुरास्थाय वानराः ।
मानुषं विग्रहं कृत्वा सर्वाभरणभूषिताः ।। ३२ ।।
शंख-भेरी-प्रणादैश्च दुन्दुभीनां च निस्वनैः ।
प्रययौ पुरुषव्याघ्रस्तां पुरीं हर्म्यमालिनीम् ।। ३३ ।।
ददृशुस्ते समायान्तं राघवं सपुरःसरम् ।
विराजमानं वपुषा रथेनातिरथं तदा ।। ३४ ।।
ते वर्धयित्वा काकुत्स्थं रामेण प्रतिनन्दिता ।
अनुजग्मु-र्महात्मानं भ्रातृभिः परिवारितम् ।। ३५ ।।

நவநாகஸஹஸ்ராணி யயுராஸ்தாய வானரா: ।
மானுஷம் விக்ரஹம் க்ருத்வா ஸர்வாபரணபூஷிதா: ।। 32 ।।
சங்க-பேரீ-ப்ரணாதைச்ச துந்துபீனாஞ்ச நிஸ்வனை: ।
ப்ரயயௌ புருஷவ்யாக்ரஸ்தாம் புரீம் ஹர்ம்யமாலினீம் ।। 33 ।।
தத்ருசுஸ்தே ஸமாயாந்தம் ராகவம் ஸபுர: ஸரம் ।
விராஜமானம் வபுஷா ரதேனாதிரதம் ததா ।। 34 ।।
தே வர்த்தயித்வா காகுத்ஸ்தம் ராமேண ப்ரதிநந்திதா: ।
அனுஜக்முர்-மஹாத்மானம் ப்ராத்ருபி: பரிவாரிதம் ।। 35 ।।

---

32. வானரர்கள் மானிட உருக் கொண்டு எல்லா ஆபரணங்களும் அணிந்து ஒன்பதினாயிரம் யானைகளின் மேலேறிக் கொண்டு செல்லலானார்கள்.

33. 'புருஷோத்தமராகிய ஸ்ரீராமர் சங்கு, பேரி, துந்துபி முதலிய வாத்தியங்கள் ஒலிக்க அரண்மனைகள் நிறைந்த நகரை நோக்கிச் சென்றார்.

34. பிரகாசிக்கும் திருமேனியுடன் பரிவாரங்கள் சூழத் தேரில் வந்து கொண்டிருந்த அதிரதரான ஸ்ரீராமரை எல்லோரும் கண்டு களித்தார்கள்.

35. சகோதரர்களால் சூழப்பெற்ற மகாத்மாவாகிய ஸ்ரீராமரை 'ஜய விஜயீபவ-வெற்றியுடன் விளங்குவீராக' என்று வாழ்த்திவிட்டு அவரால் பிரதிமரியாதை செய்யப்பட்டு அவர்கள் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

अमात्यै-र्ब्राह्मणैश्चैव तथा प्रकृतिभि-र्वृतः ।
श्रिया विरुरुचे रामो नक्षत्रैरिव चन्द्रमाः ॥ ३६ ॥
स पुरोगामिभि-स्तूर्यै-स्तालस्वस्तिक-पाणिभिः ।
प्रव्याहरद्भि-र्मुदितै-र्मङ्गलानि ययौ वृतः ॥ ३७ ॥
अक्षतं जातरूपं च गावः कन्यास्तथा द्विजाः ।
नरा मोदकहस्ताश्च रामस्य पुरतो ययुः ॥ ३८ ॥
सख्यं च रामः सुग्रीवे प्रभावं चानिलात्मजे ।
वानराणां च तत्कर्म राक्षसानां च तद्बलम् ॥ ३९ ॥

அமாத்யைர்-ப்ராஹ்மணைச்சைவ ததா ப்ரக்ருதிபிர்-வருத: ‌|
ச்ரியா விருருசே ராமோ நக்ஷத்ரைரிவ சந்த்ரமா: ‌|| 36 ||
ஸ"புரோகாமிபிஸ்-தூர்யைஸ்-தாலஸ்வஸ்திக-பாணிபி: |
ப்ரவ்யாஹரத்பிர்-முதிதைர்-மங்கலானி யயௌ வ்ருத: || 37 ||
அக்ஷதம் ஜாதரூபஞ்ச காவ: கன்யாஸ்ததா த்விஜா: |
நரா மோதகஹஸ்தாச்ச ராமஸ்ய புரதோ யயு: || 38 ||
ஸக்யஞ்ச ராம: ஸு"க்ரீவே: ப்ரபாவஞ்சாநிலாத்மஜே |
வானராணாஞ்ச தத்கர்ம ராக்ஷஸானாஞ் ச தத்பலம் || 39 ||

---

36. மந்திரிகளாலும் பிராம்மணர்களாலும் குடிமக்களாலும் சூழப்பெற்ற ஸ்ரீராமர் நக்ஷத்திரங்களுடன் கூடிய சந்திரனைப் போல் அழகுடன் விளங்கினார்.

37. தூர்யம், தாளம், ஸ்வஸ்திகம் முதலிய வாத்தியங்களை வாசிப்பவர்கள் முன் செல்லவும் மகிழ்ச்சி பொங்க மங்களம் பாடுபவர்கள் சூழ்ந்து வரவும் அவர் சென்றார்.

38. மஞ்சள் மங்களாக்ஷதையும் மோதகங்களும் கைகளிலேந்தியவர்களும் பசுக்களும் கன்னிப்பெண்களும் பிராம்மணர்களும் ஸ்ரீராமருக்கு முன்னே சென்றார்கள்.

39-40. சுக்ரீவனுடைய நட்பைப்பற்றியும் வாயுகுமாரனுடைய பிரபாவத்தைப்பற்றியும் வானரர்களின் அருஞ் செயல்களைப்பற்றியும் அரக்கர்களின் பலத்தைப்பற்றியும் விபீஷணருடன் கூடியதைப்பற்றியும் ஸ்ரீராமர் மந்திரிகளிடம் கூறினார். அதைக் கேட்டு அயோத்தியாபுரவாசிகள் ஆச்சரிய மடைந்தனர்.

विभीषणस्य संयोग-माचचक्षे च मन्त्रिणाम् ।
श्रुत्वा तु विस्मयं जग्मु-रयोध्यापुरवासिनः ।। ४० ।।
द्युतिमानेतदाख्याय रामो वानरसंवृतः ।
हृष्टपुष्टजनाकीर्णा-मयोध्यां प्रविवेश ह ।। ४१ ।।
ततो ह्यभ्युच्छ्रयन् पौराः पताकास्ते गृहे गृहे ।। ४२ ।।
ऐक्ष्वाकाध्युषितं रम्यमाससाद पितुर्गृहम् ।। ४३ ।।
पितुर्भवन-मासाद्य प्रविश्य च महात्मनः ।
कौसल्यां च सुमित्रां च कैकेयी-मभिवाद्य च ।। ४४ ।।

-விபீஷணஸ்ய ஸம்யோக-மாசசக்ஷே ச மந்த்ரிணாம் ।
ச்ருத்வா து விஸ்மயம் ஜக்மு-ரயோத்யாபுரவாஸின: ।। 40 ।।
த்யுதிமானேததாக்யாய ராமோ வானரஸம்வ்ருத: ।
ஹ்ருஷ்ட-புஷ்ட-ஜனாகீர்ணா-மயோத்யாம் ப்ரவிவேசஹ ।। 41 ।।
ததோ ஹ்யப்யுச்ச்ரயன் பௌரா: பதாகாஸ்தே க்ருஹே க்ருஹே ।। 42 ।।
ஐக்ஷ்வாகாத்யுஷிதம் ரம்ய-மாஸஸாத பிதுர்க்ருஹம் ।। 43 ।।
பிதுர்ப்பவன-மாஸாத்ய ப்ரவிச்ய ச மஹாத்மன: ।
கௌஸல்யாஞ்ச ஸுமித்ராஞ்ச கைகேயீமபிவாத்ய ச ।। 44 ।।

---

41. தேஜஸ்வியான ஸ்ரீராமர் இதைக் கூறிவிட்டு வானரர்கள் புடைசூழ மகிழ்ச்சியுடன் கூடிய மக்கள் நிறைந்த அயோத்தியில் புகுந்தார்.

42. அப்பொழுது பட்டணத்து மக்கள் வீடுதோறும் கொடிகளை உயர்த்தினார்கள்.

43. பின்னர் ஸ்ரீராமர் இக்ஷ்வாகு குலத்தினர் பரம்பரையாய் வசித்து வந்த தமது தந்தையின் அழகிய அரண்மனையை அடைந்தார்.

44-45. சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமர் மகாத்மாவாகிய தந்தையின் அரண்மனையை அடைந்து அதனுட் சென்று கௌஸல்யைக்கும் சுமித்திரைக்கும் கைகேயிக்கும் அபிவாதனம் செய்துவிட்டு தர்மிஷ்டர்களில் சிறந்த பரதனைப் பார்த்து ஆழ்ந்த கருத்துடைய இனிய சொற் கொண்டு பின்வருமாறு கூறினார்.

अथाब्रवीद्राजसुतो भरतं धर्मिणां वरम् ।
अर्थोपहितया वाचा मधुरं रघुनन्दनः ।। ४५ ।।
यच्च मद्भवनं श्रेष्ठं साशोकवनिकं महत् ।
मुक्तावैडूर्यसंकीर्णं सुग्रीवाय निवेदय ।। ४६ ।।
तस्य तद्वचनं श्रुत्वा भरतः सत्यविक्रमः ।
पाणौ गृहीत्वा सुग्रीवं प्रविवेश तमालयम् ।। ४७ ।।
ततस्तैलप्रदीपांश्च पर्यंकास्तरणानि च ।
गृहीत्वा विविशुः क्षिप्रं शत्रुघ्नेन प्रचोदिताः ।। ४८ ।।

அதாப்ரவீத்ராஜஸுதோ பரதம் தர்மிணாம் வரம் ।
அர்த்தோபஹிதயா வாசா மதுரம் ரகுநந்தன: ।। 45 ।।

யச்ச மத்பவனம் ச்ரேஷ்ட்டம் ஸாசோகவனிகம் மஹத் ।
முக்தாவைடூர்யஸங்கீர்ணம் ஸுக்ரீவாய நிவேதய ।। 46 ।।

தஸ்ய தத்வசனம் ச்ருத்வா பரத: ஸத்யவிக்ரம: ।
பாணௌ க்ருஹீத்வா ஸுக்ரீவம் ப்ரவிவேச தமாலயம் ।। 47 ।।

ததஸ்தைலப்ரதீபாம்ச்ச பர்யங்காஸ்தரணானி ச ।
க்ருஹீத்வா விவிசு: க்ஷிப்ரம் சத்ருக்னேன ப்ரசோதிதா: ।। 48 ।।

---

46. 'அசோகவனத்துடன் கூடியதும், முத்துக்களாலும் வைடூரியங்களாலும் அலங்கரிக்கப்பெற்று விசாலமாய்ச் சிறந்து விளங்கும் என் மாளிகையைச் சுக்ரீவருக்குக் கொடு.'

47. ஸத்ய பராக்ரமனான பரதன் அவ்வார்த்தையைக் கேட்டதும் சுக்ரீவரைக் கைபிடித்தழைத்துக் கொண்டு போய் அம்மாளிகையில் சேர்ப்பித்தார்.

48. சத்ருக்னரால் கட்டளையிடப்பட்ட ஆட்கள் எண்ணெய் நிறைந்த தீபங்களையும் கட்டில்களையும் விரிப்புகளையும் விரைவில் அங்கு கொணர்ந்து சேர்த்தனர்.

उवाच च महातेजाः सुग्रीवं राघवानुजः ।
अभिषेकाय रामस्य दूतानाज्ञापय प्रभो ॥ ४९ ॥
सौवर्णान् वानरेन्द्राणां चतुर्णां चतुरो घटान् ।
ददौ क्षिप्रं स सुग्रीवः सर्वरत्नविभूषितान् ॥ ५० ॥
यथा प्रत्यूषसमये चतुर्णां सागरांभसाम् ।
पूर्णैर्घटैः प्रतीक्षध्वं तथा कुरुत वानराः ॥ ५१ ॥
एवमुक्ता महात्मानो वानरा वारणोपमाः ।
उत्पेतु-र्गगनं शीघ्रं गरुडा इव शीघ्रगाः ॥ ५२ ॥

உவாச ச மஹாதேஜா: ஸுக்ரீவம் ராகவானுஜ: I
அபிஷேகாய ராமஸ்ய தூதானாஜ்ஞாபய ப்ரபோ II 49 II
ஸௌவர்ணான் வானரேந்த்ராணாஞ் சதுர்ணாம் சதுரோ கடான் I
ததௌ க்ஷிப்ரம் ஸ ஸுக்ரீவ: ஸர்வரத்ன விபூஷிதான் II 50 II
யதா ப்ரத்யூஷஸமயே சதுர்ணாம் ஸாகராம்பஸாம் I
பூர்ணைர்கடை: ப்ரதீக்ஷத்வம் ததா குருத வானரா: II 51 II
ஏவமுக்தா மஹாத்மானோ வானரா வாரணோபமா: I
உத்பேதுர்-ககனம் சீக்ரம் கருடா இவ சீக்ரகா: II 52 II

---

49. மகா தேஜஸ்வியான பரதர் சுக்ரீவரைப் பார்த்து 'ஸ்ரீராமருடைய அபிஷேகத்திற்கு (தீர்த்தங்கள் கொண்டு வர) தூதர்களுக்கு உத்திரவிடுங்கள்' எனக் கேட்டுக் கொண்டார்.

50. சுக்ரீவர் உடனே எல்லா ரத்னங்களுமிழைக்கப் பெற்ற பொற்குடங்கள் நான்கை வானரசிரேஷ்டர்கள் நால்வரிடம் கொடுத்தார்.

51. 'வானரர்களே! நான்கு சமுத்திரங்களின் தீர்த்தங்கள் நிறைந்த குடங்களுடன் விடியற்காலையில் காத்திருக்கும் வண்ணம் செய்யுங்கள்.'

52. என்றிவ்வாறு கட்டளையிடப்பட்டவர்களும் யானைகளைப் போல் பெரியவர்களும் கருடனைப் போல் வேகவான்களுமான வானரர்கள் விரைவில் ஆகாயத்தில் கிளம்பினார்கள்.

जांबवांश्च हनूमांश्च वेगदर्शी च वानराः ।
ऋषभश्चैव कलशान्जलपूर्णानथानयन् ।। ५३ ।।
नदीशतानां पंचानां जलं कुंभेषु चाहरन् ।। ५४ ।।
पूर्वात्समुद्रात्कलशं जलपूर्ण-मथानयत् ।
जांबवान् सत्वसंपन्नः सर्वरत्नविभूषितम् ।। ५५ ।।
ऋषभो दक्षिणात्तूर्णं समुद्राज्जल-माहरत् ।
रक्तचन्दन-शाखाभिः संवृतं कांचनं घटम् ।। ५६ ।।
गवयः पश्चिचमात् तोय-माजहार महार्णवात् ।
रत्नकुंभेन महता शीतं मारुतविक्रमः ।। ५७ ।।

ஜாம்பவாம்ச்ச ஹனூ மாம்ச்ச வேகதர்ஶீ ச வானரா: ।
ருஷபச்சைவ கலசான் ஜலபூர்ணானதாநயன் ।। 53 ।।
நதீசதானாம் பஞ்சானாம் ஜலம் கும்பேஷு சாஹரன் ।। 54 ।।
பூர்வாத் ஸமுத்ராத் கலசம் ஜலபூர்ண-மதானயத் ।
ஜாம்பவான் ஸத்வஸம்பன்ன: ஸர்வரத்னவிபூஷிதம் ।। 55 ।।
ருஷபோ தக்ஷிணாத் தூர்ணம் ஸமுத்ராஜ்ஜல-மாஹரத் ।
ரக்தசந்தன-சாகாபி: ஸம்வ்ருதம் காஞ்சனம் கடம் ।। 56 ।।
கவய: பச்சிமாத் தோய-மாஜஹார மஹார்ணவாத் ।
ரத்னகும்பேன மஹதா சீதம் மாருதவிக்ரம: ।। 57 ।।

---

53. ஜாம்பவானும் ஹனுமாரும் வேகதர்சி என்ற வானரனும் ரிஷபனும் தீர்த்தம் நிறைந்த குடங்களைக் கொணர்ந்தார்கள்.

54. குடங்களில் ஐந்நூறு நதிகளின் தீர்த்தங்களையும் கொணர்ந்தார்கள்.

55. பலசாலியான ஜாம்பவான் கிழக்கு சமுத்திரத்தின் ஜலம் நிறைந்த ரத்னமிழைத்த குடத்தைக் கொணர்ந்தார்.

56. ரிஷபர் தெற்கு சமுத்திரத்திலிருந்து சிகப்புச் சந்தன மரக் கொம்புகளால் மூடப்பட்ட பொற்குடத்தில் தீர்த்தத்தை விரைவாய்க் கொணர்ந்தார்.

उत्तराच्च जलं शीघ्रं गरुडानिलविक्रमः ।
आजहार स धर्मात्मा हनुमान् मारुतात्मजः ॥ ५८ ॥
ततस्तै-र्वानरश्रेष्ठै-रानीतं प्रेक्ष्य तज्जलम् ।
अभिषेकाय रामस्य शत्रुघ्नः सचिवैः सह ॥
पुरोहिताय श्रेष्ठाय सुहृद्भ्यश्च न्यवेदयत् ॥ ५९ ॥
ततः सप्रयतो वृद्धो वसिष्ठो ब्राह्मणैः सह ।
रामं रत्नमये पीठे सहसीतं न्यवेशयत् ॥ ६० ॥

உத்தராச்ச ஜலம் சீக்ரம் கருடானிலவிக்ரம: ।
ஆஜஹார ஸ தர்மாத்மா ஹனுமான் மாருதாத்மஜ: ॥ 58 ॥
ததஸ்தைர்-வானரச்ரேஷ்டை-ரானீதம் ப்ரேக்ஷ்ய தஜ்ஜலம் ।
அபிஷேகாய ராமஸ்ய சத்ருக்ன: ஸசிவை: ஸஹ ।
புரோஹிதாய ச்ரேஷ்ட்டாய ஸுஹ்ருத்ப்யச்ச ந்யவேதயத் ॥ 59 ॥
தத: ஸ ப்ரயதோ வ்ருத்தோ வஸிஷ்டோ ப்ராஹ்மணை: ஸஹ ।
ராமம் ரத்னமயே பீடே ஸஹஸீதம் ந்யவேசயத் ॥ 60 ॥

---

57. வாயுவேகம் பெற்ற கவயன் என்ற வானரர் மேற்கு சமுத்திரத்தினின்றும் பெரிய ரத்னக் குடத்தில் குளிர்ந்த தீர்த்தத்தைக் கொணர்ந்தார்.

58. தர்மாத்மாவும் கருடனையும் வாயுவையும் போல் வேகம் படைத்தவருமான ஹனுமார் வட்க்கு சமுத்திரத்திலிருந்து தீர்த்தத்தைச் சீக்கிரமாகக் கொணர்ந்தார்.

59. வானரசிரேஷ்டர்களால் ஸ்ரீராம பட்டாபிஷேகத்திற்கெனத் தீர்த்தம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதை மந்திரிகளுடன் கூடிய சத்ருக்னர் பார்த்துப் புரோகித சிரேஷ்டருக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்தார்.

60. பிறகு ஆர்வம் மிக்க பெரியவரான வசிஷ்ட பகவான் பிராம்மணர்களுடன் கூடி ஸ்ரீராமரை சீதா தேவியுடன் ரத்னமயமான சிம்மாஸனத்தில் எழுந்தருளச் செய்தார்.

वसिष्ठो वामदेवश्च जाबालिरथ काश्यपः ।
कात्यायनः सुयज्ञश्च गौतमो विजयस्तथा ॥ ६१ ॥
अभ्यषिंचन्नरव्याघ्रं प्रसन्नेन सुगन्धिना ।
सलिलेन सहस्राक्षं वसवो वासवं यथा ॥ ६२ ॥
ऋत्विग्भि-र्ब्राह्मणैः पूर्वं कन्याभि-र्मन्त्रिभिस्तथा ।
योधैश्चैवाभ्यषिञ्चंस्ते संप्रहृष्टाः सनैगमैः ॥ ६३ ॥
सर्वौषधि-रसै-र्दिव्यै-र्दैवतै-र्नभसि स्थितैः ।
चतुर्भि-र्लोकपालैश्च सर्वै-र्देवैश्च संगतैः ॥ ६४ ॥

வஸிஷ்டோ வாமதேவச்ச ஜாபாலிரத காச்யப: ।
காத்யாயன: ஸுயஜ்ஞச்ச கௌதமோ விஜயஸ்ததா ॥ 61 ॥
அப்யஷிஞ்சந்நரவ்யாக்ரம் ப்ரஸன்னேன ஸுகந்தினா ।
ஸலிலேன ஸஹஸ்ராக்ஷம் வஸவோ வாஸவம் யதா ॥ 62 ॥
ருத்விக்பிர்-ப்ராஹ்மணை: பூர்வம் கன்யாபிர்-மந்த்ரிபிஸ்ததா ।
யோதைச்சைவாபிஷிஞ்சம்ஸ்தே ஸம்ப்ரஹ்ருஷ்டா: ஸநைகமை: ॥ 63 ॥
ஸர்வௌஷதி-ரஸைர்-திவ்யைர்-தைவதைர்-நபஸி ஸ்திதை: ।
சதுர்ப்பிர்-லோகபாலைச்ச ஸர்வைர்-தேவைச்ச ஸங்கதை: ॥ 64 ॥

61-62. வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், காத்யாயனர், ஸுயக்ஞர், கௌதமர், விஜயர் ஆகியோர் அஷ்ட வசுக்கள் ஆயிரங்கண்படைத்த இந்திரனுக்கு எப்படி அபிஷேகம் செய்தார்களோ அப்படி தெளிந்ததும் நறுமணமுள்ளதுமான தீர்த்தத்தால் புருஷோத்தமருக்கு அபிஷேகம் செய்வித்தார்கள்.

63-64. அவர்கள் மகிழ்ச்சிபொங்க முதலில் ருத்விக்குகளைக் கொண்டும் பிராம்மணர்களைக் கொண்டும், பிறகு கன்னிப்பெண்களைக் கொண்டும் மந்திரிமார்களைக் கொண்டும், வியாபாரிகள் போர் வீரர்கள் ஆகியோரைக் கொண்டும், தேவதைகளும் நான்கு லோகபாலர்களும் எல்லா தேவர்களும் கூட்டமாக வானவெளியில் பார்த்துக் கொண்டிருக்கையில் தெய்வீகமான எல்லா மூலிகைகளின் ரஸமும் கலந்த ஜலத்தால் அபிஷேகம் செய்வித்தனர்.

छत्रं तु तस्य जग्राह शत्रुघ्नः पाण्डुरं शुभम् ।
श्वेतं च बालव्यजनं सुग्रीवो वानरेश्वरः ।।
अपरं चन्द्रसंकाशं राक्षसेन्द्रो विभीषणः ।। ६५ ।।
मालां ज्वलन्तीं वपुषा कांचनीं शतपुष्कराम् ।
राघवाय ददौ वायु-र्वासवेन प्रचोदितः ।। ६६ ।।
सर्वरत्न-समायुक्तं मणिरत्न-विभूषितम् ।
मुक्ताहारं नरेन्द्राय ददौ शक्रप्रचोदितः ।। ६७ ।।
प्रजगु-र्देवगन्धर्वा ननृतुश्चाप्सरोगणाः ।
अभिषेके तदर्हस्य तदा रामस्य धीमतः ।। ६८ ।।

ச்சத்ரம் து தஸ்ய ஜக்ராஹ சத்ருக்ன: பாண்டுரம் சுபம் ।
ச்வேதஞ் ச வாலவ்யஜனம் ஸுக்ரீவோ வானரேச்வர: ।
அபரஞ் சந்த்ரஸங்காசம் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண: ।। 65 ।।
மாலாம் ஜ்வலந்தீம் வபுஷா காஞ்சனீம் சதபுஷ்கராம் ।
ராகவாய ததௌ வாயுர்-வாஸவேன ப்ரசோதித: ।। 66 ।।
ஸர்வரத்ன-ஸமாயுக்தம் மணிரத்ன-விபூஷிதம் ।
முக்தாஹாரம் நரேந்த்ராய ததௌ சக்ரப்ரசோதித: ।। 67 ।।
ப்ரஜகுர்-தேவகந்தர்வா நந்ருதாச்சாப்ஸரோகணா: ।
அபிஷேகே ததர்ஹஸ்ய ததா ராமஸ்ய தீமத: ।। 68 ।।

---

65. சத்ருக்னர் அழகிய வெண்குடையை அவருக்குப் பிடித்தார். வானரவேந்தனாகிய சுக்ரீவர் வெண்சாமரம் வீசினார். அரக்கர் கோனாகிய விபீஷணர் நிலவுபோன்ற மற்றொரு சாமரத்தை வீசினார்.

66. இந்திரனால் ஏவப்பட்ட வாயுபகவான் பொன்மயமான நூறு தாமரைகளாலான ஒளிமிகுந்த மாலையை ஸ்ரீராகவருக்கு அளித்தார்.

67. எல்லா ரத்தினங்களுமிழைத்து நடுநாயகமான சிறந்ததொரு ரத்னத்துடன் கூடிய ஒரு முத்துமாலையையும் புருஷோத்தமருக்கு இந்திரனால் அனுப்பப்பட்ட அவர் அளித்தார்.

भूमिः सस्यवती चैव फलवन्तश्च पादपाः ।
गन्धवन्ति च पुष्पाणि बभूवू राघवोत्सवे ॥ ६९ ॥
सहस्रशत-मश्वानां धेनूनां च गवां तथा ।
ददौ शतं वृषान् पूर्वं द्विजेभ्यो मनुजर्षभः ॥ ७० ॥
त्रिंशत्कोटिर्हिरण्यस्य ब्राह्मणेभ्यो ददौ पुनः ।
नानाभरण-वस्त्राणि महार्हाणि च राघवः ॥ ७१ ॥
अर्करश्मि-प्रतीकाशां कांचनीं मणिविग्रहाम् ।
सुग्रीवाय स्रजं दिव्यां प्रायच्छन्मनुजर्षभः ॥ ७२ ॥

பூமி: ஸஸ்யவதீ சைவ பலவந்தச்ச பாதபா:।
கந்தவந்தி ச புஷ்பாணி பபூவூ ராகவோத்ஸவே ॥ 69 ॥
ஸஹஸ்ரசத-மச்வானாம் தேனூனாஞ் ச கவாம் ததா ।
ததௌ சதம் வ்ருஷான் பூர்வம் த்விஜேப்யோ மனுஷர்ஷப:॥ 70 ॥
த்ரிம்சத்கோடிர்ஹிரண்யஸ்ய ப்ராஹ்மணேப்யோ ததௌ புன:।
நானாபரண-வஸ்த்ராணி மஹார்ஹாணி ச ராகவ: ॥ 71 ॥
அர்க்கரச்மிப்ரதீகாசாம் காஞ்சனீம் மணிவிக்ரஹாம் ।
ஸுக்ரீவாய ஸ்ரஜம் திவ்யாம் ப்ராயச்சன் மனுஜர்ஷப: ॥ 72 ॥

68. போற்றுதற்குரியவரும் அறிவிற் சிறந்தவருமான ஸ்ரீராமருடைய பட்டாபிஷேக காலமாகிய அப்பொழுது தேவர்களும் கந்தர்வர்களும் பாடினர்; அப்ஸரஸ்திரீகணங்கள் ஆடினர்.

69. ஸ்ரீராகவருடைய அந்த உத்ஸவகாலத்தில் பூமி பயிரால் செழித்தும் மரங்கள் பழங்களால் செறிந்தும் புஷ்பங்கள் நறுமணத்தால் சிறந்தும் விளங்கின.

70. புருஷோத்தமர் லக்ஷம் குதிரைகளையும்,கன்றுகளுடன் கூடிய பசுக்களையும் நூறு விருஷபங்களையும் முதலில் பிராம்மணர்களுக்கு தானம் செய்தார்.

71. பிராம்மணர்களுக்கு மேலும் முப்பதுகோடி பொன்னும் சிறந்த பல ஆபரணங்களும் வஸ்திரங்களும் தானம் செய்தார்.

72. புருஷோத்தமராகிய ஸ்ரீராமர் சுக்ரீவருக்கு சூரியப்பிரகாசம் பொருந்திய ரத்தினங்களிழைக்கப் பெற்ற திவ்யமான தங்க ஹாரத்தை யளித்தார்.

वैडूर्यमणिचित्रे च वज्ररत्नविभूषिते ।
वालिपुत्राय धृतिमानंगदायांगदे ददौ ।। ७३ ।।
मणिप्रवरजुष्टं च मुक्ताहार-मनुत्तमम् ।
सीतायै प्रददौ रामश्चन्द्ररश्मि-समप्रभम् ।। ७४ ।।
अरजे वाससी दिव्ये शुभान्याभरणानि च ।
अवेक्षमाणा वैदेही प्रददौ वायुसूनवे ।। ७५ ।।
अवमुच्यात्मनः कण्ठाद्धारं जनकनन्दिनी ।
अवैक्षत हरीन्सर्वान् भर्तारं च मुहुर्मुहुः ।। ७६ ।।

வைடுர்யமணிசித்ரே ச வஜ்ரரத்னவிபூஷிதே ।
வாலிபுத்ராய த்ருதிமானங்கதா யாங்கதே த தௌ ।। 73 ।।
மணிப்ரவரஜுஷ்டஞ்ச முக்தாஹார-மனுத்தமம் ।
ஸிதாயை ப்ரததௌ ராமச் சந்த்ரரச்மிஸமப்ரபம் ।। 74 ।।
அரஜே வாஸஸீ திவ்யே சுபான்யாபரணானி ச ।
அவேக்ஷமாணா வைதேஹீ ப்ரததௌ வாயுஸூனவே ।। 75 ।।
அவமுச்யாத்மன: கண்டாத்தாரம் ஜனகநந்தினீ ।
அவைக்ஷத ஹரீன் ஸர்வான் பர்த்தாரஞ் ச முஹுர்முஹு: ।। 76 ।।

---

73. மனமகிழ்ந்த அவர் வைடூரியமும் ரத்னமும் பதிக்கப் பெற்று வைரப்பதக்கத்துடன் விளங்கிய இரு தோள்வளைகளை வாலிபுத்திரனாகிய அங்கதனுக்களித்தார்.

74. ஸ்ரீராமர் சிறந்த ரத்தினங்களிழைக்கப்பெற்று நிலவொளி போல் பிரகாசிக்கும் ஒப்புயர்வற்ற முத்துமாலையொன்றை சீதைக்குக் கொடுத்தார்.

75. சீதை அன்புடன் கடாக்ஷித்து ஹனுமாருக்கு வெண்மையான இரண்டு திவ்விய வஸ்திரங்களையும் சிறந்த ஆபரணங்களையும் அளித்தாள்.

76. ஜனகநந்தினி தனது கழுத்திலிருந்து ஒரு ஹாரத்தையும் கழற்றி வைத்துக் கொண்டு வானரர்களெல்லோரையும் பார்த்துவிட்டுத் தன் நாயகரையும் அடிக்கடி பார்த்தாள்.

तामिंगितज्ञः संप्रेक्ष्य बभाषे जनकात्मजाम् ।
प्रदेहि सुभगे हारं यस्य तुष्टाऽसि भामिनि ।। ७७ ।।
तेजो धृति-र्यशो दाक्ष्यं सामर्थ्यं विनयो नयः ।
पौरुषं विक्रमो बुद्धि-र्यस्मिन्नेतानि सर्वशः ।। ७८ ।।
ददौ सा वायुपुत्राय तं हार-मसितेक्षणा ।। ७९ ।।
हनूमांस्तेन हारेण शुशुभे वानरर्षभः ।
चन्द्रांशुचयगौरेण श्वेताभ्रेण यथाऽचलः ।। ८० ।।

தாமிங்கிதஜ்ஞ: ஸம்ப்ரேக்ஷ்ய பபாஷே ஜனகாத்மஜாம் ।
ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமினி ।। 77 ।।
தேஜோ த்ருதிர்-யசோ தாக்ஷ்யம் ஸாமர்த்யம் விநயோ நய:।
பௌருஷம் விக்ரமோ புத்திர்-யஸ்மின்னேதானி ஸர்வச: ।। 78 ।।
ததௌ ஸா வாயுபுத்ராய தம் ஹார-மஸிதேக்ஷணா ।। 79 ।।
ஹனூமாம்ஸ்தேன ஹாரேண சுசுபே வானரர்ஷப: ।
சந்த்ராம்சுசயகௌரேண ச்வேதாப்ரேண யதாऽசல: ।। 80 ।।

77-78. இங்கிதமறியும் அவர் ஜானகியைப் பார்த்து பின்வருமாறு கூறினார்: 'ஸௌபாக்கியவதியான சுந்தரி! சக்தியும் விடாமுயற்சியும் புகழும் சாமர்த்தியமும் அடக்கமும்,நன்னடத்தையும், ஆண்மையும், பராக்கிரமமும், புத்தியும் ஆகிய இவையெல்லாம் யாரிடம் இருக்கிறதோ யாரிடம் நீ ஸந்தோஷமடைகின்றாயோ அவருக்கு இந்த ஹாரத்தை நீ கொடுக்கலாம்.

79. கரிய கண் படைத்த அவள் அந்த ஹாரத்தை வாயுகுமாரருக்குக் கொடுத்தாள்.

80. வானரசிரேஷ்டராகிய ஹனுமார் நிலவு போல் வெண்மையான அந்த ஹாரத்தினால் வெள்ளிய மேகம் சூழ்ந்த மலைபோல் பிரகாசித்தார்.

ततो द्विविदमैन्दाभ्यां नीलाय च परन्तपः ।
सर्वान् कामगुणान् वीक्ष्य प्रददौ वसुधाधिपः ॥ ८१ ॥
सर्ववानरवृद्धाश्च ये चान्ये वानरेश्वराः ।
वासोभि-र्भूषणैश्चैव यथार्हं प्रतिपूजिताः ॥ ८२ ॥
विभीषणोऽथ सुग्रीवो हनुमाञ्जाम्बवांस्तथा ।
सर्ववानरमुख्याश्च रामेणाक्लिष्टकर्मणा ॥ ८३ ॥
यथार्हं पूजिताः सर्वैःकामै रत्नैश्च पुष्कलैः ।
प्रहृष्टमनसः सर्वे जग्मुरेव यथागतम् ॥ ८४ ॥

ததோ த்விவித-மைந்தாப்யாம் நீலாய ச பரந்தப: ||
ஸர்வான் காமகுணான் வீக்ஷ்ய ப்ரததௌ வஸுதாதிப: || 81 ||
ஸர்வவானரவ்ருத்தாச்ச யே சான்யே வானரேச்வரா: |
வாஸோபிர்-பூஷணைச்சைவ யதார்ஹம் ப்ரதிபூஜிதா: || 82 ||
விபீஷணோ஽த ஸுக்ரீவோ ஹனுமான் ஜாம்பவாம்ஸ்ததா |
ஸர்வவானரமுக்யாச்ச ராமேணாக்லிஷ்டகர்மணா || 83 ||
யதார்ஹம் பூஜிதா: ஸர்வை: காமை ரத்னைச்ச புஷ்கலை: |
ப்ரஹ்ருஷ்ட மனஸ: ஸர்வே ஜக்முரேவ யதாகதம் || 84 ||

---

81. எதிரிகளைச் சம்ஹரித்த பூமண்டலாதிபதியான ஸ்ரீராமர் பிறகு எல்லோரையும் கடாக்ஷித்து விரும்பத்தக்க பரிசுகளை துவிதன், மைந்தன் என்ற இருவருக்கும் அளித்தார்.

82. வானரப் பெரியோர்களனைவரும், மற்றும் வானரத் தலைவர்கள் எவர்களோ அவர்களும் ஆடைகளாலும் ஆபரணங்களாலும் அவரவருக்கேற்றபடி கௌரவிக்கப் பட்டார்கள்.

83-84. விபீஷணரும், சுக்ரீவரும், ஹனுமாரும், ஜாம்பவானும், மற்றுமுள்ள வானரசிரேஷ்டர்களெல்லோருமே விரும்பத்தக்கனவும் ஏராளமானவையுமான எல்லா ரத்னங்களாலும் எதையும் குறைவின்றி முடிக்கும் ஸ்ரீராமரால் கௌரவிக்கப்பட்டு உள்ளம் பூரித்தவர்களாய் அவரவரிருப்பிடமேகினர்.

नत्वा सर्वे महात्मानं ततस्ते प्लवगर्षभाः ।
विसृष्टाः पार्थिवेन्द्रेण किष्किन्धा-मभ्युपागमन् ॥ ८५ ॥
सुग्रीवो वानरश्रेष्ठो दृष्ट्वा रामाभिषेचनम् ।
पूजितश्चैव रामेण किष्किन्धां प्राविशत्पुरीम् ॥ ८६ ॥
विभीषणोऽपि धर्मात्मा सह तै-र्नैर्ऋतर्षभैः ।
लब्ध्वा कुलधनं राजा लंकां प्रायान्महायशाः ॥ ८७ ॥
स राज्यमखिलं शासन्निहतारि-र्महायशाः ।
राघवः परमोदारः शशास परया मुदा ॥ ८८ ॥

நத்வா ஸர்வே மஹாத்மானம் ததஸ்தே ப்லவகர்ஷபா: ।
விஸ்ருஷ்டா: பார்த்திவேந்த்ரேண கிஷ்கிந்தா-மப்யுபாகமன் ॥ 85 ॥
ஸுக்ரீவோ வானரச்ரேஷ்டோ த்ருஷ்ட்வா ராமாபிஷேசனம் ।
பூஜிதச்சைவ ராமேண கிஷ்கிந்தாம் ப்ராவிசத் புரீம் ॥ 86 ॥
விபீஷணோऽபி தர்மாத்மா ஸஹ தைர் நைர்ருதருஷபை: ।
லப்த்வா குலதனம் ராஜா லங்காம் ப்ராயான் மஹாயசா: ॥ 87 ॥
ஸ ராஜ்யமகிலம் சாஸந்நிஹதாரி:-மஹாயசா: ।
ராகவ: பரமோதார: சசாஸ பரயா முதா ॥ 88 ॥

---

85. வானரசிரேஷ்டர்கள் எல்லோரும் மகாத்மாவாகிய சக்ரவர்த்தியை நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டு கிஷ்கிந்தைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

86. ஸ்ரீராமபட்டாபிஷேகத்தைப் பார்த்துவிட்டு வானரவேந்தரான சுக்ரீவரும் ஸ்ரீராமரால் கௌரவிக்கப்பட்டு கிஷ்கிந்தையின் தலைநகரை அடைந்தார்.

87. தர்மாத்மாவும் பெரும்புகழ் படைத்தவருமான விபீஷண மன்னரும் இக்ஷ்வாகுகுலச் செல்வமாகிய இரங்கநாத விக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டு அரக்க சிரேஷ்டர்களுடன் இலங்கைக்குப் புறப்பட்டார்.

88. சத்ருக்களையொழித்துப் பெரும் புகழ் பெற்ற ஸ்ரீராமர் நாடு முழுவதையும் நன்றாக அடக்கி உதார குணத்துடன் மிகவும் சந்தோஷமுடையவராய் ஆளலானார்.

उवाच लक्ष्मणं रामो धर्मज्ञं धर्मवत्सलः ॥ ८९ ॥
आतिष्ट धर्मज्ञ मया सहेमां
गां पूर्वराजाध्युषितां बलेन ।
तुल्यं मया त्वं पितृभिर्धृता या
तां यौवराज्ये धुरमुद्वहस्व ॥ ९० ॥
सर्वात्मना पर्यनुनीयमानो
यदा न सौमित्रिरुपैति योगम् ।
नियुज्यमानोऽपि च यैवराज्ये
ततोऽभ्यषिंचद्भरतं महात्मा ॥ ९१ ॥

உவாச லக்ஷ்மணம் ராமோ தர்மஜ்ஞும் தர்மவத்ஸல: ll 89 ll
ஆதிஷ்ட்ட தர்மஜ்ஞ மயா ஸஹேமாம்
காம் பூர்வராஜாத்யுஷிதாம் பலேன l
துல்யம் மயா த்வம் பித்ருபிர்த்ருதா யா
தாம் யௌவராஜ்யே துரமுத்வஹஸ்வ ll 90 ll
ஸர்வாத்மனா பர்யனுநீயமானோ
யதா ந ஸௌமித்ரிருபைதி யோகம் l
நியுஜ்யமானோऽபி ச யௌவராஜ்யே
ததோऽப்யஷிஞ்சத் பரதம் மஹாத்மா ll 91 ll

---

89. தர்மவத்ஸலரான ஸ்ரீராமர் தர்மந்தெரிந்த இலக்ஷ்மணரை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

90. 'தர்மந்தெரிந்தவனே! முன்னோர்களான சக்ரவர்த்திகளால் வல்லமையுடன் பரிபாலனஞ் செய்யப்பெற்ற இந்த பூமியை என்னுடன் கூடி நீ ஆள வேண்டும். பிதிருக்களால் தாங்கப்பட்ட பாரம் எதுவோ அதை எனக்குச் சமமாக இளவரசாயிருந்து தாங்குவாயாக.'

91. இலக்ஷ்மணர் பலவகையாகப் பலமுறை இனி சொற்களால் வேண்டிக்கொள்ளப்பட்டும் அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் மகாத்மாவாகிய பரதரை இளவரசாக அபிஷேகம் செய்வித்தார்.

पौण्डरीकाश्वमेधाभ्यां वाजपेयेन चासकृत् ।
अन्यैश्च विविधै-र्यज्ञै-रयजत्पार्थिवर्षभः ॥ ९२ ॥
राज्यं दशसहस्राणि प्राप्य वर्षाणि राघवः ।
शताश्वमेधानाजह्रे सदश्वान् भूरिदक्षिणान् ॥ ९३ ॥
आजानुलम्बबाहुः स महास्कन्धः प्रतापवान् ।
लक्ष्मणानुचरो रामः पृथिवीमन्वपालयत् ॥ ९४ ॥
राघवश्चापि धर्मात्मा प्राप्य राज्य-मनुत्तमम् ।
ईजे बहुविधै-र्यज्ञैः ससुहृज्ज्ञातिबान्धवैः ॥ ९५ ॥

பௌண்டரீகாச்வமேதாப்யாம் வாஜபேயேன சாஸக்ருத் ।
அன்யைச்ச விவிதைர்-யஜ்ஞை-ரயஜத் பார்த்திவர்ஷப: ॥ 92 ॥
ராஜ்யம் தச-ஸஹஸ்ராணி ப்ராப்ய வர்ஷாணி ராகவ: ।
சதாச்வமேதானாஜஹ்ரே ஸதச்வான் பூரிதக்ஷிணான் ॥ 93 ॥
ஆஜானுலம்பபாஹு: ஸ மஹாஸ்கந்த: ப்ரதாபவான் ।
லக்ஷ்மணானுசரோ ராம: ப்ருதிவீ மன்வபாலயத் ॥ 94 ॥
ராகவச்சாபி தர்மாத்மா ப்ராப்ய ராஜ்ய-மனுத்தமம் ।
ஈஜே பஹுவிதைர்-யஜ்ஞை: ஸஸுஹ்ருஜ்ஜ்ஞாதிபாந்தவை: ॥ 95 ॥

92. சக்ரவர்த்திகளில் சிறந்த அவர் பௌண்டரீகம் அச்வமேதம் வாஜபேயம் முதலியவற்றாலும் வேறு பலவித யாகங்களாலும் பல தடவை தேவதைகளை ஆராதித்தார்.

93. ஸ்ரீராமர் பதினாயிரம் வருஷங்கள் ராஜ்ய பரிபாலனம் செய்து சிறந்த குதிரைகளையும் ஏராளமான தக்ஷிணைகளையும் கொண்ட நூறு அசுவமேத யாகங்களைச் செய்தார்.

94. முழங்கால் வரை நீண்ட கைகளும் பெருந்தோள்களும் படைத்துப் பிரதாபசாலியாய் விளங்கிய ஸ்ரீராமர் இலக்ஷ்மணரால் சேவிக்கப் பெற்றவராய் பூமியை ஆண்டார்.

95. தர்மாத்மாவான ராகவர் ஒப்புயர்வற்ற ராஜ்யத்தை நண்பர்கள் பங்காளிகள் உறவினர்கள் ஆகியோருடன் கூடி அனுபவித்துக் கொண்டு பலவிதமான யாகங்களால் தேவர்களை ஆராதித்தார்.

न पर्यदेवन्विधवा न च व्यालकृतं भयम् ।
न व्याधिजं भयं वापि रामे राज्यं प्रशासति ।। ९६ ।।
निर्दस्यु-रभवल्लोको नानर्थः कश्चिदस्पृशत् ।
न च स्म वृद्धा बालानां प्रेतकार्याणि कुर्वते ।। ९७ ।।
सर्वं मुदित-मेवासीत्सर्वो धर्मपरोऽभवत् ।
राममेवानुपश्यन्तो नाभ्यहिंसन्परस्परम् ।। ९८ ।।
आसन्वर्षसहस्राणि तथा पुत्रसहस्रिणः ।
निरामया विशोकाश्च रामे राज्यं प्रशासति ।। ९९ ।।

ந பர்யதேவன் விதவா ந ச வ்யாலக்ருதம் பயம் ।
ந வ்யாதிஜம் பயம் வாபி ராமே ராஜ்யம் ப்ரசாஸதி ।। 96 ।।
நிர்தஸ்யு-ரபவல்லோகோநானர்த்த: கச்சிதஸ்ப்ருசத் ।
ந சஸ்ம வ்ருத்தா பாலானாம் ப்ரேதகார்யாணி குர்வதே ।। 97 ।।
ஸர்வம் முதித-மேவாஸீத்ஸர்வோ தர்மபரோऽபவத் ।
ராமமேவானுபச்யந்தோ நாப்யஹிம்ஸன் பரஸ்பரம் ।। 98 ।।
ஆஸன் வர்ஷஸஹஸ்ராணி ததா புத்ரஸஹஸ்ரிண: ।
நிராமயா விசோகாச்ச ராமே ராஜ்யம் ப்ரசாஸதி ।। 99 ।।

96. ஸ்ரீராமர் அரசாளுகையில் விதவைகளின் புலம்புதல் இல்லை; கொடிய பிராணிகளின் பயமில்லை; நோயின் பயமும் இல்லை.

97. உலகம் திருடர்களற்றதாயிருந்தது; கெடுதி ஒருவனையும் தொடவில்லை; பெரியவர்கள் சிறியவர்களுக்கு உத்தரக் கிரியைகளைச் செய்யவில்லை.

98. எல்லாம் ஸந்தோஷமாக இருந்தது; எல்லோரும் தர்மத்தில் பற்றுடையவராயிருந்தனர்; ஸ்ரீராமரைப் பார்த்துப் பின்பற்றியவர்களாய் ஒருவரையொருவர் துன்புறுத்தாமலிருந்தனர்.

99. ஸ்ரீராமர் அரசாளுகையில் மக்கள் பலபுத்திரர்களைப் பெற்று நோயற்றவர்களாய்க் கவலையற்றவர்களாய்ப் பல்லாண்டு வாழ்ந்தனர்.

रामो रामो राम इति प्रजाना-मभवन् कथाः ।
रामभूतं जगदभूद्रामे राज्यं प्रशासति ॥ १०० ॥
नित्यपुष्पा नित्यफलास्तरवः स्कन्धविस्तृताः ।
काले वर्षी च पर्जन्यः सुखस्पर्शश्च मारुतः ॥ १०१ ॥
ब्राह्मणाः क्षत्रिया वैश्याः शूद्रा लोभविवर्जिताः ।
स्वकर्मसु प्रवर्तन्ते तुष्टाः स्वैरेव कर्मभिः ॥ १०२ ॥

ராமோ ராமோ ராம இதி ப்ரஜானா-மபவன் கதா: ।
ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி ॥ 100 ॥

நித்யபுஷ்பா நித்யபலாஸ்தரவ: ஸ்கந்த விஸ்த்ருதா: ।
காலே வர்ஷீச பர்ஜன்ய: ஸுகஸ்பர்சச்ச மாருத: ॥ 101 ॥

ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைச்யா: சூத்ரா லோபவிவர்ஜிதா: ।
ஸ்வகர்மஸு ப்ரவர்த்தந்தே துஷ்டா: ஸ்வைரேவ கர்மபி: ॥ 102 ॥

---

100. ஸ்ரீராமர் அரசாளுகையில் 'ராமன், ராமன், ராமன்' என்ற பேச்சு மக்களிடை எப்பொழுதும் நிகழ்ந்தது. உலகம் ராம மயமாக ஆயிற்று.

101. மரங்கள் என்றும் பூக்களை உடையவைகளாயும் எப்பொழுதும் பழங்களை உடையவைகளாயும் பரவிய கிளைகளை உடையவைகளாயும் இருந்தன. மேகம் உரிய காலத்தில் மழை பொழிந்தது. காற்று சுகமாக வீசிற்று.

102. பிராம்மணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், சூத்திரர்களும் பேராசையற்றவர்களாய் அவரவர் கருமங்களில் திருப்தியடைந்தவர்களாய் அவரவர் தொழில்களில் ஈடுபட்டவர்களாயிருந்தனர்.

आसन् प्रजा धर्मरता रामे शासति नानृताः ।
सर्वे लक्षणसम्पन्नाः सर्वे धर्मपरायणाः ॥ १०३ ॥
दशवर्षसहस्राणि दशवर्षशतानि च ।
भ्रातृभिः संहितः श्रीमान् रामो राज्यमकारयत् ॥ १०४ ॥
धन्यं यशस्य-मायुष्यं राज्ञां च विजयावहम् ।
आदिकाव्यमिदं त्वार्षं पुरा वाल्मीकिना कृतम् ॥
यः पठेच्छृणुयाल्लोके नरः पापाद्विमुच्यते ॥ १०५ ॥

ஆஸன் ப்ரஜா தர்மரதா ராமே சாஸதி நான்ருதா: ।
ஸர்வே லக்ஷணஸம்பன்னா: ஸர்வே தர்மபராயணா: ॥ 103 ॥
தச வர்ஷ ஸஹஸ்ராணி தச வர்ஷசதானி ச ।
ப்ராத்ருபி: ஸஹித: ஸ்ரீமான் ராமோ ராஜ்யமகாரயத் ॥ 104 ॥
தன்யம் யசஸ்ய-மாயுஷ்யம் ராஜ்ஞாஞ்ச விஜயாவஹம் ।
ஆதிகாவ்யமிதம் த்வார்ஷம் புரா வால்மீகினா க்ருதம் ॥
ய: படேச்ச்ருணுயால்லோகே நர: பாபாத் விமுச்யதே ॥ 105 ॥

---

103. ஸ்ரீராமர் ஆளுகையில் நாட்டுமக்கள் தருமத்தில் பற்றுள்ளவர்களாய் இருந்தனர். பொய் பேசாதவர்களாயிருந்தனர். எல்லோரும் அவரவர்க்குரிய லக்ஷணங்கள் பொருந்தியவர்களாகவும் எல்லோரும் தர்மத்தில் ஊக்கமுள்ளவர்களாயு மிருந்தனர்.

104. ஸ்ரீமானான ஸ்ரீராமர் சகோதரர்களுடன் கூடி பதினோராயிரம் வருஷங்கள் அரசாண்டார்.

105. முற்காலத்தில் வால்மீகி மகரிஷியால் இயற்றப்பட்டதும் பொருளையும் புகழையும் ஆயுளையும் அளிக்கவல்லதும் அரசர்க்கு வெற்றியை அளிக்கவல்லதுமான இந்த ஆதி ரிஷிகாவ்யத்தை உலகில் எந்த மனிதன் படிக்கிறானோ, கேட்கிறானோ அவன் பாவத்திலிருந்து விடுபடுகிறான்.

104. ஸித்தர்கள் பாஷையில் 100 என்றால் 3; 1000 என்றால் 4; இது ஸ்தான ஸங்கேதம். பத்தாயிரமும் பத்து நூறு வருஷமும் இந்தக் கணக்குப்படி 10 x 4 + 10 x 3 = 70 வருஷம்.

ஸ்ரீராமர் விவாஹம் 13 வயதில், வனவாஸ ஆரம்பம் 25 வயதில், பட்டாபிஷேகம் 39 வயதில் அதற்குப் பின் அரசாட்சி 70 வருஷம்.

पुत्रकामस्तु पुत्रान्वै धनकामो धनानि च ।
लभते मनुजो लोके श्रुत्वा रामाभिषेचनम् ।। १०६ ।।
मही विजयते राजा रिपूंश्चाप्यधितिष्ठति ।
राघवेण यथा माता सुमित्रा लक्ष्मणेन च ।।
भरतेनेव कैकेयी जीवपुत्रास्तथा स्त्रियः ।। १०७ ।।
श्रुत्वा रामायणमिदं दीर्घ-मायुश्च विन्दति ।
रामस्य विजयं चैव सर्व-मक्लिष्टकर्मणः ।। १०८ ।।

புத்ரகாமஸ்து புத்ரான் வை தனகாமோ தனானி ச ।
லபதே மனுஜோ லோகே ச்ருத்வா ராமாபிஷேசனம் ।। 106 ।।
மஹீம் விஜயதே ராஜா ரிபூம்ச்சாப்யதிதிஷ்டதி ।
ராகவேண யதா மாதா ஸுமித்ரா லக்ஷ்மணேன ச ।
பரதேனேவ கைகேயீ ஜீவபுத்ராஸ்ததா ஸ்த்ரிய: ।। 107 ।।
ச்ருத்வா ராமாயண-மிதம் தீர்க்க மாயுச்ச விந்ததி ।
ராமஸ்ய விஜயஞ்சைவ ஸர்வ-மக்லிஷ்டகர்மண: ।। 108 ।।

---

106. இவ்வுலகில் ஸ்ரீராமபட்டாபிஷேகத்தைக் கேட்கும் மனிதன் புத்திரனை விரும்பினால் புத்திரனையும் பொருளை விரும்பினால் பொருளையும் அடைவான்.

107. அரசன் பூமியை ஜயிப்பான்; சத்ருக்களை அடக்குவான். ஸ்திரீகள், ஸ்ரீராமரால் அன்னை கௌஸல்யை போலும் இலக்ஷ்மணரால் ஸுமித்திரைபோலும், பரதனால் கைகேயிபோலும் நீண்ட ஆயுள் படைத்த புத்திரர்களை உடையவர்களாவார்கள்.

108. மாசற்ற செயல் படைத்த ஸ்ரீராமருடைய விஜயத்தைப் பற்றிய இந்த இராமாயணத்தை முழுவதையும் கேட்டு ஒருவன் தீர்க்காயுளை அடைவான்.

श्रृणोति य इदं काव्य-मार्षं वाल्मीकिना कृतम् ।
श्रद्दधानो जितक्रोधो दुर्गाण्यतितरत्यसौ ।। १०९ ।।
समागमं प्रवासान्ते लभते चापि बान्धवैः ।
प्रार्थितांश्च वरान् सर्वान् प्राप्नुयादिह राघवात् ।। ११० ।।
श्रवणेन सुराः सर्वे प्रीयन्ते संप्रश्रृण्वताम् ।
विनायकाश्च शाम्यन्ति गृहे तिष्ठन्ति यस्य वै ।। १११ ।।

ச்ருணோதி ய இதம் காவ்ய-மார்ஷம் வால்மீகினா க்ருதம் ।
ச்ரத்ததானோ ஜிதக்ரோதோ துர்க்காண்யதிதரத்யஸெள ।। 109 ।।

ஸமாகமம் ப்ரவாஸாந்தே லபதே சாபி பாந்தவை: ।
ப்ரார்த்திதாம்ச்ச வரான் ஸர்வான் ப்ராப்னுயாதிஹ ராகவாத் ।। 110 ।।

ச்ரவணேன ஸுரா: ஸர்வே ப்ரீயந்தே ஸம்ப்ரச்ருண்வதாம் ।
விநாயகாச்ச சாம்யந்தி க்ருஹேதிஷ்டந்தி யஸ்யவை ।। 111 ।।

---

109. எவன் வால்மீகியால் இயற்றப்பட்ட இந்தப் புராதனமான காவியத்தைச் சிரத்தையுடன் கேட்கிறானோ அவன் கோபத்தை வென்றவனாகவும் கஷ்டங்களைத் தாண்டிச் செல்பவனாகவும் ஆவான்.

110. தூரதேசயாத்திரையின் முடிவில் உறவினருடன் சேர்க்கையை அடைவான். ஸ்ரீராகவரிடமிருந்து வேண்டும் வரங்களையெல்லாம் இங்கு அடைவான்.

111. சிரத்தையுடன் இராமாயணத்தைக் கேட்பவர்களிடம் எல்லா தேவர்களும் பிரீதியடைகிறார்கள். எவர் வீட்டில் அடக்குவாரற்றவரின் இடையூறுகள் இருக்கின்றனவோ அவைகள் ஒழிகின்றன.

विजयेत महीं राजा प्रवासी स्वस्तिमान् व्रजेत् ।
स्त्रियो रजस्वलाः श्रुत्वा पुत्रान् सूयुरनुत्तमान् ॥ ११२ ॥

पूजयंश्च पठेंश्चेम-मितिहासं पुरातनम् ।
सर्वपापात्प्रमुच्येत दीर्घ-मायु-मवाप्नुयात् ॥ ११३ ॥

प्रणम्य शिरसा नित्यं श्रोतव्यं क्षत्रियै-र्द्विजात् ।
ऐश्वर्यं पुत्रलाभश्च भविष्यति न संशयः ॥ ११४ ॥

விஜயேத மஹீம் ராஜா ப்ரவாஸீ ஸ்வஸ்திமான் வ்ரஜேத் ।
ஸ்த்ரியோ ரஜஸ்வலா: ச்ருத்வா புத்ரான் ஸூயு-ரனுத்தமான் ॥ 112 ॥

பூஜயம்ச்ச படேம்ச்சேம-மிதிஹாஸம் புராதனம் ।
ஸர்வபாபாத் ப்ரமுச்யேத தீர்க்க-மாயு-ரவாப்னுயாத் ॥ 113 ॥

ப்ரணம்ய சிரஸா நித்யம் ச்ரோதவ்யம் க்ஷத்ரியைர்-த்விஜாத் ।
ஐச்வர்யம் புத்ரலாபச்ச பவிஷ்யதி ந ஸம்சய: ॥ 114 ॥

---

112. இராமாயணத்தைக் கேட்டால் அரசன் பூமியை ஜயிப்பான். பிரயாணம் செய்பவன் க்ஷேமமாகச் செல்வான். புத்திரர்களைப் பெறும் வயதுள்ள ஸ்திரீகள் ஒப்புயர்வற்ற புத்திரர்களைப் பெறுவார்கள்.

113. புராதனமான இந்த இதிஹாஸத்தைப் பூஜை செய்து படிப்பவன் எல்லாக் கஷ்டங்களினின்றும் விடுபடுவான். நீண்ட ஆயுளையும் அடைவான்.

114. இது க்ஷத்திரியர்களால் தலை வணங்கி பிராம்மணரிடமிருந்து கேட்கத்தக்கது; செல்வமுண்டாகும்; புத்திரப்பேறுண்டாகும்; இதில் ஐயமில்லை.

रामायण-मिदं कृत्स्नं शृण्वतः पठतः सदा ।
प्रीयते सततं रामः स हि विष्णुः सनातनः ॥
आदिदेवो महाबाहु-र्हरिर्नारायणः प्रभुः ॥ ११५ ॥

कुटुम्बवृद्धिं धनधान्यवृद्धिं
स्त्रियश्च मुख्याः सुखमुत्तमं च ।
श्रुत्वा शुभं काव्यमिदं महार्थं
प्राप्नोति सर्वां भुवि चार्थसिद्धिम् ॥ ११६ ॥

ராமாயண-மிதம் க்ருத்ஸ்னம் ச்ருண்வத: படத: ஸதா ।
ப்ரீயதே ஸததம் ராம: ஸ ஹி விஷ்ணு: ஸநாதன: ॥
ஆதிதேவோ மஹாபாஹுர்-ஹரிர்-நாராயண: ப்ரபு: ॥ 115 ॥

குடும்பவ்ருத்திம் தனதான்யவ்ருத்திம்
ஸ்த்ரியச்ச முக்யா: ஸுகமுத்தமஞ் ச ।
ச்ருத்வா சுபம் காவ்யமிதம் மஹார்த்தம்
ப்ராப்னோதி ஸர்வாம் புவி சார்த்தஸித்திம் ॥ 116 ॥

---

115. விஷ்ணுவும், ஹரியும், நாராயணரும், ஸநாதனமான பிரபுவும் ஆதிதேவரும் மஹாபாகுவான ஸ்ரீராமரேயாவார். அவர் இந்த இராமாயணம் முழுவதையும் எப்பொழுதும் கேட்கிறவனுக்கும் தொடர்ந்து படிப்பவனுக்கும் அருள் புரிகிறார்.

116. பெரும் பொருளடங்கிய இப்புண்ணியமான காவியத்தைக் கேட்டு ஒருவன் இவ்வுலகில் குடும்ப விருத்தியையும், தன தானிய விருத்தியையும், சிறந்த மனைவிமாரையும், உத்தம சுகத்தையும் எல்லா எண்ணங்களின் சித்தியையும் அடைவான்.

आयुष्य-मारोग्यकरं यशस्यं
सौभ्रातृकं बुद्धिकरं सुखं च ।
श्रोतव्य-मेतन्नियमेन सद्भि-
राख्यान-मोजस्करमृद्धिकामैः ॥ ११७ ॥
एवमेतत्पुरावृत्त-माख्यानं भद्रमस्तु वः ।
प्रव्याहरत विस्रब्धं बलं विष्णोः प्रवर्धताम् ॥ ११८ ॥
देवाश्च सर्वे तुष्यन्ति ग्रहणाच्छ्रवणात्तथा ।
रामायणस्य श्रवणात्तुष्यन्ति पितरस्तथा ॥ ११९ ॥

ஆயுஷ்ய-மாரோக்யகரம் யசஸ்யம்
ஸௌப்ராத்ருகம் வ்ருத்திகரம் ஸுகஞ் ச ।
ச்ரோதவ்ய-மேதந்நியமேன ஸத்பி-
ராக்யான-மோஜஸ்கரம் ருத்திகாமை: ॥ 117 ॥
ஏவமேதத் புராவ்ருத்த-மாக்யானம் பத்ரமஸ்து வ: ।
ப்ரவ்யாஹரத விஸ்ரப்தம் பலம் விஷ்ணோ: ப்ரவர்த்ததாம் ॥ 118 ॥
தேவாச்ச ஸர்வே துஷ்யந்தி க்ரஹணாச் ச்ரவணாத் ததா ।
ராமாயணஸ்ய சரவணாத் துஷ்யந்தி பிதரஸ்ததா ॥ 119 ॥

---

117. குறைவற்ற செல்வத்தை விரும்பும் நல்லோர்களால் இவ்வாக்யானம் நியமத்துடன் கேட்கத்தக்கது. இது ஆரோக்கியத்தையும், புகழையும், சகோதர ஒற்றுமையையும், நல்ல புத்தியையும் சுகத்தையும் வீரியத்தையும், அளிக்கவல்லது.

118. இவ்வாறு முன் நடந்த சரித்திரமாகிய இதை நம்பிக்கையுடன் ஒருவருக்கொருவர் சொல்லுங்கள். உங்களுக்கு மங்களமுண்டாகட்டும். விஷ்ணுவின் பலம் உலகில் வளரட்டும்.

119. தேவர்களெல்லோரும் இதை அறிவதாலும் கேட்பதாலும் திருப்தியடைகிறார்கள். இராமாயணத்தைக் கேட்பதால் பிதிருக்களும் அவ்வாறே திருப்தியடைகிறார்கள்.

भक्त्या रामस्य य चेमां संहितामृषिणा कृताम् ।
लेखयन्तीह च नरास्तेषां वासस्त्रिविष्टप ॥ १२० ॥

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये
आदिकाव्ये युद्धकाण्डे
एकत्रिंशदुत्तरशततमः सर्गः

பக்த்யா ராமஸ்ய யே சேமாம் ஸம்ஹிதாம் ருஷிணா க்ருதாம் ।
லேகயந்தீஹ ச நராஸ் தேஷாம் வாஸஸ் த்ரிவிஷ்டபே ॥ 120 ॥

இதயார்ஷே ஸ்ரீமத்ராமாயணே வால்மீகியே ஆதிகாவ்யே யுத்தகாண்டே

ஏகத்ரிம் சதுத்தரசததம: ஸர்க்க:

---

120. ரிஷியினால் இயற்றப்பட்ட இந்த ராமசரித்ர ஸம்ஹிதையை இவ்வுலகில் எந்த மனிதர்கள் பக்தியுடன் எழுதுகிறார்களோ அவர்களுக்கு சுவர்க்கத்தில் வாஸம் ஏற்படும்.

இங்ஙனம் வால்மீகிரிஷியால் இயற்றப்பட்ட ஆதிகாவயமான ஸ்ரீமத்ராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் நூற்று முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றும்.

சுபம்

எமது வெளியீடுகளில் சில...

அத்யாத்ம ராமாயணம்

வால்மீகி ராமாயண ஸாரம்

ஸ்ரீமத் மஹாபாரத ஸாரம்

விவேக சூடாமணி

நாரத பக்தி ஸூத்ரங்கள்

திருஅருள் மொழி

பக்தி மார்க்கம்

ஸ்ரீ குருகீதை

ISBN 81-7120-100-8
9 788171 201006

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை 4
email : srkmath@vsnl.com

Sundara Kandam - 2 (Tamil) Rs. 75.00
ISBN 81-7120-326-4